Sri Vedachalam Sastri Collection, Karaikudi

s

K. Narayanan

ord? That question from a reader
vided his address despite a request)
as, and never thought about it. Now I
as the Swedish word *umbuds man*,
nder-specific. However, with the
s, words such as ombuds, ombuds
budswoman are now mentioned. But
pers, it is still the Organisation of

nent on what the role of a news
he or she is a part of the establishment
fic period such as three years,
s neither to agree nor to disagree, but
ent and evaluate whether contrary
*umns* and whether editorial opinion
is added to indicate that editorials
he ambit of the ombudsman.)
*Hindu*, the ombudsman does not act
eaders' communications. As I have
m neither an advocate nor an
od journalism.

* * *

e comments from a reader (also
ddress) that "lately your role has been
d/or pointing miniscule errors in
r your column in January when you
ndling of Singur and Nandigram issues
rated letter writers for abuses heaped
hat is natural when you decide not to
s. You have stopped replying to the

thout addresses. But I do not recollect
oked at what I had written in January
ngur-Nandigram in two columns. I
tences in an editorial, gave the editorial
hat the reader's objection was valid in
e was to the published letters to the
that there was factual inaccuracy in one,
und strange the comment that all letters

the news coverage I received was from
uram, a reader for 60 years, who
ot sent a reporter or team of reporters to
p in the coverage; and this was noted
al massacre in Chhattisgarh around the

* * *

udgment is the answer I get. Every news
t the exercise must be marked by a sense
istency. When these are not evident, at

# the recent Assembly el

K.V. Prasad

NOW THAT the Uttar Pradesh electorate has given a decisive verdict in the just-concluded Assembly elections, the Congress' party managers will have to introspect and identify what went wrong. Why did the party fail to win even the 25 seats it got in 2002, even after fielding, with much fanfare, Rahul Gandhi as star campaigner?

Ever since his dramatic plunge into electoral politics in 2004, Congress workers had patiently waited for Mr. Gandhi to take charge. It took him nearly three years to be drawn into the cauldron of caste equations that is Uttar Pradesh politics, which can confound the best of politicians.

And as Mr. Gandhi undertook an extensive campaign from Ghaziabad to Gorkahpur, Congress leaders and workers began to take heart. Despite making comments that kicked up a furore in the early phase of the campaign, Mr. Gandhi

# The future

## Finally Gordon Brow
## double act. He must u

Andrew Rawnsley

SAY WHAT you like — or don't — about Tony Blair, he has always been superb at choreography, a maestro of the entrances and exits of politics. On the night of his first landslide victory, he did not rush straight to the stage when he arrived among the ecstatic throng partying on London's South Bank. He waited in an anteroom

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

CC0: In Public Domain. Muthulakshmi Research Academy

...ar ... A series of more heinous attacks
...kkals (temple priests) in Tiruvarur in
...obably found no news value in the
...galore). All forms of religions or
...rted and criticised. Omitting some or
...ers forming their own conclusions,

...Jaipur attack made me wonder: do
...ch as covering their faces (why?) in
...of the alleged "immolation bid"
...ese cameras — which *The Hindu*

so that the sun would be rising over the
Thames just as he delivered the lin...
new dawn has broken."

As at the sunrise, so at its sett...
tried to squeeze every last dro...
matic juice out of his resigna...
ment. Flying north of Lon...
the speech in Trimdon...
reverse echo of the jou...
the small hours of t...
he had just been ele...
ister. The speech...
Labour Club in...

**வேதாந்தம்**

...வேகானந்தர்

ஆண்டி வரை,
பாமரன் வரை,
எப்படிப்பட்டவ...
கூறும் நெறிகளை
...ன்பற்ற முடியும்
... நூல்.

பக்கம்: 102

...007

# A lot o...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2

To

Chi MADHU. B.A.

with

Love. Mrs Yogambal

[illegible]

30.7.88

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

# ஸௌந்தர்யலஹரீ - பாஷ்யம்

# सौन्दर्यलहरी - भाष्यम्

உரையாசிரியர்

“ அண்ணா ”

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை - 600004.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Published by
© The President,
Sri Ramakrishna Math,
16, Ramakrishna Math Road,
Mylapore, Madras-600 004.

All Rights Reserved
Upto Seventh Edition 30,000 copies
VIII- 5m 3c --3—87

Printed in India at

Sri Murugan Offset Press,
117, Big Street,
Triplicane, Madras-5.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

# பொருளடக்கம்


பக்கம்

குறிகளின் விளக்கம் ... ... iv

முகவுரை ... ... v

ஸ்ரீகுரு பாதுகா வந்தனம் ... ... xiv

ஸமர்ப்பணம் ... ... xv

ஸ்ரீசக்கரம் ... ... xvi

ஸௌந்தர்யலஹரீ

முதல் பாகம் : ஆனந்த லஹரீ
(ஸ்ரீவித்யா ரஹஸ்யம்) ... ... 1

இரண்டாம் பாகம் : ஸௌந்தர்ய
லஹரீ (தலை முதல் கால் வரை ...
தேவியின் அழகு வர்ணனை) ... ... 74

அனுபந்தம்

1. ஸ்ரீசக்கரம் வரையும் முறை ... ... 159

2. பாவனோபநிஷத்து ... ... 166

3. சில பிரயோகங்கள் ... ... 176

4. மந்த்ரஸித்திக்காகப் பூஜையும் ஜபமும்
செய்யும் முறை ... ... 193

5. அபிராமி அந்தாதியில் அருமையான ...
சில பாடல்கள் ... ... 200

6. ஸௌந்தர்யலஹரீ சுலோகங்களின்
அகராதி ... ... 207

7. துணை நூல்கள் ... ... 211


Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## குறிகளின் விளக்கம்

உப.—உபநிஷத்து
ஒ—ஒப்பிடுக
கீ.—ஸ்ரீமத் பகவத் கீதை
சங்.—ஆதிசங்கராசாரியார்
சு.—சுலோகம்
பா. பே.—பாடபேதம்
ல. ஸ.—லலிதா ஸஹஸ்ர நாமம்
ஸௌ. ல.—ஸௌந்தர்ய லஹரீ

## உச்சரிப்பு

### (கொட்டை எழுத்துக்கள்)

| | | | |
|---|---|---|---|
| க | ग | கங்கை என்பதில் போல | |
| ட | ड | குடம் | ,, |
| த | द | பாதம் | ,, |
| ப | ब | இன்பம் | ,, |
| ரு | ऋ | எருது | ,, |
| ऽ | अ | 'அ' தொக்கு நிற்கும் | |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

# முகவுரை

## I

ஸௌந்தர்யலஹரீ என்னும் நூல் சிறந்த மந்திர சாஸ்திரமாக இந்நாடெங்கும் போற்றப்படுவது. லிங்க புராணத்தில் விநாயகர் வாழ்த்தில் இது மகாமேரு மலையில் விநாயகரால் எழுதப்பட்டதென்று கூறப்பட்டுள்ளது.

பிறைதவழும் எழில்தோன்றப் பிறங்குகதிர் வெண் [கோட்டான்
செறிகதிர்செய் தடங்குடுமிச் செம்பொன்மால்வரை [வாய்ப்ப
மறைபுகழும் சவுந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல்கெழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணை [தொழுவாம்.

மேருமலையில் எழுதி வைத்தவர் புஷ்பதந்தர் என்றும், ஆனால் அதற்கு முன்பே அது கைலாஸ மலையில் சிவாலயத்தின் மதிற்சுவரில் எழுதப்பட்டிருந்ததென்றும் ஒரு வரலாறு உண்டு. மேரு மலையில் இருந்ததை கௌடபாதர் கிரகித்துப் பின்பு ஆதிசங்கரருக்கு அதை உபதேசம் செய்ததாக ஸௌந்தர்ய லஹரியைத் தமிழ்ப் பாடலாக்கிய வீரை கவிராஜ பண்டிதர் கூறுகிறார்.

அரன்கயிலைப் புறத்தெழுதப் படுநூலை
அருந்தவத்துப் புட்பதந்தன்
பரந்தவட வரையழுத்த அதைக்கவுட பாதருளம்
பதித்துமுற்றுந்
தரம்பெறுசொல் அமுதெனப்பின் சங்கரமா
முனிக்கருள அந்தமேகம்
சுரந்துலகில் வாடும் உயிர்ப் பயிர்தழைப்பச்
சொரிந்ததென்ச் சொல்வர்நல்லோர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மற்றும் சிலர் ஆதிசங்கரரே கைலாஸ மலையிலிருந்து இதைக் கொணர்ந்தவர் என்றும், ஆனால் அவருக்குக் கிடைத்தது ஆனந்த லஹரீ எனப் பெயர் பெற்ற பகுதியில் அடங்கிய நாற்பத்தொரு சுலோகங்கள் மட்டுமே என்றும் பிற்பகுதியில் உள்ள ஐம்பத்தொன்பது சுலோகங்களையும் சங்கரர் தாமே எழுதிப் பூர்த்தி செய்தார் என்றும் கூறுவர். பொதுவாக ஸௌந்தர்ய லஹரீ என்னும் நூலின் பெரும் பகுதி சங்கராசாரியாரால் எழுதப்பட்டது என்பதிலும் முதன் முதலில் அவராலேயே அது உலகிற்கு அளிக்கப்பட்டது என்பதிலும் ஐயமில்லை.

இந்நூல் சாக்த ஆகமத்தின் ஸமயாசார தத்துவத்தின் ஸாராம்சம் ஆக உள்ளது. இதற்கு முப்பத்தாறு வியாக்கியானங்கள் காணப்படுகின்றன. இப்போது காணப்படாமல் இன்னும் பல இருந்திருக்கக்கூடும். வியாக்கியானங்கள் அனைத்துள்ளும் லல்லர் என்று பட்டப் பெயர் பெற்ற லக்ஷ்மீதரருடையது மிக விரிவாகவும் அதிகமாகப் பிரசாரத்தில் உள்ளதாகவும் இருக்கிறது. இவர் ஒரிஸ்ஸா தேசத்தில் பிரதாபருத்ர தேவருடைய சபையில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் எனத் தெரிகிறது. ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்திற்குப் பாஸ்கரராயர் எழுதியுள்ள பாஷ்யத்தைப்போல் சிறப்பு வாய்ந்தது லக்ஷ்மீதரருடைய ஸௌந்தர்ய லஹரீ பாஷ்யம். இப்புத்தகத்தில் பெரும்பாலும் லக்ஷ்மீதரருடைய பாஷ்யமே பின்பற்றப்பட்டுள்ளது, கைவல்யாசிரமர் எழுதிய ஸௌபாக்கிய வர்த்தினீ என்னும் உரையில் இருந்தும் காமேசுவரஸூரி எழுதின அருணாமோதினீ என்னும் உரையிலிருந்தும் தேதியூர் ஸுப்ரமணிய சாஸ்திரிகளின் உரையில் இருந்தும், காமகோடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சங்கராசாரியரின் உபந்நியாஸங்களில் இருந்தும் ஆங் காங்கே மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

## II

இது தேவீ ஸ்தோத்திரங்களுள் தலைசிறந்தது. நமஸ் கரித்தல், ஆசி கூறுதல், சித்தாந்தத்தை எடுத்துரைத்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் என ஸ்தோத்திர லக்ஷணம் அறுவகைப்படும்.

நமஸ்காரஸ்-ததாசீச்ச ஸித்தாந்தோக்திః பராக்ரமః।
விபூதிః ப்ரார்த்தனு சேதி ஷட்விதம் ஸ்தோத்ர
லக்ஷணம் ||

இங்கே கூறிய எல்லா லக்ஷணங்களும் ஸௌந்தர்ய லஹரியில் உள்ளன. 'நமோ வாகம் ப்ரூமః' (85) முதலிய சுலோகங்களில் முதல் லக்ஷணம் அமைகிறது. 'நமః' என்று உபாஸித்தால் ஆசைகளெல்லாம் உபாஸிப்பவனை நமஸ் கரிக்கும் என்று உபநிஷதம் கூறும் உண்மை இங்கே அநுபவத்தில் காணப்படும்.

'உன்னுடைய பாததூளி அவித்தை குடிகொண்ட உள்ளத்தினர்க்கு அகத்திருளைப் போக்கும் சூரியனுடைய உதயத்தீவின் நகரம்போலும், அவிவேகிகளுக்கு ஆத்ம ஞானமாகிய கற்பக விருக்ஷத்தின் பூங்கொத்திலிருந்து பரவிச் செல்லும் மகரந்தம் போலும், ஏழைகளுக்கு நினைத் ததை அளிக்கக்கூடிய சிந்தாமணிக் குவியல் போலும், பிறவிக்கடலில் மூழ்கியவர்களுக்கு ஆதிவராஹமாக அவ தரித்துப் பூமியைத் தூக்கிய முராரியின் கோரைப் பற்கள் போலும் விளங்குகிறது.' (3). 'பயத்தினின்று காப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பாற்றவும் வேண்டியதற்கு அதிகமாகவே பயனை அளிக்கவும் உன் திருவடிகளே திறமை உடையவைகள்' (4). இவைகளும் பிறவும் ஆசி கூறுகின்றன.

'பரப்பிரம்மத்துடன் இணைந்த பராசக்தியே! வேதத்தை அறிந்தவர்கள் உன்னையே பிரம்மாவின் பத்தினியான வாக் தேவதையாகவும் ஹரியினுடைய பத்தினியான லக்ஷ்மியாகவும் சிவனுடைய பத்தினியான பார்வதியாகவும் கூறுகிறார்கள். நீயே இம் மூவருக்கும் அப்பாற்பட்டவளாக 'இத்தகையவள்' என்று கூற முடியாதவளாக அடைதற்கு அரியதும் எல்லை இல்லாததுமான மகிமை உடையவளாக மகாமாயை எனப்பட்டவளாக உலகு அனைத்தையும் ஆட்டி வைக்கிறாய்' (97). இதுபோன்றவை ஸித்தாந்தத்தை விளக்குகின்றன.

'ஹரிஸ்த்வாமாராத்ய' (5), 'ஜகத்ஸூதே தாதா' (24), 'த்ரயாணும் தேவானும்' (25) போன்ற சுலோகங்கள் பராக்கிரமத்தையும் பெருமைகளையும் பேசுகின்றன.

'தாயே! உன்னுடைய எந்தப் பாதங்களை வேதங்களின் தலைபோன்ற உபநிஷதங்கள் சிரோபூஷணங்களாகத் தரிக்கின்றனவோ, அந்தப் பாதங்களை என்னுடைய தலையிலும் வைத்தருள்வாயாக' (84). 'தாயே! லாக்ஷாரஸப் பூச்சுடன் கலந்து வரும் உன்னுடைய பாதப் பிரக்ஷாளன தீர்த்தத்தை பிரம்ம வித்தையை நாடும் நான் எந்தக் காலத்தில் பருகப்போகிறேன்?' (98). 'தனோது க்ஷேமம் நஸ்தவ வதன ஸௌந்தர்ய லஹரீ' உன்னுடைய முகத்திலிருந்து பெருகும் அழகு வெள்ளம் எங்களுக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும்' (44). இந்த மாதிரி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சுலோகங்கள் ஆருவது லக்ஷணமாகக் கூறப்பட்ட பிரார்த்தனை வடிவில் அமைகின்றன.

## III

'மணியும் அதன் ஒளியும்போல, சூரியனும் அதன் பிரகாசமும் போல, நிர்க்குணமான பரம்பொருளே ஸகுணமாயும் உள்ளது. பிரம்மமாக இருக்கும் பொருளே சக்தியாகவும் உள்ளது. கிரியை அற்றதாகக் கருதும் போது அது பிரம்மம் அல்லது சிவம் எனப்படும். படைத்துக் காத்து அழிக்கும்போது அது சக்தி எனப்படுகிறது' என்று கூறுகிருர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். 'சிவனே' என்று இருக்கும்போது அது ஒன்றையும் செய்யாது. சக்தி என்னும்போது அது எல்லாவற்றையும் செய்யும்.

'சிவமெனும் பொருளு மாதி சக்தியொடு சேரினெத் தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கு மரி தரி தெனு மறை உரைக்குமால்' என்று ஸௌந்தர்ய லஹரீ முதல் சுலோகம் கூறுகிறது.

உபநிஷதங்கள் பெரும்பாலும் நிர்க்குணப் பிரம்மத்தைப் பற்றிப் பேசுவதால் அது பிரம்மவித்தை எனப்படும். அதை அறிந்து அநுபவத்தில் கொண்டுவர வழி காட்டுவது ஸ்ரீவித்தை. பிரம்மம் பிந்துவால் குறிக்கப்படும். சக்தி முக்கோணத்தால் குறிக்கப்படும். மூன்று குணங்கள், மூன்று மூர்த்திகள், மூன்று அவஸ்தைகள், மூன்று மூன்ருக உள்ளதெல்லாம் சக்தியின் ஸ்வரூபம், அதனுல் சக்தி திரிபுரஸுந்தரீ எனப்படுவாள். சக்தி வழிபாட்டு முறையில் மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற மூன்றையும் முக்கோணத்தின் மூன்று மூலைகளாகக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கருதலாம். மந்திரத்தில் உள்ள கருத்தை உருவப்படுத்திக் காட்டுவது யந்த்ரம். அதில் சித்தத்தை நிறுத்துவதற்குப் பயன்படும் பாஹ்ய பூஜையும் மானஸிக பூஜையும் குண்டலினீ யோகமும் மற்ற ஸாதனங்களும் தந்திரத்தில் அடங்கும். ஸ்ரீவித்தையின் கோடிக்கணக்கான மந்திரங்களில் மிக முக்கியமாகக் கொள்ளப்படுவது பஞ்சதசாக்ஷரீ மந்திரம். இது 'சிவঃ சக்திঃ காமঃ' என்ற முப்பத்திரண்டாவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது. முக்கியமான யந்திரம் ஸ்ரீசக்கரம். இது 'சதுர்ப்பி: ஸ்ரீகண்டைঃ' என்ற பதினோராவது சுலோகத்தில் விளக்கப்பட்டுள்ளது. முக்கியமான தந்திரம் ஐக்கியானுஸந்தானம். இது முப்பத்து நாலாவது சுலோகத்தில் குறிக்கப்படுகிறது மந்திரஸித்திக்கு யந்திரமும் தந்திரமும் பக்கத் துணைகள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தனது சரீரத்தையே சிறந்த யந்திரமாகக் கருதினர். 'அமீ யந்த்ர, துமீ யந்த்ரீ— நான் யந்திரம் நீ யந்த்ரீ' என்று தேவியை நோக்கிக் கூறுவார். பாவனோபநிஷத்து, தேகத்தை ஸ்ரீசக்கரமாகப் பாவித்து உபாஸனை செய்யும் முறையை விரிவாகக் கூறுகிறது. அன்னை பராசக்தியை உள்ளன்புடன் வழிபட்டால் ஸர்வதேவ தேவீ ஸ்வரூபிணியாகிய அவளே எல்லாத் தேவதைகளையும் தன்னிடம் காட்டியருள்வாள். எல்லாக் கொள்கைகளும் அங்கே ஸமரஸத் தன்மையை யடையும்.

அன்னையை வழிபடுவோருக்கு நிர்க்குணமும் ஸகுணமும் கருமமும் பக்தியும் யோகமும் ஞானமும் அத்துவைதமும் துவைதமும் இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத்திற்கு உகந்ததாகவும் எல்லாமாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இருக்கும் அவளை அடையும் மார்க்கங்களாகவும் காட்சி யளிப்பனவாக விளங்கும். இங்ஙனம் தேவியை வழிபடு வதற்கு எல்லா வர்ணத்தாருக்கும் ஆடவருக்கும் பெண்டி ருக்கும் சம உரிமை உண்டு. காளிதாஸன், மூககவி, வித்யா ரண்யர் போன்ற முன்கால தேவி பக்தர்களுடைய மதமும் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்ற தற்கால தேவி பக்தர்களு டைய மதமும் இதுவேயாம்.

சிவபக்தராகிய திருமூலர் திருவாடுதுறையில் தாம் சக்தியை வழிபட்டுப் பூர்ணத்துவம் எய்தியதாகக் கூறி யுள்ளார்.

> நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
> பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
> சீருடை யாள்சிவ னுவடு தண்டுறை
> சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே,

பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் காதிவித்தையை அவர் பின் வருமாறு விளக்குகிறார்:—

> ககாராதி ஓரைந்தும் காணிய பொன்மை
> ஹகாராதி ஓராறும் அரத்தமே போலும்
> ஸகாராதி ஓர்நான்கும் தான்சுத்த வெண்மை
> ஸகாராதி மூவித்தை காமிய முத்தியே.

சிவத்திற்கு உள்ள பெருமை சக்திக்கும் உண்டு. சக்தியை யும் சிவனையும் உள்ளத்தில் தியானித்தால் அஷ்டமா சித்திகளையும் பெறலாம் முக்தியையும் பெறலாம் எனக் கூறுகிறார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சத்தன் அருள்தரிற் சக்தி அருளுண்டாம்
சக்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாம்
சக்தி சிவமாம் இரண்டும்தன் உள்வைக்க
சத்தியம் எண்சித்தித் தன்மையும் ஆமே.

தெய்வத்தை வழிபடுபவர் குழந்தை உள்ளம் படைத்தவர் ஆகின்றனர். குழந்தை உள்ளம் படைத்தவர் தெய்வத்தைத் தாயாகவே காண்கின்றனர். தாயாகத் தெய்வத்தை வழிபடும்முறை பாரதநாட்டில்தான் பரிபூர்ணநிலை எய்தியுள்ளது, பாரத நாட்டில் ஸௌந்தர்யலஹரீ, தேவி உபாஸகர்களுக்கு ஒரு பொக்கிஷம்.

## IV

ஸம்ஸ்கிருதத்தில் அதிகப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் ஸௌந்தர்ய லஹரியின் ரஹஸ்யார்த்தங்களைத் தமிழில் விளக்குவதற்காக இந்நூல் வெளியிடப்படுகிறது. மூலம் முதலில் நாகர எழுத்திலும் அதனடியில் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருப்பதுடன், பதவுரையும் வியாக்கியானக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பிட்டுப் படிப்பதற்கு உபயோகமாக இருக்கும் வகையில் பல நூல்களிலிருந்து மேற்கோள்களும் உவமைகளும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

அநுபந்தங்களாக ஸ்ரீசக்கரம் வரையும் முறையும் பாவனோபநிஷத்தும், ஸௌந்தர்ய லஹரியின் சில பிரயோகங்களும் பாராயணமும் ஜபம் செய்யும் முறையும் அபிராமி அந்தாதியில் உள்ள சில அருமையான பாடல்களும் தரப்பட்டுள்ளன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அச்சிடும்போது பிழை திருத்துவதில் உதவிய பிரம்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும் இந்நூலைப் பயன்படுத்தி என் முயற்சியை ஸார்த்தகமாக்கும் அன்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம்,
மயிலாப்பூர், சென்னை-4.

உரையாசிரியர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## ॥ श्री गुरुपादुकावन्दनम् ॥

ऐंकार-ह्रींकार-रहस्ययुक्त-
श्रींकारगूढार्थ-महाविभूत्या ।
ओंकारमर्म-प्रतिपादिनीभ्यां
नमो नमः श्रीगुरुपादुकाभ्याम् ॥

ஐங்கார-ஹ்ரீங்கார-ரஹஸ்யயுக்த-
ஶ்ரீங்கார-கூடார்த்த-மஹாவிபூத்யா ।
ஓங்கார-மர்ம-ப்ரதிபாதினீப்ப்யாம்
நமோ நமஃ ஶ்ரீகுரு-பாதுகாப்ப்யாம் ।

ஐங்காரம் ஹ்ரீங்காரம் ஆகியவற்றின் ரகசியத்துடன் கூடிய ஶ்ரீங்காரத்தின் உட்கருத்தாகிய சிறந்த செல்வத்தால் ஓங்காரத்தின் மர்மத்தை விளங்கவைக்கும் ஶ்ரீ குருநாதரின் திருவடிகளுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

ஸ்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## ॥ समर्पणम् ॥

जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्यक्रमण मशनाद्याहुति-विधिः ।
प्रणामः संवेशः सुख-मखिल-मात्मार्पणदृशा
सपर्यापर्याय-स्तव भवतु यन्मे विलसितम् ॥

ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசனு
கதி: ப்ராதக்ஷிண்ய-க்ரமண-மசனுத்யாஹுதி-விதி: ।
ப்ரணும: ஸம்வேச: ஸுகமகில-மாத்மார்ப்பண-த்ருசா
ஸபர்யா-பர்யாயஸ்-தவ பவது யன்மே விலஸிதம் ॥

ஆத்ம ஸமர்ப்பண பாவனையால் வெறும் பேச்சும் ஜபமாகவும், கைத்தொழில் அனைத்தும் முத்திரைகளின் விளக்கமாகவும், நடை பிரதக்ஷிணமாகவும், உண்டி முதலியன ஹோமமாகவும், படுத்துக்கொள்ளுதல் நமஸ்காரமாகவும், இன்னும் சுகமாக முயற்சியின்றி எனது செயல் எது எது உண்டோ அதுவெல்லாம் உன்னுடைய பூஜை முறையாகவும் ஆகட்டும்.

சௌந்தர்ய லஹரீ-27

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## ॥ श्रीचक्रम् ॥



बिन्दु त्रिकोण-वसुकोण दशारयुग्म-मन्वश्र नागदल- संयुत-
षोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदन-त्रयं च श्रीचक्र-मेत-दुदितं परदेवतायाः ॥

பிந்து - த்ரிகோண - வஸுகோண - தசாரயுக்ம-
மன்வச்ர - நாகதள - ஸம்யுத - ஷோடசாரம் ।
வ்ருத்தத்ரயஞ்ச தரணீஸதன - த்ரயஞ்ச
ஸ்ரீசக்ர - மேத - துதிதம் பரதேவதாயாঃ ॥

பிந்து, முக்கோணம், எட்டுக்கோணம், இரண்டு பத்துக் கோணங்கள், பதினாலு கோணம், எட்டுத் தளம், பதினாறுதளம், மூன்று வட்டம், மூன்று கோட்டு பூபுரம் என்றவைகளாலாகிய இது பரதேவதையின் ஸ்ரீசக்கரம் எனப்படும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

# सौन्दर्यलहरी

## प्रथमो भागः

## आनन्दलहरी

शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं
न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितु-मपि ।
अतस्त्वा-माराध्यां हरि-हर-विरिञ्चादिभि-रपि
प्रणन्तुं स्तोतुं वा कथ-मकृतपुण्यः प्रभवति ॥ १ ॥

॥ ஸ்ரீ: ॥

# ஸௌந்தர்யலஹரீ

## முதல் பாகம் ஆனந்தலஹரி

சிவः சக்த்யா யுக்தோ யதி பவதி சக்தঃ ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குசலঃ ஸ்பந்திது-மபி ।
அதஸ்-த்வா-மாராத்த்யாம் ஹரி-ஹர-விரிஞ்
சாதிபி-ரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத-புண்யঃ
ப்ரபவதி ॥

# ஸௌந்தர்யலஹரீ

## முதல் பாகம்

## ஆனந்தலஹரீ

**1.** பராசக்தியின் ஏற்றம். அவளை வழிபடப் பூர்வ புண்ணியம் வேண்டும். (ஸர்வ விக்ன நாசமும் ஸகல கார்ய ஸித்தியும் இந்தச் சுலோகத்தை மந்திரமாக ஜபிப்பதால் ஏற்படும்.)

---

விரிஞ்ச்யாதிபி-ரபி —பா. பே.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(சிவஃ) மங்கள மூர்த்தியான (தேவஃ) மகாதேவன் (சக்த்யா) பராசக்தியாகிய உன்னுடன் (யுக்தஃ) கூடியவ ராக (பவதி யதி) இருந்தால் மட்டும் (ப்ரபவிதும்) பிரபஞ்சத்தை ஆக்குவதற்கு (சக்தஃ) திறமையுடைய வர் ஆவார். (ஏவம்) அவ்வாறு (ந சேத்) கூடியில்லா விட்டால் (ஸ்பந்திதும் அபி) அசைவதற்குக்கூட (குசலஃ) திறமை உடையவராக (ந கலு) ஆவதில்லையன்றோ? (அதஃ) ஆகையால் (ஹரி-ஹர-விரிஞ்சாதிபிஃ அபி) விஷ்ணு, ருத்ரன், பிரம்மா முதலியவர்களாலும் (ஆராத்த்யாம்) பூஜித்தற்குரிய (த்வாம்) உன்னை (அக்ருத புண்யஃ) புண்ணியம் செய்யாதவன் (ப்ரணந்தும்) வணங்குவதற்கோ (ஸ்தோதும் வா) அல்லது துதிப் பதற்கோ (கதம்) எங்ஙனம் (ப்ரபவதி) தகுதியுடைய வனாவான்?

---

ஏஷா ஸா ஸாக்ஷிணீ சக்திஃ சங்கரஸ்யாபி சங்கரீ
சிவாபின்னு தயா ஹீநஃ சிவஃ ஸாக்ஷாந்நிரர்த்தகஃ ||

ஸாக்ஷியான இந்தச் சக்தி, சங்கரனுக்கும் மங்களத் தைச் செய்பவள். சிவனை விட்டுப் பிரியாதவள். அவளைப் பிரிந்தால் சிவன் பயனற்றவனாவான். —ஸ்காந்தம்.

ஓ.சிவோபிசவதாம் யாதி குண்டலின்யா விவர்ஜிதஃ।

குண்டலினிசக்தியினின்று பிரிந்தால் சிவனும் சவம் போல் ஆகிறான். —தேவீ பாகவதம்.

பூர்வ புண்ணியம் — பராசக்தியை வழிபடவேண்டும் என்றோ ஸௌந்தரியலஹரி போன்ற ஸ்தோத்திரங் களால் அவளைத் துதிக்கவேண்டும் என்றோ ஆசை ஏற் படுவதே பூர்வ புண்ணியத்தின் பலன் என்று அறிய வேண்டும்.

ஓ கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோர் வையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

—அபிராமி அந்தாதி 12.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तनीयांसं पांसुं तव चरण-पङ्केरुह-भवं
विरिंचिः संचिन्वन् विरचयति लोका-नविकलम् ।
वहत्येनं शौरिः कथमपि सहस्रेण शिरसां
हरः संक्षुद्यैनं भजति भसितोद्धूलन-विधिम् ॥२॥

தநீயாம்ஸம் பாம்ஸும் தவ சரண-பங்கேருஹ-பவம்
விரிஞ்சிః ஸஞ்சின்வன் விரசயதி லோகா-னவிகலம் ।
வஹத்யேனம் சௌரிః கதமபி ஸஹஸ்ரேண சிரஸாம்
ஹரః ஸம்க்ஷுத்யைனம் பஜதி பஸிதோத்தூளன-
விதிம் ‖ 2 ‖

---

2. பாததூளி மகிமை (ஸர்வலோக வசியம்)

(விரிஞ்சி :) பிரம்மா (தவ) உன்னுடைய (சரண-பங்கேருஹ-பவம்) திருவடித் தாமரைகளிலுள்ள (தனீ யாம்ஸம்) மிக நுட்பமான (பாம்ஸும்) தூளே (ஸஞ் சின்வன்) ஸம்பாதித்து (லோகான்) உலகங்களை (அவி கலம்) முட்டின்றி (விரசயதி) சிருஷ்டிக்கிறார். (சௌரிః) ஆதிசேஷன் (சிரஸாம் ஸஹஸ்ரேண) (ஆயிரம் தலை களால் (ஏனம்) இவ்வுலக வடிவான பாத தூளியை (கதமபி) எப்படியோ (வஹதி) தாங்குகிறார். (ஹர ః) ருத்திரன் (ஏனம்) இதை (ஸம்க்ஷுத்ய) நன்றாகப் பொடி யாக்கி (பஸித-உத்தூளன-விதிம்) விபூதி பூசிக் கொள்ளும் முறையை (பஜதி) அனுஷ்டிக்கிறார்.

---

2. விரசயதி—விவிதான் கரோதி । அவிகலம்-பரஸ்பர ம்ஸங்கீர்ணம் யதா பவதி ததா, யத்வா யாவத் ப்ரலயம் ஏஷாம் வைகல்யம் யதா ந பவதீதி ததா வஹதி ப்ரா ப்யதி, ரக்ஷதி । ஹரః—அந்தகாலே ப்ரபஞ்சம் ஹ்ரதீதி ஹரః ॥ —லக்ஷ்மீதரர்.

பாததூளி பூஜை — ஒரு பௌர்ணமியில் ஸுவா ஸினியைப் பூஜைக்கு அழைக்கும்போது நதி மணலை வஸ்த்ரகாயம் செய்து வழியில் இறைத்து அதன்மேல்

---

லோகானவிகலான் । ஸம்க்ஷுப்யைனம் । உத்தூளன விதிம் । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अविद्याना-मन्त स्तिमिर-मिहिर द्वीपनगरी
जडानां चैतन्य-स्तबक-मकरन्द स्रुतिझरी ।
दरिद्राणां चिन्तामणिगुणनिका जन्मजलधौ
निमग्नानां दंष्ट्रा मुररिपु-वराहस्य भवति ॥ ३ ॥

அவித்யாஞு-மந்தஸ்திமிர-மிஹிர-த்வீப-நகரீ
ஜடாஞும் சைதன்ய-ஸ்தபக-மகரந்த-ஸ்ருதிஜரீ ।
தரித்ராஞும் சிந்தாமணி-குணநிகா ஜன்மஜலதௌ
நிமக்ஞுஞும் தம்ஷ்ட்ரா முரரிபு-வராஹஸ்ய பவதி ॥3

---

3. பாததூளி முக்தியளிப்பது (ஸர்வ-வித்யா-ப்ராப்தி)

உன்னுடைய பாததூளி—(அவித்யாஞும்) அவித்தை குடிகொண்ட உள்ளத்தினர்க்கு (அந்தஸ்-திமிர-மிஹிர த்வீப-நகரீ) அகத்திருளைப் போக்கும் சூரியனுடைய உதயத்தீவின் நகரம் போலும், (ஜடாஞும்) அவிவேகிகளுக்கு (சைதன்ய-ஸ்தபக-மகரந்த-ஸ்ருதிஜரீ) ஆத்ம

---

அடிவைத்து வரச்செய்து பூஜை முடிந்தபின் அம்மணலைத் தேவியின் பாததூளியாகக் கருதி ஒரு சிறு பெட்டியில் சேகரித்து வைத்துக்கொண்டு காலை மாலைகளில் பூஜிக்க வேண்டும் காலைப்பூஜைக்குப் பின் 'தநீயாம்ஸம் பாம் ஸூம்' என்ற சுலோகத்தை ஆயிரம் முறை ஜபம் செய்ய வேண்டும். மாலைப்பூஜைக்குப்பின் 'அவித்யாஞும் அந்தஸ் திமிர மிஹிர த்வீபநகரீ' என்ற சுலோகத்தை ஆயிரம் முறை ஜபம் செய்யவேண்டும். இவ்விதம் வஸந்தருதுவிலோ சரத்ருதுவிலோ ஒரு மண்டலம் நியமத்துடன் பூஜையும் ஜபமும் செய்து முடிவில் ஒன்பது ஸுவாஸினிகளை அழைத்துப் போஜனம்,வஸ்திரம்,ஆபரணம்,தக்ஷிணை முதலியவை அளித்து விரதத்தைப் பூர்த்தி செய்தால், அப்படிச் செய்பவர் அஷ்டைச்வர்ய ஸம்பன்னர் ஆவார்.

---

3. அந்தஸ்திமிர மிஹிரோத்தீபனகரீ,

। மகரந்தஸ்ருதிசிரா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஞானமாகிய கற்பகவிருக்ஷத்தின் பூங்கொத்திலிருந்து பரவிச் செல்லும் மகரந்தம் போலும் (தரித்ராணும்) ஏழைகளுக்கு (சிந்தாமணி-குணநிகா) நினைத்ததை அளிக்கக்கூடிய சிந்தாமணிக் குவியலாயும் (ஜன்ம-ஜலதௌ) பிறவிக்கடலில் (நிமக்னும்) மூழ்கியவர்களுக்கு (முரரிபு-வராஹஸ்ய) ஆதி வராகமாய் அவதரித்துப் பூதேவியைத் தூக்கிய முராரியின் (தம்ஷ்ட்ரா) கோரைப்பற்கள் போலும் (பவதி) விளங்குகிறது.

---

ஓ. வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச் [ளியே
சந்திப பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ண

—அபிராமி அந்தாதி 14.

3. சிந்தாமணி :—சிந்தாமணி என்னும் ரத்னம் சிந்தித்ததை யெல்லாம் அளிக்க வல்லது. அம்பாளுடைய (ஹ்ரீம்) மாயாபீஜத்திற்குச் சிந்தாமணி பீஜம் என்று பெயர்.

'ஹ்ரீம்' பீஜத்தை ஒன்றுக்கொன்று பார்வையான திரிகோணங்களின் நடுவில் எழுதி அதைச் சுற்றி விருத்தம் வரைந்து அதை மேல்பாகத்தில் அஷ்டதளத்தால் அலங்கரித்து அதில் தேவியினுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு ஸௌந்தர்யலஹரீ சுலோகங்களைப் பக்தியுடன் பாராயணம் செய்து வந்தால் கனவிலும் நனவிலும் பராசக்தியின் தரிசனமும் பரிபூர்ண கடாக்ஷமும் ஏற்படும்.

முரரிபு :—முரன் என்ற அசுரனைக் கொன்றதால் விஷ்ணுவிற்கு முரரிபு என்று பெயர்.

பவதி—விளங்குகிறது. முன் சுலோகத்திலுள்ள பாததூளி என்னும் சொல்லை இதற்கு எழுவாயாகக் கொள்ள வேண்டும்.

'அந்தஸ்திமிர-மிஹிரோத்தீபனகரீ' என்ற பாடத்திற்கு-'மனத்தின் இருளைப் போக்கி ஒளியைத் தரும் சூரியன்' என்று அர்த்தம். 'மகரந்தஸ்ருதிசிரா' என்ற பாடத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



त्वदन्यः पाणिभ्या-मभयवरदो दैवतगणः
त्वमेका नैवासि प्रकटित-वराभीत्यभिनया।
भयात् त्रातुं दातुं फलमपि च वांछासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥ ४ ॥

த்வ-தன்யঃ பாணிப்ப்யா-மபயவரதோ தைவதகணঃ
த்வமேகா நைவாஸி ப்ரகடித-வராபீத்யபிநயா ।
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானும் தவ ஹி சரணுவேவ நிபுணௌ ॥

4. பாதகமலங்களின் நிகரற்ற சக்தி (ஸகல பய நிவிருத்தி, ரோக நிவிருத்தி).

(லோகானும் சரண்யே) உலகிற்குப் புகலிடமே! த்வ-தன்யঃ) உனக்கு வேருன(தைவதகணঃ)தேவக்கூட்டங்கள் (பாணிப்யாம்) கைகளால் (அபயவரதঃ) அபயத்தையும் வரத்தையும் அளிப்பதாகக் காட்டுகிறவர்கள். (த்வம் ஏகா) நீ ஒருத்தி மட்டும் (ப்ரகடித-வர-அபீதி-அபிநயா) அபிநயத்தால் வரத்தையும் அபயத்தையும் பிரகடனம் செய்பவளாக (ந ஏவ அஸி) இருப்பதே இல்லை. (ஹி) ஏனென்ருல் (பயாத்) பயத்திலிருந்து (த்ராதும்) காப்பாற்றவும் (வாஞ்சா-ஸமதிகம்) வேண்டியதற்கு அதிகமாகவே (பலம்) பலனை (தாதும் அபி ச) அளிப்பதற்குங்கூட (தவ) உன்னுடைய (சரணௌ ஏவ) திருவடிகளே (நிபுணௌ ஹி) திறமை உடையவைகள் அன்றோ?

திற்கு மகரந்தத்தின் பெருக்குச் செல்லும் கால்வாய் என்பது பொருள்.

4. அபய வரதঃ-- ஸம்ஸார பயத்தைப் போக்கி மோக்ஷத்தை அளிக்கும் அபய முத்திரையானது தூக்கிய வலது கையில் தேவதைகளின் பிம்பங்களில் ஸாதாரணமாய்க் காணப்படுவது உலக இன்பங்களை வேண்டுவார்க்கு அளிக்கும் வரமுத்திரை திருவடிகளைக் காட்டித் தாழ்த்திய இடதுகையில் காணப்படுவது.

சரண்யே (ஸ்ரீசக்கரத்தை இருப்பிடமாக உடையவளே!)
—அர்த்தபேதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



हरिस्त्वामाराध्य प्रणत-जन-सौभाग्य-जननीं
पुरा नारी भूत्वा पुररिपुमपि क्षोभ-मनयत् ।
स्मरोऽपि त्वां नत्वा, रतिनयन-लेह्येन वपुषा
मुनीनामप्यन्तः प्रभवति हि मोहाय महताम् ॥ ५ ॥

தொ 4

ஹரிஸ்-த்வா-மாராத்ய ப்ரணத-ஜன ஸௌபாக்ய-ஜனனீம்
புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோப-மனயத்।
ஸ்மரோऽபி த்வாம் நத்வா ரதி நயன-லேஹ்யேன வபுஷா
முனீனா-மப்-யந்தஃ ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் ‖ 5 ‖

---

5. தேவி பூஜையின் மகிமை (ஸ்த்ரீ புருஷ வசியம்)

(ப்ரணத - ஜன - ஸௌபாக்ய - ஜனனீம்) வணங்கும் ஜனங்களுக்கு ஸகல ஸௌபாக்கியத்தையும் தோற்றுவிக்கும் (த்வாம்) உன்னை (ஹரிஃ) விஷ்ணு (ஆராத்ய) பூஜித்து (புரா) முன்னொரு சமயம் (நாரீ பூத்வா) பெண் வடிவு கொண்டு (புரரிபும் அபீ) முப்புரம் எரித்த பரம

---

ஆனால் த்ரிபுரஸுந்தரி தனது கரங்களில் பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்புவில் ஆகியவற்றைத் தரிப்பதால் அபய வரத சக்திகள் அந்த வடிவில் அம்பாளுடைய கைகளால் பிரகடனப்படுத்தப்படாமல் பாதங்களில் அடங்கியிருப்பதாகத் தியானிக்கப்படுகிறது. அபய, வரம் அளிக்கும் பிற தெய்வங்களும் தேவியின் பாதகமலங்களைப் பூஜிக்கின்றனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சிவனையுங் கூட (க்ஷோபம்) மனம் சலிக்கும்படி (அனயத்) கவர்ந்தார். (ஸ்மரஃ அபி) மன்மதனும் (த்வாம்) உன்னை (நத்வா) வணங்கி (ரதி-நயன-லேஹ்யேன-வபுஷா) ரதிதேவி கண்கொண்டு பருகும் அமுதம் போன்ற வடிவங்கொண்டு (மஹதாம்) மகான்களான (முனீனாம் அபி) முனிவர்களுக்கும் கூட (அந்தஃ) அந்தரங்கத்தில் (மோஹாய) மதிமயக்கம் உண்டாகும்படி (ப்ரபவதி ஹி) சக்தியுள்ளவன் ஆகிறான் என்பது நிச்சயம்.

---

அம்பிகையின் கடாக்ஷத்தைப் பெற்றுவிட்டவர்களுக்கு வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத நிலை கிட்டுகிறது. அவர்கள் எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்ப்பார்கள்.

ஒ. சிவ சிவ பச்யந்தி ஸமம் ஸ்ரீகாமாக்ஷீ கடாக்ஷிதாஃ புருஷாஃ। விபினம் பவனம் அமித்ரம் மித்ரம் லோஷ்டஞ்ச யுவதி-பிம்போஷ்டம்॥ —மூக பஞ்சசதீ

5. ப்ரணதஜன-ஸௌபாக்ய ஜனனீம்—தேவியை ஆராதித்தவர்களில் தலைசிறந்தவர்களாக மகேசுவரர், மாதவர், பிரம்மா, மன்மதன், ஸ்கந்தர், நந்திகேசுவரர், இந்திரன், மனு, சந்திரன், குபேரன், அகஸ்தியர், துர்வாஸர் எனப் பன்னிருவர் கூறப்படுவர். தேவியை ஆராதித்த பெருமையால் தேவியேபோல் எல்லோருடைய மனத்தையும் கவரும் மோகினி வடிவத்தை விஷ்ணு எடுத்துக்கொண்டு பாற்கடல் கடைந்த பின் அமுதத்தைப் பங்கிடும்போது அசுரர்களை மயக்கினார். அந்த

---

ப்ரணத-ஜன-ஸௌபாக்ய-ஜனனி ! —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



धनुः पौष्पं मौर्वी मधुकरमयी पञ्च विशिखाः
वसन्तः सामन्तो मलयमरु-दायोधन-रथः ।
तथाप्येकः सर्वं हिमगिरिसुते कामपि कृपां
अपांगात्ते लब्ध्वा जगदिद-मनङ्गो विजयते ॥ ६ ॥

மலயமாருத

தனுஃ பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகாஃ
வஸந்தஃ ஸாமந்தோ மலயமரு-தாயோதன-ரதஃ
ததாப்யேகஃ ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத்தே லப்த்வா ஜகதித-மனங்கோ
விஜயதே ॥ 6 ॥

6. கடைக்கண் பார்வை (புத்ர ஸந்தானம்)

(ஹிமகிரிஸுதே) பனிமலையரசன் பெண்ணே!—மன்மதனுடைய—(தனுஃ) வில் (பௌஷ்பம்) மலர்களாலானது (மௌர்வீ) நாண்கயிறு (மதுகரமயீ) தேனீக்களாலானது (விசிகாஃ) பாணங்கள் (பஞ்ச) ஐந்தே— அவையும் பூக்கள்—(ஸாமந்தஃ) மந்திரி (வஸந்தஃ) வஸந்த ருது, (ஆயோதனரதஃ) போர் செய்ய ஏறி வரும் தேர் (மலய

மோகினி வடிவத்தைக் காணப் பரமசிவன் விரும்பவே, மீண்டும் ஒருமுறை அவருக்காக அவ்வுருவைக் காட்டினார். அப்போது தன்னையும் மறந்த பரமசிவன் 'மோகினியைத் தொடர்ந்து ஓடித் தழுவிக்கொண்டார்' என்று பாகவத புராணமும் மற்றப் புராணங்களும் கூறுகின்றன.

ரதி-நயன-லேஹ்யேன - வபுஷாஃ—மன்மதன் பரமசிவனுடைய நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டபின் தேவியின் கடாக்ஷத்தால் 'மற்றவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் மனைவியான ரதியின் கண்ணுக்குமட்டும் புலப்படும்படியான அழகுமிக்க ஸூக்ஷ்மமான சரீரத்தை அடைந்தான்' என்பது வரலாறு. 'ஹர-நேத்ராக்னி-ஸந்தக்த - காம - ஸஞ்ஜீவ - நௌஷதிஃ - சிவனது நெற்றிக் கண் தீயால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து' என்பது லலிதா ஸஹஸ்ரநாமத்தில் எண்பத்து நாலாவது நாமம். எங்கெங்கே பிறருடைய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மருத்) மலயத்திலிருந்து வீசும் தென்றல் காற்று (ததா அபி) அப்படியிருந்தும் (அனங்க :) உடலில்லாத மன்மதன் (ஏக:) ஒருவனுகவே (தே) உன்னுடைய (அபாங்காத்) கடைக்கண் பார்வையால் (காம் அபி க்ருபாம்) ஏதோ ஒரு கிருபையை (லப்த்வா) அடைந்து (இதம்) இந்த (ஜகத்) உலகம் (ஸர்வம்) அனைத்தையும் (விஜயதே) ஜயிக்கிருன்.

---

மனத்தைக் கவரும் சக்தி அதிகரித்துக் காணப்படுகிறதோ அங்கங்கே பராசக்தியின் அருள் விளங்குவதாக உணர வேண்டும்.

6. இந்தச் சுலோகத்தில் சொல்லப்படும் உபாஸனைக்கு 'அனங்க வித்யா' என்று பெயர். இதற்கு மன்மதன் ரிஷி, அவ்யக்த காயத்ரீச் சந்தம், ராஜராஜேசுவரி தேவதை. தேவியின் கருணைக்குப் பாத்திரமானவன் ஒரு ஸாதனமும் இல்லாவிட்டாலும் 'உலகையெல்லாம் வெல்லக்கூடியவன் ஆகலாம்' என்பதற்கு மன்மதன் உதாரணம். உடலே இல்லாமல், புஷ்பத்தால் ஆன வில்லையும் அம்புகளையும் கொண்டு, தென்றல்காற்றையே தேராகக் கொண்டு வேறு உதவியில்லாமல் ஒருவனுகவே உலகத்தாருடன் போர் நிகழ்த்தி மகாபுருஷர்களைக்கூட ஜயித்து விடுகிருன்.

ஓ. அசேதா யச்ச சேதன:। ஸ தம் மணி-மவிந்தத்। ஸோऽநங்குலி - ராவயத்। ஸோऽக்ரீவ: ப்ரத்யமுஞ்சத்। ஸோऽஜிஹ்வோ அஸச்சத। நைதம் ருஷிம் விதித்வா நகரம் ப்ரவிசேத்॥

அங்கம் இன்மையால் உணர்ச்சியற்றவன் என்ருலும் எல்லா உயிர்களிலும் உள்ளுறைவால் சேதனுய் விளங்குகிருன் மன்மதன். அவன் பிரசித்தமான ஸ்ரீவித்யா ரத்னத்தை அடைந்தான். கையில்லாமல் சேர்த்துப் பிடிப்பவன் ஆனுன். கழுத்தில்லாமல் மணியை அணிந்துகொண்டான். நாக்கில்லாமல் ருசி பார்த்தான். இப்படிப்பட்ட மந்த்ரத்ரஷ்டாவான ரிஷியை அறியாமல் ஸ்ரீசக்கர பூஜையில் பிரவேசிக்க லாகாது.

—யஜுர்வேதம்—(ஆருணம் அனு. 50.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



क्वणत्कांची-दामा करिकलभ कुंभ-स्तन-नता
परिक्षीणा मध्ये परिणत शरच्चन्द्र-वदना ।
धनु-र्बाणान् पाशं सृणिमपि दधाना करतलैः
पुरस्ता दास्तां नः पुरमथितु राहो-पुरुषिका ॥ ७ ॥

க்வணத் காஞ்சீ-தாமா கரிகலப-கும்ப-ஸ்தன நதா
பரிக்ஷீணு மத்த்யே பரிணத-சரச்சந்த்ர-வதனு ।
தனுர் பாணுன் பாசம் ஸ்ருணி-மபி ததாணு கரதலை:
புரஸ்தா-தாஸ்தாம் ந: புரமதிது-ராஹோ-
புருஷிகா ॥ 7 ।

7. தேவியின் ஸ்வரூபம் (தேவியின் ஸாக்ஷாத்காரம், சத்ரு ஜயம்)

(க்வணத்) சலங்கைகள் கிலு கிலுக்கின்ற (காஞ்சீ தாமா) தங்க ஒட்டியாணம் பூண்டவளும் (கரி-கலப-கும்ப-ஸ்தன-நதா) யானையின் மஸ்தகம் போன்ற நகில்களால் சற்று வணங்கிய வடிவுடையவளும் (மத்த்யே) இடையில் (பரீக்ஷீணு) மிக மெலிந்தவளும் (பரிணத-

7. மணிபூரக சக்கரத்தில் தேவி எந்த ரூபத்துடன் பிரகாசிக்கிருளோ அது இங்கே வர்ணிக்கப்படுகிறது.

மேருதண்டம் என்னும் முதுகெலும்பிற்குள் ஸூக்ஷ்மமாக ஸுஷும்னு என்ற நாடி இருக்கிறது. இதன் அடியில் மூலாதார சக்கரமும் அதற்கு நாலு விரற்கிடைக்குமேல் ஸ்வாதிஷ்டானமும் அதற்குமேல் தொப்புளுக்கு எதிரில் மணிபூரகமும் இருதயத்துக்கு எதிரில் அநாஹதமும் கண்டத்துக்கு எதிரில் விசுத்தியும் புருவ மத்தியில் ஆஜ்ஞையும் சிரஸின்மேல் ஸஹஸ்ரார சக்கரமும் உள்ளன. இவை யோகிகளுக்குப் பிரத்தியக்ஷம்.

மணிபூரகத்தில் த்ரிபுராந்தகனை காமேசுவரனுடைய ஜீவநாடியாகத் தேவி விளங்குகிருள்.

ஆஹோ புருஷிகா—'அஹோ' அல்லது 'ஆஹோ' என்பது சாதாரணமாக ஆச்சரியத்தைக் குறிக்கும்

ஸ்தன-ப்ரா । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(சந்த்ரவதனு) சரத்காலத்துப் பூர்ணசந்திரன் போன்ற முகம் படைத்தவளும் (கரதலை:) கைகளால் (தனுர்-பாணுன் பாசம்-ஸ்ருணிம் அபி) கரும்புவில் புஷ்ப பாணம், பாசம். அங்குசம் ஆகியவற்றை (ததானு) தரிப்பவளும் (புரமதிது:) முப்புரத்தை யழித்த பரம சிவனுடைய (ஆஹோ-புருஷிகா) ஆச்சரியமான அகம் பாவ வடிவினளுமான பராசக்தி (ந:) எங்களுக்கு (புரஸ்தாத்) எதிரில் (ஆஸ்தாம்) எழுந்தருளட்டும்.

---

சொல். இங்கு அது 'அஹம்' என்ற தன்னுணர்வைக் குறிக்கும்; அதுவே தேவியின் ஸ்வரூபம்.

ஒ. (அஹமித்யேவ விபாவயே பவானீம்) பவானியை அஹமெனும் தத்துவமாகப் பாவிக்கின்றேன்.

ஒ. 'உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்' —திருவாசகம்.

ஆயுதங்கள்— ஆசைவடிவான பாசம் இடதுமேல் கையில், கோபமாகிய அங்குசம் வலது மேல்கையில், மனமாகிய கரும்புவில் இடது கீழ்ச்கையில், ஐந்து தன் மாத்திரைகளாகிய பாணங்கள் வலது கீழ்க்கையில்.

ஒ ராகஸ்வரூப - பாசாட்யா க்ரோதாகாராங்குசோ ஜ்வலா। மனோரூபேக்ஷு கோதண்டா பஞ்ச-தன்மாத்ர-ஸாயகா। [ல. ஸ.

ஒ. "மன்மதனுக்கும் கரும்புவில், அம்பாளுக்கும் கரும்புவில், அவனுக்கும் பஞ்சபாணம் புஷ்பந்தான், இவளுக்கும் பஞ்சபாணம் புஷ்பந்தான். காமத்தில் மூழ்கிக்கிடக்கும் மனுஷ்யர்களுக்குக் காமத்தைக் கட்டுப் படுத்தவும் மனத்தைக் கட்டுப்படுத்தவும் இவற்றை அம்பாள் தன் கையில் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டு அநுக்கிரகம் செய்கிருள். இதைப்பற்றி மூககவி 'உன்னுடைய கடாக்ஷம் சிவனிடம் மோஹத்தை உண்டுபண்ணுகிறது. மனுஷ்யர்களுடைய மோஹத்தை அடக்கிவிடுகிறது' என்கிருர்."

—காமகோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सुधासिन्धो-र्मध्ये सुरविटपि-वाटी-परिवृते
मणिद्वीपे नीपोपवनवति चिन्तामणि गृहे ।
शिवाकारे मञ्चे परमशिव-पर्यङ्कनिलयां
भजन्ति त्वां धन्याः कतिचन चिदानन्द-लहरीम् ॥

ஸுதா-ஸிந்த்தோர்-மத்த்யே ஸுரவிடபி-வாடீ-
பரிவ்ருதே
மணித்வீபே நீபோபவனவதி சிந்தாமணி க்ருஹே
சிவாகாரே மஞ்சே பரமசிவ-பர்யங்க-நிலயாம்
பஜந்தி த்வாம் தன்யா: கதிசன சிதானந்த-
லஹரீம் ‖ 8 ‖

8. தேவியின் சிந்தாமணிக்ருஹம் (ஜனன மரண நிவிருத்தி)

(ஸுதாஸிந்த்தோ:) அமிர்தக் கடலின் (மத்த்யே) நடுவில் (ஸுரவிடபி-வாடீ-பரிவ்ருதே) கல்பகவிருக்ஷத் தோப்புகளால் சூழப்பட்ட (மணித்வீபே) ரத்னத்தீவில் (நீப-உபவனவதி) கதம்ப மரங்கள் நிறைந்த உத்தியான வனத்துடன் கூடிய (சிந்தாமணி-க்ருஹே) சிந்தாமணிக் கிருஹத்தில் (சிவாகாரே மஞ்சே) பரமமங்கள வடிவமான சிம்மாஸனத்தில் (பரமசிவ-பர்யங்க-நிலயாம்) பரமசிவ

---

புரமதிது :— 'த்ரிபுரம்' என்பது தேவியின் பீஜாக்ஷ ரங்களாகிய 'ஐம்—க்லீம்—ஸௌ:'. மனமாகிய மத்தால் அதைக் கடைந்து பரமசிவன் பராசக்தியை அடைந்த மையால் அவருக்குப் புரமதனன் என்னும் பெயர் பொருந்தும்.

க்வணத் — மணிபூரகத்திலிருந்து தேவி அனாஹத சக்கரத்தை நோக்கி எழுந்தருளுகையில் பக்தர்கள் தேவியின் கால்சலங்கைகளின் கிலுகிலுப்பைக் கேட்கின்றனர்.

8. ஸுதாஸிந்தோர்-மத்யே—இங்கே தேவியின் வாசஸ் தானமான சிந்தாமணி க்ருஹம் வருணிக்கப்படுகிறது. அது ஸகலப் பிரம்மாண்டங்களுக்கும் அப்பால் அமிருத ஸாகரத்தின் மத்தியில் ரத்தினத்தீவில் உள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


னுடைய மடியில் வீற்றிருக்கும் (சிதானந்தலஹரீம்) ஞானனந்தக்கடலின் அலைபோன்ற (த்வாம்) உன்னை (தன்யா) புண்ணியவான்களான (கதிசன) சிலரே (பஜந்தி) வழிபடுகிறார்கள்.

---

அதன் வெளிப்பிராகாரங்கள் இருபத்தைந்து. அவை வரிசையாக இரும்பு எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோகம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வஜ்ரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், நவரத்தினம், நானாரத்தினம், இவற்றாலும் மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய தத்துவங்களாலும் சூரியன், சந்திரன், மன்மதன் ஆகியோரின் தேஜஸ்ஸாலும் அமைந்தவை. எட்டாவது பிராகாரத்தில் உள்ளது கதம்பவனம். அங்கே பரதேவதையின் மந்திரிணியான சியாமளா தேவி வசிப்பாள். பதினைந்தாவது பிராகாரத்தில் அஷ்டதிக் பாலகர்கள் வசிப்பர். பதினாறாவது ஸேனநாயகி தண்டினீ அல்லது வாராஹியின் இருப்பிடம். இங்கும் சியாமளா தேவிக்கு ஒரு கிருஹம் உண்டு பதினேழாவதில் யோகினிகள் வசிப்பர்; பதினெட்டில் மகாவிஷ்ணு; பத்தொன்பதில் ஈசானன்; இருபதில் தாராதேவி; இருபத்தொன்றில் வாருணி; இருபத்திரண்டாவது அகங்காரக் கோட்டையில் குருகுல்லா தேவி; இருபத்து மூன்றுவது சூரியப்பிராகாரத்தில் மார்த்தண்டபைரவர், இருபத்துநாலில் சந்திரன்; இருபத்தைந்தாவது சிருங்கார வனத்தில் மன்மதன். இதற்குள் மகாபத்ம வனமும் கற்பகவிருக்ஷத் தோப்பும். அதன் நடுவில் சிந்தாமணிக் கிருஹம். அதன் அக்கினிமூலையில் சிதக்கினி குண்டமும் கிழக்குத்துவாரத்தின் இருபுறமும் மந்த்ரிணி தண்டினி தேவிகளின் கிருகங்களும் உள்ளன. நான்கு துவாரங்களிலும் சதுராம்னய தேவதைகள் காவல் இருப்பர். இதனுள் நவாவரணங்களுடன் கூடிய ஸ்ரீ சக்கரம்; ஸ்ரீசக்கரத்தின் நடுவில் ஸர்வானந்தமயம் என்னும் பிந்து பீடத்தில் பஞ்சப் பிரம்மாஸனத்தில் ஸதாசிவனுடைய மடியில் மஹாத்ரிபுரஸுந்தரி எழுந்தளியிருப்பாள். பஞ்சப் பிரம்மாஸனமாவது, பிரம்மா, விஷ்ணு, ருத்ரன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


महीं मूलाधारे कमपि मणिपूरे हुतवहं
स्थितं स्वाधिष्ठाने हृदि मरुत-माकाश-मुपरि ।
मनोऽपि भ्रूमध्ये सकलमपि भित्वा कुलपथं
सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ॥ ९ ॥

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்த்திதம் ஸ்வாதிஷ்ட்டானே ஹ்ருதி மருத-மாகாச-முபரி ।
மனோऽபி ப்ருமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ॥ 9 ॥

---

9. ஆதார சக்கரங்கள், (தேசாந்தரம் சென்றவர் திரும்பி வருதல், அஷ்டைச்வர்ய ஸித்தி).

(மூலாதாரே) மூலாதாரத்தில் (மஹீம்) பிருதிவீ தத்துவத்தையும் (மணிபூரே) மணிபூரத்தில் (கம் அபி) ஜலதத்துவத்தையும் (ஸ்வாதிஷ்ட்டானே) ஸ்வாதிஷ்டானத்தில் (ஸ்திதம்) இருக்கும் (ஹுதவஹம்) அக்னி தத்துவத்தையும் (ஹ்ருதி) இருதயத்தில் அனாஹதத்தில் (மருதம்) வாயுதத்துவத்தையும் (உபரி) அதற்குமேல் விசுத்தியில் (ஆகாசம்) ஆகாசதத்துவத்தையும் (ப்ரு-மத்யே) புருவ நடுவில் ஆக்ஞையில் (மனோऽபி) மனஸ் தத்துவத்தையும் (ஸகலம் குல பதம் அபி) இவ்வாறாக ஸுஷும்ன மார்க்கத்திலுள்ள எல்லாச் சக்கரங்களையும் (பித்வா) ஊடுருவிச் சென்று (ஸஹஸ்ராரே பத்மே) ஆயிரம் இதழ் கொண்ட கமலத்தில் (ரஹஸி) ரகசியமான இடத்தில் (பத்யா ஸஹ) உனது பதியாகிய ஸதாசிவனுடன் (விஹரஸே) கூடி மகிழ்கிறாய்.

---

ஈசானன் ஆகியவர்களைக் கால்களாகவும் ஸதாசிவனுடைய மடியையே மேல்பலகையாகவும் கொண்ட கட்டில். இதுவே 'அ-உ-ம- அர்த்த, மாத்திரை, பிந்து' வடிவான ஓங்கார மஞ்சம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



9. ஆறு ஆதார சக்கரங்களையுங் கடந்து சென்று ஸஹஸ்ராரத்தில் ஸமாதி எய்துதல் 'ஷட்சக்ரவேதனம்' என்றும் 'அந்தர் யாகம்' என்றும் சொல்லப்படும். அது இங்கே விளக்கப்படுகிறது.

மூலாதாரமும் ஸ்வாதிஷ்டானமும் சேர்ந்து அக்கினி கண்டம்; அதற்குமேல் 'பிரம்மக்ரந்தி' என்று ஒரு முடிச்சு உள்ளது. மணிபூரகமும் அநாஹதமும் சேர்ந்து சூரிய கண்டம்; அதற்குமேல் 'விஷ்ணுக்ரந்தி' என்று ஒரு முடிச்சு உள்ளது. விசுத்தியும் ஆஜ்ஞையும் சேர்ந்து ஸோம கண்டம்; அதற்குமேல் 'ருத்ரக்ரந்தி' என்று ஒரு முடிச்சு உள்ளது. 'கிரந்தி' என்பது நாடிகளின் முடிச்சையும் நாடியினுள் ''ாயும் எண்ணங்களில் பூர்வவாஸனையால் ஏற்படும் சிக்கல்களையும் குறிக்கும்.

ஒ 'மூலாதாரைக - நிலயா ப்ரஹ்மக்ரந்தி-விபேதினீ மணிபூராந்தருதிதா விஷ்ணுக்ரந்தி - விபேதினீ। ஆஜ்ஞா சக்ராந்தராலஸ்தா ருத்ரக்ரந்தி-விபேதினீ ॥ —ல. ஸ.

மூலாதாரத்திலிருந்து எழுந்த பராசக்தி ஸ்வாதிஷ்டானத்தைக் கடந்ததும் மணிபூரகத்தில் பிரத்தியக்ஷமாவாள். அங்கே அர்க்கியம், பாத்யம், முதல் பூஷணம் வரை உபசாரங்களைச் செய்து அநாஹதத்திற்கு அழைத்து வந்து தூபம் முதல் தாம்பூலம் வரை உபசாரங்களைச் செய்து, விசுத்திக்கு அழைத்து வந்து அங்கே பராசக்தியைச் சிம்மாஸனத்தில் இருக்கச் செய்து, சந்திர கலாரூபமான ஸ்படிகமணிகளால் பூஜித்து, ஆஜ்ஞா சக்கரத்திற்கு அழைத்து நீராஜனம் செய்து, ஸஹஸ்ராரத்தின் நடுவில் இருக்கும் சந்திரமண்டலத்தில் ஸதாசிவனுக்குப் பக்கத்தில் சேர்த்து அவர்களைச் சுற்றிப் படுதாவைப் போட்டுத் தான் சமீபத்தில் இருந்துகொண்டு அம்பாள் மூலாதாரத்திற்குத் திரும்பும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும் இதுதான் அந்தர் யாகம் அல்லது ஸமயாசாரம் எனப்படும் மானஸ பூஜை.

ஒ. 'அகுலா ஸமயாந்தஸ்தா ஸமயாசாரதத்பரா.
—ல.ஸ.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सुधाधारासारैश्चरणयुगलान्त-र्विगलितैः
प्रपंचं सिञ्चन्ती पुनरपि रसाम्नाय-महसः ।
अवाप्य स्वां भूमिं भुजगनिभ-मध्युष्ट-वलयं
स्वमात्मानं कृत्वा स्वपिषि कुलकुण्डे कुहरिणि ॥१०॥

ஸுதாதாராஸாரைச்-சரணயுகலாந்தர்-விகலிதைஃ
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புனரபி ரஸாம்னுய-மஹஸஃ ||
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிப-மத்த்யுஷ்ட-வலயம்
ஸ்வமாத்மானம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே
குஹரிணி || 10 ||

---

10. மூலாதாரம் (சரீர சுத்தி, வீர்ய விருத்தி)

(சரண-யுகள-அந்தர்-விகலிதைஃ) திருவடிகள் இரண்டின் இடையிலிருந்து பெருகும் (ஸுதா-தாரா-ஆஸாரைஃ) அமிருத தாரையின் பிரவாகத்தால் (ப்ரபஞ்சம்) ஐம் பூதங்களால் ஆன உடலிலுள்ள நாடிகள் எல்லாவற்றையும் (ஸிஞ்சந்தீ) நனைப்பவளாய் (ரஸ-ஆம்னுய-மஹஸஃ) அமிருத கிரணங்களைப் பொழியும் சந்திர மண்டலத்தில்

---

குலபதம்—ஸுஷும்னு மார்க்கமே குலபதம் என்றும் ராஜவீதி என்றும் சொல்லப்படுவது. அதில் சஞ்சரிக்கும் குண்டலினீ சக்திக்குக் 'குலாங்கனு' என்பது பெயர்.

மூலாதாரம்—(ஸர்வாதாரா மஹீ யஸ்மாத் மூலாதாரதயா ஸ்திதா । ததபாவே து தேஹஸ்ய பாதஃ ஸ்யாத் உத்கமோபிவா ॥) எல்லாவற்றிற்கும் ஆதாரமாகப் பூமி தத்துவம் இருப்பதால் அடிப்படையான முதல் சக்கரம் மூலாதாரம் எனப் பெயர் பெற்றது. அவ்வாதாரம் இல்லாவிட்டால் தேகம் கீழேயாவது விழும்; அல்லது மேலேயாவது போகும்.

---

10. ரஸாம்னுய-மஹஸா ('ரஸ' என்ற சொல் குறிக்கும் ஆறு ஆம்னுயங்களின் அல்லது சக்கரங்களின் பிரபையுடன்.) குஹரிணீ ! —பா. பே.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இருந்து (ஸ்வாம்) உனது (பூமிம்) இயற்கையான இருப்பிடமாகிய மூலாதாரத்தை (புனஃ அபி) மறுபடியும் (அவாப்ய) அடைந்து (புஜக-நிபம்) பாம்பைப்போல் (அத்யுஷ்ட—வலயம்) குண்டலவடிவாக (ஸ்வம்) உன்னுடைய (ஆத்மானம்) உருவத்தை (க்ருத்வா) செய்து கொண்டு (குஹரிணி) சிறு துவாரம் உடைய(குலகுண்டே) மூலாதார குண்டத்தில் (ஸ்வபிஷி) உறங்குகிறாய்.

---

மணிபூரகம்—மூலாதாரத்திற்கு அடுத்தபடி ஸ்வாதிஷ்டானம் இருந்தபோதிலும், இங்கே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களின் வரிசையை அனுசரித்து மூலாதாரத்திற்குப் பின் மணிபூரகம் சொல்லப்படுகிறது.

10. முன் சுலோகத்தில் குண்டலினிசக்தியின் ஆரோஹணம் சொல்லப்பட்டது. இங்கு அவரோஹணம் சொல்லப்படுகிறது. ஸஹஸ்ராரத்தில் பரமசிவனுடன் கூடியிருந்து ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கி அதனால் உடலிலுள்ள எல்லா நாடிகளையும் நனைத்துவிட்டு மீண்டும் மூலாதாரத்திற்குத் தேவி வருகிறாள்.

குலகுண்டம்—'கு' என்பது பிருதிவி தத்துவம். அது மூலாதாரத்தில் லயம் அடைவதால் மூலாதார சக்கரம் குலகுண்டம் எனப்படும். அதன் நடுவில் தாமரையில் இருப்பதுபோல் ஒரு கிழங்கு இருப்பதாகவும் அதன் நடுவில் ஒரு ஸூக்ஷ்மமான துவாரம் இருப்பதாகவும் அதில் தலையை வைத்துக்கொண்டு மூன்றரை வட்டவடிவில் குண்டலம் இட்டுக்கொண்டு தாமரை நூல்போல் மெல்லிய பிழம்பு வடிவில் குண்டலினிசக்தி உறங்குவதாகவும் கூறப்படுகிறது.

ஓ. (அம்ருதஸ்ய தாரா பஹுதா தோஹமானம் ।
சரணம் நோ லோகே ஸுதிதாம் ததாது ।) தேவியின் சரணகமலங்களிலிருந்து பெருகும் அமிருததாரை பக்தர்களாகிய நம்மைச் சிறந்த புத்தியுடையவர்களாக்கிப் போஷிக்கட்டும்.

—ஆருணம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शंभोर्नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशद्-वसुदल-कलाश्र-त्रिवलय-
त्रिरेखाभिः साधं तव शरणकोणाः परिणताः ॥ ११ ॥

சதுர்ப்பிঃ ஸ்ரீகண்டைঃ சிவ யுவதிபிঃ பஞ்சபிரபி
ப்ரபின்னாபிঃ சம்போர்-நவபிரபி மூலப்ரக்ருதிபிঃ ।
சதுச்சத்வாரிம்சத்-வஸுதல-கலாச்ர-த்ரிவலய-
த்ரிரேகாபிঃ ஸார்த்தம் தவ சரணகோணাঃ
பரிணதாঃ ॥ 11 ॥

---

### 11. ஸ்ரீசக்கர வர்ணனை

(ஸத்ஸந்தானம், ஜன்ம ஸாபல்யம்)

(சதுர்ப்பிঃ) நான்கு (ஸ்ரீ கண்டைঃ) சிவ சக்கரங்களாலும் (சம்போঃ ப்ரபின்னாபிঃ) சிவ சக்கரங்களிலிருந்து வேறான (பஞ்சபிঃ) ஐந்து (சிவயுவதிபிঃ) சக்தி சக்கரங்களாலும் (நவபிঃ) ஒன்பதாக உள்ளதும் (மூலப்க்ருதிபிঃ அபி) பிரபஞ்சத்தின் மூலகாரணமான தத்துவங்களுடன் கூடியதுமான (தவ) உன்னுடைய (சரண கோணাঃ) இருப்

---

பக்தன் பத்மாஸனத்தில் அமர்ந்து கும்பகப் பிராணயாமம் செய்து ஸ்ரீவித்யா பீஜத்தை மானஸிகமாக ஆவிருத்தி செய்தால் குண்டலினி சக்தி உறக்கம் விட்டு எழுந்து ஆறு சக்கரங்களையும் கடந்து ஸஹஸ்ராரத்தில் திவ்யரூபத்தோடு காட்சியளிப்பாள்.

11. பராசக்தியின் யந்த்ரரூபம் ஸ்ரீசக்கரம். அது இங்கே வருணிக்கப்படுகிறது.

ஸ்ரீகண்டைঃ— (ச்ரிணாதி ஹிநஸ்தீதி ஸ்ரீঃ விஷம் கண்டே யஸ்ய அஸௌ ஸ்ரீகண்டঃ ஹரঃ, தே கோணா அபி ஸ்ரீகண்டாঃ) ஸ்ரீ என்றால் கொல்லுங் குணமுடைய

---

பவன கோணাঃ। சரண கோணঃ। தரயச் சத்வாரிம்சத்। கலாப்ஜத்ரிவலய। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


பிடமாகிய ஸ்ரீசக்கரத்தின் கோணங்கள் (வஸுதல) எட்டுத்தளம் (கலாச்ர) பதினாறு தளம் (த்ரிவலய-) மூன்று வட்டங்கள் (த்ரி-ரேகாபி:) மூன்று கோடுகள் ஆகியவற்றுடன் (ஸார்த்தம்) கூடி (பரிணதா:) பரிணமிக்கும் (சது: சத்வாரிம்சத்) நாற்பத்து நான்காக உள்ளன.

---

விஷம். அதைக் கழுத்தில் கொண்டவர் ஸ்ரீகண்டராகிய பரமசிவன். அவரைக் குறிக்கும் கோணங்களும் 'ஸ்ரீகண்டங்கள்' எனப்படுகின்றன.

சிவயுவதிபி:—இப் பெயர் பரமசிவபத்னியான பராசக்தியைக் குறிக்கும். அவ்வாறே சக்தி கோணங்களையும் குறிக்கும்.

நான்கு சிவ சக்கரங்கள், ஐந்து சக்தி சக்கரங்கள்.

(த்ரிகோண-மஷ்டகோணஞ்ச தசகோணத்வயம் ததா ।
சதுர்தசாரஞ்சைதானி சக்தி-சக்ராணி பஞ்ச ச ॥
பிந்துச் சாஷ்டதளம் பத்மம் பத்மம் ஷோடச-பத்ரகம் ।
சதுரச்ரஞ்ச சத்வாரி சிவ-சக்ராண்யனுக்ரமாத் ॥ )

முக்கோணம், எட்டுக் கோணம், இரண்டு பத்துக் கோணங்கள், பதினான்கு கோணம் ஆகிய ஐந்தும் சக்தி சக்கரங்கள். பிந்து, எட்டிதழ்க் கமலம், பதினாறிதழ்க் கமலம், நாற்கோணம் ஆகிய நான்கும் சிவசக்கரங்கள் —லலிதாத்ரிசதி.

ஸ்ரீ சக்கரம் ஒன்பது முக்கோணங்களால் ஆகியது. ஆகையால் கீழ்நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும் சக்தி சக்கரங்கள் என்றும் மேல் நோக்கிய முக்கோணங்கள் நான்கும் சிவசக்கரங்கள் என்றும் இன்னொரு வகையில் கொள்ளப்படும். —வரிவஸ்யா ரஹஸ்யம்.—2. 42.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸமயாசாரப்படி வரையப்படும் சிருஷ்டிக்கிரம சக்கரத்தில் நடுமுக்கோணம் மேல் நோக்கியது. கௌலா சாரப்படி வரையும் ஸம்ஹாரசக்கரத்தில் நடு முக்கோணம் கீழ் நோக்கியது.

மூலப்ரக்ருதிபி:—ஒன்பது சக்கரங்களும் அண்டமாகிய உலகிற்கும் பிண்டமாகிய உடலுக்கும் மூலகாரணங் களான தத்துவங்களைக் குறிப்பவையாதலால் அவை 'மூலப்பிரகிருதிகள்' என்றும் 'யோனிகள்' என்றும் கூறப் படுகின்றன. உடலிலுள்ள மூலப்பொருள்களில் மஜ்ஜை, சுக்கிலம், பிராணன், ஜீவன் என்ற நான்கும் சிவாம்சம்; த்வக் (தோல்), அஸ்ருக் (ரத்தம்), மாம்ஸம், மேதை (மூளை), அஸ்தி (எலும்பு) என்ற ஐந்தும் சக்தி அம்சம். அண்டத்திலுள்ள மூலகாரணங்களில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்தும் சக்தி அம்சம்; மாயை, சுத்தவித்தை, மகேசுவரன், ஸதாசிவன் என்ற நான்கும் சிவாம்சம்.

நாற்பத்து நான்கு கோணங்கள் — 14+10+10+8+1 ஆக 43 கோணங்கள்; சிவசக்கரங்களைத் தன்னுள் டக்கிக்கொண்ட பிந்து 44-ஆவது. பிந்து ஒரு கோண மாகக் காணப்படாததால், கோணங்கள் '(த்ரயச்சத் வாரிம்சத்) நாற்பத்து மூன்றுதான்' என்று கொள்வதும் உண்டு.

வஸுதல :— வஸுக்கள் எட்டுப் பேர். ஆகையால் 'வஸு' என்னும் சொல் எட்டு என்னும் எண்ணைக் குறிக் கும்.

கலைகள்—பதினாறு; ஆகையால் 'கலா' என்பது பதினா றைக் குறிக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



த்ரஃ

त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चि-प्रभृतयः ।
यदालोकौत्सुक्या-दमरललना यान्ति मनसा
तपोभि र्दुष्प्रापामपि गिरिश-सायुज्य-पदवीम् ॥ १२ ॥

த்வதீயம் ஸௌந்தர்யம் துஹினகிரிகன்யே துலயிதும்
கவீந்த்ராः கல்பந்தே கதமபி விரிஞ்சி-ப்ரப்ருதயः ।
யதாலோகௌத்ஸுக்யா-தமரலலனா யாந்தி மனஸா
தபோபிர்-துஷ்ப்ராபாமபி கிரிச-ஸாயுஜ்யபதவீம் ॥ 12 ॥

**12. உவமையற்ற ஸௌந்தர்யம் (சிவஸாயுஜ்யம், ஊமையும் பேச)**

(துஹினகிரிகன்யே) பனிமலையரசன் பெண்ணே (கவீந்த்ராः) கவி சிரேஷ்டர்கள் (விரிஞ்சி-ப்ரப்ருதயः) ஸரஸ்வதி வல்லபரான பிரம்மா போன்றவர்கள்கூட (த்வதீயம்) உன்னுடைய (ஸௌந்தர்யம்) அழகுக்கு (துலயிதும்) உவமை கூறுவதற்கு (கதமபி) எப்படி எப்படியோ (கல்பந்தே) கற்பனை செய்து பார்க்கிறார்கள் —அவர்களால் முடியவில்லை (யத் ஆலோக-ஔத்ஸுக்யாத்) அந்த அழகை அநுபவிக்க ஆசை கொண்டதால் (அமரலலனாः) அழகிற் சிறந்த தேவஸ்த்ரீகளும்—பரமசிவனுடைய கண்ணைக்கொண்டு அதைக் காண விரும்பி - (தபோபிः) தவமுயற்சிகளால் (துஷ்ப்ராபாம் அபி) அது அடைவதற்கு அரிதாயினும் (கிரிச-ஸாயுஜ்ய-பதவீம்) பரமசிவ ஸாயுஜ்ய பதவியை (மனஸா) மானஸீகமாக (யாந்தி) அடைகிறார்கள்.

12. பரமசிவனுடைய கண்ணல்லாது வேறு கண்களால் பரதேவதையின் அழகை முழுதும் அநுபவிக்க இயலாததால் தேவஸ்திரீகள் பரமசிவனுடன் ஒன்றுபட்டு நிற்கும் ஸாயுஜ்யபதவியை விரும்புகிறார்கள் எனக் கூறப்பட்டது. சிவஸாயுஜ்யத்தின் பெருமையும் இதனால் சூசிப்பிக்கப்படுகிறது.

ஓ. மஹாலாவண்ய-சேவதயே நமः —ல. ஸ. 48.

யதாலோக்யௌத்ஸுக்யாத் । பசூனும் துஷ்ப்ராபாம் —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



नरं वर्षीयांसं नयनविरसं नर्मसु जडं
तवापांगालोके पतित-मनुधावन्ति शतशः ।
गलद्वेणीबन्धाः कुचकलश-विस्रस्त-सिचया
हटात् त्रुटयत्काञ्च्यो विगलित-दुकूला युवतयः ॥१३॥

நரம் வர்ஷீயாம்ஸம் நயனவிரஸம் நர்மஸு ஜடம்
தவாபாங்காலோகே பதித-மனுதாவந்தி சதசः ।
கலத்வேணீபந்தாः குசகலச-விஸ்ரஸ்த-ஸிசயா
ஹடாத் த்ருட்யத்-காஞ்ச்யோ விகலித-துகூலா
யுவதயः ॥ 13 ॥

---

13. கடைக்கண்ணின் கிருபை (காமஜயம்)

(தவ) உன்னுடைய (அபாங்க-ஆலோகே) கடைக்கண் பார்வையில் (பதிதம்) விழுந்த (நரம்) மனிதனை (வர்ஷீயாம்ஸம்) அவன் வயது சென்றவனாயினும் (நயன விரஸம்) கண்ணுக்குப் பிடிக்காதவனாயினும் (நர்மஸு) சிற்றின்ப விளையாட்டுக்களில் (ஜடம்) மூடனாயினும் (யுவதயः) யௌவனப்பெண்கள் (களத்-வேணீ-பந்தாः) கூந்தல் முடி கலைந்தவர்களாய், (குச-கலச-விஸ்ரஸ்த-ஸிசயாः) நகில்களின் மேலுள்ள ஆடைகள் நழுவியவர்களாய், (ஹடாத்-த்ருட்யத்-காஞ்ச்யः) பரபரப்பால் ஒட்டியாணப் பூட்டுக் கழன்றவர்களாய் (விகளித-துகூலாः) சேலைகள் நழுவியவர்களாய் (சதசः) நூற்றுக்கணக்கானவர்கள் (அனுதாவந்தி) பின்தொடருகிறார்கள்.

---

13. யுவதயः– 'ஒ (கீர்த்திः ஸ்ரீர்-வாக் ச நாரீணாம் ஸ்ம்ருதிர்-மேதா த்ருதிः க்ஷமா) ஸ்த்ரீகளுள் நான் கீர்த்தி, செல்வம், வாக்தேவதையான ஸரஸ்வதி, ஞாபகசக்தி, புத்திசக்தி, திடச்சித்தம், பொறுமை ஆகிய தெய்விக சக்திகளாக இருக்கின்றேன்.' —கீதை-10.34

தேவியினுடைய கடாக்ஷம் எவனிடத்தில் விழுந்தாலும், அவன் 'காமேசுவரனுடைய' அம்சம் உடையவனாய் விடுவதால் முன் சுலோகத்தில்'தேவஸ்திரீகளும் அப்படிப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



क्षितौ षट्पञ्चाशद्-द्विसमधिक-पञ्चाश-दुदके
हुताशे द्वाषष्टि-श्चतुरधिक-पञ्चाश-दनिले ।
दिवि द्विष्षट्त्रिंशन् मनसि च चतुःषष्टिरिति ये
मयूखा-स्तेषा-मप्युपरि तव पादांबुज-युगम् ॥ १४ ॥

க்ஷிதௌ ஷட்பஞ்சாசத்-த்விஸமதிக-பஞ்சாச-துதகே
ஹுதாசே த்வாஷஷ்டிச் சதுரதிக-பஞ்சாச-தநிலே ।
திவி த்விஃ ஷட்த்ரிம்சன்-மனஸி ச சதுஷ்ஷஷ்டிரிதி யே
மயூகாஸ்-தேஷா-மப்யுபரி தவ பாதாம்புஜ-யுகம் ‖
‖ 14 ‖

---

**14. ஆதார சக்கரங்களின் கிரணங்களும் அப்பாலும் (பஞ்சம், கொள்ளைநோய் நிவிருத்தி.)**

(க்ஷிதௌ) பூமிதத்துவமாகிய மூலாதாரத்தில் (ஷட் பஞ்சாசத்) ஐம்பத்தாறு, (உதகே) ஜலதத்துவமாகிய மணிபூரகத்தில் (த்விஸமதிக-பஞ்சாசத்) ஐம்பத்திரண்டு,

---

பட்ட பக்தனிடம் ஆசைகொள்கிறார்கள்' என்று கூறுவது போல், 'ஸ்திரீகளாக வர்ணிக்கப்படும் சக்திகள் எல்லாம் அவனைத் தாமே நாடி யடைகின்றன' என்னும் கருத்துக் கவிகளின் பரிபாஷையில் 'இங்கே சுட்டிக்காட்டப்படு கிறது என்பதையும் 'ஸாதாரண ஸ்திரீகள் இவனுக்குக் காமவசம் ஆகிறார்கள்' என்னும் வெளிப்படையான சொல்லர்த்தம் இதில் அடங்கியிருந்தாலும் 'இதன் உண் மையான நோக்கம் அதுவல்ல' என்பதையும் காண வேண்டும். கீதை கூறும் இன்னொரு கருத்தையும் இத் துடன் ஒப்பிட்டுச் சிந்திக்கலாம்.

'எங்கும் நிரம்பியதும் நிலைகுலையாததும் ஆகிய ஸமுத்திரத்தை நதிகள் எவ்வாறு வந்து அடைகின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(ஹூதாசே) அக்கினிதத்துவமாகிய ஸ்வாதிஷ்டானத்தில் (த்வாஷஷ்டிः) அறுபத்திரண்டு (அனிலே) வாயுதத்துவமாகிய அநூஹதத்தில் (சதுரதிக-பஞ்சாசத்) ஐம்பத்துநான்கு (திவி) ஆகாசதத்துவமாகிய விசுத்தியில் (த்விः ஷட்த்ரிம்சத்) எழுபத்திரண்டு (மனஸி ச) மனஸ்தத்துவ

---

றனவோ அவ்வாறு 'ஆசைகளெல்லாம் எவனை அடைகின்றனவோ அவன் அமைதியை எய்துகிருன்; ஆசைகளைத் தொடர்பவன் எய்தான்' —கீ. 2. 70.

ஓ. (நித்யம் பக்தி-வதூகணைச்ச ரஹஸி ஸ்வேச்சா விஹாரம் குரு) பக்தியாகிய ஸ்திரீகளின் கூட்டத்தில் ரகசியமாக இஷ்டப்படி விளையாடுவாயாக.

—சிவானந்தலஹரீ. 46.

(த்ருஷ்ட்வா முக்தி வதூஸ்-தஞோதி நிப்ருதாச்லேஷம் பவானீபதே யச்சேதஸ்-தவ பாதபத்ம-பஜனம் தஸ்யேஹ கிம் துர்லபம்) பவானியின் பதியான பரமேசுவரனே ! உன் பக்தனைக் கண்டதும் முக்தியாகிய பெண் அவனை மார்புறத் தழுவுகிருள். அவனுக்கு இவ்வுலகில் கிடைக்கக் கூடாதது எது ? —சிவானந்தலஹரீ. 64.

ஓ. "ஸகல விஷயங்களிலும் நமக்குள்ள சித்த விகாரங்கள் எல்லாம் நிவிருத்தியாக வேண்டும் என்பதற்காகத்தான் கரும்புவில்லையும் புஷ்பபாணங்களையும் அம்பாள் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கிருள். அந்த அம்பாளுடைய கடாக்ஷம் நமக்கு ஏற்பட்டு விடுமானல், மூககவி சொல்லுகிறதுபோல் எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கிற திருஷ்டி, எந்த விஷயத்திலும் மோகம் ஏற்படாத நிலை, இவை உண்டாகிவிடும். அம்பா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மாகிய ஆஜ்ஞையிலோ (சதுஷ் ஷஷ்டிঃ) அறுபத்து நான்கு (இதி) என்று (மயூகாঃ) கிரணங்கள் (யே) எவை உண்டோ (தேஷாம் அபி) அவைகளுக்கு (உபரி) மேலாக (தவ) உன்னுடைய (பாதாம்புஜ-யுகம்) இரண்டு திருவடிகளும் விளங்குகின்றன.

---

ளுடைய கடாக்ஷம் கிடைத்தால் எவ்வளவு காமத்தை உண்டுபண்ணும்படியான வஸ்துவாயிருந்தாலும் அது காமத்தை உண்டுபண்ணாது.''

—காமகோடி சங்கராசாரியார்

14. 'ஆறு ஆதாரங்களும் காலகதிக்கு உட்பட்டவை' என்பதும் அவைகட்கு மேலே விளங்கும் தேவியின் திருவடிகள் 'காலத்தைக் கடந்தவை' என்பதும் இங்கே குறிக்கப்படுகிறது. மூலாதாரம் 55 நாள்கொண்ட வஸந்தருதுவுக்கு ஒப்பாகவும் மணிபூரகம் 52 நாள் கொண்ட க்ரீஷ்மருதுவுக்கு ஒப்பாகவும் ஸ்வாதிஷ்டானம் 62 நாள் கொண்ட வர்ஷருதுவுக்கு ஒப்பாகவும் அனாஹதம் 54 நாள் கொண்ட சரத்ருதுவுக்கு ஒப்பாகவும் விசுத்தி 72 நாள் கொண்ட ஹேமந்தருதுவுக்கு ஒப்பாகவும் ஆஜ்ஞை 64 நாள் கொண்ட சிசிரருதுவுக்கு ஒப்பாகவும் வர்ணிக்கப்படுகிறது. பிரம்மாண்டத்தில் நாட்களாக இருப்பவை பிண்டாண்டத்தில் கிரணங்களாகக் கூறப்படுகின்றன. அக்கினி கண்டத்தில் 108 கிரணங்களும் சூரிய கண்டத்தில் 116 கிரணங்களும் சந்திரகண்டத்தில் 136 கிரணங்களும் ஆக மொத்தம் கிரணங்கள் 360. காலாத்மகமான வருஷத்திலும் நாட்கள் அல்லது கலைகள் 360.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தேவியின் ஸ்தானம் அக்கினிகலைக்கும் சூரியகலைக்கும் சந்திரகலைக்கும் அப்பாற்பட்டு அவைகளை யெல்லாம் விழுங்கும் ஸ்வரூபம் உடையதாக விளங்குவது.

ஒ. (ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோSய-மக்னி:। தமேவ பாந்தம் அனுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிப்பதில்லை; மின்னல் கொடிகளும் பிரகாசிப்பதில்லை; அக்கினி எங்ஙனம் பிரகாசிக்கும்? ஸ்வயம் பிரகாசமுள்ள அப் பரம்பொருளைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றன. அவ்வொளியாலேயே இவை அனைத்தும் விளங்குகின்றன.

—கட. உப. 5. 15.

அக்னிஸ்தானம் பிரம்மக்கிரந்தி, ஸூர்யஸ்தானம் விஷ்ணுக்கிரந்தி, சந்திரஸ்தானம் ருத்ரக்ரந்தி. மூலாதாரத்திலும் மணிபூரகத்திலும் அக்கினி பிரகாசிக்கிறது. ஸ்வாதிஷ்டானத்திலும் அனாஹதத்திலும் சூரியப்பிரகாசம். ஆகவே இவை ஒன்றில் ஒன்று 'ஊடுருவி நிற்கின்றன' என்பதை அறிய வேண்டும்.

கிரணங்களைத் தத்துவ வடிவாகப் பின் வருமாறு தியானிக்கவேண்டும்

(i) 24 தத்துவங்கள்+கலை, பிரக்ருதி, புருஷன், மஹத் = 28. ஒவ்வொன்றும் சிவனும் சக்தியுமாக இரட்டித்து 56.

5 பூதங்கள், 10 இந்திரியங்கள், அவற்றின் தொழில்கள் 10+மனம்=26, இரட்டித்து 52. ஆக 108.

(ii) 5 பூதங்கள் 5 தன்மாத்திரைகள், 10 இந்திரியங்கள், 10 தொழில்கள்+மனம்=31, இரட்டித்து 62.

பூமிதத்துவங்கள் 28இல் மஹத் நீங்கலாக 27உம் இரட்டித்து 54. ஆக 116.

(iii) 36 தத்துவங்கள் இரட்டித்து 72; அவற்றில் கடைசி நாலு நீங்கலாக 32 இரட்டித்து 64. ஆக 136.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



शरज्ज्योत्स्ना शुद्धां शशियुत-जटाजूट-मकुटां
वर-त्रास-त्राण-स्फटिकघुटिका-पुस्तक-कराम् ।
सकृन्न त्वा नत्वा कथमिव सतां सन्निदधते
मधु-क्षीर-द्राक्षा-मधुरिम-धुरीणाः फणितयः ॥ १५ ॥

சரஜ்-ஜ்யோத்ஸ்ன-சுத்தாம் சசியுத-ஜடாஜூட-மகுடாம்
வர-த்ராஸ-த்ராண-ஸ்படிக குடிகா-புஸ்தக - கராம்।
ஸக்ருந்ந த்வா நத்வா கதமிவ ஸதாம் ஸந்நிதததே
மது-க்ஷீர-த்ராக்ஷா-மதுரிம-துரீணாः பணிதயः ‖ 15 ‖

---

15. தேவியின் சுத்த ஸத்வ வடிவம் (கவித்துவமும் பாண்டித்தியமும்)

(சரத் - ஜ்யோத்ஸ்ன - சுத்தாம்) சரத்கால நிலவைப் போல் நிர்மல வடிவினளும்(சசியுத-ஜடாஜூட-மகுடாம்) சந்திரனுடன் கூடிய சடைமுடியும் கிரீடமும் உடையவளும் (வர-) வரம் (த்ராஸ-த்ராண) அபயமுத்திரை (ஸ்படிக-குடிகா) ஸ்படிகமாலை (புஸ்தக) புஸ்தகம் ஆகியவற்றை (கராம்) கையில் கொண்டவளுமான (த்வா)

---

15. ஸரஸ்வதி கடாக்ஷத்தால் வித்தையில் உயர்வடைய விரும்புபவர், தேவியைத் தியானம் செய்ய வேண்டிய முறை இங்கே கூறப்படுவதால் இது ஸாரஸ்வதப் பிரயோகம்’ எனப்படும். இதையே அடுத்துவரும் இரண்டு சுலோகங்களும் கூறுகின்றன.

சரஜ்-ஜ்யோத்ஸ்ன சுத்தாம்—‘சரத்காலே ஜ்யோத்ஸ்ன சந்த்ரிகா தத்வத்.’-ரஜோகுண தமோகுணம் அற்ற சுத்த ஸத்வத்தை வெண்மை குறிக்கிறது. அதனுல் இந்த வடிவில் உபாசிப்பதற்கும் மனத்தில் ஸத்துவகுணம் மேலிட்டிருக்க வேண்டும்.

---

15. ஜடா - ஜூட - மகுடாம்। ஸ்படிக - கடிகா (பாத்ரம்); ஸ்படிக - குணிகா (மாலை). ஸக்ருந்நத்வா நத்வாம்। பணிதய:।

—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உன்னை (ஸக்ருத்) ஒரு முறை (நத்வா) நமஸ்கரித்து விட்டால் (ஸதாம்) அப்படிப்பட்ட நல்லவர்களுக்கு (மது-க்ஷீர - த்ராக்ஷா - மதுரிம - துரீணாः) தேனும் பாலும் திராக்ஷையும் சேர்ந்தாற் போன்ற இனிய (பணிதயः) சொற்றொடர்கள் (கதமிவ) எப்படித்தான் (ந ஸந்நித ததே) சித்திக்காமல் போகும்?

---

சசியுத ஜடாஜூட மகுடாம்— சந்திரகலையை முடியில் தரித்திருப்பதால் 'பராசக்தியினுடைய வடிவத்தினின்று இது வேறன்று' என்பதை உணரவேண்டும். இது ஆதி மஹா ஸரஸ்வதியின் வடிவம்; பிரம்மபத்தினியான ஸரஸ்வதி வடிவம் பின் தோன்றியது.

ஆதிசக்தியானவள், தன்னிடமிருந்து முக்குணங்களால் 'மஹாலக்ஷ்மி, மஹாஸரஸ்வதி, மஹாகாளி' என்று மூன்று வடிவங்களைத் தோற்றுவித்தாள். பின்னர் இவ் வடிவங்கள் ஒவ்வொன்றினின்றும் இரட்டை வடிவங்கள் தோன்றின:—ஆதிலக்ஷ்மியான மஹாலக்ஷ்மியிடமிருந்து பிரம்மாவும் லக்ஷ்மியும் (சிவப்பு வர்ணம்); மஹாஸரஸ்வதியிடமிருந்து விஷ்ணுவும் பார்வதியும் (நீலவர்ணம்); மஹாகாளியிடமிருந்து சிவனும் ஸரஸ்வதியும் சகோதர சகோதரிகளாக (வெளுப்பு வர்ணம்).

—ரஹஸ்ய த்ரயம் - தேவீமாஹாத்மியம்.

'துரீணா ः—துரம் வஹந்தீதி துரீணா ः அக்ரேஸரா ः।
பணிதயः—வாக்வைகர்ய ः।'

புஸ்தகமும் ஸ்படிக மாலையும் — 'ஜபம் செய்தால் என்னைக் காணலாம்; கல்வி அனைத்தையும் என் கடாக்ஷத்தால் பெறலாம்' என்பதைக் குறிப்பிடவே தேவி, புஸ்தகத்தையும் ஸ்படிகமாலையையும் கையில் கொண்டுள்ளாள் போலும்.

ஒ. 'ஸரஸ்வதி அஷ்டோத்தரத்தை எடுத்துக் கொண்டால் 'ப்ரஹ்ம - விஷ்ணு - சிவாத்மிகாயை நமः' என்று வருகிறது. லக்ஷ்மி அஷ்டோத்தரத்தை எடுத்துக் கொண்டாலும் இப்படியே வருகிறது. அம்பாளே பிரம்ம ரூபமாக சிருஷ்டிகர்த்ரியாகவும் கோவிந்த ரூபிணியாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कवीन्द्राणां चेतः-कमलवन-बालतप-रुचिं
भजन्ते ये सन्तः कतिचिदरुणामेव भवतीम् ।
विरिञ्चि प्रेयस्यास्तरुणतर-शृङ्गारलहरी-
गभीराभि-र्वाग्भि-र्विदधति सतां रञ्जनममी ॥ १६ ॥

கவீந்த்ராணுஞ் சேதஃ கமலவன-பாலாதப-ருசிம்
பஜந்தே யே ஸந்தஃ கதிசிதருணு மேவ பவதீம் ।
விரிஞ்சி-ப்ரேயஸ்யாஸ்-தருணதர-ச்ருங்காரலஹரீ
கபீராபிர்-வாக்பிர்-விதததி ஸதாம் ரஞ்ஜனமமீ ‖ 16 ‖

---

16. அருணு மூர்த்தி (வேதாகம ஞானம்)

(கவீந்த்ராணும்) கவியரசர்களுடைய (சேதஃ கமல வன - பால - ஆதப - ருசிம்) சித்தமாகிய தாமரை வனத்திற்கு உதய சூரியன்போல் பிரகாசிப்பவளும் (அருணும் ஏவ) அதனுல் அருணு எனப் பெயர்பெற்றவளும் ஆகிய (பவதீம்) உன்னை (யே) எந்த (கதிசித்) சில (ஸந்தஃ) புண்ணியவான்கள் (பஜந்தே) பூஜிக்கிருர்களோ (அமீ) அவர்கள் (விரிஞ்சி ப்ரேயஸ்யாஃ) பிரம்மபத்னியான ஸரஸ்வதியின் (தருண-தர) செழிப்பு மிக்க (ச்ருங்கார லஹரீ)சிருங்கார ரசத்தின் பிரவாகம் போன்ற (கபீராபிஃ) கம்பீரமான (வாக்பிஃ) வாக்குகளால் (ஸதாம்) ஸாதுக்களுக்கு (ரஞ்ஜனம்) மகிழ்ச்சியை (விதததி) அளிக்கிருர்கள்.

---

கோப்த்ரியாகவும் ருத்ர ரூபமாக ஸம்ஹார ரூபிணியாகவும் விளங்குகிருள்' என்று லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் இதே கருத்து வருகிறது. அவள் ஒருத்திதான் இப்படியெல்லாம் விளையாடுகிருள்.

—காமகோடி சங்கராசாரியார்.

16. தேவியைச் சிவப்பு வர்ணமாகவும் எட்டுக் கைகளுடனும் இருதயத்தில் தியானிப்பது இங்கே கூறப் படுகிறது. பாசம், ஈட்டி, கரும்புவில், புஷ்பபாணங்கள்

---

16. ஸபா ரஞ்ஜனம் (ஸபையை மகிழச் செய்யும்) —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सवित्रीभि-र्वाचां, चशि-मणि-शिला-भङ्ग-रुचिभि-
वशिन्याद्याभि-स्त्वां सह जननि संचिन्तयति यः ।
स कर्ता काव्यानां भवति महतां भङ्गिरुचिभि-
र्वचोभि-र्वाग्देवी-वदन-कमलामोद-मधुरैः ॥ १७ ॥

ஸவித்ரீபிர்-வாசாம் சசிமணி-சிலா-பங்க-ருசிபிர்-
வசின்யாத்யாபிஸ்-த்வாம் ஸஹ ஜனனி
ஸஞ்சிந்தயதி யஃ ।
ஸ கர்த்தா காவ்யானும் பவதி மஹதாம் பங்கிருசிபிர்
வசோபிர்-வாக்தேவீ-வதன-கமலா மோத
மதுரைஃ ‖ 17 ‖

---

17. வாக் தேவதைகளால் சூழப்பெற்றவள்
(வாக்விலாஸம், சாஸ்திரஞானம்)

(ஜனனி) தாயே! (வாசாம்) வாக்கின் (ஸவித்ரீபிஃ) பிரவர்த்தகர்களும் (சசி-மணி-சிலா-பங்க-ருசிபிஃ) சந்திர காந்தக்கல்லைப் பிளந்தால் தோன்றுவது போன்ற காந்தி

---

புஸ்தகம், ஸ்படிகமாலை ஆகியவற்றையும் அபயம், வரம் என்ற முத்திரைகளையும் எட்டுக்கைகளில் தரித்து, மூன்று கண்களுடன் விளங்குகிருள். இவ்வடிவம் ஸத்வத்தில் ரஜோகுணப் பிரதானமான ஸரஸ்வதி ரூபம். ப்ராஹ்மி முதலான மாத்ருகா ரூபங்கள் எல்லாம் தேவியினுடையவே.

ஓ. அருணுக்யாம் பகவதீம் அருணுபாம் விசிந்தயேத் ।
பாசாங்குசதராம் தேவீம் தனுர்பாணதராம் சிவாம் ॥
வரதாபய-ஹஸ்தாஞ் ச புஸ்தகாக்ஷஸ்ர-கன்விதாம் ।
அஷ்டபாஹூம் த்ரிநயனும் கேலந்தீம் அம்ருதாம்பு
[ தௌ ॥
ஸ கரோத்யேவ ச்ருங்கார-ரஸாஸ்வாதன-லம்படான் ।
ஸபாஸதஸ் ஸதா ஸர்வான்ஸாதகேந்த்ரஸ் ஸபாஸ்தலே॥
—வாமகேச்வரதந்த்ரம்.

---

17. மஹதாம் பங்கி ஸூபகை ஃ —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



யுடையவர்களும் ஆகிய (வசின்யாத்யாபிஃ ஸஹ) வசினீ முதலிய வாக்தேவதைகளுடன் கூடியிருப்பவளாக (த்வாம்) உன்னை (யஃ)எவன்(ஸஞ்சிந்தயதி)சிந்திக்கிறானோ (ஸஃ) அவன் (மஹதாம்) மகான்களுடைய (பங்கிருசிபிஃ) காவியங்களைப்போல் பிரகாசிப்பனவும் (வாக்தேவீ-வதன-கமலா மோத-மதுரைஃ) ஸரஸ்வதிதேவியின் முககமலத்தின் பரிமளம்போல் மதுரமானதுமான (வசோபிஃ) வாக்குகளால் (காவ்யானும்) காவியங்களுக்கு (கர்த்தா) கர்த்தாவாக (பவதி) ஆகிறான்,

---

இந்த ரூபத்தை உபாசிப்பவர்கள் சிருங்கார ரஸம் மிகுந்த கவித்திறன் உடையவர்களாக விளங்குவார்கள் இதற்கு உதாரணம்: மஹாகவி காளிதாஸன். ஒரு நாள் போஜராஜன் '(குஸுமே குஸுமோத்பத்திஃ ச்ரூயதே நச த்ருச்யதே) பூவில் பூவின் உற்பத்தி கேட்கப்படுகிறது; காணப்படவில்லை' என்று ஒரு சுலோகத்தின் முன் பாதியைக் கூறிப் 'பின்பாதியை ஸபையிலுள்ள எவரேனும் பூர்த்தி செய்யலாம்' என்று கூறினான். மற்ற வித்வான்கள் ஒன்றுந் தோன்றாமல் இருக்கக் காளிதாஸன் அருகில் இருந்த ஓர் அழகிய தாசியைப் பார்த்து (பாலே தவ முகாம்போஜே த்ருஷ்டம் இந்தீவரத்வயம்) பெண்ணே! உன் முகத்தாமரையில் இரண்டு நீலோத்பலம் காணப்படுகின்றன' என்று கூறினார். அரசனும் ஸபையோரும் சிருங்காரம் நிறைந்த அச்சொல்லைக் கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் எய்தினர். தேவியின் அருள் அப்படித் தங்கு தடையற்ற கவிதாசக்தியை அளிப்பது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


பங்க்திருசிபி:— ரசனாவிசேஷை:, வர்ணனா-கௌசலை-ரித்யர்த்த: ।

17. ஸவித்ரீபி:—ஜநயத்ரீபி: । அக்ஷர வர்க்கங்களைத் தோற்றுவிக்கும் தேவதைகளாகிய வசினி முதலியவர்களால்.

ஸர்வரோகஹர சக்கரம் என்னும் அஷ்டகோணத்தில் வசினி தேவதைகள் பின்வரும் மாத்ருகா மந்திரங்களால் பூஜிக்கப் படுகின்றனர்.

अं आं इं ईं— अं अः र्ब्लूं—வசினீ வாக் தேவதாயை நம: ।

कं खं गं घं ङं क्ल्ह्रीं—காமேச்வரீ வாக் தேவதாயை நம: ।

चं छं जं झं ञं—न्व्लीं—மோதினீ வாக் தேவதாயை நம: ।

टं ठं डं ढं णं—य्लूं—விமலா வாக் தேவதாயை நம: ।

तं थं दं धं नं—ज्म्रीं— அருணா வாக் தேவதாயை நம: ।

पं फं बं भं मं—ह्स्ल्व्यूं—ஜயினீ வாக் தேவதாயை நம: ।

यं रं लं वं ज्म्र्यूं—ஸர்வேச்வரீ வாக் தேவதாயை நம: ।

शं षं सं हं ळं क्षं-क्ष्म्रीं-கௌலினீ வாக் தேவதாயை நம:

இன்னொரு முறையிலும் பூஜிப்பது உண்டு. அது பின்வருமாறு — பிந்துவிலும் த்ரிகோணத்திலும் வசினீ, காமேசுவரீ, மோதினீ, விமலா ஆகியவர்களையும் அஷ்டகோணம், உள் பத்துக்கோணம், வெளிப்பத்துக்கோணம், பதினான்கு கோணம் ஆகியவற்றில் அருணா, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌலினீ ஆகியவர்களையும் புவனேசுவரீ என்ற ஜகன்மாதாவுடன் சேர்த்துக் கிரமமாகப் பூஜித்தல்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तनुच्छायाभिस्ते तरुण-तरणि-श्रीसरणिभि-
र्दिवं सर्वा-मुर्वी-मरुणिमनि मग्नां स्मरति यः ।
भवन्त्यस्य त्रस्य-द्वनहरिण-शालीन-नयनाः
सहोर्वश्या वश्याः कतिकति न गीर्वाण-गणिकाः ॥१८॥

தனுச்சாயாபிஸ்-தே தருண-தரணி ஸ்ரீ ஸரணிபிர்-
திவம் ஸர்வா-முர்வீ-மருணிமனி மக்னும் ஸ்மரதிய: ॥
பவந்த்யஸ்ய த்ரஸ்யத்-வன-ஹரிண-சாலீன-நயனு:
ஸஹோர்வச்யா வச்யா: கதிகதி ந கீர்வாண-
கணிகா: ‖ 18 ‖

---

18. அருணரூப த்யானம் (காமஜயம்)

(தருண - தரணி) உதய சூரியனது போன்ற (ஸ்ரீ-ஸரணிபி:) அழகு வெள்ளத்துடன் கூடிய (தே) உனது

---

மூன்றாவது முறை— (த்வாதச யோகினீபிஸ்-ஸார்த்தம் வசின்யாத்-யஷ்டகம் மிலித்வா விம்சதிகலா பவந்தி। தா விம்சதிகலா: சுத்தஸ்படிக-ஸங்காசா தசாரயுக்ம-கோணேஷு ஸஞ்சிந்தனீயா:। அயஞ்ச பூப்ரஸ்தார-பேத:।) வித்யா, ரேசகா, மோசிகா, அம்ருதா, தீபிகா, ஜ்ஞானு, ஆப்யாயனீ, வ்யாபினீ, மேதா, வ்யோமரூபா, ஸித்தரூபா, லக்ஷ்மி என்ற பன்னிரண்டு யோகினிகளுடன் வசினீ முதலிய எட்டு வாக்தேவதைகளும் சேர்த்தால் கலைகள் இருபது; அக்கலைகள் படிகம்போல் பரிசுத்தமானவையாக உள்பத்து வெளிப்பத்து ஆகிய கோணங்களில் தியானிக்கப்பட வேண்டும். இது பூப்ரஸ்தார பேதம். இம் முறையில் கந்தாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ஸ்பர்சாகர்ஷிணீ ஆகிய நாலு தேவதைகளையும் சதுரத்தின் நான்கு வாயில்களிலும் உள்ள துவார தேவதைகளாகவும் வழிபட வேண்டும்.

---

அருணிம நிமக்னும்। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(தனு-ச்சாயாபிஃ) தேககாந்தியின் கிரணங்களால் (ஸர்வாம்) எல்லாம் (திவம்) தேவலோகத்தையும் (உர்வீம்) பூலோகத்தையும் (அருணிமனி)இளஞ்சிவப்பு வர்ணத்தில் (மக்னும்) முழுகினவைகளாக (யஃ) எவன் (ஸ்மரதி) தியானம் செய்கிருனே (அஸ்ய) அவனுக்கு (த்ரஸ்யத்) பயந்த (வன - ஹரிண - சாலீன - நயனுஃ) காட்டுமான் களுடையது போல் அழகிய கண்களுடன் கூடிய (கீர்வாண-கணிகாஃ) அப்ஸரஸ்திரீகள் (ஊர்வச்யா ஸஹ) ஊர்வசியுள்பட (கதி கதி) எத்தனை எத்தனை பேர்கள் தான் (வச்யாஃ) வசப்பட்டவர்களாக (ந பவந்தி) ஆக மாட்டார்கள் ?

---

ஓ மாத்ருகாம் வசினீயுக்தாம் யோகினீபிஸ்
ஸமன்விதாம்
கந்தாத்யாகர்ஷிணீயுக்தாம் ஸம்ஸ்மரேத்
த்ரிபுராம்பிகாம் ||

ஓ. கந்தத்வாராம் துராதர்ஷாம் நித்ய-புஷ்டாம்
கரீஷிணீம்
ஈச்வரீம் ஸர்வபூதானும் தாமிஹோபஹ்வயே
ச்ரியம் ||

—ஸ்ரீ ஸூக்தம்

18. தருண - தரணி - ஸ்ரீ - ஸரணீபிஃ—தருண தரணிர்-பால - ஸூர்யஃ ; தஸ்ய ஸ்ரீஃ சோபா தஸ்யைவ ஸ்ரீ ஸரணிஃ மார்க்கஃ ஸௌபாக்யமிதி யாவத் ।

அருணிமனி மக்னும்—அருணிமனி ஆருண்யே மக்னும் அத்யருணு-மிதி யாவத் । யத்வா அருணிம -நிமக்னும் திவமாகாசம் ஸர்வாமுர்வீம் நிதராம் மக்னும் ।

இந்தச் சுலோகம் ஸ்த்ரீ வச்யகரம் என்று சொல்லப் படும். ஆனல் 'ஸ்த்ரிய ஸமஸ்தாஸ் தவ தேவி பேதாஃ' என்றபடி எல்லா ஸ்த்ரீகளும் பரதேவதையின் வடிவங்களே யாதலால் உபாஸகன் அவர்களை அங்ஙனமே கண்டு வணங்குவான். காமத்தால் ஸ்திரீகளுக்கு வசமாக மாட்டான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



मुखं बिन्दुं कृत्वा कुचयुगमध-स्तस्य तदधो
हरार्धं ध्यायेद्यो हरमहिषि ते मन्मथकलाम् ।
स सद्यः संक्षोभं नयति वनिता इत्यतिलघु
त्रिलोकीमप्याशु भ्रमयति रवीन्दु-स्तनयुगाम् ॥ १९ ॥

முகம் பிந்தும் க்ருத்வா குசயுக-மதஸ் தஸ்யததோ
ஹரார்த்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே
மன்மதகலாம் ।
ஸ ஸத்யஃ ஸம்க்ஷோபம் நயதி வனிதா இத்யதிலகு
த்ரிலோகீ மப்யாசு ப்ரமயதி ரவீந்து-ஸ்தனயுகாம் ॥ 19

---

19. காமகலா த்யானம் (காம ஜயம்)

(ஹர மஹிஷி) பரமசிவனின் பட்டமஹிஷியே ! (பிந்தும்) ஸ்ரீசக்கர மத்தியிலுள்ள பிந்துவை (முகம்) காமகலா ரூபிணியான உனது முகமாக (க்ருத்வா) தியானம் செய்துகொண்டு (தஸ்ய அதஃ) அதற்குக் கீழே (குசயுகம்) இரண்டு ஸ்தனங்களையும் (தததஃ) அதற்கும் கீழே (ஹரார்த்தம்) சிவனுடைய பாதி வடிவான யோனியையும் தியானம் செய்துகொண்டு (தே) உன்னுடைய (மன்மதகலாம்) காம கலையாகிய 'க்லீம்' பீஜத்தை (யஃ)

---

19. இந்தச் சுலோகமும் ஸ்த்ரீ வச்யகரம் என்று சொல்லப்படும். பதினெட்டாவது சுலோகத்தின் குறிப்பு இங்கும் பொருந்தும். ஹரமஹிஷி - ஹரோ பிந்துஃ, தஸ்ய மஹிஷி ததாதார-த்ரிகோணரூபிணீதி கூடார்த்தஃ।

ஹரார்த்தம்—ஹகாரார்த்தம் என்றும் பாடம் உண்டு. 'ஹ' என்பது 'ஹம்ஸஃ' என்பதைக் குறிக்கும். இதில் பாதி உயிரெழுத்துக்கள் 'ஹம்' இல் உள்ள 'அம்', 'ஸஃ' வில் உள்ள 'அஃ'. ஆகையால் அது மூன்று பிந்துக்களைக் குறிக்கும். அது மன்மதகலை.

---

ஹகாரார்த்தம் த்யாயேத் - ஹர மஹிஷி । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



எவன் (த்யாயேத்) அவ்வங்கங்களில் தியானம் செய்கின்ருனே (ஸ:) அவன் (ஸத்ய:) உடனே (வனிதா:) காம சக்திகளை (ஸம்க்ஷோபம் நயதி) வசப்படும்படி செய்கிருன் (இதி) என்பது (அதிலகு) மிகவும் எளிது. (ரவி-இந்து-ஸ்தன-யுகாம்) சூரிய சந்திரர்களையே ஸ்தனங்களாகக் கொண்டுள்ள (த்ரிலோகீம் அபி) முவ்வுலக வடிவமான மடந்தையையும் கூட (ஆசு) விரைவில் (ப்ரமயதி) மயங்கச் செய்வான்.

---

'க்லீம்' என்ற பீஜத்தில் உயிரெழுத்து 'ஈ'. அதுவும் மூன்று பிந்துக்களால் ஆகியது. மேலுள்ள பிந்து, சந்திரன், கீழுள்ளவை சூரியனும் அக்கினியும்.

ஒ. மஹாமந்த்ர - ராஜாந்த - பீஜம் பராக்யம் ஸ்வதோ ந்யஸ்த-பிந்து ஸ்வயம் ந்யஸ்த - ஹார்த்தம் ।
பவத்வக்த்ர வக்ஷோஜ - குஹ்யாபிதானம் ஸ்வரூபம் ஸக்ருத் பாவயேத் ஸ த்வமேவ ॥

ததான்யே விகல்பேஷு நிர்விண்ண - சித்தாஸ் - ததேகம் ஸமாதாய பிந்து - த்ரயம் தே । பரானந்த ஸந்தான-ஸிந்தௌ நிமக்ன: புனர் - கர்ப்பரந்த்ரம் ந பச்யந்தி தீரா: ॥ — தேவீ புஜங்கம் (சங்கராசாரியர்.)

இங்ஙனம் காமகலா தியானம் செய்பவன் தேவியின் ஸ்வரூபமாகவே ஆகிவிடுகிருன். வேறு எண்ணம் இல்லாமல் ஒருமைப்பட்ட மனத்துடன் மூன்று பிந்துக்களையும் தியானம் செய்பவன் பரமானந்தக் கடலில் மூழ்கி மீண்டும் கர்ப்பத் துவாரத்தைக் காணமாட்டான்.

ஒ. க்லீம் இத்யஸ்ய மதன - பிஜத்வாத் தத்ர ச பிந்தோர் - நாகரலிப்யாம் (ஊீ) சிரஸ்தத்வாத் தத்ரஸ்தே பிந்தௌ முகம் க்ருத்வா, ததத: ஸ்தித - பிந்துத்வயாகாரே குசத்வயம் தததோ வர்த்தினி லகாரே ஹரார்த்தம் த்ரிகோணம் த்யாத்வா தேன மன்மதகலாம் யோ த்யாயேத், க்லீமித்யேவம் ரூபாம் சிந்தயதி ஸ ஸாதக: ஸத்யஸ்ததானீமேவ, ஏதத் ப்ரயோகஸ்ய அதிசீக்ரகாரித்வாத் ॥ —அருணு மோதினீ விரிவுரை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



किरन्ती-मङ्गेभ्यः किरण-निकुरुम्बामृतरसं
हृदि त्वा-माधत्ते हिमकरशिला-मूर्तिमिव यः ।
स सर्पाणां दर्पं शमयति शकुन्ताधिप इव
ज्वरप्लुष्टान् दृष्ट्या सुखयति सुधाधारसिरया ॥ २० ॥

கிரந்தீ-மங்கேப்ப்யஃ கிரண-நிகுரும்பாம்ருதரஸம்
ஹ்ருதி த்வா மாதத்தே ஹிமகர-சிலா-மூர்த்திமிவ யஃ॥
ஸ ஸர்ப்பாணும் தர்ப்பம் சமயதி சகுந்தாதிப இவ
ஜ்வரப்லுஷ்டான் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதார
ஸிரயா ‖ 20 ‖

---

20. சந்திரகாந்தப் பிரதிமை போன்ற வடிவம்.
(ஸர்வ விஷ ஸர்வ ஜ்வர நிவாரணம்)

(அங்கேப்யஃ) எல்லா அவயவங்களிலிருந்தும் (கிரண-நிகுரும்ப-அம்ருதரஸம்) கிரண ஸமூஹ வடிவில் அமிருத ரஸத்தை (கிரந்தீம்) பெருக்கும் (ஹிமகர-சிலா-மூர்த்திம் இவ) சந்திரகாந்தச் சிலையாலான மூர்த்தி போன்ற (த்வாம் உன்னை (யஃ) எவன் (ஹ்ருதி) உள்ளத்தில் (ஆதத்தே) நிலை நிறுத்தித் தியானம் செய்கின்றானே (ஸஃ) அவன்(சகுந்தா திபஃ இவ)பக்ஷிராஜனாகிய கருடனைப்போல்

---

20. நிகுரும்பஃ—ஸமூஹஃ। சகுந்தாதிபஃ-சகுந்தானும் பக்ஷிணும் அதிபோ கருத்மான்।

ஸுதாதாரஸிரயா —ஸுதாயாஃ ஆதாரபூதா. ஸிரா அம்ருத ஸ்யந்திகா நாடீ; யத்வா ஸுதாதாராத்மிகா யஸ்யாம் ஸிராயா-மிதி பஹுவ்ரீஹிஃ। ஸுதாஸாரா ச அஸௌ ஸிரா ச தயா ஸுதா-ஸாரஸிரயா இதி பாடஃ।

ஹிமகரசிலா மூர்த்திஃ—அம்ருதேசுவரி என்னும் ரூபம். இது எல்லா விஷங்களையும் போக்கும் மந்திரம். கருட பகவான் பார்வையால் விஷங்களைப் போக்குவதால் இது

---

20. ஜ்வரப்ரஷ்டான்; ஜ்வர-ப்லுஷ்டம்;
ஸுதாஸார-ஸிரயா। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(ஸர்ப்பாணும்) பாம்புகளின் (தர்ப்பம்) கொழுப்பை (சமயதி) அடக்குகிறான். (ஸுதாதார-ஸிரயா) அம்ருத நாடியோடு கூடியிருக்கும் (த்ருஷ்ட்யா) பார்வையால் (ஜ்வர-ப்லுஷ்டான்) ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவர்களை (ஸுகயதி) பீடை நீங்கிச் சுகமடையச் செய்கிறான்.

---

'காருடப் பிரயோகம்' எனப்படும். இங்கே கூறிய படி தியானம் செய்பவனுடைய பார்வையாலேயே விஷங்களும் ஜ்வரங்களும் தீர்ந்துவிடும்.

ஒ. கருடோபநிஷத்—சந்த்ரமண்டல ஸங்காச, ஸூர்ய மண்டல முஷ்டிக, ப்ருதிவீ மண்டல முத்ராங்க, ஸ்ரீ மஹா கருடாய விஷம் ஹர ஹர ஹும் பட் ஸ்வாஹா। ஓம் க்ஷிப் ஸ்வாஹா। ஓமீம் ஸ சரதி ஸ சரதி தத்காரீ மத்காரீ விஷாணுஞ்ச விஷ ரூபிணீ விஷதூஷிணீ, விஷசோஷணீ, விஷநாசினீ, விஷஹாரிணீ, ஹதம் விஷம் நஷ்டம் விஷம் அந்தஃ ப்ரலீனம் விஷம் ப்ரநஷ்டம் விஷம் ஹதம் தே ப்ரஹ்மணு விஷம் ஹதம், ஹதமிந்த்ரஸ்ய வஜ்ரேண ஸ்வாஹா ॥

ஒ. (ஷண்மாஸ-த்யானயோகேன ஜாயதே கருடோபமஃ
த்ருஷ்ட்யா கர்ஷயதே லோகம் த்ருஷ்ட்யைவ குருதே வசம் ॥

'சந்த்ரகாந்த-சிலாமூர்த்திம் சிந்தயித்வா விநாசயேத் ।
தாபஜ்வரான் அசேஷாம்ச்ச சீக்ரம் தார்க்ஷ்ய இவாபரஃ ॥
கருடத்யான-யோகேன-ஸ்மரணுந்-நாசயேத் விஷம் ।

ஆறு மாதத் தியானத்தால் கருடபகவானுக்குச் சமானமாகிப் பார்வையாலேயே உலகை வசம் செய்பவனுவான். சந்திரகாந்தப் பிரதிமை போன்ற தேவியின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தியானத்தால் எல்லா ஜ்வரங்களையும் விஷங்களையும் போக்கடிப்பவன் ஆவான். —சதுః சதீ.

விஷ்ணுவானவர் ஹாலாஹல விஷம் தன்னைப் பொசுக்காமல் இருக்க அம்ருதேசுவரியைத் தியானம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அம்பாளுடைய சிந்தாமணி கிருஹத்தைச் சுற்றியிருக்கும் அம்ருதவாவியில் மணிமயமான படகில் இருந்துகொண்டு அம்ருதேசுவரி பக்தர்களைக் கரை சேர்ப்பதாகக் கூறப்படுகிறது. அதனால் அம்ருதேசுவரிக்குத் 'தாரா' என்றும் பெயர்.

ஸிஞ்சந்தீம் பரமாம்ருதானி திசிதிசி அப்ராக்ருதைரம்சுபிః
கேலந்தீம் அம்ருதார்ணவே மணிமயீம் ஆருஹ்ய
நௌகாம் நவாம் ।
ஸ்நிக்தாபாங்கதரங்க - சிக்ஷித - பவக்ஷ்வேளாம் முகுந்தச்
சிராத்
அஸ்மார்ஷீத் அம்ருதேச்வரீம் பகவதீம் அம்பாம்
அஹம்-பாவதః ॥
—நீலகண்ட விஜயம்.

இந்தச் (ஸௌந்தர்யலஹரி) சுலோகத்தைப் பதினாறு ஆவிருத்திக்குக் குறையாமல் அம்பிகா தியானத்துடன் சொல்லிக்கொண்டு விபூதியையோ தீர்த்தத்தையோ அபிமந்த்ரணம் செய்து நோயாளிகளிடம் அதைக் கொடுத்து, விபூதியானால் தரித்துகொள்ளும்படிக்கும் தீர்த்தமானால் உட்கொள்ளும்படிக்கும் செய்வதாலேயே இந்தப் பிரயோகத்தைப் பரீக்ஷித்துப் பார்த்து விடலாம். ஸகலரோக நிவிருத்தி என்பதில் சந்தேகமில்லை. உபாஸகர்களுடைய திருஷ்டிக்கே ரோகாதிகளை நிவிருத்தி செய்து வைக்கும்படியான வைபவம் சித்திக்கிறது. —தேதியூர் சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तटिल्लेखा-तन्वीं तपन-शशि-वैश्वानर-मयीं
निषण्णां षण्णामप्युपरि कमलानां तव कलाम् ।
महापद्माटव्यां मृदित-मलमायेन मनसा परमानन्द-लहरीम्
महान्तः पश्यन्तो दधति परमाह्लाद-लहरीम् ॥ २१ ॥

தடில்லேகா-தன்வீம் தபன-சசி-வைச்வானர-மயீம்
நிஷண்ணும் ஷண்ணு-மப்யுபரி கமலாஞம் தவ கலாம் ।
மஹாபதமாடவ்யாம் ம்ருதித-மல மாயேன மனஸா
மஹாந்தஃ பச்யந்தோ தததி பரமாஹ்லாத-லஹரீம் ।

21. மின்னல் கொடி போன்ற வடிவம்

(ஸர்வ வசீகரம், ஸர்வாஹ்லாதகரம்)

(தடித் - லேகா - தன்வீம்) மின்னல் கொடி போல் சூக்ஷ்மமான தேஜோரூபம் உடையதும் (தபன-சசி-வைச்வானர-மயீம்) சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய வடிவங்களில் பிரகாசிப்பதும் (ஷண்ணும் கமலாஞம் அபி) ஆறு ஆதார சக்கரங்களுக்கும் (உபரி) மேலே (மஹாபத்ம-அடவ்யாம்) தாமரைக்காடு போன்ற ஸஹஸ்ரார சக்கரத்

---

21. தடில்லேகா-தன்வீம்—தடில்லேகா வித்யுல்லதா தத்வத் தன்வீம் தீர்க்கா ஸூக்ஷ்மா । ஜ்யோதிர்மயீ க்ஷண-ப்ரபா ச । ஸ்திர ஸௌதாமின்யா க்ஷணப்ரபாவத்வம் ஆக்ஞாசக்ரே க்ஷணமாத்ரதர்சனுத் ॥

குண்டலினீ சக்தி மூலாதாரத்திலிருந்து படிப்படியாக மேலேறி வரும்போது ஆக்ஞாசக்கரத்தில் அதிக நேரம் தாமதிக்காமல் மின்னல்கொடிபோல் காட்சி அளித்து விரைவில் ஸஹஸ்ராரத்தில் பரமசிவனை அடைகின்ருள். ஸஹஸ்ராரத்தில் நிலையாகக் குளிர்ந்து பிரகாசிப்பதால் 'ஸ்திரஸௌதாமினீ' என்றும், ஆக்ஞை

---

21. பரமானந்த-லஹரீம் ॥ ம்ருதுதமம் அமாயேன ॥
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தில் (நிஷண்ணும்) நிலைபெறுவதுமான (தவ) உன்னுடைய (கலாம்) 'ஸாதா' எனப்படும் கலையை (ம்ருதித-மல மாயேன) காமம் முதலிய அழுக்குகளும் அவித்தை முதலிய மயக்கங்களும் நீங்கிய (மனஸா) மனத்தினுல் (மஹாந்தஃ) மகான்கள் (பச்யந்தஃ) கண்டு அநுபவிப்பவர்களாய் (பரமாஹ்லாத லஹரீம்) அலையலையாக வரும் அளவு கடந்த ஆனந்தத்தை (தததி) அடைகிருர்கள்.

---

யில் நொடி நேரம் பிரகாசிப்பதால் 'க்ஷணஸௌதாமினீ' என்றும் கூறப்படுகிருள்.

**ம்ருதித-மல-மாயேன மனஸா**— ம்ருதிதாஃ க்ஷபிதாஃ, மலாஃ காமாதயஃ மாயா அவித்யா - அஸ்மிதா - அஹங்காராதயஃ யஸ்ய தத், தேந மனஸா அந்தஃ கரணேன ||

இந்த உபாஸனையைச் செய்கிறவர்கள் தேஹத்தை ஆத்மா என்று எண்ணும் அவித்தையையும் தான் பெரியவன் என்ற அஹங்காரத்தையும் விருப்பு வெறுப்புக்களையும் சாகாமல் இருக்க வேண்டும் என்ற அபிநிவேசத்தையும் விலக்கிய மகான்களாவர். அவர்கள் வழிபடும் 'ஸாதா' என்னும் இந்தக் கலையின் அம்சமே சூரிய கலையும் சந்திரகலையும் அக்கினிகலையும் அது சூரியனைப் போல் இருளைப் போக்குவதாயும் சந்திரனைப்போல் தாபத்தை நீக்குவதாயும் அக்கினியைப்போல் புண்ணிய கர்மாக்களை விரைவில் பக்குவப்படுத்துவதாயும் விளங்குவது. இவ்வுபாஸனையால் துக்கமே வராமல் தடுத்து என்றென்றும் ஆனந்தமாக வாழலாம். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை.'

ஷட்கோண சக்கரத்தின் மத்தியில் பிந்துவை எழுதி அதன்மேல் ஐந்து முகமுள்ள தீபத்தை ஏற்றி வைத்து தேவியை ஆவாஹனம் செய்து பூஜித்து ஆயிரம் தடவையோ முன்னூறு தடவையோ நூறு தடவையோ இந்தச் சுலோகத்தை தினந்தோறுமோ வெள்ளிக்கிழமை பௌர்ணமி போன்ற விசேஷ நாட்களிலோ பாராயணம் செய்தல் உபாஸனை செய்யும் வழிகளில் ஒன்ருகும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणां
इति स्तोतुं वाञ्छन् कथयति भवानि त्वमिति यः ।
तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्य-पदवीं
मुकुन्द-ब्रह्मेन्द्र-स्फुट मकुट-नीराजितपदाम् ॥ २२ ॥

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதி பவானி த்வமிதி யஃ।
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜ-ஸாயுஜ்ய-பதவீம்
முகுந்த-ப்ரஹ்மேந்த்ர-ஸ்புட-மகுட-நீராஜித-பதாம் ॥

---

22. ஸ்தோத்ர மகிமை (ஸர்வஸித்தி)

'(பவானி) பவன் எனப் பெயர் பெற்ற பரம சிவனுடைய பத்தினியே! (த்வம்) நீ (தாஸே மயி) அடிமையாகிய என்னிடத்தில் (ஸகருணாம்) கருணையுடன் கூடின (த்ருஷ்டிம்) பார்வையை (விதர) செலுத்தியருள் வாயாக' (இதி) என்று (யஃ) எவனாவது ஒருவன் (ஸ்தோதும்) துதி செய்ய (வாஞ்ச்சன்) விரும்பி ('பவானி த்வம்' இதி) 'பவானி! நீ' என்ற இரண்டு வார்த்தைகளை (கதயதி) சொன்னால் (ததைவ) அப்போதே (த்வம்) நீ (தஸ்மை) அவனுக்கு (முகுந்த - ப்ரஹ்ம - இந்த்ர - ஸ்புட முகுட - நீராஜிதபதாம்) விஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகியவர்களின் கிரீட ஒளியால் நீராஜனம் செய்யப் பெற்ற திருவடிகளையுடைய (நிஜ-ஸாயுஜ்ய பதவீம்) உனது ஸாயுஜ்ய பதவியை (திசஸி) அளிக்கிறாய்.

---

ஆவாஹன மந்திரம்— மஹாபத்ம - வனாந்தஸ்தே காரணானந்த - விக்ரஹே,। ஸர்வபூதஹிதே மாதஃ ஏஹ்யேஹி பரமேச்வரி ॥

ஓ. மூலாலவால-குஹரா-துதிதா பவானீ நிர்ப்பித்ய ஷட் ஸரஸிஜானி தடில்லதேவ। பூயோऽபி தத் ப்ரவிசஸி த்ருவ-மண்டலேந்து-நிஷ்யந்தமான பரமாம்ருத-வ்ருஷ்டி ரூபா ॥

—அம்பாஸ்தவம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



त्वया हृत्वा वामं वपु-रपरितृप्तेन मनसा
शरीरार्धं शंभो,रपरमपि शङ्के हृतमभूत् ।
यदेतत् त्वद्रूपं,सकलमरुणाभं त्रिनयनं
कुचाभ्यामानम्रं कुटिल शशिचूडाल मकुटम् ॥ २३ ॥

த்வயா ஹ்ருத்வா வாமம் வபு-ரபரித்ருப்தேன மனஸா
சரீரார்த்தம் சம்போ-ரபரமபி சங்கே ஹ்ருதமபூத் ।
யதேதத் த்வத்ரூபம் ஸகல-மருணாபம் த்ரிநயனம்
குசாப்யா-மாநம்ரம் குடில-சசி-சூடால-மகுடம்॥ 23 ॥

23. சக்தியிடம் சிவாம்சத்தின் அடக்கம்
(ஸர்வ ஸம்பத்து)

(யத்) எக்காரணத்தால் (ஏதத்) என்னுடைய இருதயத்தில் பிரகாசிக்கும் இந்த (த்வத்-ரூபம்) உன்னுடைய ரூபம் (ஸகலம் அருணாபம்) முழுவதும் சிவப்பான காந்தியுடனும் (த்ரிநயனம்) மூன்று கண்களுடனும்

22. பவானி த்வம்— 'பவானி' என்னும் பதத்தை தேவியை அழைக்கும் பதமாக பக்தன் உபயோகித்திருந்தாலும், அதை (லோட் என்னும்) வினைச் சொல்லாகக் கொண்டால் 'நான் ஆவேன்' எனப் பொருள்படும்.

'பவானி த்வம்' என்றால் 'நீயாகவே நான் ஆகின்றேன்' (ப்ரஹ்மைவாஹமஸ்மி) என்ற வேதாந்த மகா வாக்கியத்தின் கருத்தைக் கூறியதாக ஆகிறது. அப்படிப் பட்ட ஞானம் உள்ளவன் மோக்ஷத்திற்கு அதிகாரியாகிறான். தேவி கருணையால், 'பவானி த்வம்' என்று கூறு பவனை அவ்வித அதிகாரியாக ஏற்றுத் தனக்கும் அவனுக்கும் வேற்றுமை இல்லாததாகிய ஸாயுஜ்ய பதவியை அவனுக்கு அளிக்கிறாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(குசாப்யாம்) இரண்டு ஸ்தனங்களால் (ஆநம்ரம்) சற்று வளைந்தும் (குடில - சசி - சூடால - மகுடம்) பிறைச் சந்திரனைச் சூடிய மகுடத்துடனும் விளங்குகிறதோ, அதனால் (சம்போ:) சம்புவினுடைய (வாமம் வபு:) சரீரத்தின் இடது பாகம் (த்வயா) உன்னால் (ஹ்ருத்வா) எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பும் (அபரி த்ருப்தேன) முழுத் திருப்தியில்லாத (மனஸா) மனத்தால் (அபரம் சரீரார்த்தம் அபி) சரீரத்தின் மற்றொரு பாதியும் (ஹ்ருதம் அபூத்) கவர்ந்து கொள்ளப்பட்டதென்று (சங்கே) சந்தேகம் அடைகிறேன்.

---

தேவியின் அருளைப் பெறுவதற்கு, 'பூஜை, ஜபம், ஹோமம் முதலிய கிரியைகளைவிட ஒருமித்த கருத்துடன் அவளைத் துதித்தலே போதும்' என்பது இச் சுலோகத்தின் கருத்து.

ஒ. அஸ்பஷ்டமபி யந்நாம ப்ரஸங்கேனாபி பாஷிதம் ।
தததி வாஞ்சிதா-னர்த்தான் துர்லபானபி ஸர்வதா ॥

தெளிவாக இல்லாமலோ வேறு பேச்சுக்களின் இடையிலோ தேவியின் நாமம் உச்சரிக்கப்பட்டாலும் கூட அவள், விரும்பிய பொருள்களை, அவை கிடைத்தற்கு அரிதாயினும், எப்போதும் அளிப்பாள்

—தேவீ பாகவதம்

23. சிவனும் சக்தியும் ஒரே உடலின் வலது பாகமும் இடது பாகமும். சிவனுடைய பாகம் வெளுப்பு, சக்தியின் பாகம் சிவப்பு. ஆனால் தேவியின் உடல் முழுதும் சிவப்பாகவே காணப்படுவதாலும் மூன்று கண்களும் கிரீடத்தில் சந்திரகலையும் தோன்றுவதாலும் பாதி உடலைக்கொண்டதில் திருப்தி அடையாமல் முழுவதையும் தன்மயமாகவே தேவி ஆக்கிக்கொண்டு விட்டாள் என்று இங்கே கூறப்படுகிறது. முக்கண்ணன், சந்திரசேகரன் என்ற சிறப்புப்பெயர் கொண்ட சிவன்,

---

வபு-ரபரிதுஷ்டேன । ததா ஹி த்வத்ரூபம் ॥ —பா பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சக்தியின் வடிவத்தில் மறைந்து போகிறான். இதனால் சக்தியைப் பூஜை செய்தால் சிவபூஜை செய்ததாகிறது. 'உத்தரகௌளம்' என்னும் மதத்தில் தனியாகச் சிவ பூஜை இல்லை; சக்தியிலேயே சிவன் ஐக்கியம்; அவனுக்குத் தனி வடிவமும் இல்லை, தொழிலும் இல்லை.

ஓ. நிர்மாஸி ஸம்ஹரஸி நிர்வஹஸி த்ரிலோகீம் வ்ருத்தாந்த-மேதமபி வேத்தி ந வா மஹேச: தஸ்யாத் மனஸ்து கிரிஜே தவ ஸாஹசர்யாஜ்ஜாத: சுருதிஷ்வபி ஜகஜ்ஜனகத்வ-வாதஃ ||

பார்வதி! நீயே மூவுலகையும் உண்டாக்குகிறாய் ஆளுகிறாய், அழிக்கிறாய்; இந்த விருத்தாந்தத்தைக்கூடச் சிவன் அறிவானோ அறியமாட்டானோ தெரியவில்லை. ஆனால் அவனுடன் நீ கூடியிருப்பதால் சுருதி அவனை உலகிற்குப் பிதா எனக் கூறுகிறது.

—ஆனந்தஸாகரஸ்தவம் (101) நீலகண்டதீக்ஷிதர்

ஓ. ஸாதாரணே ஸ்மரஜயே நிடிலாக்ஷிஸாத்யே. பாகீ ஹரோ ஹரது நாம யசஃ ஸமக்ரம் । வாமாங்க்ரி-மாத்ர-கலிதே ஜனனி த்வதீயே கா வா ப்ரஸக்தி-ரிஹ காலஜயே புராரேஃ ||

நெற்றிக்கண்ணால் மன்மதன் எரிந்ததில், அந்தக் கண்ணிலும் உனக்குப் பாதி உண்டாகையால் அந்தப் புகழில் சிவனுக்கு ஒரு பகுதிதான் உண்டு. என்றாலும் சிவன் அந்தப் புகழ் முழுவதையும் வைத்துக்கொண்டு போகட்டும். காலனை ஜயித்த இடதுகால் உன்னுடையதாதலால் சிவனுக்கு அதில் என்ன சம்பந்தம்?

—ஆனந்தஸாகரஸ்தவம் (56)

'இரண்டு பேருடைய கடாக்ஷத்தாலும் காமஜயம் பண்ணலாம். அம்பாளுடைய அனுக்கிரகத்தினால் கால ஜயம் பண்ணலாம். அம்பாளுடைய சரணாரவிந்தந்தான் கால நிவிருத்தி பண்ணுகிறது' என்று கூறுகிறார் காமகோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


जगत्सूते धाता हरिरवति रुद्रः क्षपयते
तिरस्कुर्व-न्नेतत् स्वमपि वपु-रीश-स्तिरयति ।
सदा पूर्वः सर्वं तदिद-मनुगृह्णाति च शिव-
स्तवाज्ञा मालम्ब्य क्षणचलितयो र्भ्रूलतिकयोः ॥ २४ ॥

ஜகத்ஸூதே தாதா ஹரி-ரவதி ருத்ரஃ க்ஷபயதே
திரஸ்குர்வன்-னேதத் ஸ்வமபி வபு-ரீசஸ்-திரயதி
ஸதா பூர்வஃ ஸர்வம் ததித-மனுக்ருஹ்ணாதி ச சிவஸ்-
தவாஜ்ஞா-மாலம்ப்ய க்ஷண சலிதயோர் ப்ரூலதிக
யோஃ ‖ 24 ‖

---

### 24. தேவியின் புருவ அமைப்பு

(ஸர்வ பூத ப்ரேத பிசாச பய நிவாரணம்)

(தாதா) பிரம்மா (ஜகத்) உலகத்தை (ஸூதே) சிருஷ்டிக்கிறார், (ஹரி) விஷ்ணு (அவதி) ரக்ஷிக்கிறார், (ருத்ரஃ) ருத்திரன் (க்ஷபயதே) அழிக்கிறார், (ஈசஃ) மகேசுவரன் (ஏதத்) இம்மூவரையும் (திரஸ்குர்வன்) தன்னிடம் லயிக்கும்படி செய்து (ஸ்வம்) தம்முடைய (வபுஃ அபி) சரீரத்தையும் (திரயதி) மறையும்படி செய்கிறார். (ஸதா-பூர்வஃ சிவஃ) ‘ஸதா’ என்ற அடைமொழியை முன் கொண்ட சிவன் அதாவது ஸதாசிவன் (ஸர்வம் தத் இதம்) அப்படிப்பட்ட இவர்கள் எல்லோரையும் (தவ) உன்னுடைய (க்ஷண-சலிதயோஃ) நொடி நேர அசைப்பினால் தெரிவிக்கப்பட்ட (ப்ரூலதிகயோஃ) புருவக் கொடிகளின் (ஆஜ்ஞாம்) கட்டளையை (ஆலம்ப்ய) அனுசரித்து (அனுக்ருஹ்ணாதி) அனுக்கிரஹம் செய்கிறார்.

---

24. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்னும் ஐந்து தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈசானன், ஸதாசிவன் ஆகியோர்மூலம் தேவி நடத்துகிறாள். ஆகையால் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் தேவி ‘பஞ்ச க்ருத்ய பராயணா’ எனப்படுகிறாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சக்தியின் வடிவத்தில் மறைந்து போகிறான். இதனால் சக்தியைப் பூஜை செய்தால் சிவபூஜை செய்ததாகிறது. 'உத்தரகௌலம்' என்னும் மதத்தில் தனியாகச் சிவ பூஜை இல்லை; சக்தியிலேயே சிவன் ஐக்கியம்; அவனுக்குத் தனி வடிவமும் இல்லை, தொழிலும் இல்லை.

ஓ. நிர்மாஸி ஸம்ஹரஸி நிர்வஹஸி த்ரிலோகீம் வ்ருத்தாந்த-மேதமபி வேத்தி ந வா மஹேச: தஸ்யாத் மனஸ்து கிரிஜே தவ ஸாஹசர்யாஜ்ஜாத: சருதிஷ்வபி ஜகஜ்ஜனகத்வ-வாதஃ ||

பார்வதி! நீயே மூவுலகையும் உண்டாக்குகிறாய் ஆளுகிறாய், அழிக்கிறாய்; இந்த விருத்தாந்தத்தைக்கூடச் சிவன் அறிவானோ அறியமாட்டானோ தெரியவில்லை. ஆனால் அவனுடன் நீ கூடியிருப்பதால் சுருதி அவனை உலகிற்குப் பிதா எனக் கூறுகிறது.

—ஆனந்தஸாகரஸ்தவம் (101) நீலகண்டதீக்ஷிதர்

ஓ. ஸாதாரணே ஸ்மரஜயே நிடிலாக்ஷிஸாத்யே. பாகி ஹரோ ஹரது நாம யசஃ ஸமக்ரம்। வாமாங்க்ரி-மாத்ர-கலிதே ஜனனி த்வதீயே கா வா ப்ரஸக்தி-ரிஹ காலஜயே புராரேஃ ||

நெற்றிக்கண்ணால் மன்மதன் எரிந்ததில், அந்தக் கண்ணிலும் உனக்குப் பாதி உண்டாகையால் அந்தப் புகழில் சிவனுக்கு ஒரு பகுதிதான் உண்டு. என்றாலும் சிவன் அந்தப் புகழ் முழுவதையும் வைத்துக்கொண்டு போகட்டும். காலனை ஜயித்த இடதுகால் உன்னுடைய தாதலால் சிவனுக்கு அதில் என்ன சம்பந்தம்?

—ஆனந்தஸாகரஸ்தவம் (56)

'இரண்டு பேருடைய கடாக்ஷத்தாலும் காமஜயம் பண்ணலாம். அம்பாளுடைய அனுக்கிரகத்தினால் கால ஜயம் பண்ணலாம். அம்பாளுடைய சரணாரவிந்தந்தான் கால நிவிருத்தி பண்ணுகிறது' என்று கூறுகிறார் காம கோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


जगत्सूते धाता हरिरवति रुद्रः क्षपयते
तिरस्कुर्व-न्नेतत् स्वमपि वपु-रीश-स्तिरयति ।
सदा पूर्वः सर्वं तदिद-मनुगृह्णाति च शिव-
स्तवाज्ञा मालम्ब्य क्षणचलितयो र्भ्रूलतिकयोः ॥ २४ ॥

ஜகத்ஸூதே தாதா ஹரி-ரவதி ருத்ரஃ க்ஷபயதே
திரஸ்குர்வன்-னேதத் ஸ்வமபி வபு-ரீசஸ்-திரயதி
ஸதா பூர்வஃ ஸர்வம் ததித-மனுக்ருஹ்ணாதி ச சிவஸ்-
தவாஜ்ஞா-மாலம்ப்ய க்ஷண சலிதயோர் ப்ரூலதிக
யோஃ ‖ 24 ‖

---

## 24. தேவியின் புருவ அமைப்பு

### (ஸர்வ பூத ப்ரேத பிசாச பய நிவாரணம்)

(தாதா) பிரம்மா (ஜகத்) உலகத்தை (ஸூதே) சிருஷ்டிக்கிறார், (ஹரி) விஷ்ணு (அவதி) ரக்ஷிக்கிறார், (ருத்ரஃ) ருத்திரன் (க்ஷபயதே) அழிக்கிறார், (ஈசஃ) மகேசுவரன் (ஏதத்) இம் மூவரையும் (திரஸ்குர்வன்) தன்னிடம் லயிக்கும்படி செய்து (ஸ்வம்) தம்முடைய (வபுஃ அபி) சரீரத்தையும் (திரயதி) மறையும்படி செய்கிறார். (ஸதா-பூர்வஃ சிவஃ) 'ஸதா' என்ற அடைமொழியை முன் கொண்ட சிவன் அதாவது ஸதாசிவன் (ஸர்வம் தத் இதம்) அப்படிப்பட்ட இவர்கள் எல்லோரையும் (தவ) உன்னுடைய (க்ஷண-சலிதயோஃ) நொடி நேர அசைப்பினால் தெரிவிக்கப்பட்ட (ப்ரூலதிகயோஃ) புருவக் கொடிகளின் (ஆஜ்ஞாம்) கட்டளையை (ஆலம்ப்ய) அனுசரித்து (அனுக்ருஹ்ணாதி) அனுக்கிரஹம் செய்கிறார்.

---

24. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்னும் ஐந்து தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈசானன், ஸதாசிவன் ஆகியோர்மூலம் தேவி நடத்துகிறாள். ஆகையால் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் தேவி 'பஞ்ச க்ருத்ய பராயணா' எனப்படுகிறாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


त्रयाणां देवानां त्रिगुण-जनितानां तव शिवे
भवेत् पूजा पूजा तव चरणयो-र्या विरचिता ।
तथा हि त्वत्पादोद्वहन-मणिपीठस्य निकटे
स्थिता ह्येते-शश्वन्मुकुलित-करोत्तंस-मकुटाः ॥ २५ ॥

த்ரயாணும் தேவாணும் த்ரிகுண-ஜநிதாணும் தவ சிவே
பவேத் பூஜா தவ சரணயோர்-யா விரசிதா ॥
ததா ஹி த்வத் பாதோத்வஹன-மணிபீடஸ்ய நிகடே
ஸ்திதா ஹ்யேதே சச்வன்-முகுலித-கரோத்தம்ஸ-
மகுடா: ॥ 25 ॥

25. தேவி பூஜையில் மும்மூர்த்தி பூஜை அடக்கம்
(உன்னதப்பதவியும் அதிகாரமும்)

(சிவே) சிவபத்தினியே! (தவ) உன்னுடைய (சரண யோ:) திருவடிகளில் (யா) எந்த (பூஜா) பூஜை (விரசிதா) செய்யப்படுகிறதோ—அது, (தவ) உன்னுடைய (த்ரி-குண-ஜனிதாணும்) முக்குணங்களை அனு

ஒ. 'ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரஹ்மரூபா கோப்த்ரீ கோவிந்த ரூபிணீ ।
ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீ ஈச்வரீ ।
ஸதாசிவா அனுக்ரஹதா பஞ்சக்ருத்ய-பராயணு"
—ல. ஸ.

ஈசஸ்திரயதி — ஈச்வர: தாத்ரு - ஹரி - ருத்ரான் ஆத்மன்யாரோப்ய ஸ்வயமபி ஸதா - சிவ தத்வே அந்தர்ப்பூத: இத்யர்த்த:। அனேன ப்ரஹ்மாண்ட-ப்ரலய உக்த:। ததனந்தரம் ப்ரஹ்மாண்டாத் பிண்டோத்பத்தி-பிபித்ஸா ஸதாசிவஸ்ய ஜாயதே। அநேக கோடிப்ரஹ்மாண்டாணு-முத்பாதனே ஸம்ஹரணே ச த்வத் ப்ரு-விக்ஷேப-மாத்ர-ரூபா சக்தி: ஸாசிவ்யம் ஸதாசிவஸ்ய கரோதீத்யர்த்த:।
—லக்ஷ்மீதரர்

25. கரோத்தம்ஸ முகுடா: —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சரித்துத் தோன்றிய (த்ரயாணும் தேவாணும்) மும் மூர்த்திகளுக்கும் (பூஜா) பூஜையாக (பவேத்) ஆகும். (தத்தா ஹி) அது பொருத்தமே. (ஏதே) இவர்கள் (த்வத்-பாதோத்வஹன-மணிபீடஸ்ய) உன்னுடைய திருவடிகளைத் தாங்கும் ரத்தினப் பலகையின் (நிகடே) சமீபத்தில் (சச்வத்) எப்போதும் (முகுலித-கரோத்தம்ஸ-மகுடாஃ) குவித்த கைகளைக் கிரீடத்தில் வைத்துக்கொண்டு (ஸ்திதாஃ ஹி) நிற்கின்றார்கள் அன்றோ?

---

எல்லாத் தேவதைகளையும் தனித்தனியாகப் பூஜை செய்வது கூடாமையால் எந்த ஒரு தேவதையைப் பூஜித்தால் எல்லாத் தேவதைகளையும் பூஜித்ததாகுமோ அந்த மூலதேவதை அம்பிகை. இதே கருத்து அடுத்த சுலோகத்திலும் கூறப்படுகிறது.

25. த்ரிகுணஜனிதானு :—மூன்று குணங்களுடன் கூடின மாயைக்கு, ரஜோகுணம் மேலிட்டிருக்கும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட சைதன்னியம் பிரம்மா; மாயைக்குச், சத்துவகுணம் மேலிட்டிருக்கும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட சைதன்னியம் விஷ்ணு; மாயைக்குத் தமோகுணம் மேலிட்டிருக்கும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட சைதன்னியம் ருத்ரன்.

மணிபீடஸ்ய நிகடே — சரீரத்தில் உள்ள ஆறு ஆதார சக்கரங்களும் மணிபீடங்கள். அவை மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அக்கினி கண்டத்தில் உள்ள பிரம்மக்கிரந்தி, பிரம்மாவின் இருப்பிடம்; சூரியகண்டத்தில் உள்ள விஷ்ணுக்கிரந்தி, விஷ்ணுவின் இருப்பிடம்; ஸோமகண்டத்தில் உள்ள ருத்ரக்ரந்தி, ருத்திரரின் இருப்பிடம். ஆறு சக்கரங்களிலும் அந்தர்யாக முறையில் தேவி பூஜிக்கப்படும்போது மும்மூர்த்திகளும் பூஜிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

ஒ. யத் பூஜனஃ ஸ்துதி நமஸ்க்ருதிபிர்- பவந்தி
ப்ரீதாஃ பிதாமஹ ரமேச ஹராஸ் த்ரயோऽபி ।
தேஷாமபி ஸ்வகருணைர் ததீம் வபூம்ஷி
தாமீச்வரஸ்ய தருணீம் சரணம் ப்ரபத்யே ॥

—அப்பைய தீக்ஷிதர்—துர்க்கா சந்த்ரகலா ஸ்துதி.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



विरिञ्चिः पञ्चत्वं व्रजति हरिराप्नोति विरतिं
विनाशं कीनाशो भजति धनदो याति निधनम् ।
वितन्द्री माहेन्द्री-विततिरपि संमीलित-दृशा
महासंहारेऽस्मिन् विहरति सति त्वत्पति-रसौ ॥ २६ ॥

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்னோதி விரதிம்
விநாசம் கீனாசோ பஜதி தனதோ யாதி நிதனம் ।
விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலித-த்ருசா
மஹா-ஸம்ஹாரே ऽஸ்மின் விஹரதி ஸதி த்வத்பதி ரஸௌ ॥ 26 ॥

---

26. பராசக்தியின் பாதிவ்ரத்ய மகிமை

(அகத்திலும் புறத்திலும் சத்துருக்களின் அழிவு)

(விரிஞ்சி:) பிரம்மா (பஞ்சத்வம்) அழிவை (வ்ரஜதி) அடைகிறார்; (ஹரி:) விஷ்ணு (விரதிம்) முடிவை (ஆப்னோதி) அடைகிறார்; (கீனாச:) யமன் (விநாசம்) நாசத்தை (பஜதி) அடைகிறான்; (தனத:) குபேரன் (நிதனம்) மரணத்தை (யாதி) அடைகிறான்;(மாஹேந்த்ரீ ..............................

26. பஞ்சத்வம்— (பஞ்சபூதானாம் வ்யஷ்டி ரூபதாம் மரணமிதி யாவத்) ஐந்துபூதங்களும் தனித்தனியே பிரிந்துபோகும் மரணநிலை.

விரதிம்—உபரதிம் மரணமிதி யாவத் ।

விதந்த்ரீ—விசேஷேண தந்த்ரீ ப்ரமீலனம் ஜாட்யம் யஸ்யா: ஸா—நித்ராணேத்யர்த்த: ।

மாஹேந்த்ரீ விததி:—மஹேந்த்ரஸ்யேயம் மாஹேந்த்ரீ சதுர்தசானாம் மனூனாம் இந்த்ராணாம் விததி: அபி ஸங்கோபி ஸம்மீலதி, ஸம்யங்மீலிதா த்ருசா த்ருஷ்டிர்-யஸயாஸ் ஸா ।

---

விதந்தரா । ஸம்மீலதி த்ருசாம் —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விததிः அபி) ஒருவர்பின் ஒருவராக வரும் இந்திரர்களின் கூட்டமும் (ஸம்மீலித-த்ருசா) கண்ணை மூடி (விதந்த்ரீ) பெருந்தூக்கத்தில் ஆழ்கிறது. (அஸ்மின்) அப்படிப்பட்ட (மஹா-ஸம்ஹாரே) மகாப்பிரளய காலத்தில், (ஸதி) பதிவிரதையான தாயே! (அஸௌ) இந்த (த்வத் பதிः) உனது பதியான ஸதாசிவன் (விஹரதி) உன்னுடன் விளையாடுகிறார்.

---

த்வத்பதிः — ஸதாசிவः ஹரः அஸௌ ஸஹஸ்ரதல-கமலே பரித்ருச்யமானः

மஹாப் பிரளய காலத்தில் பிருதிவி முதல் எல்லாத் தத்துவங்களும் ஒன்று அதற்குமேல் உள்ள தத்துவத்தில் லயமாகிக் கடைசியில் சக்தியும் சிவமும் ஆகிய இரண்டுமே எஞ்சி நிற்கும். அப்போது சிவன், ஸம்ஹார தாண்டவம் செய்துகொண் டிருப்பதைப் பராசக்தி மட்டும் பார்த்துக்கொண் டிருக்கிறாள்

ஓ. மஹேச்வர-மஹாகல்ப-மஹா தாண்டவ ஸாக்ஷிணீ ।
—லலிதா ஸஹஸ்ரநாமம்.

ஓ. கல்போபஸம்ஹரண-கல்பித-தாண்டவஸ்ய
தேவஸ்ய கண்டபரசோः பர-பைரவஸ்ய
பாசாங்குசைக்ஷவ சராஸன-புஷ்பபாணா
ஸா ஸாக்ஷிணீ விஜயதே தவ மூர்த்திரேகா ॥
—கல்யாண வ்ருஷ்டிஸ்தவம்.

ஓ. அஸங்க்யா விலயம் யாந்தி ப்ரஹ்மாணः பண்டிதோத்தமாः ॥
அஸங்க்யா விஷ்ணவோ ருத்ரா அஸங்க்யா வாஸவாதயः ।
ஏக ஏவ சிவः ஸாக்ஷாத் ஸ்ருஷ்டிஸ்தித்யந்த-ஹேதவः ॥
—ஸூத ஸம்ஹிதை,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्य क्रमण मशनाद्याहुति-विधिः ।
प्रणामः संवेशः सुखमखिल-मात्मार्पण दृशा।
सपर्या पर्याय-स्तव भवतु यन्मे विलसितम् ॥२७॥

ஜபோ ஜல்ப: ஸில்பம் ஸகலமபி முத்ராவிரசனா
கதி: ப்ராதக்ஷிண்ய-க்ரமண-மசனாத்யாஹுதி-விதி: ।
ப்ரணாம: ஸம்வேச: ஸுகமகில-மாத்மார்ப்பண-த்ருசா
ஸபர்யா-பர்யாயஸ்-தவ பவது யன்மே விலஸிதம் ॥27॥

27. ஸமயாசார மானஸிக பூஜை

(ஆத்மஞான சித்தி)

(ஆத்மார்ப்பண-த்ருசா) ஆத்மஸமர்ப்பண பாவனை யால் (ஜல்ப:) வெறும் பேச்சு (ஜப:) ஜபமாகவும் (ஸகலம் ஸில்பம் அபி) கைத்தொழில் அனைத்தும் (முத்ரா-விரசனா) முத்திரைகளின் விளக்கமாகவும் (கதி:) நடை (ப்ராதக்ஷிண்ய-க்ரமணம்) பிரதக்ஷிணம் செய்வதாகவும் (அசனாதி) உண்டி முதலியன (ஆஹுதி விதி:) ஹோம

27. முத்திரைகள்— ஸம்க்ஷோபிணீ, வித்ராவிணீ, ஆகர்ஷிணீ, வசங்கரீ, உன்மாதினீ, மஹாங்குசா, கேசரீ, பீஜ, யோனி, த்ரிகண்டா என்னும் பத்து முத்திரைகள் தேவி ஆராதனையில் முக்கியமானவை. 'தசமுத்ரா ஸமாராத்யா' என்று லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது. கைவிரல்களின் இயக்கம் எப்படியிருந்தாலும் அவை எல்லாம் ஞானிகள் விஷயத்தில் முத்திரைகளைக் காட்டின தாக ஆகின்றன. ஸமயாசாரத்தைக் கொண்ட ஞானிகள் வெளிப்படையாக ஸ்ரீசக்கரத்திலோ பிம்பத்திலோ குறிப் பிட்ட முறைப்படி பூஜையைச் செய்வதில்லை. அவர்கள் இயற்கையாகச் செய்யும் செயல்களெல்லாம் பூஜையாக வும் பேசும் பேச்செல்லாம் துதியாகவும் ஆகின்றன.

விரசனம் । ஆத்மார்ப்பண-தசா । அதனாத்யாஹுதிவிதி: ப்ராதக்ஷிண்ய-ப்ரமணம் । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மாகவும் (ஸம்வேசஃ) படுத்துக்கொள்ளுதல் (ப்ரணுமஃ) நமஸ்காரமாகவும்—இன்னும் (ஸுகம்) சுகமாக முயற்சி யின்றி (மே) எனது (யத் விலஸிதம்) செயல் எது உண்டோ (அகிலம் அபி) அது எல்லாம் (தவ) உன்னு டைய (ஸபர்யா-பர்யாயஃ) பூஜை முறையாகவும் (பவது) ஆகட்டும்.

---

ஒ. ஆத்மா த்வம் கிரிஜாமதிஃ ஸஹசராஃ ப்ராணுஃ
சரீரம் க்ருஹம்
பூஜா தே விஷயோபபோகரசனு நித்ரா
ஸமாதிஸ்திதிஃ ।
ஸஞ்சாரஃ பதயோஃ ப்ரதக்ஷிணவிதிஃ ஸ்தோத்ராணி
ஸர்வா கிரோ
யத்யத் கர்ம கரோமி தத்த-தகிலம் சம்போ தவா
ராதனம் ॥ —சிவமானஸ பூஜா—சங்கரர்.

ஒ. துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துட்டதே வதைகளில்லை.
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பன்அன் பபிஷேகநீர்
உள்ளுறையி லென்னுவி நைவேத்தி யம்பிராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூஜையா ஒப்புவித்
தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே தெவிட்
டாத வானந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள்ள மௌனியாய்க்
க்லக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணு
கரக்கடவுளே, —தாயுமானவர்.

ஒ. ஜ்ஞானமர்க்யம் ஜ்ஞேயம் ஹவிஃ, ஜ்ஞாதா ஹோதா, ஜ்ஞாத்ரு-ஜ்ஞானக்ஞேயானு-மபேத பாவனம்! ஶ்ரீசக்ர

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सुधामप्यास्वाद्य प्रति-भय-जरामृत्यु-हरिणीं
विपद्यन्ते विश्वे विधि-शतमखाद्या दिविषदः ।
करालं यत् क्ष्वेलं कवलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्क-महिमा ॥ २८ ॥

ஸுதா மப்யாஸ்வாத்ய ப்ரதிபய-ஜராம்ருத்யு-ஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதி-சதமகாத்யா திவிஷதঃ ‖
கராலம் யத் க்ஷ்வேலம் கபலிதவதঃ காலகலனா
ந சம்போஸ் தன் மூலம் தவ ஜனனி தாடங்க-மஹிமா ‖ 28 ‖

---

**28. தேவியின் தாடங்க மகிமை**

**(விஷ பயம், அகாலம்ருத்யு நிவாரணம்)**

(ப்ரதிபய - ஜராம்ருத்யு - ஹரிணீம்) பயங்கரமான மூப்பு, மரணங்களை விலக்குகிற (ஸுதாம்) அமிருதத்தை

---

-பூஜனம். பாவனயா - மப்ரமத்ததா உபசாரঃ। அஹம் த்வம் அஸ்தி நாஸ்தி கர்த்த்வ்ய-மகர்த்தவ்யமிதி விகல் பானா-மாத்மனி விலாபனம் ஹோமঃ। பாவனா-விஷயானா-மபேத பாவனம் தர்ப்பணம்.—பாவனோபநிஷத்து.

ஒ. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப துன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்தாள்.
—அபிராமி அந்தாதி 10

---

28. தாடங்க மஹிமா— தாடங்கஸ்ய கர்ணாபரணஸ்ய ஸாமர்த்யம்; தாடங்க-ச்ச்யாவாத்வம் காலஸ்ய நாஸ்தி காலோத்பத்தி - ஸ்திதி - லயானாம் தாடங்கைக - நியதத்வாதிதி தேவ்யாঃ பாதி-வ்ரத்ய மஹிமா ஸர்வாதிசயீ இதி।
—லக்ஷ்மீதரர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(ஆஸ்வாத்ய அபி)சாப்பிட்டும் கூட(விதி-சதமக-ஆத்யா:) பிரம்மா இந்திரன் முதலிய (விச்வே) எல்லா (திவிஷத:) தேவர்களும் (விபத்யந்தே) — பிரளய காலத்தில் — அழிவுறுகிறார்கள். (கராலம்) கொடிய (க்ஷ்வேலம்) விஷத்தை (கபளிதவத:) சாப்பிட்ட (சம்போ') சிவனுக்கு (காலகலனா) காலத்தின் முடிவு (ந) இல்லை (யத்) என்றால் (தன் மூலம்) அதன் காரணம் (தவ) உன்னுடைய (தாடங்க-மஹிமா) காதிலுள்ள தாடங்க மகிமைதான்.

---

ஓ யா தே ருத்ர சிவா தனூ: சிவா விச்வாஹ பேஷஜீ। சிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே।

பரமசிவனே, எந்தப் பராசக்தி உனது பாதி சரீரம் உடையவள் ஆகின்றாளோ அவள் உலகனைத்திற்கும் மருந்து. ருத்திரனாகிய உனக்கும் அவள்தான் மருந்து. விஷத்தை உண்டும் அவள் அருளால்தான் எங்களுக்காகப் பிழைத்து இருக்கிறாய். —ருத்ரம்.

காலஸ்வரூபிகளான சூரிய சந்திரர்கள் உலகில் உள்ள வர்களின் ஆயுளை நாள்தோறும் விழுங்குபவர்கள் ஆயினும் அவர்கள் தேவியினிடம் அடங்கி அவளுடைய அங்கங்களாகவும் ஆபரணங்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

ஓ ஸூர்யசந்த்ரௌ ஸ்தனௌ தேவ்யாஸ் தாவேவ நயனே ஸ்ம்ருதௌ । உபௌ தாடங்கயுகளம் இத்யேஷா வைதிகீ ச்ருதி: ॥

தேவியினுடைய தாடங்கம் ஸ்ரீசக்கர ரூபமே. ஸ்ரீசக்கரத்தை ஸுவாஸினிகளும் ஆராதிக்கலாம். எந்த ஸுவா-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


ஸினியானவள் புருஷனுக்குப் பரிபூர்ணமான ஆயுளைக் கருதி அதன்மூலம் குடும்பத்தில் பரம ஸௌபாக்கியத்தை எதிர்பார்க்கிருளோ அந்த ஸுவாஸினியானவள் மஹா குருமுகமாகத் தனது புருஷனை மேற்சொன்ன வித்தையைக் (பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தை) கிரகித்துக்கொள்ளும்படி செய்து புருஷனுடைய முகமாகத் தான் அந்த வித்தையைக் கிரகித்துக்கொண்டு ஒவ்வொரு தினத்திலும் யதாசக்தி ஜபம் செய்து மஞ்சள்பொடியில் ஸ்ரீசக்கர லேகனத்தைச் செய்து மூலமந்திரத்தாலேயே ஷோடசோபசார பூஜைகளையும் செய்து, சக்தியை அனுசரித்து லலிதா ஸஹஸ்ரநாமம், த்ரிசதி, அஷ்டோத்தரம் இவைகளால் குங்குமத்தாலோ சிவப்புப் புஷ்பத்தாலோ அர்ச்சனையும் செய்து, நிவேதனுதிகள் செய்து, பிரதக்ஷிண நமஸ்காராதிகளால் பரதேவதையை ஆராதனம் செய்து வரவேண்டும். அப்படியானுல் அவள் புருஷனுக்குத் தீர்க்காயுளை ஸம்பாதித்துத் தானும் மஹா பாக்யவதியாக நீடித்து வாழ்ந்து அவர்கள் திவ்ய தம்பதிகளாகக் குடும்பத்தில் சகலவித ஸௌபாக்யத்துடன் விளங்குவார்கள். முதல் தினம் பூஜை செய்த மஞ்சள் பொடியை மறுதினம் ஸ்நான காலத்தில் பூசிக் கொள்ள வேண்டும்.

—தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரி.

ஒ. (அத ஏவ ஸுவாஸின்யா கதாசிதபி கர்ண பூஷணம் ந பரித்யாஜ்யம் இதி உபதேசஃ)

இதனுலேயே பதிவிரதைகள் ஒருபோதும் காதில் பூஷணம் இல்லாமல் இருக்கலாகாது என்பதை உபதேசமாகக் கொள்ளவேண்டும். —அருணுமோதினீ.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



किरीटं वैरिञ्चं परिहर पुरः कैटभभिदः
कठोरे कोठीरे स्कलसि जहि जंभारि-मकुटम् ।
प्रणम्रेष्वेतेषु प्रसभ मुपयातस्य भवनं
भवस्याभ्युत्थाने तव परिजनोक्ति र्विजयते ॥ २९ ॥

கிரீடம் வைரிஞ்சம் பரிஹர புரঃ கைடபபிதঃ
கடோரே கோடீரே ஸ்கலஸி ஜஹி ஜம்பாரி மகுடம் ।
ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸப முபயாதஸ்ய பவனம்
பவஸ்யாப்யுத்தானே தவ பரிஜனோக்திர்-
விஜயதே ॥ 29 ॥

---

29. தேவி பரமசிவனே வரவேற்கும் வைபவம்

(ப்ரஸவாரிஷ்ட நிவிருத்தி. மூர்க்கரை வசப்படுத்தல்)

'(புரঃ) எதிரில் உள்ள (வைரிஞ்சம்) பிரம்மாவினுடைய (கிரீடம்) கிரீடத்தை (பரிஹர) விட்டு விலகி வாருங்கள் ; (கைடபபிதঃ) கைடபாசுரனைக் கொன்ற விஷ்ணுவினுடைய (கடோரே) கடினமான (கோடீரே) கிரீடத்தில் (ஸ்கலஸி) இடறிக்கொள்ளப் போகிறீர்கள் ; (ஜம்பாரி-) இந்திரனுடைய (மகுடம்) கிரீடத்தை (ஜஹி) ஒதுக்கி விட்டு வாருங்கள்' என்று இவ்வாறாக— (ஏதேஷு) பிரம்மா முதலியவர்கள் (ப்ரணம்ரேஷு) நமஸ்காரம் செய்துகொண் டிருக்கும் சமயத்தில் (பவனம்) உனது இருப்பிடத்திற்கு (உபயாதஸ்ய) வந்துகொண் டிருக்கும் (பவஸ்ய) பரமசிவனே நோக்கி (ப்ரஸபம்) பரபரப்புடன் (அப்யுத்தானே) நீ எழுந்து எதிர்கொண்டு செல்லும் போது (தவ) உன்னுடைய (பரிஜன-உக்திঃ) சேடிகள் சொல்லும் வார்த்தை (விஜயதே) சிறப்பாக ஒலிக்கின்றது.

---

29. ஜம்பாரி-முகுடம் । வைரிஞ்ச்யம் । ஜஹீஹி । —பா.பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



स्वदेहोद्भूताभि र्घृणिभि-रणिमाद्याभि रभितो
निषेव्ये नित्ये त्वा महमिति सदा भावयति यः ।
किमाश्चर्यं तस्य त्रिनयन समृद्धिं तृणयतो
महासंवर्ताग्नि-र्विरचयति नीराजन-विधिम् ॥ ३० ॥

ஸ்வதேஹோத்பூதாபிர்-க்ருணிபி-ரணிமாத்யாபி-ரபிதோ
நிஷேவ்யே நித்யே த்வா-மஹமிதி ஸதா பாவயதி யः ।
கிமாச்சர்யம் தஸ்ய த்ரிநயன-ஸம்ருத்திம் த்ருணயதோ
மஹாஸம்வர்த்தாக்னிர்-விரசயதி நீராஜன-விதிம் ‖ 30 ‖

30 தேவியைத் தனது ஆத்மாவாக உபாசித்தல்
(பரகாயப் பிரவேசம்)

(நித்யே) ஆதியந்தமற்ற பரம்பொருளே! (ஸ்வ தேஹ - உத்பூதாபிः) உனது உடலினின்று தோன்றிய (க்ருணிபி) கிரணங்கள் போன்ற (அணிமாத்யாபிः) அணிமாசித்தி முதலிய தேவதைகளால் (அபிதः) சூழப் பெற்றவளாக (நிஷேவ்யே) சேவிக்கத்தக்கவளே! (த்வாம்) உன்னை (அஹம் இதி) தனது ஆத்மா என்று (யः) எவன் (ஸதா) எப்போதும் (பாவயதி) சிந்திக்கின்றானோ (தஸ்ய) அவனுக்கு (த்ரிநயன-ஸம்ருத்திம்) சிவ ஸாயுஜ்யச் செல்வத்தையும் (த்ருணயதः) துரும்பெனக் கருதும் அவனுக்கு (மஹாஸம்வர்த்தாக்னிः) ஊழித் தீயானது (நீராஜன - விதிம்) மங்கள ஆரத்தி காட்டிப் பூஜிக்கும் முறையை (விரசயதி) அனுஷ்டிக்கிறது. (கிம் ஆச்சர்யம்) இது ஆச்சரியமா?

---

30. த்ரிணயநः—(த்ரீணி நயனானி மார்க்காःப்ராபகாः ஸூர்ய சந்த்ராக்னிரூபாः யஸ்ய தர்சனாய இதி ஸ த்ரிநயநः । யத்வா இடா பிங்கலா ஸுஷும்னா மார்க்காः த்ரயः தத்தர்சனே உபாயா இதி த்ரிநயனः ஸதாசிவः । யத்வா ॥

---

30. நிஷேவே ।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



चतुः-षष्टया तन्त्रैः सकल-मतिसन्धाय भुवनं
स्थितस्तत्तत्-सिद्धि प्रसव परतन्त्रैः पशुपतिः ।
पुनस्त्व-न्निर्बन्धा दखिल-पुरुषार्थैक घटना-
स्वतन्त्रं ते तन्त्रं क्षितितल मवातीतर-दिदम् ॥ ३१ ॥

சதுః ஷஷ்ட்யா தந்த்ரைஃ ஸகல-மதிஸந்தர்ய புவனம்
ஸ்திதஸ் தத்தத்-ஸித்தி-ப்ரஸவ-பரதந்த்ரைஃ
பசுபதிஃ ।
புனஸ்-த்வந்நிர்ப்பந்தா-தகில-புருஷார்த்தைக-கடனு
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதல-மவதீதர-திதம் ॥

31. அறுபத்து நாலு தந்திரங்களும் ஸ்ரீவித்தையும்
(ஸர்வ வசீகரம்)

(பசுபதிஃ) பரமசிவன் (தத்-தத்-ஸித்தி - ப்ரஸவ) அவரவர் நாடும் அந்த அந்தச் சித்தியை மட்டும் அளிக்கும் (பரதந்த்ரைஃ) வேறு தந்திரங்களாகிய (சதுஷ்ஷஷ்ட்யா

த்ரிநயனுனி சக்ஷூம்ஷி யஸ்ய ஸஃ ।)—சூர்யன், சந்திரன், அக்னியாகிய மூவரும் எவருடைய தரிசனத்துக்கு வழி காட்டுகிறுர்களோ அவர்; அல்லது இடை பிங்கலை ஸுஷும்னையாகிய மார்க்கங்கள் மூன்றும் எவரைக் காண உபாயமோ அவர்; அல்லது எவருக்குக் கண்கள் மூன்றே அவர். —லக்ஷ்மீதரர்.

ஓ. அருணும் கருணுதரங்கிதாக்ஷீம் த்ருத-பாசாங்குச புஷ்பபாண-சாபாம் । அணிமாதிபிராவ்ருதாம் மயூகை-ரஹமித்யேவ விபாவயே பவானீம் ॥
—தேவீ த்யான சுலோகம்.

அம்பிகையைத் தனது ஆத்மாவாகவே ஒருவன் பாவனை செய்தால் ஏற்படும் மகிமை ஒப்புயர்வற்றது. ஸதாசிவனைப்போல் கருதி உலகெல்லாம் அவனைப் பூஜை செய்யும்.

31. அபிஸந்தாய । ப்ரஸப - பரதந்த்ரைஃ । ப்ரஸவ-பரதந்த்ரஃ । அகில புருஷார்த்தைக-கடனுத் ஸ்வதந்த்ரம்.
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தந்த்ரை:) அறுபத்துநாலு வகைப்பட்ட தந்திர சாஸ்திரங்களால் (ஸகலம்) எல்லா (புவனம்) உலகத்தையும் (அதிஸந்தாய) நிரப்பிவிட்டு (ஸ்திதः) வாளா இருக்கவே (புன:) மேலும் (த்வத்-நிர்ப்பந்தாத்) உன்னுடைய கட்டாயத்தின் பேரில் (அகில-புருஷார்த்த-ஏக-கடனு) எல்லா விருப்பங்களையும், அறம் பொருள் இன்பம் வீடு என்ற எல்லாப் புருஷார்த்தங்களையும் ஒருங்கே கூட்டிவைக்க (ஸ்வதந்த்ரம்) வல்லதான (தே தந்த்ரம்) உன்னுடைய தந்திரமாகிய (இதம்) இந்த ஸ்ரீவித்தையை (க்ஷிதிதலம்) பூவுலகில் (அவாதீதரத்) அவதரிக்கச் செய்தார்.

---

ஓ. கர்த்தாபி ஸர்வலோகானு-மக்ஷய்யைச்வர்யவானபி
சிவ: சிவோऽஹமஸ்மீதி வாதினம் யஞ்ச கஞ்சன।
ஆத்மனு ஸஹ தாதாத்ம்ய-பாகினம் குருதே ப்ருசம் ॥
—சிவ கீதை.

அதிஸந்தாய—அபவாஹ்ய வஞ்சயித்வா (லக்ஷ்மீதரர்); வசீக்ருத்ய (ஸௌபாக்ய வர்த்தனீ.)

ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம்—இது 'ஸமயாசாரம்' எனப்படுவது; வஸிஷ்டர், ஸநகர், சுகர், ஸநந்தனர், ஸநத்குமாரர் ஆகிய ஐவர்கள் அருளிய 'சுபாகம பஞ்சகம்' எனப் பெயர் பெற்ற ஸம்ஹிதைகளில் போதிக்கப்பட்ட மார்க்கம். அறுபத்துநாலு தந்திரங்களில் சொல்லியிருப்பது 'கௌல மார்க்கம்', 'சந்த்ரகலா வித்யாஷ்டகம்' எனப்பட்ட எட்டுத் தந்திரங்களில் சொல்லியிருப்பது 'மிச்ரமார்க்கம்'. ஸமயமார்க்கம்தான் வைதிகர்கள அனுஷ்டிக்கத் தகுந்தது. இதுதான் அடுத்த சுலோகத்தில் கூறப்படும் வித்தை. இது எல்லாப் புருஷார்த்தங்களையும் ஸாதிக்க வல்லது.

அறுபத்துநாலு தந்திரங்கள் — மஹாமாயா சம்பரம், யோகினீ ஜால சம்பரம், பைரவ தந்திரம் (எட்டு) பஹுரூபதந்த்ரம் (எட்டு) யாமள தந்த்ரம் (எட்டு) சந்த்ர ஞானம், மாலினி, மஹாஸம்மோஹனம் முதலியன. இவற்றில் ஒவ்வொன்றும் வச்யம், ஆகர்ஷணம், மோஹனம், உச்சாடனம் போன்ற ஒவ்வொரு சித்தியைத் தருவது.

அவாதீதரத்—அவதாரிதவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



शिवः शक्तिः कामः क्षिति-रथ रविः शीतकिरणः
स्मरो हंसः शक्र-स्तदनु च परा-मार-हरयः ।
अमी हृल्लेखाभि-स्तिसृभि-रवसानेषु घटिता
भजन्ते वर्णास्ते तव जननि नामावयवताम् ॥ ३२ ॥

சிவஃ சக்திஃ காமஃ க்ஷிதி-ரத ரவிஃ சீதகிரணஃ
ஸ்மரோ ஹம்ஸஃ சக்ரஸ்-ததனு ச பரா-மார-
ஹரயஃ ।
அமீ ஹ்ருல்லேகாபிஸ்-திஸ்ருபி-ரவஸானேஷு கடிதா
பஜந்தே-வர்ணஸ்தே தவ ஜனனி நாமாவயவதாம் ॥

---

### 32. ஸ்ரீவித்தை பஞ்சதசாக்ஷரீ மந்த்ரம்
### (ஸகல கார்ய ஜயம், தீர்க்காயுள்)

(ஜனனி) தாயே! (சிவஃ) சிவ பீஜாக்ஷரமான 'க' (சக்திஃ) சக்தி பீஜாக்ஷரமான 'ஏ', (காமஃ) மன்மத பீஜாக்ஷரமான 'ஈ', (க்ஷிதிஃ) பிருதிவி பீஜமான 'ல' (அதஃ)

---

32. இங்கு 'க' என்னும் அக்ஷரத்தை முதலில் உடைய 'காதிவித்தை' என்னும் பஞ்சதசாக்ஷரீ மஹாமந்த்ரம் மறைமுகமாகக் கூறப்படுகிறது. முதலாவதாகிய வாக்பவ கூடம் (க-ஏ-ஈ-ல-ஹ்ரீம்) பிரளயகால அக்கினிபோல் பிரகாசிப்பதாய் மூலாதாரத்திலிருந்து கிளம்பி அனுஹதத்தைத் தொடுகிறது. இரண்டாவதாகிய காமராஜ கூடம் (ஹ-ஸ-க-ஹ-ல-ஹ்ரீம்) கோடி ஸூர்யப் பிரகாசமுடையதாய் அனுஹதத்திலிருந்து கிளம்பி ஆஜ்ஞா சக்கரத்தைத் தொடுகிறது; மூன்ருவதாகிய சக்திகூடம் (ஸ-க-ல- ஹ்ரீம்) கோடி சந்திரப்பிரகாசமுடையதாய் ஆக்ஞையிலிருந்து லலாட மத்திவரை வியாபிக்கிறது. மாலையிலுள்ள ரத்தினப்பரல்களைப்போல் மூன்று கூடங்களிலும் உள்ள வர்ணங்கள் வரிசையாக ஒன்றன்மேல் ஒன்ருகச் சிந்திக்கப்பட வேண்டும். மூலாதாரத்தில் உதித்த நாதம் இவ்வெழுத்துக்களிடையே மணிகளை ஊடுருவிச் செல்லும் சரடுபோல் விளங்கும். மூன்று கூடங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அதன் பிறகு (ரவிః) சூரிய பீஜமான 'ஹ' (சீத-கிரணః) குளிர்ந்த கிரணங்களுடைய சந்திர பீஜமான 'ஸ', (ஸ்மரః) மன்மதபீஜமான 'க', (ஹம்ஸః) ஹம்ஸ மந்திரத்திலுள்ள ஆகாச பீஜமான 'ஹ', (சக்ரః) இந்திரனுடைய பீஜமான 'ல' (ததனு ச) அதற்குப் பிறகு (பரா-மார-ஹரயః) பரா பீஜமாகிய 'ஸ', மன்மத பீஜமாகிய 'க',

---

களிலும் ஹ்ரீங்காரத்தில் உள்ள பிந்துகலைகள் மூன்றும் வஹ்னிகுண்டலினீ, ஸௌர்யகுண்டலினீ, ஸோமகுண்டலினீ எனப்படுவன.

பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தில் உள்ள உயிர்மெய்யெழுத்துக்களினின்றே ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி என்ற பஞ்ச மகா பூதங்கள் தோன்றின. ஆகாசத்தின் குணம்,சப்தம் ஒன்றே, வாயுவின் குணங்கள் சப்தம், ஸ்பர்சம் இரண்டு. அக்னியின் குணங்கள் சப்தம், ஸ்பர்சம், ரூபம் என மூன்று, அப்புவின் குணங்கள் ரஸம் கூடி நான்கு, பிருதிவியின் குணங்கள் கந்தத்துடன் ஐந்து, ஆக (1+2+3+4+5) பதினைந்து குணங்களும் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் விகாஸமே எனப் பாவித்தல் வேண்டும். —பாஸ்கரராயர்—வரிவஸ்யாரஹஸ்யம்.

ஓ ஸ்ரீம்த்வாக்பவ-கூடைக-ஸ்வரூப-முக பங்கஜா ।
கண்டாதః-கடிபர்யந்த-மத்யகூட-ஸ்வரூபிணீ ।
சக்தி கூடைகதாபன்ன-கட்யதோ-பாக-தாரிணீ ॥

—லலிதா ஸஹஸ்ர நாமம்.

வாக்பவகூடத்தை அம்பாளுடைய முகமாகவும் மத்தியிலுள்ள காமராஜகூடத்தைக் கழுத்து முதல் இடுப்பு வரையில் உள்ள பாகமாகவும் சக்திகூடத்தை இடுப்பிற்குக் கீழுள்ள பாகமாகவும் தியானிக்கவேண்டும்.

ஸ்ரீவித்யா—காயத்ரி மந்திரத்தில் 'பரோ ரஜஸே ஸாவதோம்' என்னும் நாலாவது பாதத்தைச் சேர்த்து உத்தம ஸாதகர்கள் ஜபிக்கவேண்டும் என்றும் அப்போது தான் காயத்ரி வித்தை பூர்ணத்துவத்தை அடைகிற தென்றும் கூறுவதுபோல், பஞ்சதசாக்ஷரி மந்திரத்தின் நாலாவது சந்த்ரகலாகூடம் ரமா பீஜமாகிய 'ஸ்ரீம்'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஹரிபீஜமாகிய 'ல' (அமீ தே வர்ணா:) உன்னுடைய இவ்வக்ஷரங்கள் (திஸ்ருபி:) மூன்று (ஹ்ருல்லேகாபி:) புவனேசுவரீ பீஜமான ஹ்ரீங்காரங்களுடன் (அவஸானேஷு) ஒவ்வொரு கூடத்தின் முடிவிலும் (கடிதா:) சேர்க்கப்பட்டு (தவ) உன்னுடைய (நாம-அவயவதாம்) மந்திரத்தின் அவயவங்களாக (பஜந்தே) அமைகின்றன.

---

என்றும், அதுவும் சேர்ந்துதான் பதினாறு கலையுடன் இம்மந்திரம் பரிபூர்ணம் அடைகிறதென்றும் அதனால்தான் ஸ்ரீவித்யா எனப் பெயர் பெற்றது என்றும் அது ரஹஸ்யமானதால் இங்கு மறைத்து வைக்கப்பட்டதாய் உணரவேண்டும் என்றும் லக்ஷ்மீதரர் கூறுகிறார். முதல் கூடம் ஜாக்கிரத்திற்கும் இரண்டாவது ஸ்வப்னத்திற்கும் மூன்றாவது ஸுஷுப்திக்கும் நாலாவது துரீயத்திற்கும் ஒப்பிடப்படும்.

ஒ. ஆத்மவித்யா மஹாவித்யா ஸ்ரீவித்யா காமஸேவிதா ।
ஸ்ரீ ஷோடசாக்ஷரீ-வித்யா த்ரிகூடா காமகோடிகா ॥
—லலிதா ஸஹஸ்ர நாமம்

ஹாதி-வித்யா—கைவல்ய ஆசிரமருடைய ஸௌபாக்கியவர்த்தனீ வியாக்கியானத்தில் இந்தச் சுலோகம் லோபாமுத்ரா வித்யா எனப்படும் ஹாதி வித்தையையும் தூர்வாஸ வித்தியா எனப்படும் த்ரயோதசாக்ஷரீ மந்திரத்தையும் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்.

லோபாமுத்ராவித்யா— 'ஹஸகலஹ்ரீம்—ஹஸகஹலஹ்ரீம்—ஸகலஹ்ரீம்'.

தூர்வாஸ வித்யா—'ஹஸகல—ஹஸகஹல—ஸகல ஹ்ரீம்' இதில் 'ஹ்ரீம்' மூன்று கூடத்தின் முடிவில் ஒரே தடவையாகச் சேர்க்கப்படுகிறது.

காதிவித்யா பஞ்சதசாக்ஷரீ—ஜபம் செய்யும் முறை.

அஸ்ய ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரீ மஹாமந்த்ரஸ்ய ஆனந்த பைரவ ருஷி:, காயத்ரீச்சந்த:, பஞ்சதசாக்ஷர்யதிஷ்டாத்ரீ லலிதா மஹா த்ரிபுரஸுந்தரீ தேவதா ॥ 'கஏஈலஹ்ரீம்—பீஜம் । 'ஸகலஹ்ரீம்' சக்தி: । 'ஹஸகஹலஹ்ரீம்' கீலகம் । ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுர ஸுந்தரீ-ப்ரஸாதஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கஏஈலஹ்ரீம், ஹஸகஹலஹ்ரீம், ஸகலஹ்ரீம் என்ற மூன்று கூடங்களையும் இரண்டு தடவை திருப்பி உச்சரித்துக் கர நியாஸமும் அங்க நியாஸமும் செய்க.

பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்தः। த்யானம் ॥

அருணாம் கருணாதரங்கிதாக்ஷீம் த்ருதபாசாங்குச-புஷ்பபாண சாபாம்। அணிமாதிபி-ராவ்ருதாம் மயூகை-ரஹமித்யேவ விபாவயே பவானீம் ॥

லம்-இத்யாதி பஞ்ச பூஜா ॥

மந்த்ரஜபம் — "கஏஈலஹ்ரீம்—ஹஸகஹலஹ்ரீம்—ஸகலஹ்ரீம்"

பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்விமோகः ॥ த்யானம் லம்-இத்யாதி பஞ்ச பூஜா ॥

ஸமர்ப்பணம்—குஹ்யாதிகுஹ்ய கோப்த்ரீ த்வம் க்ருஹாண-ஸ்மத்க்ருதம் ஜபம்। ஸித்திர்ப்பவது மே தேவி த்வத் ப்ரஸாதான் மயி ஸ்திரா ॥

குறிப்பு—இந்த மாதிரி மந்திரங்களும் ஜபமுறைகளும் குருவினிடமிருந்து உபதேச மூலமாகத்தான் அறிய வேண்டியவை என்றாலும் அவைகளை மிகவும் ரகசியம் என்று மறைத்தே வைத்துக்கொண் டிருந்தால் அவற்றின் ஸ்வரூபமும் தத்துவங்களும் நாளடைவில் உபாஸகர்களுக்குக்கூடத் தெளிவாக விளங்காமற் போகக்கூடும். ஆதலால் ஸந்தியாவந்தனம், காயத்ரீமந்த்ரம் ஆகியவற்றையும் இக்காலத்தை யொட்டி நாம் அச்சிட்ட புஸ்தகங்களில் விளக்குவதுபோல் இந்த ஜப முறையையும் இங்கே கூறலானோம். புஸ்தகம் இருந்தாலும் உபநயனத்தில் பிரம்மோபதேசமான பின்பே காயத்ரீ ஜபம் செய்வதுபோல் இந்த மந்திரத்தையும் குருமுகமாக உபதேசம் பெற்றே ஜபம் செய்யத் தொடங்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



स्मरं योनिं लक्ष्मीं त्रितय-मिद-मादौ तव मनो-
निधायैके नित्ये निरवधि-महाभोग-रसिकाः ।
भजन्ति त्वां चिन्तामणि-गुणनिबद्धाक्ष-वलयाः
शिवाग्नौ जुह्वन्तः सुरभिघृत-धाराहुति-शतैः ॥ ३३ ॥

ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம் த்ரிதய-மித-மாதௌ தவ
மனோ:
நிதாயைகே நித்யே நிரவதி-மஹாபோக-ரஸிகா: ।
பஜந்தி த்வாம் சிந்தாமணி-குண நிபத்தாக்ஷ-வலயா:
ஶிவாக்னௌ ஜுஹ்வந்த: ஸுரபிக்ருத தாராஹுதி-
ஶதை: ‖ 33 ‖

---

33. ஸௌபாக்ய மந்திரம்

(ஸகல ஸௌபாக்யம்)

(நித்யே) ஆதியந்த மற்ற பரதேவதையே! (தவ) உன்னுடைய (மனோ:) பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் (ஆதௌ) முதலில் (ஸ்மரம்) காம பீஜமான 'க்லீம்' என்ற அக்ஷரம் (யோனிம்) புவனேசுவரீ பீஜமான 'ஹ்ரீம்' என்ற அக்ஷரம் (லக்ஷ்மீம்) லக்ஷ்மீ பீஜமான 'ஶ்ரீம்' என்ற அக்ஷரம் (இதம் த்ரிதயம்) ஆகிய இம் மூன்றையும் (நிதாய) சேர்த்து (நிரவதி மஹாபோக-ரஸிகா:) இடை விடாத ஜபத்திலுள்ள ஆனந்தச் சுவையை அறிந்தவர் களாகிய (ஏகே) சிலர் (சிந்தாமணி- குண - நிபத்த - அக்ஷ வலயா:) தொடர்ந்து வரும் சிந்தனையையே ஜபமாலை

---

33. பஞ்சதசாக்ஷரி மந்திரத்திற்கு ஸாவித்ரி மந்திரத்துடன் ஒற்றுமை உண்டு. பஞ்சதசாக்ஷரியில் மூன்று கூடங்களில் இருப்பதுபோல் ஸாவித்ரி மந்திரத்

---

33. த்ரிதய-மித-மாத்யே। ஜபந்தி த்வாம்। நிபத்தாக்ஷரலயா:। ஜுஹ்வத:॥ —பா. பே

ஸௌ—6

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy


யாகக் கொண்டு (சிவாக்னௌ) சக்தி முக்கோணத்தில் உள்ள அக்கினியில் (ஸுரபிக்ருத - தாராஹுதி - சதை:) காமதேனு அளித்த நெய்போன்ற ஆத்மானந்தத்தைக் கொண்டு நூற்றுக்கணக்கான ஆஹுதிகளை (ஜுஹ்வந்த:) செய்பவர்களாக (த்வாம்) உன்னை (பஜந்தி) ஆராதிக்கிறார்கள்.

---

தில் மூன்று பாதங்கள். அவற்றுடன் பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வியாஹிருதிகளைச் சேர்த்தால் அப்போது அது காயத்ரி மந்திரமாகிறது. அவ்வாறே பஞ்சதசாக்ஷரிக்கு முன் விமர்சப்ரணவங்கள் எனப்படும் 'ஐம்-ஹ்ரீம் -ஸ்ரீம்-க்லீம்- ஸௌ:' என்பனவற்றில் மூன்றைச் சேர்த்தால் அது ஸௌபாக்ய பஞ்சதசாக்ஷரி எனப்படும். இங்கே 'ஸ்ரீம்-ஹ்ரீம்-க்லீம்' என்பவற்றை முன் கூட்டி ஜபிப்பது சிறந்த பயன் அளிக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் ஸாதாரணமாக 'ஐம்-க்லீம்-ஸௌ:' என்ற பீஜங்களை முறையே ஒவ்வொரு கூடத்தின் முதலிலும் சேர்ப்பதே 'ஸௌபாக்ய வித்தை' என வழக்கத்தில் காணப்படுகிறது.

சிவாக்னி: — முக்கோண (△) வடிவான குண்டத்தில் அக்கினியை ஸ்தாபித்தால் அது சிவாக்கினி எனப்படும். அதில் இந்த மந்திரத்தால் பசுவின் நெய் கொண்டு புண்ணியவான்கள் ஹோமம் செய்து தேவியை ஆராதிக்கிறார்கள். அல்லது 'சிவோஹம்' என்ற பாவனையாகிற அக்கினியில் எல்லாச் செயல்களையும் மானஸிகமாக அர்ப்பணம் செய்கிறார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஓ. அஹம் த்வம் அஸ்தி நாஸ்தி கர்த்தவ்யம் அகர்த்தவ்யம் உபாஸிதவ்யமிதி விகல்பாஞ - மாத்மனி விலாபனம் ஹோமஃ ।
—பாவனோபநிஷத்.

ஸுரபி— காமதேனு அல்லது நல்ல வாசனை.

ஜுஹ்வந்தஃ- ஜுஹு-அந்த - 'ஸுரபிக்ருத-தாராஹுதிசதைஃ' என்று ஒரே வார்த்தையாகக் கைவல்யாசிரமர் கொள்ளுகிறார். ஹோமக்கரண்டியின் உள்ளிருந்து பெருகும் நல்ல வாசனை உள்ள நெய்யின் நூற்றுக்கணக்கான ஆஹுதிகளால். இது 'அந்தர் யாகம்' எனக் கைவல்யாசிரமர் கூறுகிறார்.

சிந்தாமணி- குண நிபத்தாக்ஷவலயாஃ — ஐம்பத்தொரு அக்ஷரங்கள் வடிவான ஜபமாலையில் 'க்ஷ'வின் ஸ்தானம் மேரு எனப்படுவது; அது நடுவிலுள்ள மணி; ஜபம் செய்கையில் அதைத் தாண்டிச் செல்லக் கூடாது; தொட்டு விட்டுத் திரும்பி வர வேண்டும்.

ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம்— ஸ்மரம் ஹகாரத்தையும் யோநிம் ஸகாரத்தையும். லக்ஷ்மீம் ககாரத்தையும் என இதற்குப் பொருள் கொண்டு, முன் 32ல் கூறிய 'காதிவித்தை'யில் 'க ஏ ஈ' என்ற முதல் மூன்று அக்ஷரங்களுக்குப் பதிலாக 'ஹ ஸ க' என்ற அக்ஷரங்களை உபயோகித்தால் 'ஹஸகலஹ்ரீம்—ஹஸகஹலஹ்ரீம்—ஸகலஹ்ரீம்' என்று வரும் 'ஹாதி வித்தை' அல்லது 'லோபாமுத்ரா வித்தை' இந்தச் சுலோகத்தில் குறிப்பிடப்படுவதாகச் சில உரை ஆசிரியர்கள் கருதுகிறார்கள். கைவல்யாசிரமர் முந்திய சுலோகம் ஹாதி வித்தையையும் இது காதி வித்தையையும் குறிப்பதாகக் கொள்ளுகிறார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



शरीरं त्वं शंभोः शशि-मिहिर-वक्षोरुह-युगं
तवात्मानं मन्ये भगवति नवात्मान-मनघम् ।
अतः शेषः शेषीत्यय-मुभय-साधारणतया
स्थितः संबन्धो वां समरस-परानन्द-परयोः ॥ ३४ ॥

சரீரம் த்வம் சம்போ: சசி-மிஹிர-வக்ஷோருஹ-யுகம்
தவாத்மானம் மன்யே பகவதி நவாத்மான-மனகம் ।
அத: சேஷ: சேஷீத்யய-முபய-ஸாதாரணதயா
ஸ்த்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸ-பரானந்த-பரயோ: ॥

---

34. சேஷசேஷீபாவம்

(அன்னியோன்னிய ஸமரஸ வளர்ச்சி)

(பகவதி) பரதேவதையே! (சசி-மிஹிர - வக்ஷோருஹ - யுகம்) சந்திர சூரியர்களை நகில்களாக உடைய (த்வம்) நீ (சம்போ ) பரமசிவனுக்கு (சரீரம்) உடல் என்றும் (அனகம்) மாசற்ற (நவாத்மானம்) ஒன்பது வ்யூஹ ஸ்வரூபியான சிவனை (தவ) உன்னுடைய (ஆத்மானம்) உடல்

---

34. சம்போ:—ஆனந்த பைரவஸ்ய । 32, 33இல் கூறிய மந்திரங்களின் ரிஷியாகிய ஆனந்தபைரவர் இங்கே சிந்திக்கப்படுகிறார்.

பகவதி—உத்பத்யாதி வேதனம் பக°, தத்வதீதி பகவதி ।

ஓ. உத்பத்திஞ்ச விநாசஞ்ச பூதானுமாகதிங்கதிம் ।
வேத்தி வித்யா-மவித்யாஞ்ச ஸவாச்யோ பகவானிதி ॥

நவாத்மானம்—சிவன் ஒன்பது வியூஹஸ்வரூபி; காலம், குலம், நாமம், ஞானம், சித்தம், நாதம், பிந்து, கலை, ஜீவன் என்பன ஒன்பது வியூஹங்கள்.

பவாத்மானம்—என்ற பாடத்தில் பவம் என்ற பிரபஞ்சத்திற்கு ஆத்மா, அல்லது பவன் என்ற சிவனுக்கு ஆத்மரூபிணி என்பது பொருள்.

---

34. பரானந்த-பதயோ: । பவாத்மானம் । —பா.பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்றும் (மன்யே) மனக்கண்ணுல் காண்கிறேன். (அதஃ) ஆகையால் (சேஷஃ சேஷீ இதி) உடைமை, உடையவர் என்ற(அயம்) இந்த (ஸம்பந்தஃ) உறவு (ஸமரஸ-பரானந்த -பரயோஃ) ஸமரஸப்பட்ட ஆனந்த பைரவர், ஆனந்த பைரவி என்ற (வாம்) உங்களில் (உபய ஸாதாரணதயா) இருவருக்கும் ஸமமாக (ஸ்திதஃ) நிலை பெற்றுள்ளது.

---

சேஷஃ சேஷீ— உலகின் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களின் போது சிவன், சக்தி இருவருடைய பிரயத்தனமும் இருந்த போதிலும் அதில் ஆனந்தபைரவி, ஆனந்தபைரவரிடம் அடங்குவதால் சிவன் சேஷித்தன்மை அடைந்தவராகவும் சக்தி சேஷத்தன்மை அடைந்தவளாகவும் ஆகிறுர்கள். இப்படி இருவருக்கும் சேஷசேஷீ பாவம் ஸமானம் ஆகிறது.

ஸமரஸ பரானந்த-பரயோஃ- 'ஸமரஸ-பரானந்தபத 'யோ' என்ற பாடத்தில் ஸமரஸம், பரானந்தம் இவை களுக்கு இருப்பிடமானவர்கள் என்று அர்த்தம். ஸமரஸம் என்றுல் ஐசுவரியம்; பரானந்தம் என்றுல் ஒப்புயர்வற்ற ஸச்சிதானந்தம்.

சிவனும் சக்தியும் ஸமமாக இருப்பதால் சிவனுக்கு ஸமயஃ' என்றும் சக்திக்கு 'ஸமயா' என்றும் பெயர். ஸமத்துவம் ஐந்துவிதம் எனக் கூறப்படும். ஸ்ரீசக்கரம் முதலியவைகளில் பூஜையில் ஸமம், அதிஷ்டான ஸாம் யம்; சிருஷ்டி முதலிய கிரியைகளில் அனுஷ்டான ஸாம் யம்; நிருத்யம் முதலியவற்றில் அவஸ்தான ஸாம்யம்; சிவ-சிவா ; பைரவர், பைரவி முதலிய நாமங்களால் நாம ஸாம்யம்; சிவப்பு நிறம், முக்கண் முதலியவைகளால் ரூபஸாம்யம்.

ஓ. இந்தச் சுலோகத்தை ஜபம் செய்து வரும் குடும்பங்களில் ஸ்திரீ புமான்களுக்குப் பரஸ்பரம் அன் யோன்ய பாவம் த்ருடமாகும். வேதோக்த கர்மாக்களைச் செய்யும் காலங்களில் புருஷர்களுக்குப் பிராதான்யமும் குடும்ப விஷயங்களில் ஸ்திரீகளுக்குப் பிராதான்யமும் இருப்பது அவசியம். இப்படி ஸமரஸத்துடன் வாழும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



मनस्त्वं व्योम त्वं मरुदसि मरुत्सारथि-रसि
त्वमाप स्त्वं भूमि स्त्वयि परिणतायां न हि परम् ।
त्वमेव स्वात्मानं परिणमयितुं विश्व वपुषा
चिदानन्दाकारं शिवयुवति-भावेन बिभृषे ॥ ३५ ॥

மனஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸி மருத்-ஸாரதி-ரஸி
த்வ-மாபஸ்-த்வம் பூமிஸ்-த்வயி பரிணதாயாம் ந ஹி பரம் ।
த்வமேவ ஸ்வாத்மானம் பரிணமயிதும் விச்வ-வபுஷா
சிதானந்தாகாரம் சிவயுவதி-பாவேன பிப்ருஷே ॥ 35 ॥

35. ஆறு சக்கரங்களிலும் விளங்கும் தேவி

(க்ஷயரோக நிவிருத்தி)

(மனஃ) ஆக்ஞாசக்கரத்தில் மனமாக (த்வம்) நீ விளங்குகிறாய். (வ்யோம) விசுத்தி சக்கரத்தில் ஆகாசமாகவும் (த்வம்) நீயே விளங்குகிறாய் (மருத் அஸி) அநாஹதத்தில் வாயுவாக இருக்கிறாய். (மருத் ஸாரதிஃ அஸி) ஸ்வாதிஷ்டானத்தில் அக்கினியாக இருக்கிறாய். (ஆபஃ) ஜல தத்துவமும் (த்வம்) நீயே. (பூமிஃ) பிருதிவி

---

கிருஹஸ்தர்கள் ஈசுவர அனுக்கிரகத்தால் ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை அடையலாம்.

—தேதியூர் ஸுப்ரமணிய சாஸ்திரி.

சிவயுவதி—சிவபத்தினியாகிய தாயே! பரிணமயிதும்-பாவேன—பரிணமிக்கச் செய்யும் நோக்கத்துடன் எனவும் அர்த்தம் கொள்ளலாம்.

ஓ. த்ரிபுரா பரமா சக்திஃ ஆத்யா ஜாதா மஹேச்வரீ ।
ஸ்தூல-ஸூக்ஷ்ம விபாகேன-த்ரைலோக்யோத்
பத்தி-மாத்ருகா ॥

---

35. ஹரமஹிஷி-பாவேன பிப்ருஷே । —பா. பே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தத்துவமும் (த்வம்) நீயே. (த்வயி பரிணதாயாம்) நீயே பிரபஞ்சமாகப் பரிணமித்திருப்பதால் (பரம்) உனக்கு வேறான பொருள் (ந ஹி) இல்லவே இல்லை. (த்வம் ஏவ) நீயே (ஸ்வாத்மானம்) உனது ஸ்வருபத்தை (விச்வ-வபுஷா) பிரபஞ்ச வடிவாக (பரிணமயிதும்) பரிணமிக்கச் செய்வதற்கு (சிவ - யுவதி- பாவேன) பரமசிவனுடைய பத்னி என்ற பாவனையால் (சிவானந்த ஆகாரம்) ஆனந்த வடிவான சித்ரூபத்தை (பிப்ருஷே) ஏற்றுக்கொள்ளுகிறாய்.

---

கபளீக்ருத-நி:சேஷ தத்வக்ராம-ஸ்வரூபிணீ ।
யஸ்யாம் பரிணதாயாம் து ந கிஞ்சித் பரம் இஷ்யதே ॥
—சது: சதீ.

உத்தரகௌல மதத்தின்படி சிவதத்துவமும் சக்தி தத்துவத்தில் அடங்கினது. ஆகையால் (ந ஹி பரம்) சக்திக்கு வேறாக ஒன்றும் இல்லை; '(சித்-ஆனந்தாகாரம்) - சிச்சக்தியாகவும் ஆனந்த பைரவராகவும் நீயே இருக்கிறாய்' என்று அர்த்தம் கொள்ளப்படும்.

இந்தச் சுலோகத்தில் தேவியின் 'அஷ்ட மூர்த்தித்துவம்' கூறப்படுகிறது என அருணாமோதினீ ஆசிரியர் கூறுகிறார். மனஸ்தத்துவத்தில் புருஷனும் மனத்தின் அதிதேவதையான சந்திரனுமாக இரண்டு மூர்த்திகள் குறிக்கப்படுகின்றனர். 'மருத்ஸாரதி:' என்றதில் அக்கினியும் (அஹ்ஞேऽக்னி -என்றபடி) சூரியனும் குறிக்கப்படுகின்றன. இப்படியாகப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசத்துடன் எட்டு வடிவம்.

ஒ. தரணிமயீம் தரணிமயீம் பவனமயீம் ககன-
தஹன-ஹோத்ருமயீம் ।
அம்புமயீ-மிந்துமயீ-மம்பா-மனுகம்பமாதி-மாமீக்ஷே॥
—மூகபஞ்சசதீ 1-18.

ஒ. பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும், ஊரும் உருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச், சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே, சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

—அபிராமி அந்தாதி 68.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तवाज्ञाचक्रस्थं तपन-शशि कोटि-द्युतिधरं
परं शंभुं वन्दे परिमिलित-पार्श्वं परचिता ।
यमाराध्यन् भक्त्या रवि शशि शुचीना-मविषये
निरालोके ऽलोके निवसति हि भालोक-भुवने ॥ ३६ ॥

தவாஜ்ஞா-சக்ரஸ்த்தம் தபன-சசி-கோடி த்யுதிதரம்
பரம் சம்பும் வந்தே பரிமிலித-பார்ச்வம் பரசிதா ।
யமாராத்யன் பக்த்யா ரவி-சசி சுசீனு-மவிஷயே
நிராலோகேऽலோகே நிவஸதி ஹி பாலோக-புவனே ।

---

36. ஆஜ்ஞா சக்கரத்தில் பரசம்பு ஸ்வரூபம்
(ஸர்வ வியாதி நிவாரணம்)

— (தவ) உன்னுடைய (ஆஜ்ஞா சக்ரஸ்தம்) ஆஜ்ஞா சக்கரத்தில் இருப்பவரும் (தபன- சசி-கோடி- த்யுதி-தரம்) கோடி சூரிய சந்திரர்களின் பிரகாசத்தை உடையவரும் (பரசிதா) ஸகுண, நிர்க்குண சக்திவடிவான உன்னுல்

---

தவ — (தவ சப்தேன ஸாதகஸ்ய ப்ருமத்யாந்தர்க்கதம் சிவசக்ர - சதுஷ்டயம் கத்யதே । ந து த்விதலம் பதம்।)-'தவ' என்னும் சொல்லால் புருவ மத்தியில் உள்ள நாலு சிவசக்கரங்கள் கூறப்படுகின்றன; இரண்டு தளம் உள்ள சக்கரம் அன்று. —லக்ஷ்மீதரர்.

தவாஜ்ஞா சக்ரஸ்தம் — த்வதாஜ்ஞானுவர்த்தினம் ।
-காமேசுவர ஸூரியின் அபிப்பிராயத்தில் இது புருவ மத்தியில் உள்ள இரண்டுதள வடிவமான ஆக்ஞா சக்கரத்தைத்தான் குறிக்கிறது. அவ்வாறே மேலே வரும் ஐந்து சுலோகங்களிலும் அந்த அந்தச் சக்கரங்கள்தான் குறிக்கப்படுகின்றன.

நிராதங்கே என்ற பாடத்தில் ஆதங்கமாவது பிறப்பிறப்புக் கவலை.

---

36. யமாராத்தும் । நிராதங்கே லோகோ । பாலோகபவனே । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(பரிமிளித பார்ச்வம்) இரு பக்கத்திலும் அணைக்கப் பெற்றவருமான (பரம் சம்பும்) பரம சிவனை (வந்தே) சேவிக்கின்றேன். (யம்) அம்மாதிரி இருப்பவரை (பக்த்யா) பக்தியுடன் (ஆராத்யன்) ஒருவன் ஆராதித்தால் (ரவி-சசி சுசீனும்) சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூவருடைய ஒளியாலும் (அவிஷயே) விளங்கவைக்க முடியாததாகவும் (நிராலோகே) கண்ணுக்கு எட்டாததாகவும் (அலோகே) கண்ணால் காணும் உலகத்தினின்று வேறுபட்டதாகவும் உள்ள (பாலோக - புவனே) பரஞ்ஜோதிவடிவமான உனது ஸாயுஜ்ய பதவியில் (நிவஸதி ஹி) வசிப்பான் என்பது நிச்சயம்.

---

36 முதல் 41 வரை உள்ள சுலோகங்களை ஆரோஹணக் கிரமத்தில் சிலர் திருப்பிக் கூறுகின்றனர்,

ஆக்ஞாசக்கரத்தில் பரசம்பு நாதரையும் சித்பராம்பாளையும் 64 மானஸ மயூகங்களால் சூழப்பட்டவர்களாகத் தியானிக்க வேண்டும்.

ஆக்ஞாசக்கரம் ஏன் அப்பெயர் பெற்றது—ஜீவனிடம் ஈசுவரனுடைய ஆக்ஞை அங்கே பிரகாசிப்பதால் அது ஆக்ஞாசக்கரம் எனப்படுகிறது. அங்கே காமேசுவர மகாலிங்கம் இருபுறங்களிலும் ஸகுண சக்தியாலும் நிர்க்குண சக்தியாலும் அலங்கரிக்கப்படுகிறது.

பாரதபூமியில் காசிக்ஷேத்ரம் ஆக்ஞாசக்கர ஸ்தானமாகக் கருதப்படும். அங்கே துர்க்கையும் விசாலாக்ஷியும் பிரதான சக்திகள்.

நிராலோகே— ஓ. (ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்னி: । தமேவ பாந்த மனு பாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ —கட உப, 5.15.)

அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிப்பதில்லை; மின்னல்கொடிகளும் பிரகாசிப்பதில்லை. அக்கினி எங்ஙனம் பிரகாசிக்கும்? ஸ்வயம் பிரகாசம் உள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றன. அவனொளியாலேயே இவை அனைத்தும் விளங்குகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



विशुद्धौ ते शुद्धस्फटिक-विशदं व्योम-जनकं
शिवं सेवे देवीमपि शिवसमान-व्यवसिताम् ।
ययोः कान्त्या यान्त्याः शशिकिरण-सारूप्यसरणेः
विधूतान्त-र्ध्वान्ता विलसति चकोरीव जगती ॥ ३७ ॥

விசுத்தௌ தே சுத்தஸ்படிக-விசதம் வ்யோம-ஜனகம்
சிவம் ஸேவே தேவீமபி சிவஸமான-வ்யவஸிதாம் ।
யயோ: காந்த்யா யாந்த்யா: சசிகிரண-ஸாரூப்ய-ஸரணே:
விதூதாந்தர்-த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ ॥ 37 ॥

37. விசுத்தி சக்கரத்தில் பார்வதி பரமேசுவர தியானம்
(பிரம்மராக்ஷஸ பூதப்பிரேத பிசாச நிவாரணம்)

(தே) உன்னுடைய (விசுத்தௌ) விசுத்தி சக்கரத்தில் (சுத்தஸ்படிக-விசதம்) தெளிவான பளிங்கு போன்ற வடிவினரும் (வ்யோம-ஜனகம்) ஆகாச தத்துவத்தைத் தோற்றுவிப்பவரும் ஆகிய (சிவம்) சிவனையும் (சிவ-

அக்னிகண்டம், சூரியகண்டம், சந்திரகண்டங்களிலுள்ள கிரணங்கள் முன்னூற்றறுபதும் ஆஜ்ஞாசக்கரத்தைக் கடந்து செல்லமாட்டா. அதற்குமேல் ஸஹஸ்ராரத்தில் பிரகாசிப்பது மற்றொரு நித்யமான சந்திரகலை.

37. வ்யோம ஜனகம் (ஆஜ்ஞா-சக்ரே ஆத்மத்வம் நிரூபிதம் தஸ்மா - தாத்மதத்வா - தாகாச - தத்வோத்பத்தி:। அந்தராத்மசப்தோ மன: பர்யாயவாசக:) ஆஜ்ஞா சக்கரத்தில் ஆத்மத்வம் நிருபிக்கப்பட்டது. அவ்வாத்ம தத்துவத்திலிருந்து ஆகாசம் தோன்றுகிறது. இங்கு ஆத்மாவாவது மனஸ் தத்துவம்.

ஒ. தஸ்மாத்வா ஏதஸ்மா - தாத்மன ஆகாச: ஸம்பூத: ।
—தை. உப. 2. 1.

37. சிவஸமான - வ்யஸநிநீம் । வ்யோமஸத்ருசம் । ஸாரூப்யஸரணிம் ।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸமான வ்யவஸிதாம்) சிவனுடைய ஸங்கல்பத்திற்கு ஒத்த ஸங்கல்பம் உடையவளாகிய (தேவீம் அபி) தேவி யாகிய உன்னையும் (ஸேவே) சேவிக்கிறேன்; (யயோ:) எவர்களுடைய (சசி-கிரண - ஸாரூப்ய - ஸரணே:) வெண்ணிலாவைப் போல் (யாந்த்யா:) வெளிவரும் (காந்த்யா:) ஒளியினால் (ஜகதீ) உலகம் முழுதும் (விதூத-அந்தர்-த்வாந்தா) அஜ்ஞானமாகிய அக இருள் ஒழியப் பெற்றதாய் (சகோரீ இவ) நிலவில் களிக்கும் சகோரப் பக்ஷிபோல் (விலஸதி) விளங்குகிறதோ - அப்படிப்பட்ட உங்களை ஸேவிக்கிறேன்.

---

சந்த்ரஸ்தானத்தில் உள்ள பார்வதியும் சூரிய ஸ்தானத்தில் உள்ள பரமேசுவரனும் விசுத்தி சக்கரத்தில் விளங்கும்போது மற்ற ஆனந்தங்கள் மங்கிப்போகின்றன. பதினாறு நித்யைகளின் நிலவும் இல்லை சிவதம்பதி களின் ஆனந்தமயமான ஒளியே எல்லா ஜீவர்களுக்கும் ஜீவாதாரம்.

ஒ. (ஏஷ ஹ்யேவானந்தயாதி) - இதுவேயன்றோ உலகிற்கு ஆனந்தத்தை அளிப்பது, —தை உப. 2. 7.

ஆகாசதத்துவ உபாஸனை பாரத பூமியில் சிதம்பர க்ஷேத்திரத்தில் செய்யப்படுவது. சிவனுக்கும் சக்திக்கும் இவ்வுபாசனையில் வ்யோமேசுவரன் என்றும் வ்யோமேசுவரி என்றும் பெயர். அவர்கள் 72 ஆகாச மயூகங்களுடன் உபாசிக்கப்படுபவர் சிலர் இந்தச் சுலோகத்தில் குறிக்கப்படுவது அர்த்தநாரீசுவர மூர்த்தி எனவும் கூறுவர்.

ஒரு புஷ்பத்திலே எப்படிச் சுகந்தம் சேர்ந்திருக்கிறதோ அமிருதத்திலே சுவை எப்படிக் கலந்திருக்கிறதோ அந்த மாதிரி ஈசுவரனுடைய ஸ்வரூபத்தோடு அம்பிகையின் ஸ்வரூபம் கலந்திருக்கிறது. அக்கினியோடு சேர்ந்திருக்கும் பிரகாசத்தை அக்கினி வேறு, பிரகாசம் வேறு என்று எப்படிப் பிரிக்க முடியாதோ அப்படியே ஈசுவரனையும் அம்பிகையையும் பிரிக்க முடியாது. அந்த மாதிரி அவர்களைச் சேர்த்துச் செய்யும் தியானம் இதிலும் இனிவரும் சுலோகங்களிலும் விளக்கப்படுகிறது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



समुन्मीलत् संवित्कमल-मकरन्दैक-रसिकं
भजे हंसद्वन्द्वं किमपि महतां मानसचरम् ।
यदालापा-दष्टादश-गुणित विद्यापरिणतिः
यदादत्ते दोषाद् गुण-मखिल-मद्भ्यः पय इव ३८॥

ஸமுன்மீலத் ஸம்வித்-கமல-மகரந்தைக-ரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மானஸசரம் ।
யதாலாபா-தஷ்டாதச-குணித வித்யாபரிணதிः
யதாதத்தே தோஷாத் குணமகில-மத்ப்யः பய இவ

---

38. அநாஹத சக்கரத்தில் ஜீவப்பிரஹ்ம ஐக்கியம்

(பாலாரிஷ்ட நிவாரணம்)

(ஸமுன்மீலத்-ஸம்வித்-கமல-மகரந்த - ஏக - ரஸிகம்) நன்ருக மலர்ந்த ஞானத்தாமரையின் ஆனந்தமாகிய மகரந்தம் ஒன்றையே விரும்பி அநுபவிப்பவைகளும் (மஹதாம்) மகான்களுடைய (மானஸசரம்) மனதாகிற மானஸ ஸரஸில் நீந்துபவைகளும் (கிமபி) இப்படிப் பட்டவை என்று வர்ணிக்க முடியாதவைகளுமான (ஹம் ஸத்வந்த்வம்) இரண்டு ஹம்ஸங்களை (பஜே) பூஜிக்கிறேன். (யத்-ஆலாபாத்) அவைகளுடைய இன்பப்பேச்சிலிருந்தே

---

விசுத்தௌ தே— பவத்யா விசுத்தௌ த்வதீய லீலா விக்ரஹ கண்ட-ஸ்தானஸ்திதே பவதாத்மாகாச தத்வ ரூபே வா விசுத்த்யாக்யே சக்ரே। — அருணமோதினீ.

விசுத்திசக்ரம் பதினறுதள கமலம்.

---

38. பரிணதிம் । ஸமாதத்தே —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(அஷ்டாதச-குணித-வித்யா-பரிணதிঃ) பதினெட்டெனக் கணக்கிடப்பட்ட வித்தைகள் பரிணமிக்கின்றன. (யத்) அவை (தோஷாத்) குற்றத்திலிருந்து (அகிலம் குணம்) குணமனைத்தையும் (அத்ப்யঃ) நீரிலிருந்து (பய இவ) பாலைப் போல (ஆதத்தே) பிரிக்கின்றன.

---

38. 'ஆகாசாத் வாயுঃ' —ஆகாயத்திலிருந்து வாயு தோன்றுகிறது. வாயு தத்துவத்திற்கு இருப்பிடம் அநாஹத சக்கரம். அது பன்னிரண்டுதள கமலம்.

இங்கு 'ஹம்' என்ற சிவனையும் 'ஸ' என்ற சக்தியையும் ஹம்ஸேசுவரன்- ஹம்ஸேசுவரி என்ற 54 வாயவ்ய மயூகங்களுடன் உபாசிக்க வேண்டும். இந்த ஹம்ஸங்களின் ஸம்பாஷணைதான் பதினெட்டு வித்தைகள். அவை யாவன— வேதங்கள் 4; சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம் என 6; மீமாம்ஸம், நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் என 4; ஆயுர் வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், நீதி சாஸ்திரம் என 4.

ஒ. வித்யோபாஸகர்கள் அந்தர்முகமாக இருந்து கொண்டு அநாஹத சக்கரத்தில் ஏற்படும் சப்தத்தைக் கவனித்தால், ஸ்ரீவித்யா ஷோடசியில் உள்ள அக்ஷரங்களும் வித்யாகுருவின் ஸ்வரூபமும் தேவியினுடைய ஸ்வரூபமும் —(ஆகப் பதினெட்டும்) சப்த மூலமாகப் பிரத்தியக்ஷ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மாக அநுபவிக்கப்படும். அக்காரணத்தைக் கொண்டும் அந்த ஹம்ஸத்வந்த்வத்தினுடைய ஆலாபம் '(பதி னெட்டு) அஷ்டாதசகுணித வித்யா பரிணமம்' என்று சொல்லப்படும்.

—தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரி.

'ஹம்ஸஃ ஸோஹம் ஸோஹம் ஹம்ஸஃ' என்ற அஜபா வித்தையினுல் ஹம்ஸத்வந்த்வத்யானம் செய்கிறவர் களுக்குப் பாவங்களும் புண்ணியம் ஆகி விடும்.

ஓ. கேஹம் நாகதி கர்விதः ப்ரணததி ஸ்த்ரீஸங் கமோ மோக்ஷதி த்வேஷீ மித்ரதி, பாதகம் ஸுக்ருததி க்ஷ்மாவல்லபோ தாஸதி । ம்ருத்யுர்- வைத்யதி தூஷணம் ஸுகுணதி த்வத்பாத- ஸம்ஸேவனத் த்வாம் வந்தே பவபீதி -பஞ்ஜனகரீம் கௌரீம் கிரீசப்ரியாம் ॥

—துர்வாஸர்—சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் 20

பாரதபூமியில் ஹம்ஸத்வந்த்வ உபாசனத்திற்கு ஏற் பட்ட ஸ்தானம் ஆவுடையார் கோவில். ஸ்ரீ சங்கரர் ஸுபகோதய வியாக்யானத்தில் "அநாஹதத்தில் சிவனே 'சிகிஜ்வாலா' என்ற தீப வடிவிலும் சக்தியை 'சிகினீ' என்ற ஒளி வடிவிலும் தியானம் செய்ய வேண்டும்" என்று கூறுகிருர். இங்ஙனம் உபாசிப்பவர்கள் எதிலும் நல்லதை எண்ணிப் பார்க்கவேண்டுமே அன்றிக் குற்றங் களை எண்ணக் கூடாது என்பது நியமம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तव स्वाधिष्ठाने हुतवह-मधिष्ठाय निरतं
तमीडे संवर्तं जननि महतीं तां च समयाम् ।
यदालोके लोकान् दहति महसि क्रोध-कलिते
दयार्द्रा या दृष्टिः शिशिर-मुपचारं रचयति ॥ ३९ ॥

தவ ஸ்வாதிஷ்ட்டானே ஹுதவஹ-மதிஷ்ட்டாய
நிரதம்
தமீடே ஸம்வர்த்தம் ஜனனி மஹதீம் தாஞ்ச ஸமயாம்॥
யதாலோகே லோகான் தஹதி மஹஸி க்ரோதகலிதே
தயார்த்ரா யா த்ருஷ்டிஃ சிசிர முபசாரம் ரசயதி ‖ 39 ‖

---

### 39. ஸ்வாதிஷ்டானத்தில் காமேசுவரி

(நினைத்ததைக் கனவில் காண)

(ஜனனி) தாயே! (தவ) உன்னுடைய (ஸ்வாதிஷ்டானே) ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் (ஹுதவஹம்) அக்கினிதத்துவத்தை (அதிஷ்டாய) சிந்தித்து— அதில் (நிரதம்) இடைவிடாது பிரகாசிக்கும் (தம் ஸம்வர்த்தம்) காலாக்கினி ரூபரான அந்த ருத்திரனையும் (தாம் மஹதீம்) மகிமை வாய்ந்த அந்த (ஸமயாம் ச) ஸமயா அல்லது சந்திரகலா சக்தி என்னும் உன்னையும் (ஈடே) போற்றுகின்றேன். (யதாலோகே) ருத்திரருடைய எந்தப் பார்வையான (மஹஸி) அக்கினி (க்ரோதகலிதே) கோபத்தால் வளர்ந்து (லோகான்) உலகங்களை (தஹதி) எரிக்கின்றதோ அப்போது (யா தயார்த்ரா த்ருஷ்டிஃ) கருணையால் நனைந்த உன்னுடைய பார்வை எதுவோ அது (சிசிரம் உபசாரம்) குளிர்ச்சியான உபசாரத்தை (ரசயதி) செய்கிறது.

---

39. (வாயோரக்னிஃ) வாயுவிலிருந்து அக்கினி தோன்றுகிறது. அக்கினிக்கு இருப்பிடம் ஸ்வாதிஷ்டான

---

39. மஹதி—மஹஸி। யத்த்ருஷ்டி —யா த்ருஷ்டிஃ। நிரதம்-நியதம்। ஜநநி-ஜநநீம்। கலிதே-கலிலே। தயார்த்ராபிர்-த்ருக்பிஃ சிசிர-முபசாரம் ரசயஸி —பா.பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तटित्वन्तं शक्त्या तिमिर-परिपन्थि-स्फुरणया
स्फुरन्नानारत्नाभरण-परिणद्धेन्द्र-धनुषम् ।
तव श्यामं मेघं कमपि मणिपूरैक-शरणं
निषेवे वर्षन्तं-हरमिहिर-तप्तं-त्रिभुवनम् ॥ ४० ॥

தடித்வந்தம் சக்த்யா திமிர பரிபந்த்தி-ஸ்புரணயா
ஸ்புரந்-நாநரத்நாபரண பரிணத்தேந்த்ர-தனுஷம் ।
தவ ச்யாமம் மேகம் கமபி மணிபூரைக சரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிர-தப்தம் த்ரிபுவனம் ।

---

40. மணிபூரகத்தில் மேகத்திடை மின்னல்கொடி போன்றவள். (நல்ல கனவு பலித்தல், கெட்ட கனவு விலகுதல் லக்ஷ்மீ கடாக்ஷம்)

(தவ) உன்னுடைய (மணிபூர-ஏக சரணம்) மணிபூரக சக்கரத்தை முக்கியமான உறைவிடமாக் கொண்டதும் (திமிர-பரிபந்தி-ஸ்புரணயா) இருட்டுக்குச் சத்துரு வைப் போல் பிரகாசிக்கும் (சக்த்யா) பராசக்தியாகிற (தடித்

---

சக்கரம். இது ஆறுதள கமலம். இங்கே ஸமவர்த்தேசுவரர், ஸமயாம்பாள் என்று சிவனையும் சக்தியையும் 62 தைஜஸ மயூகங்களுடன் உபாசிக்கவேண்டும். பாரத பூமியில் இதற்கு ஏற்பட்ட ஸ்தானம் அருணாசலம் என்னும் திருவண்ணாமலை. அங்குள்ளது தேஜோலிங்கம்.

காலாக்கினி ருத்திரனான பரமசிவன் நெற்றிக் கண்ணைத் திறந்து உலகங்களை எரிக்கும்போது 'ஸமயா' எனப் பெயர் பெற்ற தேவி, தனது குளிர்ந்த பார்வையால் எரிந்த உலகிற்குக் குளிர்ச்சியைத் தந்து எரிந்து போன மன்மதனைப் பிழைப்பித்தது போல் பிழைப்பூட்டுகிறாள்.

---

40. ஸ்மர-மிஹிர-தப்தம் । தமஃச்யாமம் ।—பா.பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வந்தம்) மின்னல்கொடியுடன் கூடியதும் (ஸ்புரன் நானா ரத்ன ஆபரண-பரிணத்த- இந்த்ர-தனுஷம்) ஜ்வலிக்கும் நானாவிதமான ரத்தின ஆபரணங்களாகிய இந்திரவில் லுடன் கூடியதும் (ச்யாமம்) கறுத்ததும் (ஹர-மிஹிர-தப்தம்) ருத்ரனாகிய பிரளயகால சூரியனால் எரிக்கப்பட்ட (திரிபுவனம்) மூவுலகையும் (வர்ஷந்தம்)மழை பொழிந்து குளிரச் செய்வதும் ஆகிய, (கமபி மேகம்) அதிசயமான மேகம் போன்ற உனது ஸதாசிவ தத்துவத்தை (நிஷேவே) சேவிக்கின்றேன்.

---

ஓ. (ஹரநேத்ராக்னி ஸந்தக்த-காமஸஞ்ஜீவன-ஓஷதி:) சிவனுடைய நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து.

—லலிதா ஸஹஸ்ரநாமம் 84

சக்கரக்கிரமத்தில் விசுத்திக்கும் அநாஹதத்திற்கும் பின் மணிபூரகம் வரவேண்டும். ஆனால் தத்துவக் கிரமத்தில் ஆகாசத்திற்கும் வாயுவுக்கும் பின் அக்னி வருவதால் அதையொட்டி அக்னிதத்துவஸ்தான ஸ்வாதிஷ்டானம் மணிபூரகத்திற்கு முன் இந்த சுலோகத்தில் கூறப்படுகிறது.

40. தடித்வந்தம்— ஓ. மணிபூரைக-வஸதி: ப்ராவ்ருஷேண்ய: ஸதாசிவ: । அம்புதாத்மதயா பாதி ஸ்திர-ஸௌதாமினீ சிவா ॥ கபளீக்ருத நி:சேஷ தத்வக்ராம-ஸ்வரூபிணீ ॥ —ஸித்தகுடிகா.

இந்த்ர-தனுஷம்—ஓ. (ததிந்த்ர தனுரித்யஜ்யம் । அப்ர வர்ணேஷு சக்ஷுதே । ஏததேவ சம்யோர் - பார்ஹஸ்பத்யஸ்ய । ஏதத் ருத்ரஸ்ய தனு: ।) —ஆருணம்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஓ. (யோऽப்ஸு நாவம் ப்ரதிஷ்ட்டிதாம் வேத । ப்ரத்யேவ திஷ்ட்டதி । அப்ஸு உதகதத்வாத்மிகே மணிபூரே ப்ரதிஷ்ட்டிதாம் நாவம் ஸ்ரீ சக்ராத்மிகாம் ॥)

ஸம்ஸார ஸாகரத்தைக் கடக்க உதவும் தெப்பம் இங்கு உள்ளதென்று அறியவேண்டும். —லக்ஷ்மீதரர்.

ஓ (அநாஹத-சக்ரோபஸ்திதாः ஸூர்யகிரணா அதः ப்ரஸ்ருதா ஸ்வாதிஷ்ட்டாக்னினா தக்தம் ஜகதாப்லவயந்தீத்யாகமः) -அநாஹத சக்கரத்தில் உள்ள சூரிய கிரணம் கீழே பரவி, ஸ்வாதிஷ்டான அக்கினியுடன் கூடி மணிபூரகத்தில் புகுந்து மேகத்தை உண்டாக்கி மழை பொழிந்து தாபத்ரயத்தால் தவிக்கும் உலகைக் குளிரச் செய்கிறது.

—அருணா மோதினீ.

'ஸ்மரமிஹிர தப்தம்' என்ற பாடத்தில் ஆசை என்கிற சூரிய வெப்பத்தால் எரிக்கப்பட்ட உலகம் என்பதும் கருத்து. 'தமः ச்யாமம்' என்ற பாடத்தில் இருட்டுப்போல் கறுத்தது என்பது அர்த்தம்.

(அக்னேராபः) அக்கினியிலிருந்து ஜலம் தோன்றுகிறது. ஜலத்திற்கு இருப்பிடம் மணிபூரக சக்கரம். இது பத்துத்தள கமலம். இங்கே 'மகேசுவரன் - ஸ்திரஸௌதாமினி' என்று சிவனையும் சக்தியையும் உபாசிக்க வேண்டும். இவர்களுக்கு 'அமிருதேசுவரன்-அமிருதேசுவரி' என்ற பெயரும் பொருந்தும், இவர்களை ஸத்யோஜாதம், வாமதேவம் முதலிய 52 ஜல மயூகங்களால் சூழப்பெற்றவர்களாகத் தியானிக்க வேண்டும்.

பாரத பூமியில் இதற்கு ஏற்பட்ட ஸ்தானம் திருவானைக்காவல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तवाधारे मूले सह समयया लास्यपरया
नवात्मानं मन्ये नवरस-महाताण्डव-नटम् ।
उभाभ्या मेताभ्या-मुदय-विधि मुद्दिश्य दयया
सनाथाभ्यां जज्ञे जनकजननीमत् जगदिदम् ॥ ४१ ॥

தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்ய-பரயா
நவாத்மானம் மன்யே நவரஸ-மஹாதாண்டவ-நடம்।
உபாப்யா-மேதாப்யா-முதய-விதி-முத்திச்ய-தயயா
ஸநாதாப்யாம் ஜஜ்ஞே ஜனகஜனனீமத் ஜகதிதம் ||41||

---

41. மூலாதாரத்தில் ஆனந்தத் தாண்டவம்

(தேவியின் ஸாக்ஷாத்காரம் - குன்ம நோய் நிவாரணம்)

(தவ) உன்னுடைய (மூலே ஆதாரே) மூலாதார சக்கரத்தில் (லாஸ்ய-பரயா) நடனம் செய்வதில் நோக்கம் உள்ளவளும் (ஸமயயா) 'ஸமயா' எனப் பெயர் கொண்டவளுமான உன்னுடன் (ஸஹ) கூட (நவரஸ-மஹா-தாண்டவ-நடம்) நவரஸம் ததும்பும் சிறந்த தாண்டவம் ஆடுகிற (நவாத்மானம்) ஆனந்த பைரவரை (மன்யே)

---

இருள் நிறைந்த மணிபூரகத்தில் நீருண்ட மேகம் போன்ற சிவனிடம் சாதாரண மின்னல் கொடிபோல் தேவி, காட்சி அளிக்கின்ருள்.

ஒ. நீல தோயத - மத்யஸ்த்தாத் - வித்யுல்லேகேவ பாஸ்வரா. —நாராயண ஸூக்தம்.

41. (அத்ப்யஃ ப்ருதிவீ) அப்புவிலிருந்து பிருதிவி தத்துவம் உண்டாகிறது. பிருதிவிக்கு இருப்பிடம் மூலாதாரம், இது முக்கோணத்தின் நடுவில் நாலுதள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தியானம் செய்கிறேன். (உதய விதிம்) பிரளயத்தில் அழிந்த உலகின் சிருஷ்டியை (உத்திச்ய) கருதி (தயயா) கருணையுடன் (ஸநாதாப்யாம்) தம்பதியாகக் கூடியவர்களான (ஏதாப்யாம் உபாப்யாம்) உங்கள் இருவர்களாலும் (இதம் ஜகத்) இவ்வுலகமானது (ஜனக-ஜனனீ-மத்) தந்தையும் தாயும் உடையதாக (ஜஜ்ஞே) ஆகிறது.

---

கமலம். இங்கே 'ஆனந்த பைரவர்-ஆனந்த பைரவி' என்று சிவனையும் சக்தியையும் 56 பிருதிவி மயூகங்களுடன் கூடியவர்களாகத் தியானம் செய்யவேண்டும். பிரகிருதி ரூபமான அம்பாள், லாஸ்யநர்த்தனமும் ஸதாசிவன் தாண்டவநர்த்தனமும் செய்துகொண்டு ஒருவரையொருவர் பார்க்கவே உலகம் உற்பத்தியாகிறது,

ஓ. 'ஆலோகனேன தவ கோமலிதானி மாதஃ
லாஸ்யாத்மனு பரிணமந்தி ஜபத் விபூத்யை' ||
—அம்பாஸ்தவம்.

ஸமயா— அம்பாள் சிவனுக்குச் சமமாக இருப்பதால் 'ஸமயா' எனப் பெயர் பெறுகிருள். அந்த ஸமத்துவம் அதிஷ்டான ஸாம்யம், அனுஷ்டான ஸாம்யம், அவஸ்தான ஸாம்யம், ரூபஸாம்யம், நாம ஸாம்யம்' என ஐந்து வகைப்படும். ஆதார சக்கரங்களில் அதிஷ்டானமும் ஜனக ஜனனியாக அனுஷ்டானமும், லாஸ்ய தாண்டவங்களால் அவஸ்தானமும், சிவப்பு நிறத்தால் ரூபமும், பைரவர் பைரவி என்ற பெயர்களால் நாமமும் ஸமம். இப்படிச் சிவதம்பதிகளைத் தங்களுக்குள்ளேயேபூஜிப்பவர்

---

41, நவாத் மானம் மன்யே - சிவாத்மானம் வந்தே ||
உதயவிதிம்—உபய விதிம் ! —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



களுக்கு ஸமயிகள் என்பது பெயர், ஸமயாசாரத்தில் வெளியில் பூஜை இல்லை. இவர்கள் செய்யும் ஐக்கியானு ஸந்தானம் நான்குவகைப் பட்டது. (1) மூலாதாரம் முதலிய ஆறு ஆதார சக்கரங்களும் ஸ்ரீசக்கரத்தில் உள்ள ஆறு கோணங்களில் ஐக்கியம், (2) ஸஹஸ்ராரம் பிந்து ஸ்தானமான சதுரச்ரத்தில் ஐக்கியம். (3) பிந்துவில் சிவன் ஐக்கியம். (4) ஸ்ரீசக்கரத்தில் அம்பாளுடைய மந்திரம் ஐக்கியம். பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரி என்ற நாதத்திற்கும் ஷட்சக்கரவடிவமான பிந்துவுக்கும் காலாத்மகக் கலை வடிவமான முற்னூற்று அறுபது கிரணங்களுக்கும் அம்பாள் அதீதமானவள்.

ஒ. 'அகுலா ஸமயாந்தஸ்த்தா ஸமயாசார தத்பரா.

—லலிதா ஸஹஸ்ரநாமம்.

இதுவரை விளக்கப்பட்டது 'ஆனந்தலஹரீ' எனவும் இனி வரும் ஐம்பத்தொன்பது சுலோகங்கள் கொண்ட பகுதி 'ஸௌந்தர்யலஹரீ' எனவும் பிரித்துக் கூறப்படும். முன்பகுதி கைலாஸத்திலிருந்து கிடைத்தது. பின் பகுதி ஸ்ரீசங்கராசாரியார் அருளியது.

ஒ. ' நூறு சுலோகங்களும் கைலாசத்திலிருந்து வந்திருந்தால் நமக்குக் கஷ்டந்தான். அப்பொழுது ஸ்ரீ ஆசார்யாளுடைய வாக்கின் மகிமையை நாம் அநுபவிக்க முடியாது. ஆசார்யாள் செய்தவைகளை விடக் கைலாஸத்திலிருந்து வந்தவைகள் உயர்வாகத் தோன்றவில்லை. அவை யெல்லாம் மந்திரங்கள்தான்.'

—காமகோடி சங்கராசாரியார் அருளிய நன்மொழிகள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## ॥ द्वितीयो भागः ॥

## ॥ सौन्दर्यलहरी ॥

गतै-र्माणिक्यत्वं गगनमणिभिः सान्द्रघटितं
किरीटं ते हैमं हिमगिरिसुते कीर्तयति यः ।
स नीडेयच्छाया-च्छुरण-शबलं चन्द्र-शकलं
धनुः शौनासीरं किमिति न निबध्नाति धिषणाम् ॥ ४२ ॥

கதைர்-மாணிக்யத்வம் ககனமணிபி: ஸாந்த்ர-கடிதம்
கிரீடம் தே ஹைமம் ஹிமகிரிஸுதே கீர்த்தயதி ய: ‖
ஸ நீடேயச்சாயா-ச்சுரண சபலம் சந்த்ர-சகலம்
தனு: சௌனாஸீரம் கிமிதி ந நிபத்னாதி திஷணாம் ‖ 42 ‖

---

## இரண்டாவது பாகம்

### ஸௌந்தர்ய - லஹரீ

(தலைமுதல் கால்வரை தேவியின் அழகு வர்ணனை)

### 42. கிரீட வர்ணனை

(ஸகல வச்யம், ஜலரோக நிவாரணம்)

(ஹிமகிரிஸுதே) இமயமலையின் பெண்ணே! (மாணிக்யத்வம்) மாணிக்கங்களாக (கதை:) உன் சேவையின் பொருட்டு உருவடைந்துள்ள (ககனமணிபி:) பன்னிரண்டு ஆதித்தியர்களால் (ஸாந்த்ரகடிதம்) நெருக்கமாக இழைக்கப்பட்ட (தே) உன்னுடைய (ஹைமம் கிரீடம்) தங்கக் கிரீடத்தை (ய:) எவன் (கீர்த்தயதி) வர்ணிக்கப் புகுகிறானோ (ஸ:) அவன் (நீடேய ச்சாயா-ச்சுரண-சபலம்) கிரீட கோளத்தில் உள்ள மாணிக்கங்களின் காந்தியால் விசித்திர வர்ணம் உள்ளதாகத் தோன்றும் (சந்த்ர-சகலம்) சந்திரகலையை (சௌனாஸீரம்) இந்திரனுடைய (தனு:) வில் (இதி) என்ற (திஷணாம்) கருத்தை (ந நிபத்னாதி கிம்) வர்ணனையில் எப்படிப் பொருத்தாமல் இருக்கமுடியும்?

42. இனிமேல் பகவதியின் ஸ்வரூபம் கிரீடத்தில் இருந்து பாதாரவிந்தம் வரை வர்ணிக்கப்படுகிறது.

---

4. ச்சுரணபடலம் । கிமிதமிதி பத்னாதி । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



नीः३

धुनोतु ध्वान्तं न-स्तुलित-दलितेन्दीवर-वनं
घनस्निग्ध-श्लक्ष्णं चिकुर निकुरुंबं तव शिवे ।
यदीयं सौरभ्यं सहज-मुपलब्धुं सुमनसो
वसन्त्यस्मिन् मन्ये वलमथन-वाटी-विटपिनाम् ॥ ४३ ॥

துனோது த்வாந்தம் நஸ்-துலித-தலிதேந்தீவர-வனம்
கன-ஸ்நிக்த-ச்லக்ஷ்ணம் சிகுர நிகுரும்பம் தவ சிவே ।
யதீயம் ஸௌரப்யம் ஸஹஜ-முபலப்தும் ஸுமநஸோ
வஸந்த்யஸ்மின் மன்யே வலமதன-வாடீ விடபினாம் ॥

---

43. கேச வர்ணனே (ஸர்வ ஜயம்)

(சிவே) பரமசிவ பத்தினியே! (துலித-தளித-இந்தீவர-வனம்) மலர்ந்த கறுநெய்தல் காடுபோல் பிரகாசிப்பதும் (கன-ஸ்நிக்த- ச்லக்ஷ்ணம்) அடர்ந்தும் வழவழப்பாகவும் மெதுவாகவும் உள்ளதுமாகிய (தவ) உன்னுடைய (சிகுர-நிகுரும்பம்) கேச பாரம் (நஃ) எங்களுடைய (த்வாந்தம்) அக இருளை (துனோது) போக்கடிக்கட்டும் (யதீயம்) அதில் உள்ள (ஸஹஜம்) இயற்கையான (ஸௌரப்யம்) வாசனையை (உபலப்தும்) அடைய விரும்பி (வலமதன) இந்திரனுடைய (வாடீ-விடபினாம்) நந்தவனத்தில் உள்ள மரங்களின் (ஸுமனஸஃ) புஷ்பங்கள் (அஸ்மின்) அந்தக் கேசபாரத்தில் (வஸந்தி) வசிக்கின்றன என்று (மன்யே) நினைக்கிறேன்.

---

பன்னிரண்டு ஆதித்தியர்களும் அம்பாளுடைய அருகில் இருந்து சேவிக்க ஆசைகொண்டு, 'அம்பாளுடைய கிரீடத்தில் உள்ள ரத்தினங்களாக' இருக்கிறார்கள் என்றும் சந்திரகலை இந்திரனுடைய வில்லைப்போல் பிரகாசிக்கிறது என்றும் வர்ணிக்கப்படுகிறது.

43. அம்பாளுடைய கரிய கேசம் அதைத் தியானிக்கும் அடியார்களுடைய உள்ளத்தில் இருக்கும் அஞ்ஞான இருட்டையும் மலின வாஸனைகளையும் நீக்கி உள் ஒளியையும் ஸத்வாஸனையையும் வளர்க்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तनोतु क्षेमं न-स्तव वदनसौन्दर्यलहरी
परीवाहस्रोतः-सरणिरिव सीमन्तसरणिः ।
वहन्ती सिन्दूरं प्रबलकबरी-भार-तिमिर-
द्विषां बृन्दै-र्बन्दीकृतमिव नवीनार्क-किरणम् ॥ ४४ ॥

தனோது க்ஷேமம் நஸ்தவ வதன-ஸௌந்தர்யலஹரீ
பரீவாஹஸ்ரோதஃ ஸரணிரிவ ஸீமந்த-ஸரணிஃ ।
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபலகபரீ-பார-திமிர-
த்விஷாம் ப்ருந்தைர்-பந்தீக்ருதமிவ நவீனார்க்க-
கிரணம் ‖ 44

---

44. வகிட்டின் வர்ணனை
(ஸர்வரோக நிவிருத்தி)

(தவ) உன்னுடைய (வதன-ஸௌந்தர்ய-லஹரீ-) முகத்தின் அழகு வெள்ளத்தின் (பரீவாஹஃ-ஸ்ரோதஃ-ஸரணிஃ இவ) பெருக்கானது, வழிந்தோடும் வாய்க்கால் மாதிரி தோன்றுவதும் (ப்ரபல) பலம் மிகுந்த (கபரீ-பார) கேச பாரத்தின் (திமிர) இருளாகிய (த்விஷாம் ப்ருந்தைஃ) சத்துருக் கூட்டத்தால் (பந்தீக்ருதம்) சிறைப்

---

ஒ. (பாலோऽபி சைலோத்தரணக்ரபாணிஃ நீலோऽபி நீரந்த்ர- தமஃ- ப்ரதீபஃ । தீரோऽபி ராதா - நயனவபத்தஃ ஜாரோऽபி ஸம்ஸாரஹரஃ குதஸ்த்வம் ॥)- பாலனாயினும் மலையைக் கையில் தூக்கியவனாகவும், கறுப்பு வண்ணனாயினும் இருளைப் போக்கும் சிறந்த தீபமாகவும் தீரனாயினும் ராதையின் கண்பார்வையில் கட்டுப்பட்டவனாகவும் கள்ள நாயகனாயினும் பிறவித்துயரை ஒழிப்பவனாகவும் நீ ஆவது எப்படி?

—ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பிடிக்கப்பட்ட (நவீன-அர்க்க கிரணம் இவ) உதய சூரியனுடைய ஒளி போன்ற (ஸிந்தூரம்) குங்குமத்தை (வஹந்தீம்) தரிப்பதும் ஆகிய (ஸீமந்தஸரணிः) வகிட்டின் ரேகை (நः) எங்களுக்கு (க்ஷேமம்) க்ஷேமத்தை (தனோது) அளிக்கட்டும்,

---

ஸௌரப்யம் ஸஹஜம்—தேவியின் கூந்தலுக்கு இயற்கை வாசனை ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் 'சம்பகாசோக-புந்நாக- ஸௌகந்திகலஸத்கசா' என்ற நாமத்திற்குப் பொருள் கூறுகையில் புஷ்பங்களின் வாசனையைவிடத் தேவியின் கூந்தலுக்கு இயற்கையாகவே அதிக வாசனை இருப்பதால் அப்புஷ்பங்கள் வெறும் அலங்காரத்திற்காக மட்டும் தரிக்கப்பட்டிருப்பதாக பாஸ்கர ராயர் கூறுகிறார். தேவி சூடிக்கொண்டதால் புஷ்பங்களுக்குப் பெருமை.

திருவிளையாடல் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் நக்கீரர், 'தேவியின் கூந்தலுக்கும் செயற்கைவாசனையே தவிர இயற்கைவாசனை இல்லை' யென்று வாதாடியபோது பரமசிவன் பண்டித ரூபத்தில் வந்து ஆட்சேபித்தும் கேளாமல் பிடிவாதம் செய்யவே அந்த அபசாரத்தால் நோய்வாய்ப்பட்டுப் பின்பு தவத்தால் அதனின்று விடுபட்ட கதை கூறப்பட்டுள்ளது.

44. இந்தச் சுலோகம் 'வஹந்தீ ஸிந்தூரம்' என்ற இரண்டாவது அடியை முதலாகவும், 'தனோது க்ஷேமம் நः' என்பதை இரண்டாவது அடியாகவும் வைத்து அப்பைய தீக்ஷிதரால் குவலயானந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உதய சூரியனுடைய ஒளி போன்ற ஸிந்தூரப் பொட்டு

ஓ. உதிக்கின்ற செங்கதிருச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயம் :என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி யென்றன் விழித்துணையே.

—அபிராமி அந்தாதி.

ஸீமந்த- ஸரணி:— வகிடு ஸீமந்தம் எனப்படும். பதிவிரதைகளின் ஸீமந்தப்பிரதேசம் லக்ஷ்மியின் வாச ஸ்தானம். அங்கே குங்குமம் அணிவது உத்தம ஸ்திரீகளின் வழக்கம்.

ஓ. ஸீமந்தே தே பகவதி மயா ஸாதரம் ந்யஸ்தமேதத்
ஸிந்தூரம் மே ஹ்ருதயகமலே ஹர்ஷவர்ஷம் தனோது ।
பாலாதித்ய-த்யுதிரிவ ஸதா லோஹிதா யஸ்ய காந்தி:
அந்தர்-த்வாந்தம் ஹரது ஜகதச்சேதஸா சிந்தயாமி ॥

—சங்கரர் - சதுஷ்ஷஷ்ட்யுபசார ஸ்தோத்திரம்.

க்ஷேமம் — யோகக்ஷேமாத்மகம் சுபம் ।

இங்கே கூறிய வண்ணம் தியானம் செய்பவர்களுடைய யோகக்ஷேமத்தைத் தேவி வகிக்கிறாள்

ஸௌந்தர்ய லஹரீ— 'ஸௌந்தர்ய— அதிரேக- பரம்பரா' ।

இங்கே வரும் இந்தச் சொல் இந்த நூலுக்கே பெயரைத் தரும் பெருமையுடையதாகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अरालैः स्वाभाव्या-दलिकलभ-सश्रीभि रलकैः
परीतं ते वक्त्रं परिहसति पङ्केरुहरुचिम् ।
दरस्मेरे यस्मिन् दशनरुचि किञ्जल्क-रुचिरे
सुगन्धौ माद्यन्ति स्मरदहन-चक्षु-र्मधुलिहः ॥ ४५ ॥

அராலை: ஸ்வாபாவ்யா-தலிகலப-ஸச்ரீபி-ரலகைஃ
பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹ-ருசிம் ।
தரஸ்மேரே யஸ்மின் தசனருசி கிஞ்ஜல்க ருசிரே
ஸுகந்தௌ மாத்யந்தி ஸ்மர தஹன- சக்ஷுர் மதுலிஹ: ॥

45. முன்நெற்றி மயிர் வர்ணனை

(லக்ஷ்மீ கடாக்ஷம், வாக்குப் பலிதம்)

(தர-ஸ்மேரே) புன்சிரிப்பால் சிறிது மலர்ந்தாற் போன்றதும் (தசனருசி - கிஞ்ஜல்க- ருசிரே) பலவரிசை யாகிற கேஸரங்களுடன் பிரகாசிப்பதும் (ஸுகந்தௌ) நல்மணம் உள்ளதும் ஆகிய (யஸ்மின்) எந்த முக கமலத்தில் (ஸ்மர தஹன- சக்ஷுர்- மதுலிஹ:) மன்மதனை எரித்த சிவனுடைய கண்களாகிய தேன்வண்டுகள் (மாத்யந்தி) மயங்குகின்றனவோ (தே) அப்படிப்பட்ட உன்னுடைய (வக்த்ரம்) முகம் (ஸ்வாபாவ்யாத்) இயற்கையாகவே (அராலை:) சுருட்டையானதும் (அலி-கலப ஸஶ்ரீபி:) சிறு வண்டுகள் சஞ்சரிப்பது போன்ற சோபையைக் கொண்டதுமான (அலகை:) முன்நெற்றி மயிர்களால் (பரீதம்) சூழப்பெற்று (பங்கேருஹ-ருசிம்) தாமரையின் அழகை (பரிஹஸதி) பரிகசிப்பதுபோல் இருக்கிறது.

45. ஸ்மர - தஹன - சக்ஷுர் - மதுலிஹ: ப்ரமரா: । ஜிதமன்மதஸ்யாபி வதன - ஸௌந்தர்ய - தர்சனம் மாதன-ஹேதுரிதி கிமு வக்தவ்யம் ?

அலிகலபஸஶ்ரீபி: - சிறு வண்டுகளைப்போல் பிரகாசிக்கும். 'கலப' என்னும் சொல் சாதாரணமாக யானைக்குட்டியைத்தான் குறிக்கும். இங்கு அலி என்னும் சொல்லுடன் சேர்ந்து சிறு வண்டைக் குறிக்கிறது.

45. அலிகுலஹஸ - ஶ்ரீபி: । பரீதம் யத்வக்த்ரம் தவ ஹஸதி । ஸ்மரமதன சக்ஷு: । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ललाटं लावण्य द्युति विमल-माभाति तव यत्
द्वितीयं तन्मन्ये मकुटघटितं चन्द्रशकलम् ।
विपर्यास-न्यासा दुभयमपि सभूय च मिथः
सुधालेपस्यूतिः परिणमति राका-हिमकरः ॥ ४६ ॥

லலாடம் லாவண்ய-த்யுதி-விமல-மாபாதி-தவ யத்
த்விதீயம் தன்மன்யே மகுட-கடிதம் சந்த்ரசகலம் ।
விபர்யாஸ-ந்யாஸா-துபயமபி ஸம்பூய ச மிதஃ
ஸுதாலேபஸ்யூதிஃ பரிணமதி ராகா-ஹிமகரஃ ‖ 46 ‖

---

46. பாதிச்சந்திரன் போன்ற நெற்றியின் வர்ணனை
(புத்திரப் பிராப்தி)

(லாவண்ய- த்யுதி- விமலம்) வெண்ணிலவு போன்ற அழகுடன் (தவ) உன்னுடைய (யத்) எந்த (லலாடம்) நெற்றியானது (ஆபாதி) பிரகாசிக்கிறதோ (தத்) அதை (மகுடகடிதம்) கிரீடத்தில் சூடிக்கொண் டிருப்பதன் (த்விதீயம்) இரண்டாவது பாகமான (சந்த்ர சகலம்) சந்திரகலையோ என்று (மன்யே) எண்ணுகிறேன். (உபயம் அபி) இரண்டும் (விபர்யாஸ- ந்யாஸாத்) திருப்பிப் பொருத்தப்பட்டால் (மித ) ஒன்றுக்கொன்று (ஸம்பூய ச) .நன்ருகச் சேர்ந்து (ஸுதாலேபஸ்யூதிஃ) அமிருதம் ஒழுகும் . (ராகா- ஹிமகரஃ) பூர்ணிமைச் சந்திரனுக (பரிணமதி) பரிணமிக்கும்.

---

தரஸ்மேரே— தரம் ஈஷத் ஸ்மேரோ விகாஸஃ யஸ்ய தஸ்மின் ।

ஒ. (மந்தஸ்மிதப்ரபாபூர- மஜ்ஜத்- காமேச- மான ஸாயை நம )-காமேசுவரனுடைய மனம் மூழ்கி விளையாடும் பிரவாகம் போன்ற புன்சிரிப்பினள்- —ல. ஸ. 27

46. அம்பாளுடைய நெற்றிக் கிரீடத்தில் இருக்கும் பாதிச்சந்திரனைப் பூர்ணமாக்கும் மற்ருெரு பாதி போல் வளைந்தும் அழகாகவும் உள்ளது என நெற்றி வர்ணிக்கப் படுகிறது.

---

46. மகுட-சசிகண்டஸ்ய சகலம் । உபயக்ருத-ஸந்தானயிதஃ । ஸுதாலேபஸ்பூர்த்திஃ । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



भ्रुवौ भुग्ने किंचिद्भुवन-भय-भङ्ग व्यसनिनि
त्वदीये नेत्राभ्यां मधुकर-रुचिभ्यां धृतगुणम् ।
धनु र्मन्ये सव्येतरकर-गृहीतं रतिपतेः
प्रकोष्ठे मुष्टौ च स्थगयति निगूढान्तर-मुमे ॥ ४७ ॥

ப்ருவௌ புக்னே கிஞ்சித்புவன-பய-பங்க வ்யஸநிநி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகர -ருசிப்யாம் த்ருத-குணம் ।
தனுர்-மன்யே ஸவ்யேதரகர-க்ருஹீதம் ரதிபதேঃ
ப்ரகோஷ்ட்டே முஷ்டௌ ச ஸ்தகயதி நிகூடாந்தர-முமே ‖ 47 ‖

---

## 47. புருவங்களின் அழகு

### (எல்லாக் காரியங்களிலும் ஜயம்)

(உமே) உமாதேவியே! (புவன-பய-பங்க-வ்யஸநிநி) உலகபயத்தைப் போக்குவதில் ஊக்கம் உள்ளவளே! (கிஞ்சித் புக்னே) சற்று வளைந்த (த்வதீயே) உன்னுடைய

---

ஓ. (அஷ்டமீ-சந்த்ர- விப்ராஜ- தளிக- ஸ்த்தல- சோபிதாயை நமঃ)- அரைவட்ட வடிவான அஷ்டமிச் சந்திரன் போல் விளங்கும் நெற்றியைக் கொண்டவளுக்கு நமஸ்காரம்.

—ல- ஸ. 15.

மனத்திற்குச் சந்திரன் அதிஷ்டான தேவதையானதால் தேவியின் நெற்றியைச் சந்திரகலையாகத் தியானித்தால் மனஜயம் ஏற்படும். இரண்டு சந்திரகலையையும் சேர்த்துப் பூர்ணசந்திரனாகத் தியானிப்பவர்களுக்கு என்றும் பௌர்ணமியாகவும் விளங்கும். அபிராமி பட்டர் ஒரு தைமாஸ அமாவாசையன்று சரபோஜி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(ப்ருவௌ) புருவங்கள் (மதுகர-ருசிப்யாம்) வண்டுகள் போல் பிரகாசிக்கின்ற (நேத்ராப்யாம்) கண்களால் (த்ருத-குணம்) நாண் பூட்டியதாகவும், (ஸவ்ய-இதரகர க்ருஹீதம்) இடதுகையால் பிடிக்கப்பட்டு (ப்ரகோஷ்டே) முழங்கையாலும் (முஷ்டௌ ச) விரல் முஷ்டியாலும் (ஸதகயதி) மறைக்கப்பட்டதால் (நிகூடாந்தரம்) மத்திய பாகம் தெரியாததாகவும் உள்ள (ரதிபதேః) மன்மதனுடைய (தனுః) வில் என்று (மன்யே) எண்ணுகிறேன்.

---

மன்னனிடம் அன்றைய திதி 'பூர்ணிமை' எனத் தியான பரவசத்தில் கூறிவிட்டார். அவர் வாக்குப் பொய்யாகாமல் இருக்கும்படி அன்று மாலையில் அரசனுக்கு வானத்தில் பூர்ணசந்திரன் தோன்றும்படி தேவி அருள் புரிந்தாள்.

47. புவன-பய-பங்க-வ்யஸநிநி— புவனானாம் ஜகதாம், பயஸ்ய உபத்ரவஸ்ய, பங்கே நாசகரணே, வ்யஸனம் ததேகப்ரவணதா அஸ்யா அஸ்தீதி புவன-பயபங்க வ்யஸநிநி ॥ —லக்ஷ்மீதரர்.

பீத-பக்தஜன-த்ராணன-தீக்ஷிதே । —அருணமோதினீ.

ஸவ்யேதரகர-க்ருஹீதம்—ஸவ்யோ தக்ஷிணః, ததிதரோ வாமః ஸசாஸௌ கரச்ச தேந க்ருஹீதம் ஸவ்யேதர சப்தேன ஏகேனைவ ஹஸ்தேன ஸர்வதா த்ருதம், ந து பாணப்ரயோகார்த்தமிதி ஸூச்யதே ॥

ஸவ்யம் என்னும் பதம் சில இடங்களில் இடது என்ற அர்த்தத்திலும் உபயோகிக்கப்படுகிறது.

ஓ, ஸசாமர-ரமாவாணீ-ஸவ்யதக்ஷிணஸேவிதா । —ல.ஸ.

---

47. த்ருத-குணே । ரதிபதி —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வில்லாகிய புருவங்களுக்கு நடுவில் இடைவெளி இருப்பதும், நாண்கயிருகிய கண்களுக்கு நடுவில் மூக்கு இருப்பதும், மன்மதன் கைப்பிடியில் வில்லின் மத்திய பாகமும் முழங்கையில் நாணின் மத்தியபாகமும் மறைந்திருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி தேவியினுடைய புருவத்தை மன்மதனுடைய வில்லாகத் தியானிப்பதால் காமஜயம் ஏற்படும்.

உமா—ஓ. (அபர்ணு து நிராஹாரா தாம் மாதா ப்ரத்யபாஷத । உ மா இதி நிஷேதந்தீ உமேத்யேவ ததா பவத் ।) இலையைக் கூடப் புசிக்காமல் பார்வதி, தவம் செய்தபோது தாயார் மேனுதேவி அவளை 'உ' எனவும் 'மா' எனவும் கூப்பிட்டுத் தடுத்ததால் 'உமா' எனப் பெயர் ஏற்பட்டது.

ஓ. உமா சைலேந்த்ர-தனயா. —ல. ஸ.

பிரணவத்தில் உள்ள அ-உ-ம என்ற அக்ஷரங்கள் வரிசை மாறி உ-ம-அ என்று வரும்போது 'உமா' என ஆவதால் இது தேவீப்ரணவம் எனப்படும்.

ஓ. 'அகார-உகார-மகாராஃ மதீயே ப்ரணவே ஸ்திதாஃ । உகாரஞ்ச மகாரஞ்ச அகாரஞ்ச க்ரமேரிதம் । த்வதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுதமுத்தமம் ॥'

—லிங்க புராணம்

உத்தம சித்தவிருத்திக்கு 'உமா' என்பது பெயர்.

ஓ. பரானுபூதிம் பவபாசநாசினீம் ஸதாசிவஸ்யாப்யதி சோபனுட்யாம் । உமாபிதா-முத்தம-சித்தவ்ருத்திம் நமாமி நானுவித-லோக-வைபவாம் ॥ —ஸூதஸம்ஹிதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अहः सूते सव्यं तव नयन-मर्कात्मकतया
त्रियामां वामं ते सृजति रजनीनायकतया।
तृतीया ते दृष्टि र्दरदलित हेमाम्बुज-रुचिः
समाधत्ते सन्ध्यां दिवस निशयो-रन्तरचरीम् ॥ ४८ ॥

அஹ: ஸூதே ஸவ்யம் தவ நயன-மர்க்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜனீ நாயகதயா ।
த்ருதீயா தே த்ருஷ்டிர்-தரதலித ஹேமாம்புஜ-ருசி:
ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸ நிசயோ-ரந்தரசரீம் ‖

---

48. கண்களின் அழகு

நவக்கிரஹ தோஷ நிவிருத்தி

(தவ) உன்னுடைய (ஸவ்யம்) வலது (நயனம்) கண் (அர்க்க-ஆத்மக-தயா) சூரியவடிவு ஆனதால் (அஹ) பகலை (ஸூதே) உண்டாக்குகிறது. (தே) உன்னுடைய (வாமம்) இடது (நயனம்) கண் (ரஜனீ-நாயகதயா) சந்திரவடிவு ஆனதால் (த்ரியாமாம்) இரவை (ஸ்ருஜதி) உண்டாக்குகிறது (தே) உன்னுடைய (த்ருதீயா) மூன்றுவது (த்ருஷ்டி:) கண் (தர-தலிதஹேமாம்புஜ-ருசி:) சிறிது மலர்ந்த பொற்றாமரையைப்போல் பிரகாசிப்பதாக (திவஸ-நிசயோ) பகலுக்கும் இரவுக்கும் (அந்தரசரீம்) நடுவில் உள்ள (ஸந்த்யாம்) ஸந்தியா காலத்தை (ஸமாதத்தே) உண்டாக்குகிறது.

48. அம்பாளுடைய கண்களாலேயே பகல், இரவு ஸந்தியை முதலியன ஏற்படுவதால் அம்பாள் காலத்தைக் கடந்தவள் என்னும் கருத்து இதில் அடக்கம்.

---

48. ரஜனீ நாயகமமும்। த்ருதீயா த்ருஷ்டிஸ்தே।

—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



विशाला कल्याणी स्फुटरुचि-रयोध्या कुवलयैः
कृपाधाराधारा किमपि मधुराऽऽभोगवतिका ।
अवन्ती दृष्टिस्ते बहुनगर-विस्तार-विजया
ध्रुवं तत्तन्नाम-व्यवहरण-योग्याविजयते ॥ ४९ ॥

விசாலா கல்யாணீ ஸ்புட-ருசி-ரயோத்யா குவலயைஃ
க்ருபாதாராதாரா கிமபி மதுராऽऽபோக-வதிகா ।
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுநகர-விஸ்தார-விஜயா
த்ருவம் தத்தந்நாம-வ்யவஹரண-யோக்யா
விஜயதே ॥ 49 ॥

---

49. எட்டு விதமான கண்ணோட்டம்

(ஸர்வ ஜயம், நிதி தர்சனம்)

(தே) உன்னுடைய (த்ருஷ்டிஃ) கண்ணோட்டம் (விசாலா) விசாலமாகவும் (கல்யாணீ) மங்களகரமாவும் (ஸ்புடருசிஃ) மலர்ந்து பிரகாசிப்பதாகவும் (குவலயைஃ) கருநெய்தல்களால் (அயோத்யா) வெல்லமுடியாத அழகு வாய்ந்ததாகவும் (க்ருபாதாராதாரா) கருணைப் பெருக்கிற்கு ஆதாரமாகவும் (கிமபி மதுரா) வர்ணிக்க முடியாத இனிமையுடன் கூடியதாகவும் (ஆபோகவதிகா) ஆழங்காண முடியாததாகவும் (அவந்தீ) ரக்ஷிப்பதாகவும் (பஹுநகர விஸ்தார- விஜயா) பல நகரங்களில் அதன் வெற்றியின் சீர்மை விளங்குவதாகவும் (தத் தத் நாம வ்யவஹரணயோக்யா) அதனால் அந்த அந்த நகரங்களின் பெயர்களால் குறிப்பிடத்தக்கதாகவும் (த்ருவம்) நிச்சயமாக (விஜயதே) அனைத்தையும் வெல்லுவதாக விளங்குகிறது.

---

49. எட்டு விதமான திருஷ்டி— ('விசாலா நாம த்ருஷ்டிஃ அந்தர்-விகாஸா; கல்யாணித்ருஷ்டிர்-விஸ்மிதா; அயோத்யா- த்ருஷ்டிஃ ஸ்மேரகனீனிகா ; தாரா த்ருஷ்டி-ரலஸா; மதுரா த்ருஷ்டிர்-வலிதா ; போகவதீ த்ருஷ்டிஃ ஸ்நிக்தா; அவந்தீ த்ருஷ்டிர்-முக்தா; விஜயா த்ருஷ்டிஃ ப்ராந்தனீனிகா') விசாலா என்பது உள்ளாக மலர்ந்த



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कवीनां सन्दर्भ-स्तबक-मकरन्दैक-रसिकं
कटाक्ष-व्याक्षेप-भ्रमरकलभौ कर्णयुगलम् ।
अमुञ्चन्तौ दृष्ट्वा तव नवरसास्वाद-तरलौ
असूया-संसर्गा-दलिकनयनं किञ्चिदरुणम् ॥ ५० ॥

கவீனும் ஸந்தர்ப்ப-ஸ்தபக-மகரந்தைக-ரஸிகம்
கடாக்ஷ-வ்யாக்ஷேப-ப்ரமர-கலபௌ கர்ணயுகலம்।
அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாத-தரலௌ
அஸூயா-ஸம்ஸர்க்கா-தலிகநயனம் கிஞ்சிதருணம் ।

50. மூன்ருவது கண்

(தூரதர்சனம், வைசூரி நோய் நிவாரணம்)

(கவீனும்) கவிகளுடைய (ஸந்தர்ப்ப-ஸ்தபக) பாடல்களாகிய பூங்கொத்தின் (மகரந்த-ஏக-ரஸிகம்) மகரந்தத்தைப் பருகுவதிலேயே முக்கியமாக ஆசை வைத்த (தவ) உன்னுடைய (கர்ண-யுகலம்) இரண்டு காதுகளையும் (அமுஞ்சந்தௌ) விடாமல் இருக்கும் (ஆஸ்வாத-தரலௌ) நவரஸங்களையும் அநுபவிக்க ஆசைகொண்ட (கடாக்ஷவ்யாக்ஷேப-ப்ரமர-கலபௌ) குட்டி வண்டுகள் போன்ற கடைக்கண்களை (த்ருஷ்ட்வா) பார்த்து (அஸூயா-ஸம்ஸர்க்காத்) பொருமையினுல் - (அலிக நயனம்) உன்னுடைய நெற்றிக்கண்ணுனது (கிஞ்சித்) சிறிது (அருணம்) சிவந்திருக்கிறது போலும்.

---

பார்வை; 'கல்யாணி' ஆச்சரியத்தைக் காட்டுவது; 'அயோத்யா' என்பது காமத்தை உண்டாக்குவது; 'தாரா' என்பது ஆலஸ்யத்தைக் காட்டுவது; 'மதுரா' என்பது சஞ்சலமானது; 'போகவதீ' பிரியத்தோடு கூடியது; 'அவந்தீ' மயங்கியது; 'விஜயா' பாதி மூடினது. அம்பாளிடத்தில் இவை முறையே ஸம்க்ஷோபண, ஆகர்ஷண, த்ராவண, உன்மாதன, வச்ய, உச்சாடன, வித்வேஷண, மாரண சக்திகளுடன் கூடியவை. விசாலா முதலிய பெயர்களைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



शिवे शृङ्गाराद्रा तदितरजने कुत्सनपरा
सरोषा गङ्गायां गिरिशचरिते विस्मयवती ।
हराहिभ्यो भीता सरसिरुह सौभाग्य-जननी
सखीषु स्मेरा ते मयि जननि दृष्टिः सकरुणा ॥ ५१ ॥

गिरिशनयने

சிவே ச்ருங்காரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா
ஸரோஷா கங்காயாம் கிரிசசரிதே விஸ்மயவதீ ।
ஹராஹிப்யோ பீதா ஸரஸிருஹ-ஸெபாக்யஜனனீ
ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜனனி த்ருஷ்டிஃ ஸகருணா ॥

---

51. தேவியின் பார்வையில் எட்டு ரஸங்கள்

(ஸர்வஜன வச்யம்)

(ஜனனி) தாயே! (சிவே) சிவனிடத்தில் (தே) உன்னுடைய (த்ருஷ்டிஃ) பார்வை (ச்ருங்கார-ஆர்த்ரா) காதலின் கசிவு உள்ளதாகவும் (தத் இதர ஜனே) அவரைத் தவிர மற்றவர்களிடத்தில் (குத்ஸன-பரா) அருவருப்புடைய தாகவும் (கங்காயாம்) கங்கா தேவியிடம் (ஸரோஷா)

---

கொண்ட நகரங்களில் அம்பாளுடைய பார்வையின் அந்த அந்தப் பிரபாவம் வெளியாகியுள்ளது இவ்விதம் தேவியை உபாசிக்கிறவர்கள் 'ஸம்க்ஷோபணம் ஆகர்ஷணம்' முதலிய சக்திகளைப் பெறுவார்கள். —லக்ஷ்மீதரர்

50. காதுகளின் வழியாகத் துதிவடிவான கவிதைகளின் நவரஸமும் தேன்போல் பாய்வதால் அதைப் பருக விரும்பிய வண்டுகளைப்போல் தேவியின் இருகண்கள் காதுவரை அகன்று காணப்படுகின்றன. அவற்றினிடம் பொறாமையால் சிவந்தாற்போல் உள்ளது நெற்றிக்கண். இவ்வாறு தேவியைத் தியானிப்பதால் தூரதர்சன சித்தி ஏற்படும்.

நவரஸாஸ்வாத-தரலௌள— நவரஸாஃ ச்ருங்காராதயஃ நவத்வ ஸங்க்யா யுக்தாஃ । —லக்ஷ்மீதரர்

---

ததிதர முகே । கிரிச நயனே । ஸரஸிருஹ-ஸௌபாக்ய-ஜயினீ । மயி ஜயதி । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கோபத்துடன் கூடியதாகவும் (கிரிச-சரிதே) சிவனுடைய லீலைகளில் (விஸ்மயவதீ) வியப்புடையதாகவும் (ஹர-அஹிப்ய) சிவன் அணியும் பாம்புகளிடம் (பீதா) பயம் உடையதாகவும் (ஸரஸிருஹ-ஸௌபாக்ய-ஜனனீ) தாமரையின் அழகுக்கும் அழகு செய்வதுபோல் சற்றுச் சிவந்திருப்பதால் வீரரஸம் உடையதாகவும் (ஸகீஷு) தோழிகளிடத்தில் (ஸ்மேரா) ஹாஸ்ய ரஸம் உடையதாகவும் (மயி) என்னிடம் (ஸகருணா) கருணையுடன் கூடிய தாகவும் விளங்குகிறது.

---

நவோ நூதனோ ரஸோ ச்ருங்காரঃ (அருணாமோதினீ).

51. கிரிச சரிதே விஸ்மயவதீ—('கிரிச நயனே' என்பது லக்ஷ்மீதரர் பாடம் கிரிசஸ்ய பரமேச்வரஸ்ய நயனே நிடிலஸ்தே விஸ்மயவதீ அத்புத-ரஸாவிஷ்டா அநேன கலு மன்மதோ பஸ்மீக்ருதঃ ததானீ-மீச்வரஸ்ய கீத்ருசம் வைராக்யம், இதானீம் கீத்ருசோऽனுராகঃ। நயனத்ரயேண ரஸாந்தர-தர்சனாத் தத்ர த்ருதீய நயனே கடாக்ஷ-நிரீக்ஷணாதினாம் ரஸபாவாதினாம் மன்மதோத்பத்தி-ஹேதூனாம் தர்சனாத் உபயம் த்ருஷ்ட்வா அத்புத-ரஸாவிஷ்டேத்யர்த்தঃ। சரிதே இதி பாடாந்தரம்। சரிதே த்ரிபுர விஜயாதௌ।) —லக்ஷ்மீதரர்.

பரமேசுவரனுடைய நெற்றிக்கண் மன்மதனை எரித்த கண். அதனால் அவருடைய வைராக்கியம் தெரிகிறது. இப்பொழுது தேவியிடம் காமம் அதே கண்ணில் தோன்றுகிறது. இரண்டையும் எண்ணித் தேவி ஆச்சரியத்தை அடைகிறாள் 'கிரிச சரிதே' என்ற பாடத்தில் 'பரமசிவன் செய்த த்ரிபுர ஸம்ஹாரம் முதலிய லீலைகளை எண்ணி ஆச்சரியத்தை அடைகிறாள்' என்பது கருத்து.

இங்கே ச்ருங்காரம், பீபத்ஸம், ரௌத்ரம், அத்புதம், பயானகம், வீரம், ஹாஸ்யம், கருணை என்ற எட்டு ரஸங்கள் தேவியினுடைய திருஷ்டியில் கூறப்படுகின்றன. (சாந்தஸ்ய நிர்விகாரத்வாத் ந சாந்தம் மேனிரே ரஸம்) சாந்தரஸம் மனம் விகாரம் அற்றிருக்கும் நிலையைக் குறிப்பதால் அதை ரஸமாகக் கொள்ளக் கூடாது என்று பரதர் கூறுவதை ஒட்டி இங்கும் எட்டு ரஸங்கள் தான் வர்ணிக்கப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



गते कर्णाभ्यर्णं गरुत इव पक्ष्माणि दधती
पुरां भेत्तु-श्चित्तप्रशम-रस-विद्रावण-फले ।
इमे नेत्रे गोत्राधरपति-कुलोत्तंस-कलिके
तवाकर्णाकृष्ट-स्मरशर विलासं कलयतः ॥ ५२ ॥

கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ
புராம் பேத்துச்-சித்தப்ரசம-ரஸ-வித்ராவண பலே ॥
இமே நேத்ரே கோத்ராதரபதி-குலோத்தம்ஸ-கலிகே
தவாகர்ணாக்ருஷ்ட-ஸ்மரசர விலாஸம் கலயதః ॥ 52 ॥

**52. மன்மத பாணங்களைப்போன்ற கண்கள்**

**(காமஜயம்; காது, கண்களின், ரோக நிவாரணம்)**

(கோத்ராதரபதி-) மலையரசனான இமவானுடைய (குலோத்தம்ஸ-கலிகே) குலக்கொழுந்தே! (தவ) உன்னுடைய (இமே நேத்ரே) இக்கண்கள் இரண்டும் (கர்ணாப்யர்ணம் கதே) காதுகள்வரை நீண்டிருப்பதாலும் (கருத இவ) பாணங்களில் கட்டிய இறகுகளைப் போன்ற (பக்ஷ்மாணி) இமை மயிர்களை (தததீ) தரிக்கும் காரணத்தாலும் (புராம் பேத்துః) முப்புரம் எரித்த சிவபெருமானுடைய (சித்த-ப்ரசம - ரஸ - வித்ராவணபலே) மனத்தின் சாந்தி ரஸத்தைக் கலைப்பதை நோக்கமாகக் கொண்டு (ஆகர்ண-ஆக்ருஷ்ட) காதுவரை இழுக்கப்பட்ட (ஸ்மர-சர-விலாஸம்) மன்மதபாணத்தின் திறமையை (கலயதః) நடித்துக் காட்டுகின்றன.

ஸரஸிருஹ- ஸௌபாக்ய- ஜயினீ என்ற பாடத்தில் தாமரையின் அழகை ஜயித்தவள் என்பது கருத்து.

52. சித்தப்ரசமரஸ-வித்ராவண-பலே—பரமசிவனுடைய சித்தத்தில் குடிகொண்டிருக்கும் சாந்திரஸத்தைக் கலைத்து சிருங்காரரஸத்தைத் தோற்றுவிப்பதையே பயனாகக்கொண்ட இரு கண்கள். இங்கே 'பலே' என்னும் பதம், சிலேடையாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. (அத்ர பல சப்தேன அயோமயோ பாணாக்ரம் ஸூசிதம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



विभक्त-त्रैवर्ण्यं व्यतिकरित-लीलाञ्जनतया
विभाति त्वन्नेत्र त्रितय मिद-मीशानदयिते ।
पुनः स्रष्टुं देवान् द्रुहिण हरि-रुद्रानुपरतान्
रजः सत्त्वं बिभ्रत् तम इति गुणानां त्रयमिव ॥ ५३ ॥

விபக்த-த்ரைவர்ண்யம் வ்யதிகரித-லீலாஞ்ஜனதயா
விபாதி த்வந்நேத்ர-த்ரிதய-மித-மீசானதயிதே ।
புனஃ ஸ்ரஷ்டும் தேவான் த்ருஹிண-ஹரி-ருத்ரானு
பரதான்
ரஜஃ ஸத்வம் பிப்ரத் தம இதி குணாநாம் த்ரயமிவ ॥53॥

53. மும்மூர்த்திகளைச் சிருஷ்டிக்கும் முக்குணங்களைப் படைத்த கண்கள்

(தேவி பிரத்யக்ஷம், ஸகலலோக வச்யம்)

(ஈசான-தயிதே) பரமசிவனுடைய அன்பிற்கு உரியவளே! (வ்யதிகரித-லீலாஞ்ஜனதயா) அழகுக்காக இட்டுக் கொள்ளப்பட்ட மையினால் (விபக்த-த்ரைவர்ண்யம்) மூன்று வர்ணங்களை இன்னும் தெளிவாகப் பிரித்துக் காட்டும் (இதம்) இந்த (த்வத்) உன்னுடைய (நேத்ரத்ரிதயம்) கண்கள் மூன்றும் (உபரதான்) பிரளயகாலத்தில் உன்னிடம் ஒடுங்கிய (த்ருஹிண-ஹரி-ருத்ரான்) பிரம்மா,

---

அம்பின் முக்கிய பாகமான எஃகுமுனை 'பலம்' எனப் படும். அப்படிக் கூரான பார்வை கொண்ட கண்கள்.

கதே கர்ணப்யர்ணம்— காதுவரை நீண்டிருக்கும் கண்கள் காதுவரை இழுத்துவிடும் மன்மத பாணங்களைப் போல் தோன்றுகின்றன.

---

நீலாஞ்ஜனதயா (அல்லது) நீலாம்புஜருசா । —பா. பே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விஷ்ணு, ருத்திரன் என்ற (தேவான்) தேவர்களை (புனஃ) மறுபடியும் (ஸ்ரஷ்டும்) தோற்றுவிப்பதற்கு (ரஜஃ) ரஜோ குணம் (ஸத்வம்) ஸத்துவ குணம் (தமஃ) தமோ குணம் (இதி) என்ற (குணாணும் த்ரயம்) மூன்று குணங்களையும் (பிப்ரத் இவ) தரித்துக்கொண்டாற்போல் (விபாதி) விளங்குகிறது.

---

கலயதஃ—'குருதஃ கலயத இதி லட் பரஸ்மைபத-த்விவசனம்' என்பது இலக்கணக் குறிப்பு.

இவ்வாறு தேவியினுடைய கண்ணழகைத் தியானம் செய்வதால் இருதயத்தில் உள்ள காமச்சிக்கல் அறுபட்டு ஒழியும்.

ஒ. (யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யே஽ஸ்ய ஹ்ருதிச்ரிதாஃ। அத மர்த்யோ஽ம்ருதோ பவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே) எப்போது இவனுடைய இருதயத்தில் பொதிந்துள்ள ஆசைகள் எல்லாம் ஒழிகின்றனவோ அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனுகின்ருன். பிரம்ம (ஆனந்த)த்தை அநுபவிக்கிருன்.

—கட உப. 6. 14.

53. த்ரைவர்ண்யம்— (த்ரயோ வர்ணாஃ ஸிதாஸிதரக்தாஃ யஸ்யேதி பஹுவ்ரீஹிஃ। மஹாபாக்ய-புருஷாணாம் நயனே ரக்தரேகாஃ ஸந்தி) மூன்று வர்ணங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கறுப்பு, வெள்ளை, சிவப்பு. மகாபாக்கியசாலிகளின் கண்களில் சிவப்பு ரேகைகள் காணப்படும்.

மூன்றுவர்ணங்களும் மூன்றுகுணங்களுக்கு அடையாளம். சிருஷ்டிகர்த்தாவான பிரம்மா, ரஜோகுணத்தைப் பிரதானமாகக் கொண்டவர். ஸ்திதி கர்த்தாவான விஷ்ணு, ஸத்துவகுணத்தைப் பிரதானமாகக் கொண்டவர். ஸம்ஹார கர்த்தாவான ருத்திரர், தமோகுணத்தைப் பிரதானமாகக் கொண்டவர். தன்னிடம் லயம் அடைந்த உலகைப் பரதேவதை மீண்டும் தோற்றுவிக்க விரும்பும்போது மும்மூர்த்திகளையும் முதலில் தன்னிடமிருந்து தோற்றுவிக்கிருள். இந்தத் தத்துவத்தையே தேவியின் கண்களில் உள்ள மூன்று வர்ணங்களும் ஞாபகப்படுத்துவதாக இங்கு வர்ணிக்கப்படுகிறது.

ஓ. ஸகல-புவன-மேதத் ஸ்ரஷ்டுகாமா யதா த்வம்
ஸ்ருஜஸி ஜனனி தேவான் விஷ்ணு-ருத்ராம்ச்ச-
முக்யான் ।
ஸ்திதி-லய-ஜனனம் தைः காரயஸ்யேகரூபா
ந கலு தவ கதஞ்சித் தேவி ஸம்ஸாரலேசः ॥

—தேவீ பாகவதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



पवित्रीकर्तुं नः पशुपति-पराधीन-हृदये
दयामित्रै-र्नेत्रै-ररुण-धवल-श्याम रुचिभिः ।
नदः शोणो गङ्गा तपनतनयेति ध्रुवममुम्
त्रयाणां तीर्थाना-मुपनयसि संभेद-मनघम् ॥ ५४ ॥

பவித்ரீ-கர்த்தும் நஃ பசுபதி பராதீன-ஹ்ருதயே
தயாமித்ரைர்-நேத்ரை-ரருண-தவல-ச்யாம-ருசிபிஃ ।
நதஃ சோணோ கங்கா தபன-தனயேதி த்ருவமமும்
த்ரயாணும் தீர்த்தாஞ-முபநயஸி ஸம்பேத-மநகம் ॥

54. மூன்று வர்ணங்கள் கொண்ட கண்ரேகைகள்
மூன்று புண்ணிய நதிகளைப் போல்வன
(ஸர்வபாப நிவிருத்தி, உபஸ்தரோக நிவாரணம்)

(பசுபதி-பராதீன-ஹ்ருதயே) பசுபதிக்கு ஆதீனமான உள்ளம் படைத்தவளே! (தயா-மித்ரைஃ) தயைக்குக் கூட்டாளிகளும் (அருண-தவல ச்யாம ருசிபிஃ) சிவப்பு வெளுப்பு, கறுப்பு என்ற வர்ணங்களைக் கொண்டவைகளு மான (நேத்ரைஃ) உனது கண்களால் (சோணஃ நதஃ) மேற்குநோக்கிச் செல்வதும் சிவந்ததுமான சோண பத்ரா என்ற ஆறு, (கங்கா) வெளுப்பான கங்கை, (தபன-தனயா) சூரியபுத்திரியாகவும் கறுப்பு வர்ணம் கொண்ட தாகவும் விளங்கும் யமுனை (இதி) என்ற (த்ரயாணும்) மூன்று (தீர்த்தானும்) புண்ணியநதிகளின் (ஸம்பேதம்) ஸங்கமமாகிய (அனகம்) பாவத்தையெல்லாம் போக்கும் (அமும்) இக்கூட்டுறவை (நஃ) உன்னைக் காணும்—எங்களை (பவித்ரீ கர்த்தும்) புனிதமாக்குவதற்காக (உபநயஸி) ஏற்படுத்தியிருக்கிறாய் என்பது (த்ருவம்) நிச்சயம்.

54. இந்தச் சுலோகத்தில் தேவியின் கண்ணில் உள்ள மூன்று வர்ணங்களும் மூன்று புண்ணிய நதி களுக்கு ஒப்பிடப்படுகின்றன. யமுனை கறுப்பு, கங்கை வெளுப்பு, சோணபத்திரை சிவப்பு, இவை மூன்றின் ஸங்கமம் ஏற்பட்டால்போல் உள்ளது மூன்றுகண்களுடன்

ஸம்பேத-மனகே —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



निमेषोन्मेषाभ्यां प्रलयमुदयं याति जगती
तवेत्याहुः सन्तो धरणिधर-राजन्यतनये ।
त्वदुन्मेषाज्जातं जगदिद-मशेषं प्रलयतः
परित्रातुं शङ्के परिहृत-निमेषा-स्तव दृशः ॥ ५५ ॥

நிமேஷோன்மேஷாப்யாம் ப்ரளய-முதயம் யாதீ ஜகதீ
தவேத்யாஹுஃ ஸந்தோ தரணிதர-ராஜன்யதனயே।
த்வதுன்மேஷாஜ்ஜாதம் ஜகதித-மசேஷம் ப்ரளயதஃ
பரித்ராதும் சங்கே பரிஹ்ருத-நிமேஷாஸ்-தவ த்ருசஃ ‖

55. கண்கள் மூடாமல் இருக்கும் காரணம்

(ரக்ஷிக்கும் சக்தி ; அண்டரோக நிவாரணம்)

(தரணி-தர-ராஜன்யதனயே) பர்வதராஜ குமாரியே (தவ) உன்னுடைய (நிமேஷ உன்மேஷாப்யாம்) கண்கள் மூடுவதாலும் திறப்பதாலும் (ஜகதீ) உலகம் (ப்ரளயம்) பிரளயத்தையும் (உதயம்) சிருஷ்டியையும் (யாதி) அடைகிறது (இதி) என்று (ஸந்த) சான்றோர் (ஆஹுஃ) கூறுகின்றனர். (த்வத்) உனது (உன்மேஷாத்) கண்கள் திறப்பதால் (ஜாதம்) உண்டான (இதம்) இந்த (ஜகத்) உலகம் (அசேஷம்) முழுவதையும் (ப்ரலயதஃ) பிரளயத்திலிருந்து (பரித்ராதும்) அழியாமல் காப்பதற்காக (தவ) உன்னுடைய (த்ருசஃ) கண்கள் (பரிஹ்ருத நிமேஷாஃ) மூடுதல் இல்லாமல் இருக்கின்றன (இதி) என்று (சங்கே) நான் ஊகிக்கிறேன்.

---

கூடிய தேவியின் முகமண்டலம் அங்ஙனம் தியானிப்பதால் புண்ணியதீர்த்தங்களில் எல்லாம் நீராடிய பலன் கிட்டும். எல்லாப் பாவங்களும் விலகும்.

பசுபதி பராதீனஹ்ருதயே— பசுபதிஃ சிவஃ தேன பராதீனம் ஹ்ருதயம் யஸ்யாஃ ஸா சிவாயத்தசித்தா; பசுபதாவிவாஜ்ஞதயா பசு சப்த - வாச்ய - ஜனவன - பராயண ஹ்ருதயா வா இத்யபிஸந்திஃ| தஸ்யாஃ ஸம்புத்திஃ

—அருணா மோதினி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तवापर्णे कर्णे जपनयन-पैशुन्य चकिता
निलीयन्ते तोये नियत-मनिमेषाः शफरिकाः ।
इयं च श्री र्बद्धच्छद-पुटकवाटं कुवलयं
जहाति प्रत्यूषे निशि च विघटय्य प्रविशति ॥ ५६ ॥

தவாபர்ணே கர்ணே ஜபநயன-பைசுன்ய-சகிதா
நிலீயந்தே தோயே நியத-மநிமேஷாඃ சபரிகாඃ ।
இயஞ் ச ஸ்ரீர்-பத்தச்சத-புடகவாடம் குவலயம்
ஜஹாதி ப்ரத்யூஷே நிசி ச விகடய்ய ப்ரவிசதி ‖ 56 ‖

---

56. மீன்களின் அழகையும் நீலோத்பலத்தின் அழகையும் வெல்லும் கண்கள்.(பந்தவிமோசனம், நேத்ரதோஷ நிவாரணம்)

(அபர்ணே) யாருக்கும் கடன் படாததால் 'அபருணு' எனப் பெயர்பெற்றவளே! (தவ) உன்னுடைய (கர்ணே-) காதில் (ஜப-நயன-) மெதுவாக ஓதுவது போல் கண்கள் காணப்படுவதால் (பைசுன்ய-சகிதாঃ) தங்களைப் பற்றிக் கோள்சொல்வதாக அச்சம் அடைந்து

---

தயாமித்ரைঃ —தயார்த்ரைঃ, க்ருபாவத்பிঃ ।

பவித்ரீகர்த்தும் — (த்வச் சரண நிரதானும் பக்தானும் த்வத் வ்யதிரேகேண தீர்த்தோபாச்ரயோ வ்யர்த்த ஏவ ।) உனது பாதாரவிந்தங்களில் பக்தி செய்பவர்களுக்கு உன்னைவிட்டுத் தீர்த்தங்களைத் தேடிச் செல்வது அவசியமில்லை.

55. தேவதைகள் கண்கொட்டுவ தில்லை. அதனால் பரதேவதை இயற்கையாகவே கண்கொட்டாமல் இருந்த போதிலும், அது உலக ரக்ஷணத்திற்காக என்று இங்கே உபசரித்துக் கூறப்படுகிறது.

ஓ (உன்மேஷ-நிமிஷோத்பன்ன - விபன்ன - புவனாவலீ) கண்களைத் திறப்பதாலும் மூடுவதாலும் புவனங்களை ஆக்கி அழிப்பவள். —ல. ஸ. 281.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(சபரிகா:) பெண்மீன்கள் (அநிமேஷா:) கண்களை மூடாமல் பார்த்துக்கொண்டே (தோயே) நீரில் (நிலீயந்தே) மறைந்துகொண் டிருக்கின்றன என்பது (நியதம்) நிச்சயம். (இயம்) இந்த (ஸ்ரீ: ச) கண்ணின் அழகாகிய தேவதையும் (ப்ரத்யூஷே) காலையில் (பத்தச் சத புட-) இதழ்கள் மூடிக்கொள்வதால் கதவு சாத்தப்பட்டது போன்ற (குவலயம்) கரு நெய்தல் பூவை (ஜஹாதி) விட்டுவிடுவது போலும் (நிசி ச) இரவில் (தத்) அதை (விகடய்ய) திறந்து கொண்டு (ப்ரவிசதி) மீண்டும் புகுவது போலும் தோன்றுகிறது.

---

ஒ. லோகாச் சதுர்த்தச மஹேந்த்ர முகாச்ச தேவா:
மூர்த்தித்ரயம் முனிகணுச்ச வஸிஷ்ட முக்யா:।
ஸத்யோ பவந்தி ந பவந்தி ஸமஸ்த மூர்த்தே:
உன்மீலனேன தவ தேவி நிமீலனேன ॥

—அருணமோதினியில் கூறியுள்ள காமஸித்தி ஸ்தோத்ரம்.

56. பரதேவதை கண்கொட்டாமல் இருப்பது போல் மீன்களும் கண் கொட்டுவதில்லை. இதனல் தேவியின் கண்கள் மீன்களைத் தங்களுக்குப் போட்டியாகக் கருதிக் காதுகளிடம் சென்று கோள் சொல்லுவதாக வர்ணிக்கப்படுகிறது. மீன்களைப்போன்ற கண்ணழகு படைத்த மூர்த்தி விசேஷம் மதுரையில் உள்ளது. ஆகையால் அங்கே மீனுக்ஷி கோவிலில் பொற்றுமரைக் குளத்தில் மீன்கள் வாழ்வதில்லை எனக் கூறுவர்.

அபர்ணே—அம்பாள் பக்தர்கள் பூஜித்துக் கேட்கும் வரன்களை உடனே கொடுத்து அனுக்கிரகிப்பதால் இவர்களிடம் (ருணம்) கடன்படாமல் இருப்பவள். அல்லது அம்பாள் பார்வதியாகத் தவம் செய்தபோது (பர்ணம்) இலையைக்கூடச் சாப்பிடாமல் இருந்ததால் 'அபர்ணு'.

ஒ. ஆஹாரே - த்யக்த - பர்ணுऽபூத் யஸ்மாத் ஹிமவத: ஸுதா। தேன தேவை - ரபர்ணேதி கதிதா ப்ருதிவீதலே.

—காளிகா புராணம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



दृशा द्राघीयस्या दरदलित नीलोत्पल-रुचा
दवीयांसं दीनं स्नपय कृपया मामपि शिवे ।
अनेनायं धन्यो भवति न च ते हानिरियता
वने वा हर्म्ये वा समकर-निपातो हिमकरः ॥ ५७ ॥

த்ருசா த்ராகீயஸ்யா தரதலித-நீலோத்பல-ருசா
தவீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா மாமபி சிவே ।
அநேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹானி-ரியதா
வனே வா ஹர்ம்யே வா ஸமகர-நிபாதோ ஹிமகரః ॥

57. நாட்டிலும் காட்டிலும் சமமாகப் பிரகாசிக்கும் நிலவு போன்ற கடாக்ஷம் (ஸகல ஸௌபாக்கியம்).

(சிவே) மங்களஸ்வரூபியே ! (த்ராகீயஸ்யா) தீர்க்கமானதும் (தரதலித-) சற்று மலர்ந்த (நீலோத்பல-ருசா) கருநெய்தல்போல் பிரகாசிப்பதுமான (த்ருசா) உன் பார்வையால் (தவீயாம்ஸம்) உனக்கு வெகு தூரத்தில்

ஒ. (வக்த்ர-லக்ஷ்மீ-பரீவாஹ-சலன்-மீனாபலோசனா) முகத்தின் அழகுவெள்ளத்தில் சலிக்கும் மீன்களைப் போன்ற கண்களைக்கொண்டவள் —ல. ஸ. 18.

57. தரதலிதம் ஈஷத்விகஸிதம் இந்தீவரம் தஸ்யேவ ருசிர் - யஸ்யாঃ தயா । தவீயாம்ஸம் தூரவர்த்தினம் ।

அயம் — அஹமித்யர்த்தঃ । நான் என்பதற்குப் பதிலாக இவன் என்பது எளிமையைக் காட்டுவது.

(கேவலம் பாலகவத் அம்பாம்பேதி தீனாக்ரந்தன-மாத்ர-பராயணঃ தஸ்ய மம ரக்ஷணமேவ அத்புதஸ்வபாவம் கீர்த்தயே। நாயம் நியமঃ குணவான் ரக்ஷ்யঃ, நிர்க்குணஸ் த்யாஜ்ய இதி।) சிறு குழந்தையைப்போல், 'அம்மா, அம்மா' என்று அழமட்டும் தெரிந்த என்னை ரக்ஷிக்கும் அத்புதமான சுவபாவமே உன் புகழை நிலை நிறுத்துவது. குணமுள்ள குழந்தை தான் ரக்ஷித்தற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இருக்கும் (தீனம்) ஏழையாகிய (மாம் அபி) என்னையும் கூட (க்ருபயா) கருணையால் (ஸ்நபய) நீராட்டி வை. (அநேன) அதனால் (அயம்) இவன் (தன்யஃ பவதி) செல்வவானாக ஆய்விடுவான். (இயதா) இதனால் (தே) உனக்கு (நச ஹானிஃ) ஒரு நஷ்டமும் இல்லை. (ஹிமகரஃ) சந்திரன் (வனே வா) காட்டிலாயினும் (ஹர்ம்யே வா) நாட்டிலுள்ள மாளிகையிலாயினும் (ஸமகர- நிபாதஃ) தன் கிரணங்களைச் சமமாகவே பொழிகிறான். அதனால் சந்திரனுக்கு என்ன நஷ்டம்?).

---

உரியவன், குணம் இல்லாதவன், தள்ளி விடத் தக்கவன் என்பது நியமம் அல்ல —அருணாமோதினீ.

குழந்தைகளிடம் உள்ள குணதோஷங்களை விசாரித்துத் தார தம்யத்தைப் பார்ப்பது உலகில் தாய்மார்களின் சுபாவம் அன்று அப்படியிருக்கப் பரதேவதையைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?

ஓ. 'பால் நினைந்தூட்டும் தாயினும்சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே! —திருவாசகம்

த்ராகீயஸ்யா — அம்பாளுடைய கடாக்ஷமானது வெகுதூரம் விழக்கூடிய கடாக்ஷம். தாயாருடைய கடாக்ஷம் குழந்தைகளிடத்தில் விழும். பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாப் பிராணிகளும் குழந்தைகள். எல்லாவற்றிற்கும் தாயாக இருப்பவள் ஜகன் மாதாதான். அவளுடைய கடாக்ஷத்திற்கு எல்லை இல்லை.

மாமபி—என்னையும் என்று சொல்லும்போது அவர் நம்மெல்லோரையும் சேர்த்துக்கொண்டு நமக்கெல்லாம் அவள் கடாக்ஷம் விழவேண்டும் என்பதாகப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார். நமக்காகத் தன்னைத் தீனன் என்று சொல்லிக்கொள்ளுகிறார்.

— காமகோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अरालं ते पालीयुगल-मगराजन्यतनये
न केषा-माधत्ते कुसुमशर-कोदण्ड कुतुकम् ।
तिरश्चीनो यत्र श्रवणपथ-मुल्लङ्घ्य विलसन्
अपांग-व्यासंगो दिशति शरसन्धान-धिषणाम् । ५८ ॥

அராலம் தே பாலீயுகல-மகராஜன்யதனயே
ந கேஷா-மாதத்தே குஸுமசர-கோதண்ட-குதுகம் ।
திரச்சீனோ யத்ர ச்ரவணபத-முல்லங்க்ய விலஸன்
அபாங்க-வ்யாஸங்கோ திசதி சரஸந்தான-திஷணாம் ॥

---

58. மன்மதபாணம் போன்ற கடைக்கண் பார்வை

(காமஜயம், ஸகலரோக நிவிருத்தி)

(அக-ராஜன்ய தனயே) பர்வதராஜ குமாரியே! (தே) உன்னுடைய (அராலம்) வளைந்த (பாலீயுகலம்) காதுக்கும் கண்ணுக்கும் இடையே உள்ள பிரதேசம் இரண்டும் (குஸும- சர) புஷ்ப பாணனுன மன்மதனுடைய (கோதண்ட-குதுகம்)வில் என்ற நம்பிக்கையை (கேஷாம்) யாருக்குத்தான் (ந ஆதத்தே) உண்டாக்காது? (யத்ர) அந்தப் பிரதேசத்தில் (திரச்சீனஃ) குறுக்காச் செல்லுகின்ற (அபாங்க-வ்யாஸங்கஃ) கடைக்கண்பார்வை (ச்ரவண-பதம்) காதுவழியாக (உல்லங்க்ய) ஊடுருவிப் பாய்வதாய் (விலஸன்) விளங்கிக் கொண்டு (சரஸந்தான திஷணாம்) பாணம் தொடுக்கப்பட்டுள்ளது என்ற தோற்றத்தை (திசதி) உண்டாக்குகிறது.

---

58. அகராஜன்யதனயே— ந கச்சதீத்யகஃ பர்வதஃ தத் ராஜன்ய ச்ரேஷ்டஃ ஹிமவான் தத் தனயே குல ப்ரதீபிகே!

'பாலீ கர்ணங்கே கர்ணகோடி விபூஷணே' இதி விச்வப்ரகாசஃ। யத்ர பாலீயுகளே திரச்சீனஃ திர்யக்தயா பதனம் ச்ரவணபத-முல்லங்க்ய கர்ணப்ராந்தம் லங்கயித்

---

ஸ்மராரே-ராதத்தே. —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



स्फुरद्गण्डाभोग-प्रतिफलित-ताटङ्कयुगलं
चतुश्चक्रं मन्ये तव मुखमिदं मन्मथरथम् ।
यमारुह्य द्रुह्य-त्यवनिरथ मर्केन्दुचरणं
महावीरो मारः प्रमथपतये सज्जितवते ॥ ५९ ॥

ஸ்புரத்கண்டாபோக-ப்ரதிபலித-தாடங்க-யுகளம்
சதுச்சக்ரம் மன்யே தவமுகமிதம் மன்மதரதம் ।
யமாருஹ்ய த்ருஹ்யத் யவனிரத-மர்க்கேந்து-சரணம்
மஹாவீரோ மாரஃ ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே ‖59‖

---

59. மன்மதனுடைய ரதம் போன்ற முகம்

ஸர்வஜன வச்யம்.

(ஸ்புரத்) கண்ணுடிபோல் பிரகாசிக்கின்ற (கண்டாபோக) கன்னப் பிரதேசத்தில் (ப்ரதிபலித) பிரதிபலிக்கின்ற (தாடங்க-யுகளம்) இரண்டு தாடங்கங்களுடன் கூடின (தவ) உன்னுடைய (இதம்) இந்த (முகம்) முகமானது (சதுஃ சக்கரம்) நாலு சக்கரங்களுடன் கூடின (மன்மதரதம்) மன்மதனின் தேர் என்று (மன்யே) கருதுகிறேன். (யம் ஆருஹ்ய) அதில் ஏறிக்கொண்டு (மாரஃ) மன்மதன் (மஹாவீரஃ) மகாவீரனுக விளங்குபவனும் (அர்க்க-இந்து-சரணம்) சூரிய, சந்திரர்களைச் சக்கரங்களாகக் கொண்ட (அவனிரதம்) பூமியாகிய தேரில் (ஸஜ்ஜிதவதே) போருக்குச் செல்லும் (ப்ரமதபதயே) பிரமத கணங்களுக்கு அதிபதியான பரமேசுவரனையே (த்ருஹ்யதி) வஞ்சிக்க எண்ணி எதிர்க்கிருன்.

---

வா விலஸன் தேதீப்ய- மானுே ऽபாங்கவ்யாஸங்கஃ கடாக்ஷ-விக்ஷேப-சாதுரீ விசேஷஃ சரஸந்தான திஷணும் பாணஸம்யோஜன - புத்திம் திசதி ॥ — அருணுமோதினீ.

‘ஸ்மராரே-ராதத்தே’ என்ற பாடத்தில் மன்மத வைரியான பரமசிவனுக்கு அந்த எண்ணத்தை உண்டாக்குகிறது என்பது கருத்து.

---

59. யமாச்ரித்ய த்ருஹ்யதி। ப்ரதமபதயே।—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सरस्वत्याः सूक्ती-रमृतलहरी कौशलहरीः
पिबन्त्याः शर्वाणि श्रवण-चुलुकाभ्या-मविरलम् ।
चमत्कार-श्लाघाचलित-शिरसः कुण्डलगणो
झणत्कारैस्तारैः प्रतिवचन-माचष्ट इव ते ॥ ६० ॥

ஸரஸ்வத்யாః ஸூக்தீ-ரம்ருத-லஹரீ கௌசலஹரீః
பிபந்த்யாః சர்வாணி ச்ரவண-சுலுகாப்யா-மவிரலம்।
சமத்கார- ச்லாகாசலித சிரஸః குண்டலகணோ
ஜணத்காரைஸ்-தாரைః ப்ரதிவசன-மாசஷ்ட இவதே

---

60 மதுரமான சொல்லோசை

( வாக்குப்பலிதம், ஊமையையும் பேச வைப்பது. )

(சர்வாணி) பரமசிவபத்தினியே! (அம்ருதலஹரீ-கௌசல-ஹரீః) அமுதப் பெருக்கின் இனிமையைத் தனதாக்கிக் கொண்ட (தே) உன்னுடைய (ஸூக்தீః) சொல்லமுதத்தை (ச்ரவண-சுலுகாப்யாம்) காதுகளாகிய பாத்திரங்களால் (அவிரலம்) இடைவிடாது (பிபந்த்யாః) பருகுபவரும் (சமத்கார-ச்லாகா-) அப்பேச்சின் திறமையைப் போற்றும் வகையில் (சலித-சிரஸః) தலையை அசைப்பவருமான (ஸரஸ்வத்யாః) ஸரஸ்வதீ தேவியினுடைய (குண்டலகணః) காதணிகள் (ஜணத்காரைః) 'ஜணத் ஜணத்' என்ற (தாரைః) உயர்ந்த ஒலியால் (ப்ரதிவசனம்) 'ஆம் ஆம்' என்ற ஆமோதிப்பை (ஆசஷ்ட இவ) சொல்லுவனபோல் தோன்றுகின்றன.

---

அம்பாளுடைய கடைக்கண் அழகைத் தியானிப்பவர்களுக்கு ஸகல ஸௌபாக்கியங்களும் சித்திக்கும்.

ஓ. தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா, மனந்தரும் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா, இனந்தரும் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே, கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. —அபிராமி அந்தாதி 69.

---

60. சுலுகாப்யா-மவிரதம்। —பா. பே.

ஸௌ—9

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



असौ नासावंश-स्तुहिनगिरिवंश-ध्वजपटि
त्वदीयो नेदीयः फलतु फल-मस्माकमुचितम् ।
वहत्यन्तर्मुक्ताः शिशिरकर-निश्वास-गलितं
समृद्ध्या यत्तासां बहिरपि च मुक्तामणिधरः ॥ ६१ ॥

அஸௌ நாஸாவம்சஸ்-துஹிநகிரிவம்ச-த்வஜபடி
த்வதீயோ நேதீயঃ பலது பல-மஸ்மாக-முசிதம் ।
வஹத்யந்தர் முக்தாঃ சிசிரகர-நிச்வாஸ-கலிதம்
ஸம்ருத்த்யா யத்தாஸாம் பஹிரபி ச முக்தாமணிதரঃ ॥

---

61. மூக்குத்தி முத்தின் அழகு
(மனோஜயம், லக்ஷ்மீகடாக்ஷம்.)

(துஹினகிரிவம்ச - த்வஜபடி) ஹிமவானுடைய குலமாகிய கொம்பில் பறக்கும் கொடிபோன்றவளே! (த்வதீயঃ) உன்னுடைய (அஸௌ) இந்த (நாஸா வம்சঃ)

---

59. மன்மதன் ஒருவனாக இருந்தும் பிரமதகணங்களால் சூழப்பெற்ற பரமசிவனுடன் போர் புரியத் துணிச்சலுக்குக் காரணம் அம்பாளுடைய முகத்தின் அழகே யாகும் பரமசிவனுடைய தேருக்கு இரண்டு சக்கரங்கள், மன்மதனுடைய தேருக்கு நான்கு சக்கரங்கள்.

இங்கே கண்ணாடிபோல் பிரகாசிக்கும் தேவியின் கன்னங்கள் தியானிக்கப்படுகின்றன.

ஓ. (பத்மராக சிலாதர்ச-பரிபாவி-கபோல-பூঃ) பத்மராக சிலைக் கண்ணாடியினும் மிகுந்த பிரகாசமான கன்னங்களைக் கொண்டவள். —ல. ஸ. 23.

60 ச்ரவண சுலுகாப்யாம்—கர்ணரூப-கரதலாப்யாம், கரதலேனைவ கலு பானீயாதி பேயம் பீயத இதி கரதல ஸாதர்ம்யம் ச்ரவணஸ்ய, தேன ச ஸரஸ்வதீ-ஸூக்தீனாம் அம்ருத-ரஸாத்மகத்வம் த்வன்யதே।

---

61. வஹந்நந்தঃ சிசிரதர நிச்வாஸ ஜனிதாঃ। முக்தா- மணி-மதாத்। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மூங்கில் தண்டு போன்ற மூக்கு (அஸ்மாகம்) எங்களுக்கு (உசிதம்) பொருத்தமானதும் (நேதீய:) விரைவில் கை கூடுவதுமான (பலம்) நற்பயனை (பலது) அளிக்கட்டும். (ய:) அந்த மூக்காகிய மூங்கில் தண்டு (அந்த:) உள்ளே (முக்தா:) முத்துக்களை (வஹதி) வைத்துக்கொண்டிருக்கிறது போலும்; (தாஸாம் ஸம்ருத்யா) அவ்வாறு முத்துக்கள் நிறைந்திருப்பதால்தான் (பஹி: அபி ச) வெளியிலேயும் (சிசிரகர-நிச்வாஸ-கலிதம்) சந்திரநாடி பாயும் இடதுநாசியின் வழி வெளியே வரும் மூச்சுக் காற்றினல் கொண்டுவரப்பட்ட (முக்தாமணிதர:) சிறந்த முத்தை அணிந்துகொண்டிருக்கிறது போலும்.

---

அவிரதம் என்னும் பாடத்துக்கு எப்போதும் என்பது அர்த்தம்.

ஸரஸ்வதியினுடைய பாடல்களைக் கேட்டுத் தேவி தலையசைத்து மகிழ்கிருள். அப்போது தேவியின் காதணிகள் செய்யும் இனிமையான ஒலி இங்கே தியானிக்கப்படுகிறது என்று அருணு மோதினீ உரை கூறுகிறது.

61. நாஸா வம்சஸ்-துஹின - கிரிவம்ச-த்வஜபடி:- 'வம்ச' என்னும் சொல்லை மூங்கிலுக்கும் குலத்திற்கும் உபயோகப்படுத்தி யிருப்பதில் கவியழகு தோன்றுகிறது.

அந்தர்- முக்தா: — இங்கே (முக்தா) முத்து என்னும் சொல், சிலேடையாக முக்தியையும் குறிக்கும். 'பலம் (நற்பயன்)' என்பதும் முக்தியே

சிசிரகர - நிச்வாஸகலிதம்—சிசாகர: சந்த்ர:, தஸ்ய நிச்வாஸோ வாமநாடீ மார்க்க - வாயு: தேன கலிதம். 'சிசிரதர- நிச்வாஸ-ஜனிதா:' என்ற பாடத்தில் குளிர்ந்த வெளிமூச்சில் தோன்றிய என்பது அர்த்தம் தேவியின் இடது மூக்கில் உள்ள நல்முத்தால் ஆன மூக்குத்தி அழகிய மூங்கிலின் வெளியில் தோன்றிய முத்துப்போல் இருக்கிறது என்பது வர்ணிக்கப்படுகிறது.

இவ்விதம் தேவியினுடைய நாஸிகையைத் தியானம் செய்வதால் பிராணஜயமும் மனேஜயமும் லக்ஷ்மீ கடாக்ஷமும் முக்திஸாம்ராஜ்யமும் கிட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



प्रकृत्याऽऽरक्ताया-स्तव सुदति दन्तच्छदरुचेः
प्रवक्ष्ये सादृश्यं जनयतु फलं विद्रुमलता ।
न बिंबं तद्बिंब-प्रतिफलन-रागा-दरुणितं
तुलामध्यारोढुं कथमिव विलज्जेत कलया ॥ ६२ ॥

ப்ரக்ருத்யாऽऽரக்தாயாஸ்-தவ ஸுததி தந்தச்சத-ருசே:
ப்ரவக்ஷ்யே ஸாத்ருச்யம் ஜனயது பலம் வித்ருமலதா
ந பிம்பம் தத்பிம்ப-ப்ரதிபலன-ராகா-தருணிதம்
துலா-மத்யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா ‖ 62 ‖

---

62. உதடுகளின் அழகு (நல்ல நித்திரை.)

(ஸுததி) அழகிய பற்களைக் கொண்டவளே! (ப்ரக்ருத்யா) இயற்கையாகவே (ஆரக்தாயா:) சிவந்திருக்கிற (தவ) உன்னுடைய (தந்தச்சத-ருசே:) உதடுகளின் அழகுக்கு (ஸாத்ருச்யம்) உபமானம் (ப்ரவக்ஷ்யே) சொல்லுகிறேன். (வித்ரும-லதா) பவழக்கொடி (பலம்) பழத்தை (ஜனயது) உண்டாக்கட்டும். (அது ஒரு வேளை உபமானமாகலாம். ஆனல் பவழக்கொடிக்குப் பழமில்லை.) (பிம்பம்) கோவைப்பழமோ என்றல் (தத்பிம்ப ப்ரதிபலன-ராகாத்) தேவியின் உதடுகளைப்போல் இருக்கவேண்டும் என்று அச்சிவப்பைத் தன்னிடம் பிரதிபலிக்கச் செய்து கொண்டதால் (அருணிதம்) சிவப்பாக இருப்பதால் (துலாம்) சமத்துவத்தை (கலயா) சிறிதளவுகூட (அத்யாரோடும்) அடைய முயன்றலும் (கதம் இவ) எப்படித்தான் (ந விலஜ்ஜேத) வெட்கப்படாமல் இருக்கும்?

---

62. ஒ. (நவ வித்ரும- பிம்ப-ஶ்ரீ- ந்யக்காரி- தசனச்சதா) புதிதான பவழத்தினும் கோவைப்பழத்தினும் சிறந்த காந்தியுடைய உதடுகளைக் கொண்டவள். ல.ஸ.24

---

62. த்வத்பிம்ப। த்ருக்பிம்ப - ப்ரதிபலன - லாபாதருணிதம்। ந லஜ்ஜேத।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



स्मितज्योत्स्नाजालं तव वदनचन्द्रस्य पिबतां
चकोराणा-मासी-दतिरसतया चञ्चु-जडिमा ।
अतस्ते शीतांशो-रमृतलहरी माम्लरुचयः
पिबन्ति स्वच्छन्दं निशि निशि भृशं काञ्जिकधिया ॥

ஸ்மிதஜ்யோத்ஸ்ணுஜாலம் தவ வதன-சந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணு-மாஸீ-ததிரஸதயா சஞ்சு-ஜடிமா।
அதஸ்தே சிதாம்சோ-ரம்ருதலஹரீ-மாம்லருசயஃ
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசி நிசி ப்ருசம் காஞ்ஜிகதியா॥

63. புன்சிரிப்பின் அழகு (ஸர்வஜன ஸம்மோஹனம்.)

(தவ) உன்னுடைய (வதன-சந்த்ரஸ்ய) முகமாகிய சந்திரனின் (ஸ்மித-ஜ்யோத்ஸ்ணு ஜாலம்) புன்சிரிப்பாகிய அமுதம்போன்ற நிலவுக்கற்றையை (பிபதாம்) பருகும் (சகோராணும்) சகோரபக்ஷிகளுக்கு (அதிரஸ தயா) அதன் அளவு கடந்த தித்திப்பால் (சஞ்சுஜடிமா ஆஸீத்) அலகு, உணர்ச்சி இழந்ததாக ஆகிவிட்டது. (அதஃ) அதனுல் (தே) அவை (ஆம்ல-ருசயஃ) புளிப்பில் ஆசை கொண்டு(சிதாம்சோஃ)குளிர்ந்த கிரணம் கொண்ட சந்திரனின் (அம்ருத லஹரீம்) நிலவாகிய அமுதப் பெருக்கை (காஞ்ஜிக-தியா) புளித்தகஞ்சி என்று எண்ணி (ஸ்வச்சந்தம்) வேண்டியவரை (நிசி நிசி) இரவு தோறும் (ப்ருசம்) நிறைய (பிபந்தி) பருகுகின்றன.

63. 'சகோரச் சந்த்ரிகாபாயீ' —அமரம்.

ஓ. யானி ஸௌம்யானி சோணுனி ச்ருங்காரரஸ பாஞ்ஜி ச। தான்யாஹுஃ சக்தி பாதேன் ஸம்பன்னுனீதி நிச்சயஃ॥

அழகியதும் சிவந்ததும் சிருங்காரரஸம் வாய்ந்தது மான எது எது உண்டோ அது எல்லாம் சக்தியம்சம் என்பது நிச்சயம்.

63. அம்ல-ருசயஃ। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अविश्रान्तं पत्युर्गुणगण-कथाम्रेडनजपा
जपापुष्पच्छाया तव जननि जिह्वा जयति सा ।
यदग्रासीनायाः स्फटिकदृष-दच्छच्छविमयी
सरस्वत्या मूर्तिः परिणमति माणिक्यवपुषा ॥ ६४ ॥

அவிச்ராந்தம் பத்யுர்-குணகண-கதாம்ரேடனஜபா
ஜபாபுஷ்பச்சாயா தவ ஜனனி ஜிஹ்வா ஜயதி ஸா
யதக்ராஸீநாயா: ஸ்படிகத்ருஷ-தச்சச்சவி-மயீ
ஸரஸ்வத்யா மூர்த்தி: பரிணமதி மாணிக்யவபுஷா ॥

---

64 நாவின் வர்ணனை (ஸரஸ்வதி கடாக்ஷம்)

(ஜனனி) தாயே! (தவ) உன்னுடைய (ஸா) பிரசித்த மான (ஜிஹ்வா) நாக்கு (அவிச்ராந்தம்) இடைவிடாமல் (பத்யு:) பதியாகிய பரமசிவனுடைய (குண-கண கதாம் ரேடன-ஜபா) பல குணங்களை விளக்கும் கதைகளைப் பேசு வதையே ஜபமாய்க் கொண்டு (ஜபா-புஷ்பச்சாயா) செம்பருத்திப் புஷ்பம்போல சிவந்து (ஜயதி) சிறப்புடன் விளங்குகிறது. (யத் அக்ராஸீனாயா:) அந்நாக்கின் நுனியில் இருக்கும் (ஸரஸ்வத்யா:) ஸரஸ்வதியினுடைய (ஸ்படிக த்ருஷத்-) படிகம் போன்ற (அச்ச) தெளிவான (ச்சவிமயீ) காந்தியுடன் கூடிய (மூர்த்தி:) வடிவம் (மாணிக்ய வபுஷா) மாணிக்கம் போல் சிவந்த வடிவமாக (பரிணமதி) மாறுதல் அடைகிறது.

---

'த்ருக்பிம்ப' என்னும் பாடத்தில் தேவியின் கண்ணுக வுள்ள சூரியனுடைய வெப்பத்தால் கோவைப்பழம் சிவந்தமையால் அதன் சிவப்பும் தேவியிடம் கடன் வாங்கியதே யாகும் என்பது கருத்து.

பவழக் கொடியிற் பழுத்த பழம்—

ஒ. பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பனி முறுவல், தவளத் திருநகையும் துணை யாவெங்கள் சங்க

---

64. கதாம்ரேடனஜடா - அச்சச்சவி ருசி: । —பா.பே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



रणे जित्वा दैत्या-नपहृत शिरस्त्रैः कवचिभिः
निवृत्तै श्चण्डांश-त्रिपुरहर-निर्माल्य-विमुखैः ।
विशाखेन्द्रोपेन्द्रैः शशिविशद कर्पूरशकला
विलीयन्ते मातस्तव वदनताम्बूल-कबलाः ॥ ६५ ॥

ரணே ஜித்வா தைத்யா-னபஹ்ருத-சிரஸ்த்ரைః கவசிபிః
நிவ்ருத்தைச் சண்டாம்ச-த்ரிபுரஹர-நிர்மால்ய-விமுகைః
விசாகேந்த்ரோபேந்த்ரைః சசிவிசத-கர்ப்பூரசகலா
விலீயந்தே மாதஸ்தவ வதன-தாம்பூல-கபலாః ‖ 65 ‖

---

65. தேவியின் தாம்பூல மகிமை (வெற்றி, வாக்விலாஸம்.)

(மாதః) தாயே! (ரணே) போரில் (தைத்யான்) அசுரர்களை (ஜித்வா) வென்று (நிவ்ருத்தைః) திரும்பியவர்களும் (அபஹ்ருத-சிரஸ்த்ரைః) தலைப்பாகையை நீக்கியவர்களும் (கவசிபிః) கவசம் பூண்டவர்களும் (சண்டாம்ச-) சண்டிகேசுவரனுடைய பாகமாகிய (த்ரிபுரஹர-நிர்மால்ய-) பரமசிவ நிர்மால்யத்தில் (விமுகைః) நோக்கம் இல்லாதவர்களுமான (விசாக-இந்த்ர-உபேந்த்ரைః) தேவ ஸேனாபதியான ஸுப்ரஹ்மணியர் தேவர்களின் அரசனான இந்திரன், உபேந்திரனாகிய விஷ்ணு ஆகியோரால் (சசி-) சந்திரனைப்போல் (விசத) வெண்மையான (கர்ப்பூரசகலாః) பச்சைக் கர்ப்பூரத்தூளுடன் கூடிய (தவ) உன்னுடைய (வதன-தாம்பூல-கபலாః) வாயில் மெல்லப் பட்ட தாம்பூலக் கவளங்கள் (விலீயந்தே) விழுங்கப் படுகின்றன.

---

ரணத் துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலை யாள், அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே

—அபிராமி அந்தாதி 38.

---

65. விரிஞ்சீந்த்ரோ பேந்த்ரைః। உபஹ்ருதசிரஸ்த்ரைః। சசிசிசிர-கர்ப்பூர-தவலா। தாம்பூல சகலாః। விலிப்யந்தே।

—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



विपञ्च्या गायन्ती विविध-मपदानं पशुपते-
स्त्वयारब्धे वक्तुं चलितशिरसा साधुवचने ।
तदीयै-र्माधुर्यै-रपलपित-तन्त्रीकलरवां
निजां वीणां वाणी निचुलयति चोलेन निभृतम् ॥६६॥

விபஞ்ச்யா காயந்தீ விவித-மபதானம் பசுபதேஸ்-
த்வயாரப்தே வக்தும் சலிதசிரஸா ஸாதுவசனே ।
ததீயைர்-மாதுர்யை-ரபலபித-தந்த்ரீ-கலரவாம்
நிஜாம் வீணும் வாணீ நிசுலயதி சோலேன நிப்ருதம் ॥

---

தேவியின்குரல் வீணையினும் இனியது
(இன்சொல், ஸங்கீத ஞானம்.)

(பசுபதேः) பசுபதியினுடைய (விவிதம்) பல வகைப் பட்ட (அபதானம்) லீலையை (விபஞ்ச்யா) வீணையில் (காயந்தீ) பாடுகின்ற (வாணீ) ஸரஸ்வதீதேவி (த்வயா)

---

ஒ. ('மந்தஸ்மித-ப்ரபாபூர-மஜ்ஜத்-காமேச-மானஸா). காமேசுவரனுடைய மனம் மூழ்கி விளையாடும் பிரவாகம் போன்ற புன்சிரிப்பினள்.

வைத்தியநூல்களில் சிறுகுழந்தைகள் தாயின் அமுதம் போன்ற பாலை உண்டு மாந்த்ய தோஷத்தை அடைந்தால் அதற்கு மாற்றுகப் புளித்த கழுநீர் மருந்தாகக் கூறப்பட்டுள்ளது. தேவியின் புன்சிரிப்பு அமுத நிலவு போன்றது. அதைப் பருகி மாந்த்யம் ஏற்பட்டதால் மாற்றுகக் கழுநீர் போன்ற நிலவைச் சகோர பக்ஷிகள் பருகுகின்றன என்று வர்ணிக்கப்படுகிறது. தேவியின் புன்முறுவலுடைய இனிமையின் சிறப்பை இது கூறுகிறது.

---

66. புரரிபோः
பசுபதே! । ஸ்கலிதவசஸா । லலிதவசஸா ।
அபஹஸித-தந்தரீ-கலரவாம் । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உன்னால் (சலிதசிரஸா) தலையசைப்புடன் (ஸாதுவசனே) ஆமோதிக்கும் வார்த்தையானது (வக்தும்) சொல்வதற்கு (ஆரப்தே) ஆரம்பிக்கப்பட்டபோது (தஸ்யா:) அதனுடைய (மாதுர்யை:) இனிமையால் (அபலபித-தந்த்ரீ-கல-ரவாம்) வீணைத்தந்திகளின் அழகிய ஒலி அவமதிப்புற்றதைக் கண்டு (நிஜாம்) தன்னுடைய (வீணாம்) வீணையை (சோலேன) உரையினால் (நிப்ருதம்) வெளியில் தெரியாவண்ணம் (நிசுலயதி) மூடிவிடுகிறாள்.

---

64. ஆம்ரேடனம் த்விஸ்த்ரி-ருக்தி:। (இரண்டு மன்று தடவை திருப்பிச் சொல்லுதல்.)

'ஆம்ரேடனஜடா' என்ற பாடத்தில் அதையே திருப்பித் திருப்பிச் சிந்திப்பதால் மெய்யும் மறந்து ஜடத்தைப்போல் இருக்கும் நிலை. —அருணா மோதினீ.

65. அபஹ்ருத சிரஸ்த்ரை:— அம்பாளிடம் தேவாசுர யுத்தத்தில் வெற்றிச்செய்தியைச் சொல்ல யுத்தத்திலிருந்து நேராகக் கவசம் தலைப்பாகைகளுடன் வந்ததால் தலைப்பாகையை மட்டும் சுழற்றிவிட்டு நமஸ்கரித்தனர்.

'உபஹ்ருத சிரஸ்த்ரை:' என்ற அருணா மோதினீ பாடத்தில் தோற்கடிக்கப்பட்ட வீரர்களின் தலைப்பாகைகளை வெற்றிக்கு அடையாளமாகக் கொண்டு வந்தார்கள் என்பது கருத்து.

'விசாகேந்த்ரோபேந்த்ரை: (குமார மஹேந்த்ர-விஷ்ணவபிதானை: புத்ரை:) ஸ்கந்தர், இந்திரர், விஷ்ணு ஆகிய எல்லோருமே தேவியின் புத்திரர்கள்தாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அம்பாளுடைய தாம்பூலத்தில் கலந்திருந்த வெண்மை யான பச்சைக்கர்ப்பூரம் இவர்களுக்குப் பிரஸாதமாகக் கிடைத்தது.

சண்டாம்சஃ — 'சிவ நிர்மால்யம் சண்டிகேசுவரர் என்ற பக்தருக்கே முன்மையாக உரியது. மற்றவர் களுக்கு அது உரியதன்று' என்று சாஸ்திரம் கூறுவதன் கருத்து, 'சாதாரணமக்களுக்கு அதை ஏற்றுகொள்ளப் போதுமான ஆசாரம் இல்லை' என்பதேயாகும். அதே கருத்தினால்தான் போரிலிருந்து கவசங்களைக்கூடக் கழற்றுமல் வந்த சமயத்தில் தேவ ஸேனுபதியான குமரப் பெருமானும் மற்றவர்களும் கூடச் சிவனிடம் அந்த வேஷத்தில் செல்லக் கூசித் தாயின் ஸந்நிதிக்குச் சென்றனர். தாயின் அன்பு ஆசாரக்குறைவைப் பொருட்படுத்துவதில்லை.

66. விபஞ்ச்யா—'விபஞ்சீ ஸா து தந்த்ரீபிஃ பரிவா தினீ' என்பது அமரம். ஸரஸ்வதியின் வீணைக்குக் கச்சபீ என்பது பெயர். 'நிஜஸல்லாப-மாதுர்ய-விநிர்ப்பர்த்ஸித-கச்சபீ. கச்சபீ என்ற சிறந்த வீணைநாதத்திலும் இனிய மொழியாள் என்பது லலிதா ஸஹஸ்ரநாமம்.

தேவியினுடைய மொழி, 'வீணையினும் இனியதாக இருந்ததால் அதைக் கேட்போம்' என்று ஸரஸ்வதி வீணையை மூடி வைத்துவிட்டாள். இப்படித் தேவியைத் தியானிப்பதால் வாக்கின் இனிமை சித்திக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



करा‍ग्रेण स्पृष्टं तुहिनगिरिणा वत्सलतया
गिरीशेनो-दस्तं मुहुरधरपानाकुलतया ।
करग्राह्यं शंभोर्मुखमुकुरवृन्तं गिरिसुते
कथंकारं ब्रूम-स्तव चुबुक-मौपम्यरहितम् ॥ ६७ ॥

கராக்ரேண ஸ்ப்ருஷ்டம் துஹிநகிரிணா வத்ஸலதயா
கிரீசேனோதஸ்தம் முஹுரதரபானாகுலதயா ।
கரக்ராஹ்யம் சம்போர் முகமுகுரவ்ருந்தம் கிரிஸுதே
கதங்காரம் ப்ரூமஸ்-தவ சுபுக-மௌபம்ய-ரஹிதம் ॥

---

67. மோவாய்க்கட்டையின் சிறப்பு
(தேவியின் பிரஸன்னம்)

(கிரிஸுதே) மலையரசன் பெண்ணே ! (துஹினகிரிணா) இமவானால் (வத்ஸலதயா) வாத்ஸல்யத்துடன் (கராக்ரேண) நுனிக்கையால் (ஸ்ப்ருஷ்டம்) தொடப்பட்டதும் (கிரிசேன) பரமசிவனால் (அதரபானாகுலதயா) அதர பானம் செய்யும் ஆவலுடன் (முஹுః) அடிக்கடி (உதஸ்தம்) உயர்த்தப்பட்டதும் (சம்போః) பரமசிவனுடைய (கரக்ராஹ்யம்) கையால் அங்ஙனம் தொடுதற்கு உரியதும் (ஔபம்ய-ரஹிதம்) உவமையற்றதும் (முக-முகுர-வ்ருந்தம்) முகமாகிய கண்ணாடிக்குப் பிடிபோன்றதும் ஆகிய (தவ) உன்னுடைய (சுபுகம்) மோவாய்க் கட்டையை (கதம் காரம்) எப்படித்தான் (ப்ரூமః) வர்ணிப்போம் ?

---

67. வாத்ஸல்யத்தினால் இமவானால் தொடப்பட்டதும், பிரேமையால் பரமசிவனால் தொடப்பட்டதுமான மோவாய்க்கட்டையின் பெருமை இங்கே வர்ணிக்கப் படுகிறது. அது ஒப்புயர்வற்ற அழகு வாய்ந்தது.

ஓ. (அனுகலித - ஸாத்ருச்ய - சுபுக-ஶ்ரீ விராஜிதா) உவமையற்ற அழகு வாய்ந்த மோவாய்க்கட்டையின் அழகு உடையவள். —ல. ஸ. 29

---

67. சிபுக-மௌபம்யரஹிதம் । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



भुजाश्लेषान्नित्यं पुरदमयितुः कण्टकवती
तव ग्रीवा धत्ते मुखकमलनाल-श्रिय-मियम् ।
स्वतः श्वेता कालागरु-बहुल-जम्बालमलिना
मृणाली-लालित्यं वहति यदधो हारलतिका ॥ ६८ ॥

புஜாச்லேஷாந்-நித்யம் புர-தமயிதுः கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமலநால-ச்ரிய-மியம் ।
ஸ்வதः ச்வேதா காலாகரு-பஹுல-ஜம்பால-மலிநா
ம்ருணாலீ-லாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா ||

---

68. முகத்தாமரைக்குக் காம்பு போன்ற கழுத்து
(ராஜ வச்யம்.)

(தவ) உன்னுடைய (இயம்) இந்த (க்ரீவா) கழுத்து (புரதமயிதுः) முப்புரம் எரித்த பரமசிவனுடைய (புஜாச்லேஷாத்) புஜங்களின் தழுவுதலால் (நித்யம்) எப்போதும் (கண்டகவதீ) மயிர்க்குச்சால் முள்களுடன் கூடியிருப்பதால் (முக-கமல-நால-ச்ரியம்) முகத்தாமரைக்குக் காம்புபோன்ற பொலிவை (தத்தே) அடைகிறது. (யத் அதः) அதற்கும் கீழுள்ள (ஹார-லதிகா) முத்து மாலை (ஸ்வத) இயற்கையில் (ச்வேதா) வெண்மையாயினும் (காலாகரு) கறுப்பான அகிலுடன் கூடிய (பஹுல - ஜம்பால) சந்தனக்குழம்பின் மிகுதியால் (மலிநா) சேற்றில் அழுக்கடைந்த (ம்ருணாலீ) தாமரைக் கொடியின் (லாலித்யம்) பொலிவைக் (வஹதி) கொண்டதாக இருக்கிறது.

---

ஒ ஸா ஜயதி - சக்தி ராத்யா நிஜஸுகமய-நித்ய-
நிருப-மாகாரா ।
பாவிசராசர-பீஜம் சிவரூப-விமர்ச-நிர்மலாதர்சः ||
—காமகலா விலாஸம் 2.

'இனி உண்டாகப்போகும் சராசரவடிவான உலகனைத்திற்கும் விதை போன்றதும் சிவஸ்வரூபமான 'அஹம்'

---

68. யதஹோ ஹாரலதிகா। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



गले रेखास्तिस्रो गति-गमक-गीतैक निपुणे
विवाह-व्यानद्ध-प्रगुणगुण-संख्या-प्रतिभुवः ।
विराजन्ते नानाविध-मधुर रागाकर-भुवां
त्रयाणां ग्रामाणां स्थिति-नियम-सीमान इव ते ॥६९॥

கலே ரேகாஸ்திஸ்ரோ கதி-கமக-கீதைக-நிபுணே
விவாஹ-வ்யாநத்த-ப்ரகுணகுண-ஸங்க்யா ப்ரதிபுவஃ
விராஜந்தே நாஞவித-மதுர-ராகாகர-புவாம்
த்ரயாணும் க்ராமாணும் ஸ்திதி-நியம ஸீமான இவ தே ‖

---

69. கழுத்தில் பிரகாசிக்கும் மூன்று ரேகைகள்
(ஸங்கீத ஞானம்.)

(கதி-கமக-கீத-ஏக-நிபுணே) ஸங்கீத கதி, கமகம், கீதம் ஆகியவற்றில் ஒப்புயர்வற்ற திறமை வாய்ந்தவளே! (தே) உன்னுடைய (கலே) கழுத்தில் உள்ள (திஸ்ரஃ) மூன்று (ரேகாஃ) பாக்கிய ரேகைகள் (விவாஹ) விவாக காலத்தில் (வ்யாநத்த) நன்ருய் கட்டப்பட்ட (ப்ரகுண) பல நூல்கள் கொண்ட (குண-ஸங்க்யா) சரட்டின் எண் ணிக்கையை (ப்ரதிபுவஃ) ஞாபகப்படுத்துவது போலும்,

---

என்பதன் விமர்சனத்திற்குத் தெளிவான கண்ணுடி போன்றதும் ஆனந்தமய மானதும் நித்தியமானதும் உவமையற்றதும் ஆகிய ஆதிசக்தி, ஸர்வோத்கிருஷ்டமாய் விளங்குகிருள்.'

அஹம்பத லக்ஷ்யார்த்த ஞானம் ஏற்படுவதற்கு ஸ்வச்சமான கண்ணுடி போன்றவள் சிச்சக்தி. இதஞல் தான் லலிதாஸஹஸ்ரநாமம் தேவியை 'சிவஜ்ஞான-ப்ரதாயினீ' எனக் கூறுகிறது.

69. உத்தம ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் நெற்றி, கழுத்து, வயிறு ஆகிய மூன்றிடங்களில் மூன்று கோடுகள் இருக்கும் என்று ஸாமுத்ரிகா சாஸ்திரம் கூறுகிறது.

---

69. வ்யாநத்த—த்ரிகுண। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(நானுவித) பலவிதமான (மதுர-ராக-ஆகர-புவாம்) இனிய ராகங்களுக்குத் தோற்றுவாயாக உள்ள (த்ரயாணும் க்ராமாணும்) ஷட்ஜம், மத்யமம், காந்தாரம் என்ற மூன்று தொகுதிகளுக்கும் (ஸ்திதி-நியம-ஸீமான இவ) இடத்தையும் எல்லையையும் பிரித்துக் காட்டுவது போலும் (விராஜந்தே) விளங்குகின்றன.

---

லலாடே௦ச களே சைவ மத்யேசாபி வளித்ரயம்।
ஸ்த்ரீ-பும்ஸயோரிதம் ஜ்ஞேயம் மஹாஸௌபாக்யஸூசகம்

'விவாககாலத்தில் மாங்கல்யதாரணத்திற்குப் பிறகு இடதுகையில் ஒரு ஸரமும், கழுத்தில் மூன்று ஸரமுமாகச் சரடு கட்டுவது சில தேசங்களில் வழக்கம்' என்று கிருஹ்ய ஸூத்ரம் கூறுகிறது.

மாங்கல்ய-தந்துனேன பத்வா மங்கல-ஸூத்ரகம் ।
வாமஹஸ்தே ஸரம் பத்வா கண்டே ச த்ரிஸரம் ததா ॥

கழுத்தில் உள்ள ரேகை விவாககாலத்தில் கட்டின சரட்டை ஞாபகப்படுத்துவதுபோல் இருக்கிறது.

மேலும் இம்மூன்று ரேகைகள் 'கதி, கமகம், கீதம் என்ற சங்கீதமுறைகள் தேவியின் கண்டத்தினின்று எழுகின்றன' என்று குறிப்பிடுவது போலும். ஷட்ஜம், மத்யமம், காந்தாரம் என்ற ஸ்வரத்தொகுதிகளின் எல்லைகளைக் காட்டுவனபோலும் விளங்குகின்றன.

அருண மோதினீ வியாக்யானத்தில் மூன்று பிரிவுள்ள மாங்கல்ய ஸூத்ரத்தையே மூன்று ரேகைகள் ஞாபகப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. 'ப்ரகுண குணஃ யோ மாங்கல்ய ஸூத்ரரூபஃ தஸ்ய ஸங்க்யாஃத்ரிப்ரகாராஃ ப்ரதிபுவஃ ஸாத்ருச்யஃ

ஓ. காமேச பத்த-மாங்கல்ய-ஸூத்ர-சோபித-கந்தரா.
—ல. ஸ.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



मृणाली-मृद्वीनां तव भुजलतानां चतसृणां
चतुर्भिः सौन्दर्यं सरसिजभवः स्तौति वदनैः ।
नखेभ्यः सन्त्रस्यन् प्रथम-मथना-दन्तकरिपोः
चतुर्णां शीर्षाणां सम-मभयहस्तार्पण-धिया ॥ ७० ॥

ம்ருணாலீ-ம்ருத்வீனும் தவ புஜலதானும் சதஸ்ருணும்
சதுர்ப்பிঃ ஸௌந்தர்யம் ஸரஸிஜபவঃ ஸ்தௌதி
வதனைঃ।
நகேப்யঃ ஸந்த்ரஸ்யன் ப்ரதம-மதனு தந்தகரிபோঃ
சதுர்ணும் சீர்ஷாணும் ஸம-மபய-ஹஸ்தார்ப்பண-
தியா ‖ 70 ‖

---

70. தாமரைக்கொடிகள் போன்ற நான்கு கைகள்
(சிவாபராதத்திற்குச் சாந்தி)

(ம்ருணாலீ - ம்ருத்வீனும்) தாமரைத்தண்டுபோல் மெதுவாய்த் துவளும் (தவ) உன்னுடைய (சதஸ்ருணும்) நான்கு (புஜலதானும்) கொடிபோன்ற கைகளின் (ஸௌந்தர்யம்) அழகை (ஸரஸிஜபவঃ) தாமரையில் உதித்த பிரம்மா (ப்ரதம மதனுத்) முதலில் தனது தலைகளில் ஒன்றைக் கிள்ளிவிட்ட (அந்தகரிபோঃ) காலகாலனை பரமசிவனுடைய (நகேப்யঃ) நகங்களினின்று (ஸந்த்ரஸ்யன்) பயந்துகொண்டு (ஸமம்) ஸமகாலத்தில் (சதுர்ணும்) நான்கு (சிர்ஷாணும்) தலைகளுக்கும் (அபயஹஸ்த-அர்ப்பண-தியா) நான்கு கைகளாலும் அபயம் அளிப்பாய் என்ற நோக்கத்துடன் (சதுர்ப்பிர்-வதனைঃ) நான்கு முகங்களாலும் (ஸ்தௌதி) துதிக்கிறார்.

---

70. ஸரஸிஜபவঃ—ப்ரஹ்மா, விஷ்ணுநாபீ கமலோத்பன்னத்வாத்। தத்ர மதுகைடப - பீடிதாத்ம-ரக்ஷணய பவத் ஸ்தோத்ரபராயண இதி பாவঃ।

ப்ரதமமதனுத்—ப்ரதமஸ்ய சிரஸோ மதனுத் விநாசாத் -ஆதிமதனுத் இதி வா।

---

70. ப்ரதமதமனுத்। சதுர்ணும் வக்த்ராணும்।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



नखाना-मुद्योतै र्नवनलिनरागं विहसतां
करणां ते कान्ति कथय कथयामः कथमुमे ।
कयाचिद्वा साम्यं भजतु कलया हन्त कमलं
यदि क्रीडल्लक्ष्मी-चरणतल लाक्षारस-चणम् ॥ ७१ ॥

நகாணு-முத்யோதைர்-நவநலின-ராகம் விஹஸதாம்
கராணும் தே காந்திம் கதய கதயாமः கதமுமே ।
கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல்லக்ஷ்மீ-சரண-தல-லாக்ஷா-ரஸ-சணம் ॥

71. கமலம்போல் சிவந்த கைநகங்களின் காந்தி
(லக்ஷ்மீ கடாக்ஷம்.)

(உமே) உமா தேவியே! (நகாணும்) நகங்களுடைய (உத்யோதைः) சிறந்த ஒளியினுல் (நவ-நலின-ராகம்) அன்றலர்ந்த தாமரையின் சிவப்பை (விஹஸதாம்) ஏளனம் செய்கின்ற (தே) உன்னுடைய (கராணும்) கைகளின் (காந்திம்) காந்தியை (கதம்) எவ்வாறு (கதயாமः) வருணிப்போம்? (கதய) நீயே சொல் (ஹந்த) அது கஷ்டம். (கமலம்) செந்தாமரை (யதி) ஒருவேளை (க்ரீடத் லக்ஷ்மீ-சரண-தல-) தன்னிடம் லீலை புரியும் லக்ஷ்மியின் திருவடியில் உள்ள (லாக்ஷாரஸ-சணம்) செம்பஞ்சுக் குழம்புடன் சேர்த்தால் (கயாசித்வா) எப்படியோ (கலயா) சிறிதளவாவது (ஸாம்யம்) ஒற்றுமையை (பஜது) அடையலாம்.

பிரம்மாவும் விஷ்ணுவும் பரமசிவனுடைய முடியையும் அடியையும் பார்த்து வருவதாகச் சென்ருர்கள் என்றும் விஷ்ணு வராஹவடிவில் பாதாளம்வரை சென்றும் 'காண முடியவில்லை' என்று கூறினதாகவும், பிரம்மா, ஹம்ஸத்தில் ஏறி மேலே சென்று முடியைக் காணுத போதும் கண்டதாகத் திரும்பி வந்து பொய் சொன்னதாகவும் அந்தக் குற்றத்திற்காகப் பரமசிவன்

71. லாக்ஷாऽருண-தளம் । பஜது விதயா । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



समं देवि स्कन्द द्विपवदन पीतं स्तनयुगं
तवेदं नः खेदं हरतु सततं प्रस्नुत-मुखम्।
यदालोक्याशङ्काकुलित हृदयो हासजनकः
स्वकुम्भौ हेरंबः परिमृशति हस्तेन झडिति ॥ ७२ ॥

ஸமம் தேவி ஸ்கந்த-த்விபவதன-பீதம் ஸ்தனயுகம்
தவேதம் நः கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்னுத-முகம்।
யதாலோக்யாசங்காகுலித-ஹ்ருதயோ ஹாஸஜனகः
ஸ்வகும்பௌ ஹேரம்பः பரிம்ருசதி ஹஸ்தேன ஜடிதி ।

---

72. கணபதியும் ஸ்கந்தனும் பால் பருகும் நகில்கள்
(தேவியருள் சுரத்தல், யக்ஷிணீவச்யம், இரவில் பயமின்மை)

(தேவி) பரதேவதையே! (ப்ரஸ்னுத-முகம்) பால் சுரக்கும் காம்புகளுடன் கூடியதாயும் (ஸமம்) ஸமகாலத்தில் (ஸ்கந்த) ஸ்கந்தனும் (த்விபவதன) யானைமுகத்தோனும் (பீதம்) பால் குடிப்பதுமான (இதம்) இந்த (தவ) உன்னுடைய (ஸ்தனயுகம்) நகில் இரண்டும் (நः) எங்களுடைய (கேதம்) துன்பத்தை (ஸததம்) எப்போதும் (ஹரது) போக்கடிக்கட்டும். (யத்) அந்த நகிலை (ஆலோக்ய) பார்த்து (ஆசங்கா-ஆகுலித-ஹ்ருதய꞉) சந்தேகத்தால் கலங்கிய உள்ளமுடைய (ஹேரம்ப꞉) கணபதி (ஹாஸ-ஜனக꞉) சிரிப்புண்டாகும்படி (ஸ்வகும்பௌ) தன் தலையில் உள்ள இரு கும்பங்களையும் (ஜடிதி) அவசரமாக (ஹஸ்தேன) கையினால் (பரிம்ருசதி) — இருக்கிறதா என்று — தடவிப் பார்த்துக்கொள்கிறார்.

---

புன்சிரிப்புடன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் பொய் சொன்ன தலையைத் தன் நகத்தால் கிள்ளிவிட்டார் என்பதும் புராண வரலாறு தேவியின் அனுக்கிரஹம் இல்லாவிட்டால் தான் சிவாபராதத்தால் மற்றத் தலைகளையும் இழந்துவிட நேரிடுமே। என்று பிரம்மா தேவியைத் துதிக்கிறார்.

71. கலயா—லேசேனபி. விதயா என்ற பாடத்தில் ஏதோ ஒரு விதத்தில் என்பது அர்த்தம்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अमू ते वक्षोजा-वमृतरस-माणिक्य कुतुपौ
न सन्देहस्पन्दो नगपति-पताके मनसि नः।
पिबन्तौ तौ यस्मा दविदित-वधूसङ्ग रसिकौ
कुमारावद्यापि द्विरदवदन-क्रौञ्चदलनौ ॥ ७३ ॥

அமூ தே வக்ஷோஜா-வம்ருதரஸ-மாணிக்ய-குதுபௌ
ந ஸந்தேஹஸ்பந்தோ நகபதி-பதாகே மநஸி நঃ।
பிபந்தௌ தௌ யஸ்மாதவிதித-வதூஸங்க ரஸிகௌ
குமாராவத்யாபி த்விரதவதன-க்ரௌஞ்சதலனௌ ॥

---

73. நகில்கள் அல்ல அவை ஞானமிருத கலசங்கள்
(பால் வளர்ச்சி, ஜீவன் முக்தி)

(நகபதி-பதாகே) மலையரசின் வெற்றிக் கொடியே! (தே) உன்னுடைய (அமூ) இந்த (வக்ஷோஜௌ) நகில்கள் (அம்ருதரஸ) அமிருதரஸம் நிறைந்த (மாணிக்ய-குதுபௌ) ரத்னகலசங்கள் (நঃ) எங்களுக்கு (மனஸி) மனதில் (ஸந்தேஹ-ஸ்பந்தঃ) அதைப்பற்றிச் சந்தேகம் கொஞ்

---

ஓ. அருணும் புயத்துமென் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணும் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணும் புயமும் வதனும் புயமும் கராம்புயமும்
சரணும் புயமும்அல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே
—அபிராமி அந்தாதி.

72. பரதேவதையைத் தியானம் செய்யும்போது மகாகணபதியையும் குமாரஸ்வாமியையும் கூடவே தியானிக்கிறோம். தேவியின் ஸ்தன்யபானத்தால் இவ்விருவரும் அடைந்துள்ள பெருமைக்கு அளவில்லை.

73. நகபதிঃ— ஒ அஸ்த்யுத்தரஸ்யாம் திசி தேவதாத்மா ஹிமாலயோ நாம நகாதிராஜঃ।—காளிதாஸன்.

---

73. மாணிக்ய - கலசௌ। வதூலங்கம - ரஸௌ க்ரௌஞ்ச-தமனௌ। —பா.:பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சம் கூட (ந) இல்லை, (யஸ்மாத்) ஏனென்றால் (தௌ) அவைகளை (பிபந்தௌ) பருகுகிற (த்விரதவதன-க்ரௌஞ்சதலனௌ) யானை முகத்தோனும் க்ரௌஞ்சாசுரனைக் கொன்ற ஸுப்ரஹ்மண்யனும் (அவிதித- வதூ-ஸங்க ரஸிகௌ) ஸ்திரீஸங்க ரஸத்தை அறியாத (குமாரௌ) குழந்தைகளாகவே (அத்ய அபி) இன்றைக்கும் இருக்கிறார்கள்.

---

ந ஸந்தேஹஸ்பந்தః—சாதாரணமாகத் தாய்ப்பாலைப் பருகும் குழந்தைகள் பால்யத்திலிருந்து யௌவனம் முதலிய பருவ மாறுதல்களை அடைவார்கள். கணபதியும் குமரனும் அப்படி அடையாமையால் அவர்கள் பருகியது உடலை வளர்க்கும் பால் அன்று. மோக்ஷத்தை அளிக்கும் அமிருதம் என்பதில் கொஞ்சங்கூடச் சந்தேகம் இல்லை.

அவிதித-வதூஸங்க-ரஸிகௌ குமாரௌ—இருவரும் என்றும் குழந்தைகளாகவே யௌவனத்தில் கிடைக்கக் கூடிய காம சுகம் இன்னது என்றுகூட அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஓ. (யே வத்வௌ ஸித்தலக்ஷ்மீ - தேவஸேனேக்யே ஸ்த்ரியௌ, தயோः ஸங்கரஸிகௌ ஸாஸ்வாதௌ விதாவப்யத்யாபி குமாரௌ பாலகௌ அபூதாமிதிசேஷः। காயஸித்திம் கதாவிவ ஜ்யாயாம்ஸாவபி குமாரௌ, ஸ்த்ரீஸம்போகவந்தாவபி ததநபி - ஜ்ஞதா - த்யோதக-ப்ரஹ்மசாரிபத - காமிநௌ வா ஜாயதாமித்யர்த்தः।) ஸித்தலக்ஷ்மீ என்ற பத்தினியை மகா கணபதியும், தேவஸேனா என்ற பத்தினியை குமரனும் கொண்டவர்கள் ஆயினும் பிரம்மசாரிகளாகவே பிரகாசிக்கிறார்கள். எவ்வளவோ வயது கடந்தவர்கள் ஆயினும் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். —அருணாமோதினீ.

பரதேவதை (வயோऽவஸ்த்தா-விவர்ஜிதா)வயதால் நிலை மாறாதவளாக இருப்பதுபோல் அவளுடைய புத்திரர்களும் இருக்கின்றனர். அங்ஙனம் அவளைத் தியானம் செய்பவர்களும் அவளுடைய புத்திரர்களைப்போன்ற பெருமையை எய்துவர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



वहत्यम्ब स्तम्बेरम-दनुज-कुंभप्रकृतिभिः
समारब्धां मुक्तामणिभि-रमलां हारलतिकाम् ।
कुचाभोगो बिम्बाधर-रुचिभि-रन्तः शबलितां
प्रताप व्यामिश्रां पुरदमयितुः कीर्तिमिव ते ॥ ७४ ॥

வஹத்யம்ப ஸ்தம்பேரம-தனுஜ-கும்பப்ரக்ருதிபிः
ஸமாரப்தாம் முக்தாமணிபி-ரமலாம் ஹாரலதிகாம் ।
குசாபோகோ பிம்பாதர-ருசிபி-ரந்தः சபலிதாம்
ப்ரதாப-வ்யாமிச்ராம் புரதமயிதுः கீர்த்திமிவ தே ॥

74. மார்பில் விளங்கும் முத்துமாலை
(நற்கீர்த்தி)

(அம்ப) அம்மா ! (தே) உன்னுடைய (குசாபோக:) நகில்களின் மத்தியப் பிரதேசம் (ஸ்தம்பேரம-தனுஜ) கஜாசுரனுடைய (கும்ப-ப்ரக்ருதிபி:) கும்பத்தில் இருந்து உண்டான (முக்தாமணிபி:) சிறந்த முத்துக்களால் (ஸமாரப்தாம்) ஆக்கப்பட்டதும் (அமலாம்) குற்றம் அற்றதும் (பிம்பாதர-ருசிபி:) கோவைப் பழம்போல் சிவந்த உதட்டின் காந்தியால் (அந்த: சபலிதாம்) உள் புறம் விசித்திரமான வர்ணங்களோடு பிரகாசிப்பதாகவும் (புரதமயிது:) முப்புரம் அழித்த பரமசிவனுடைய (ப்ரதாப-வ்யாமிச்ராம்) பிரதாபத்தோடு கலந்த (கீர்த்திம் இவ) கீர்த்தியே மாலையாக வந்ததோ என்று விளங்குவதாகவும் உள்ள (ஹாரலதிகாம்) கொடி போன்ற ஹாரத்தை (வஹதி) தாங்குகிறது.

74. முத்துக்கள், முத்துச்சிப்பி, யானையின் தலை, நல்லபாம்பின் தலை, மூங்கில், கரும்பு, மேகம் என்ற ஆறு இடங்களில் உண்டாகும் என்று பண்டை நூல்கள் கூறு கின்றன. யானையின் தலையில் தோன்றும் முத்து கர்ப்பூர வர்ணம் உடையது. கஜாசுரனைப் பரமசிவன் கொன்ற பின் அவன் தலையில் இருந்த முத்துக்கள் எடுக்கப்பட்டுத் தேவிக்கு மாலையாக்கப்பட்டன. அம்முத்துக்களில் தேவி

74. புரவிஜயினः கீர்த்திமிவ । —பா. பே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशु-रास्वाद्य तव यत्
कवीनां प्रौढाना-मजनि कमनीयः कवयिता ॥ ७५ ॥

தவ ஸ்தன்யம் மன்யே தரணிதரகன்யே ஹ்ருதயதः
பயः பாராவாரः பரிவஹதி ஸாரஸ்வத-மிவ ।
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு-ராஸ்வாத்ய தவ யத்
கவீனும் ப்ரௌடானு-மஜனி கமனீயः கவயிதா ‖ 75 ‖

---

75. முலைப்பால் வடிவில் பெருகுவது ஸரஸ்வதியின் பிரவாகம்

(கவிபாடும் திறமை)

(தரணிதர-கன்யே) மலையரசன் பெண்ணே! (தவ) உன்னுடைய (ஸ்தன்யம்) முலைப்பால் (ஹ்ருதயதः) இருதயத்திலிருந்து உதித்த (பயः பாராவாராः) அமிருதப் பிரவாகம் போலும் (ஸாரஸ்வதம் இவ) வாக்தேவதை

---

யின் உதட்டுச் சிவப்புப் பிரதிபலித்து வெள்ளையும் சிவப்பும் கலந்து பிரகாசிக்கலாயின. வெள்ளை, ஸத்கீர்த்திக்கும் சிவப்பு, வெற்றிப் பிரதாபத்திற்கும் அடையாளமாகக் கவிகளால் கொள்ளப்படுவதால், இவ்வர்ணங்களின் கலப்பு, தேவியின் மார்பகத்தில் பரமசிவனுடைய புகழும் வீரமுமே அணிகலனுக விளங்குவதுபோல் தோற்றம் அளித்தது.

75. பயः பாராவாரः — க்ஷீரஸ முத்ரः ।

ஸாரஸ்வதம் ஸரஸ்வதீ-மயமிவ । ஸ்தன்யஸ்ய ச்வேத-வர்ணத்வாத் ஸரஸ்வதீ-மயத்வேன உத்ப்ரேக்ஷணம் । மாதுர்யாத் ஸுதா ரூபத்வேன ச ।

த்ரவிடசிசுः— (த்ரவிட- ஜாதி-ஸமுத்பவः பாலः ஏதத் ஸ்தோத்ர-கர்த்தா ।) திராவிட ஜாதியில் பிறந்த பால

---

75. துஹிநகிரிகன்யே । ஸுதா தாராஸாரः பரிவஹதி । ஸாரஸ்வத இவ । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



யான ஸரஸ்வதியே அவ்வுருக்கொண்டு வந்தாற்போலும் (ப்ரவஹதி) பெருகுகிறது என்று (மன்யே) கருதுகிறேன்; (யத்) ஏனென்றால் (தயாவத்யா) கருணை ததும்பும் உன்னால் (தத்தம்) அளிக்கப்பட்ட (தவ) உன்னுடைய (ஸ்தன்யம்) பாலை (ஆஸ்வாத்ய) அருந்தி (த்ரவிடசிசுஃ) திராவிடக்குழந்தை (ப்ரௌடானாம் கவீனாம்) தலை சிறந்த கவிகளுக்குள் (கமனீயஃ) மனதைக் கவரும் (கவயிதா) கவிஞனாக (அஜனி) ஆகிவிட்டான் அன்றோ!

---

னாகிய இந்த ஸ்தோத்திர கர்த்தா அதாவது சங்கராசாரியர். —லக்ஷ்மீதரர்.

விந்தியமலைக்கு வடக்கே பஞ்ச கௌடர்கள்; தெற்கே பஞ்ச திராவிடர்கள். அது புராதன விபாகம். (1) காஷ்மீரில் ஸாரஸ்வதர், (2) பஞ்சாபில் கான்யகுப்ஜர் (3) வங்காளத்தில் முக்ய கௌடர் (4) ஒரிஸ்ஸாவில் உத்கலர் (5) நேபாளத்திலும் பீஹாரிலும் மைதிலர் (மிச்ரர் எனப் பட்டம் உள்ளவர்கள்) ஆகப் பஞ்ச கௌடர்கள்.

தெற்கே (1) ஆந்திரர் (2) கர்நாடகர் (3) மஹாராஷ்டிரர் (4) கூர்ஜரர் (5) தமிழர் (முக்யத் திராவிடர்) ஆகப் பஞ்சத் திராவிடர்கள்

ஸ்ரீ சங்கரருடைய பரமகுரு கௌடர், சங்கரர் திராவிடர். சங்கரர் சிறு குழந்தையாக இருக்கையில் ஒரு சமயம் தாயும் தந்தையும் வீட்டில் இல்லாதபோது அழுது கொண்டிருந்ததால் பார்வதியே வந்து பால் கொடுத்துத் தேற்றியதாக ஒரு வரலாறு உண்டு. ஆனால் சங்கரர் தன்னைப்பற்றியே 'தலைசிறந்த கவிகளுக்குள் மனத்தைக்கவரும் கவிஞனாக ஆகிவிட்டான்' என்று கூறிக் கொள்வாரா என்பது சந்தேகம். 'திரவிடசிசு' என்றது திருஞான சம்பந்தரைக் குறிக்கும்' என்று காமகோடி ஆசாரியரும் பிறரும் கூறுகிறார்கள். பார்வதி அவருக்குப் பால் கொடுத்து மறைந்தபின் வாயில் பாலின் அடையாளத்தைப் பார்த்துத் தாய்தந்தையர் 'யார் பால் கொடுத்தது' என்று கேட்க, 'தோடுடைய செவியன்' என்று அவர் பாடிய வரலாறு இதற்கு ஆதாரம். இது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



हरक्रोध-ज्वालावलिभि-रवलीढेन वपुषा
गभीरे ते नाभीसरसि कृतसङ्गो मनसिजः ।
समुत्तस्थौ तस्मा-दचलतनये धूमलतिका
जनस्तां जानीते तव जननि रोमावलिरिति ॥ ७६ ॥

ஹரக்ரோத-ஜ்வாலாவலிபி ரவலீடேன வபுஷா
கபீரே தே நாபீ-ஸரஸி க்ருதஸங்கோ மனஸிஜः।
ஸமுத்தஸ்த்தௌ தஸ்மா-தசலதனயே தூமலதிகா
ஜனஸ்தாம் ஜானீதே தவ ஜனனி ரோமாவலிரிதி ‖

---

76. மன்மதன் மூழ்கிய மடுப்போன்ற நாபியின் அழகு
(பரம வைராக்கியம், காமஜயம்)

(அசல தனயே) மலையரசன் பெண்ணே! (மனஸிஜः) மன்மதன் (ஹரக்ரோத-ஜ்வாலாவலிபிः) பரமசிவனுடைய கோபத்தினின்று தோன்றிய அக்கினி ஜ்வாலைகளால் (அவலீடேன) சூழப்பெற்ற (வபுஷா) சரீரம் உடையவனாய் (தே) உன்னுடைய (கபீரே) ஆழமான (நாபீஸரஸி) நாபி என்னும் மடுவில் (க்ருதஸங்கः) நாட்டம் உடையவன் ஆனான்—அதில் முழுகினான். (தஸ்மாத்) அதிலிருந்து (தூமலதிகா) கொடிபோன்ற புகை (ஸமுத்தஸ்தௌ) கிளம்பிற்று. (ஜனனி) தாயே! (தாம்) அதை (ஜனः) ஜனங்கள் (தவ) உன்னுடைய (ரோமாவளிः) — நாபியிலிருந்து மெல்லி தாய் மேலே படரும் — ரோமவரிசை (இதி) என்று (ஜானீதே) கருதுகிறார்கள்.

---

பொருத்தமாகத் தோன்றுகிறது. அப்போது ஞான சம்பந்தர் காலம் சங்கரர் காலத்திற்கு முந்தியதாகும். ஸௌந்தர்ய லஹரியைத் தமிழில் பாடிய வரப்பிரஸாதி யான கவிராஜ பண்டிதரும் 'வருண நன்குறு கவுணியன் சிறுமதலை அம்புயல் பருகியே' என்று பிராம்மண வருணத்தில் கவுணிய அல்லது கௌண்டின்ய கோத்திரத்தில் பிறந்த ஞானசம்பந்தர் எனவே பொருள் கொண்டு பாடுகிறார்.

---

76. ந நு மக்னோ மனஸிஜः। —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



यदेतत्कालिन्दी-तनुतर-तरङ्गाकृति शिवे
कृशे मध्ये किञ्चिज्जननि तव यद्भाति सुधियाम् ।
विमर्दा-दन्योन्यं कुचकलशयो-रन्तरगतं
तनूभूतं व्योम प्रविशदिव नाभिं कुहरिणीम् ॥ ७७ ॥

யதேதத் காலிந்தீ-தனுதர-தரங்காக்ருதி சிவே
க்ருசே மத்யே கிஞ்சிஜ்ஜனனி தவ யத்பாதி ஸுதியாம் ।
விமர்த்தா-தன்யோன்யம் குசகலசயோ-ரந்தரகதம்
தனூபூதம் வ்யோம ப்ரவிசதிவ நாபிம் குஹரிணீம் ॥

---

**77. யமுனையின் சிறு அலை நாபியாகிய மடுவில் புகுவது போன்ற ரோமவரிசை (ஸர்வஜன வச்யம் ஸூக்ஷ்ம தர்சனம்)**

(சிவே) மங்களஸ்வரூபியே! (ஜனனி) தாயே! (தவ) உன்னுடைய (க்ருசே) மெலிந்த (மத்யே) இடையில் (காளிந்தீ) யமுனா நதியின் (தனுதர) மிக மெல்லிய (தரங்க-ஆக்ருதி) அலையின் வடிவு போன்ற (யத் ஏதத்) யாதொரு இந்த (கிஞ்சித்) ஒன்றுள்ளதோ—அதாவது ரோம வரிசையின் சிறு பொலிவு உண்டோ—(யத்) எது (ஸுதியாம்) ஞானிகளுக்கு (பாதி) தியானத்தில் புலப் படுகிறதோ—அது—(குசகலசயோ:) கலசங்கள் போன்ற இரு நகில்களின் (அந்தரகதம்) நடுவில் அகப்பட்டுக் கொண்டதும் (அன்யோன்யம் விமர்த்தாத்) நகில்கள் ஒன்றோடொன்று உறைவதால் (தனூபூதம்) மெலிந்தது மான (வ்யோம)—நீலநிறமுள்ள—ஆகாயம் (குஹரிணீம்) குகைபோன்ற (நாபிம்) தொப்புள் குழியில்(ப்ரவிசத் இவ) புகுவதுபோல் தோன்றுகிறது.

---

மன்மதனை எரித்த பரமேசுவரனுக்குக் காம விகாரத்தை உண்டு பண்ணக்கூடிய அழகுடன் கூடியது தேவியின் நாபி என்பது கருத்து.

77. வ்யோம:— நீலம் நப: இத்யாபாலகோபால-ப்ரஸித்தம்। ககனஸ்ய நீலிமா ச மூர்த்தத்வஞ்ச கவிப்ரஸித்தம்।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



स्थिरो गङ्गावर्तः स्तनमुकुल-रोमावलि-लता-
कलावालं कुण्डं कुसुमशर-तेजो-हुतभुजः ।
रते-र्लीलागारं किमपि तव नाभिर्गिरिसुते
बिलद्वारं सिद्धे-र्गिरिशनयनानां विजयते ॥ ७८ ॥

ஸ்திரோ-கங்காவர்த்தஃஸ்தன-முகுல-ரோமவலி-லதா-
கலாவாலம் குண்டம் குஸுமசர-தேஜோ ஹுதபுஜஃ।
ரதேர்-லீலாகாரம் கிமபி தவ நாபிர்-கிரிஸுதே
பிலத்வாரம் ஸித்தேர்-கிரிச-நயனானாம் விஜயதே || 78 ||

---

78. நகில்களாகிற தாமரை முளைத்த தடாகம் போன்ற நாபி
(ஸர்வலோக வச்யம்)

(கிரிஸுதே) மலையரசன் பெண்ணே! (தவ) உன்னுடைய (நாபிஃ) நாபியானது (கங்காவர்த்தஃ) கங்கை நீரின் சுழலா, (ஸ்திரஃ) ஆனால் அசையாமல் இருக்கிறதா? (ஸ்தன-முகுள-) நகில்களாகிற மொட்டுக்களுடன் கூடிய (ரோமாவலி - லதா) ரோமவரிசையாகிற கொடியின் (கலா) கிழங்கு இருக்கும் (ஆவாலம்) பாத்தியா? (குஸும சர)--மன்மதனுடைய (தேஜஃ) ஒளியாகிய (ஹுதபுஜஃ)

---

78. ஒ. (நாப்யாலவால-ரோமாளி-லதாபல-குசத்வயீ) நாபி என்னும் பாத்தியிலிருந்து முளைத்தெழுந்த கொடி போன்ற மெல்லிய ரோமவரிசையின் உச்சியில் பழுத்த பழங்களை ஒத்த இரு ஸ்தனங்களை யுடையவள். —ல. ஸ.

---

78. நிஜாவாலம்। நாபீதி கிரிஜே। । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அக்கினியின் (குண்டம்) ஹோமகுண்டமா? (ரதே:) ரதியினுடைய (லீலாகாரம்) விளையாட்டு வீடா? (கிரிச-நயனனும் ஸித்தே:) பரமசிவனுடைய கண்கள் செய்த தவம் சித்திக்கும் (பிலத்வாரம்) குகையின் துவாரமா? (கிம் அபி) இன்னதென்று கூற முடியாததாக (விஜயதே) அது விளங்குகின்றது.

---

கிரிச-நயனனும் விஜயதே —(த்ரிலோசன - வ்யதிரிக்த-நயன-அகோசரத்வாத்)

முக்கண்ணனுடைய கண்ணிற்கு அல்லாது மற்றவர் கண்ணுக்கு எட்டாது.

ஸித்தே— ஒ. (நிஜ-தப: பலாப்யாம்)

பார்வதியின் தவத்தின் பயன் பரமசிவன்; பரமசிவனுடைய தவத்திற்குப் பார்வதியே பயன்.

—சிவானந்தலஹரீ 1.

கிமபி—அநிர்வசனீயம்.

குண்டம் — 'நாபியை ஹோமாதாரமான அக்கினி குண்டம் என்று தியானம் செய்யும் காரணத்தால் ஞானாக்னியைக் கொண்டு ஸகல பாபங்களையும், பாபத்திற்குக் காரணமான மூல அக்ஞானத்தையும் எரிக்கச் சக்தி உள்ளவர்களாக ஆகிறார்கள்'.

—தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



निसर्ग क्षीणस्य स्तनतट-भरेण क्लमजुषो
नमन्मूर्ते-र्नारीतिलक शनकै-स्त्रुटयत इव ।
चिरं ते मध्यस्य त्रुटित तटिनी-तीर-तरुणा
समावस्था-स्थेम्नो भवतु कुशलं शैलतनये ॥ ७९ ॥

நிஸர்க்க-க்ஷீணஸ்ய ஸ்தன-தட-பரேண க்லமஜுஷோ
நமன்மூர்த்தேர்-நாரீதிலக சனகைஸ்-த்ருட்யத இவ ।
சிரம் தே மத்யஸ்ய த்ருடித-தடினீ-தீர-தருணு
ஸமாவஸ்தா-ஸ்தேம்னே பவது குசலம் சைலதனயே ॥

---

79. மெல்லிய இடையின் அழகு

(ஸர்வஜன மோஹனம், இந்திரஜால வித்தை)

(நாரீதிலக சைலதனயே) பெண்குலத்தின் திலகமான பார்வதியே! (நிஸர்க்க-க்ஷீணஸ்ய) இயற்கையாகவே மெல்லியதும் (ஸ்தன - தட-பரேண) நகில்களின் பாரத்தினுல் (க்லம ஜுஷ:) வருந்துவதும் (நமன்-மூர்த்தே:) அதனுல் வளைந்த வடிவுடையதும் (சனகை:) மெல்ல மெல்ல (த்ருட்யத இவ) ஒடிந்து போவதுபோல் இருப்பதும் (த்ருடித) இடிந்துபோன (தடினீ தீர) நதியின் கரையில் இருக்கும் (தருணு) மரத்திற்கு (ஸமாவஸ்தா) சமமான நிலையில் (ஸ்தேம்ன:) நிற்பதுமான (தே) உன்னுடைய (மத்யஸ்ய) இடைக்கு (சிரம்) நீண்டகாலம் (குசலம்) க்ஷேமம் (பவது) உண்டாகட்டும்.

---

79. ஒரு சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும் பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த கன்னங் கரிய குழலும் கண்-மூன்றுங் கருத்தில்வைத்துத் தன்னந்தனியாய் இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே. —அபிராமி அந்தாதி 53.

---

79. நமன் மூர்த்தேர் நாபெள வலிஷு சனகை: ।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कुचौ सद्यः स्विद्य-त्तटघटित-कूर्पासभिदुरौ
कषन्तौ दोर्मूले कनककलशाभौ कलयता ।
तव त्रातुं भङ्गादलमिति वलग्नं तनुभुवा
त्रिधा नद्धं देवि त्रिवलि लवलीवल्लिभिरिव ॥ ८० ॥

குசௌ ஸத்ய: ஸ்வித்யத்-தடகடித-கூர்ப்பாஸபிதுரௌ
கஷந்தௌ தோர்-மூலே கனக-கலசாபௌ கலயதா ।
தவ த்ராதும் பங்காதலமிதி வலக்னம் தனுபுவா
த்ரிதா நத்தம் தேவி த்ரிவலி லவலீ-வல்லிபிரிவ ॥ 80 ॥

---

80. இடையில் கட்டிய கொடியைப் போன்ற மூன்று ரேகைகளின் அழகு (மன்மதனை வெல்லும் அழகு, இந்திரஜாலம்)

(தேவி) தேவியே! (ஸத்ய:) — பரமேசுவரனுடைய பெருமையை நினைத்த— அதே க்ஷணத்தில் (ஸ்வித்யத்) பூரிப்பால் வெயர்த்து (தட-கடித) பக்கத்தில் உடலுடன் ஒட்டிக்கொண் டிருக்கிற (கூர்ப்பாஸ) ரவிக்கையை (பிதுரௌ) கிழிப்பனவாகவும் (தோர்மூலே) தோளின் அடிப்பக்கத்தில் (கஷந்தௌ) உறைகின்றனவாகவும் (கனக கலசாபௌ) பொன் குடங்களைப் போன்ற (குசௌ) உனது நகில்களை (கலயதா) செய்கின்ற (தனுபுவா) மன் மதனால் (தவ) உனது (வலக்னம்) இடுப்பை (பங்காத் அலம்) ஒடிந்துபோகாமல் போதுமான வகையில் (த்ராதும்) காப்பதற்கு (இதி) இருக்கட்டும் என்று (த்ரிவலி) இடுப்பில் மூன்று மடிப்புகளாகத் தோன்றும் (லவலீ வல்லிபி:) வள்ளிக்கொடிகளால் (த்ரிதா) மூன்று தடவை (நத்தம் இவ) சுற்றிக் கட்டப்பட்டதுபோல் காண்கின்றது.

---

80. கூர்ப்பாஸ - பிதுரௌ - ப்ரதிக்ஷணம் ப்ராணேச்வரஸ்ய ஸதாசிவஸ்ய ரூபானுஸந்தானேன உத்ஸித்தாவயவை: பித்யதே ஸந்திபந்தேஷு கஞ்சுலிகேதி பாவ: ।

---

80. பங்கா-துதர-மவலக்னம் । —பா பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



गुरुत्वं विस्तारं क्षितिधरपतिः पार्वति निजात्
नितम्बा-दाच्छिद्य त्वयि हरणरूपेण निदधे ।
अतस्ते विस्तीर्णो गुरुरयमशेषां वसुमतीं
नितम्ब-प्राग्भारः स्थगयति लघुत्वं नयति च ॥ ८१ ॥

குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதிః பார்வதி நிஜாத்
நிதம்பா-தாச்சித்ய த்வயி ஹரணரூபேண நிததே।
அதஸ்தே விஸ்தீர்ணோ குருரய-மசேஷாம் வஸுமதீம்
நிதம்ப-ப்ராக்பாரః ஸ்தகயதி லகுத்வம் நயதி ச ‖ 81 ‖

---

81. மலைபோன்ற நிதம்பம் (அக்னி ஸ்தம்பம்)

(பார்வதி) பார்வதியே (க்ஷிதிதரபதிः) மலையரசன் (குருத்வம்) கனத்தையும் (விஸ்தாரம்) விஸ்தாரத்தையும் (நிஜாத்) தன்னுடைய (நிதம்பாத்) அடிவாரத்தினின்றும் (ஆக்சித்ய) எடுத்து (த்வயி) உன்னிடத்தில் (ஹரண-ரூபேண) சீராக (நிததே) கொடுத்துவிட்டார் போலும்.

---

லவலீ-வல்லிபிः—தீரலதா ச்வேதாவல்லீ லவலீ தத்புஷ்பாணி ச்வேதானி।

வலக்னம்—மத்ய பாகः (அகார லோபः)

ஓ. (ஸ்தன-பார-தலன்-மத்ய-பட்ட பந்த-வலித்ரயா) ஸ்தன-பாரத்தினுல் இடைக்கு ஊனம் ஏற்படாது காப்பதற்காக அணியப்பெற்ற முப்பட்டையோ என விளங்கும் மூன்று மடிப்புக்களை வயிற்றில் உடையவள். —ல. ஸ.

ஓ. பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறை வண் டார்க்கும் புதுமல ரைந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம், தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும், வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே,
—அபிராமி அந்தாதி 85.

---

81. பரண்ரூபேணே —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(அத:) அதனுல்தான் (குரு:) பருத்தும் (விஸ்தீர்ண:) விசாலமாகவும் இருக்கிற (தே) உன்னுடைய (அயம்) இந்த (நிதம்ப-ப்ராக்பார:) நிதம்பத்தின் பின்புறம் (அசேஷாம் வஸுமதீம்) பூமி முழுவதையும் (ஸ்தகயதி) மறைக்கிறது, (லகுத்வஞ்ச) அதை லேசாகவும் (நயதி) செய்து விடுகிறது

---

81. ஹரணரூபேண— து ஹித்ரே தேயோ தாயோ ஹரணம்। பரணரூபேணேதி கச்சித் பாட: பரணம் ஆயுதாதி-தானம்। அயமர்த்த:— ஸகல-தேவதா-சரீர ஸமுத்தித-தேஜோ-ராசி-ரூப-சரீரோபாதிம் மஹிஷாஸுர வதாயாவலம்பமானுயாம் த்வயி பரண-ரூபேண 'சூலம் சூலாத் விநிஷ்க்ருத்ய ததௌ தஸ்யை பிநாக த்ருக்' இத்யாதி தேவதானு-மாயுதாதி-பரணஸமயே ஹிமவான் வாஹனம் ஸிம்ஹம், ரத்னனி விவிதானி ச தத்வா, ஸ்வநிதம்பாத்குருத்வம் விஸ்தாரஞ்ச நிஷ்க்ருஷ்ய, பரண-ரூபேண நிததே நிக்ஷேபீ க்ருதவான்। தேவா: யதா ஸ்வஸ்யாயுதாதி பரணம் க்ருதவந்த:, ததா ஹிமவானபி நிதம்பபர-குருத்வம் விஸ்தார-பரணம் க்ருதவானித்யர்த்த:। அதஸ்தே நிதம்ப-பார: ஆக்ருதிவிசேஷ: அசேஷாம் வஸுமதீம் ஸ்தகயதி; லோகத்ரயம் வ்யாப்ய ஸ்திதாயா ஆச்சாத்யாவனமதீத்-யர்த்த:॥ ததுக்தம் மார்க்கண்டேயே—

"ஸ த்தர்ச ததோ தேவீம் வ்யாப்ய லோகத்ரயம்த்விஷா பாதாக்ராந்த்யா நதபுவம் கிரீடோல்லி கிதாம்பராம்" இதி॥ —ஸௌபாக்யவர்த்தனீ.

தயா ச தேவ்யா ஸர்வத: பரிபூர்ணதா ப்ரதீயதே॥

—அருணமோதினீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



करीन्द्राणां शुण्डान् कनककदली-काण्डपटलीं
उभाभ्यामूरुभ्या-मुभयमपि निर्जित्य भवति ।
सुवृत्ताभ्यां पत्युः प्रणतिकठिनाभ्यां गिरिसुते
विधिज्ञे जानुभ्यां विबुध करिकुंभ द्वयमसि ॥ ८२ ॥

கரீந்த்ராணும் சுண்டான் கனககதலீ-காண்டபடலீம்
உபாப்யாமூருப்யா-முபயமபி நிர்ஜித்ய பவதி।
ஸுவ்ருத்தாப்யாம் பத்யுঃ ப்ரணதி கடினுப்யாம் கிரிஸுதே
விதிஜ்ஞே ஜானுப்யாம் விபுத-கரிகும்ப-த்வய-மஸி ॥

---

82. யானையின் துதிக்கை போன்ற தொடை

(ஜலஸ்தம்பம், இந்திர பதவியை ஒத்த பதவி)

(பவதி) பகவதி! (கிரிஸுதே) பார்வதி! (கரீந்த்ராணும்) சிறந்த யானைகளின் (சுண்டான்) துதிக்கைகள் (கனக-கதலீ-காண்ட-படலீம்) பொன்வாழை மரங்கள் (உபயம் அபி) ஆகிய இவ்விரண்டையும் (உபாப்யாம் ஊருப்யாம்) இரண்டு தொடைகளால் (நிர்ஜித்ய) ஜயித்தும் (விதிஜ்ஞே) சாஸ்திரத்தை அறிந்தவளே! (பத்யுঃ) பதியாகிய பரமசிவனுக்கு (ப்ரணதி-கடினுப்யாம்) நமஸ்காரம் செய்யும் பழக்கத்தால் கடினமாகவும் (ஸுவ்ருத்தாப்யாம்) நன்கு திரண்டு உருண்டும் இருக்கும் (ஜானுப்யாம்) முழங்கால் முட்டிகளால் (விபுதகரி-கும்ப-த்வயம்) இந்திரனுடைய யானையாகிய ஐராவதத்தின் இரண்டு கும்பங்களையும் (நிர்ஜித்ய) ஜயித்தும் (அஸி) இருக்கிறாய்.

---

82. சுண்டான்— கரதண்டான்। "சுண்டா சப்தஸ்ய பும்லிங்கதாப்யஸ்தி" இதி ரக்ஷிதமதம்।

விதிஜ்ஞே—விதிம் வேதார்த்தம் ஜானுதீதி விதிஜ்ஞா ஸர்வஜ்ஞேத்யர்த்தঃ।

---

82 பவதீ (தாங்கள்) சுண்டாঃ। விஜிக்யே। த்வயமபி।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



पराजेतुं रुद्रं द्विगुणशरगर्भौ गिरिसुते
निषङ्गौ जङ्घे ते विषमविशिखो बाढ-मकृत ।
यदग्रे दृश्यन्ते दशशरफलाः पादयुगली
नखाग्रच्छद्मानः सुर-मकुट-शाणैक-निशिताः ॥ ८३ ॥

பராஜேதும் ருத்ரம் த்விகுணசரகர்ப்பௌ கிரிஸுதே
நிஷங்கௌ ஜங்கே தே விஷமவிசிகோ பாட-மக்ருத ।
யதக்ரே த்ருச்யந்தே தசசர-பலாஃ பாதயுகலீ-
நகாக்ரச்சத்மானஃ ஸுர-மகுட-சாணைக-நிசிதாஃ ‖ 83 ‖

83. மன்மதனுடைய அம்பறுத்தூணிகள் போன்ற முழந்தாள்கள்
(சதுரங்க சைனிய ஸ்தம்பனம்)

(கிரிஸுதே) பார்வதீ! (விஷம-விசிகஃ) பஞ்சபாணனுகிய மன்மதன் (ருத்ரம்) ருத்திரனை (பராஜேதும்) ஜயிப்பதற்கு (தே) உன்னுடைய (ஜங்கே) முழந்தாள்களை (த்விகுண-சர-கர்ப்பௌ) இரு மடங்கு பாணங்கள் நிறைந்த (நிஷங்கௌ) அம்பறுத் தூணிகளாக (அக்ருத) செய்திருக்கிறன்; (பாடம்) ஆம்; நிச்சயம், (யத் அக்ரே) அவ்வம்பறுத் தூணிகளின் நுனியில் (பாதயுகளீ) இரண்டு பாதங்கள் உடைய (நகாக்ரச்சத்மானஃ) நகங்களின் நுனிகள் எனப் புனைப்பெயர் கொண்டவையும் (ஸுரமகுட) தேவர்களுடைய கிரீடங்களாகிய (சாணைக நிசிதாஃ) சாணைக்கற்களால் தீட்டப் பெற்றவையுமான (தசசரபலாஃ) பத்துப் பாணங்களின் இரும்பு முனைகள் தான் (த்ருச்யந்தே) காணப்படுகின்றன.

ஓ. காமேச-ஜ்ஞாத-ஸௌபாக்ய-மார்த்தவோரு-
த்வயான்விதா ।
மாணிக்ய-முகுடாகார-ஜானுத்வய-விராஜிதா ॥
—ல. ஸ.

83. ஓ. (இந்த்ர - கோப - பரிக்ஷிப்த - ஸ்மர தூணப-ஜங்கிகா) இந்த்ர கோபப் பூச்சியைவிடச் சிவப்பு மிக்கதும்

83. சாணௌக நிசிதாஃ । புரா ஜேதும் । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



श्रुतीनां मूर्धानो दधति तव यौ शेखरतया
ममाप्येतौ मातः शिरसि दयया देहि चरणौ।
ययोः पाद्यं पाथः पशुपति-जटाजूट-तटिनी
ययो-र्लाक्षा-लक्ष्मी-ररुण हरिचूडामणि-रुचिः ॥ ८४ ॥

ச்ருதீனும் மூர்த்தானோ தததி தவ யெள சேகரதயா
மமாப்யேதௌ மாதஃ சிரஸி தயயா தேஹி சரணௌ।
யயோஃ பாத்யம் பாதஃ பசுபதி-ஜடாஜூட-தடினீ
யயோர்-லாக்ஷா-லக்ஷ்மீ-ரருண-ஹரிசூடாமணி-ருசிஃ ।

84. உபநிஷதங்களின் உச்சியில் விளங்கும் பாதாரவிந்தங்கள்
(பரகாயப் பிரவேசம், ஜீவன்முக்தி)

(மாதஃ) தாயே! (தவ) உன்னுடைய (யெள) எந்த (சரணௌ) பாதங்களை (ச்ருதீனும் மூர்த்தானஃ) வேதங்களின் தலைபோன்ற உபநிஷதங்கள் (சேகரதயா) சிரோபூஷணங்களாக (தததி) தரிக்கின்றனவோ (ஏதௌ) அந்தப் பாதங்களை (மம) என்னுடைய (சிரஸி அபி) தலையிலும் கூட (தயயா) தயைகூர்ந்து (தேஹி) வைத்தருள்வாயாக. (யயோஃ) அவற்றிற்கு (பாத்யம் பாதஃ) பாத்யமாக அளிக்கப்பட்ட தீர்த்தம் (பசுபதி) பரமசிவனுடைய (ஜடா ஜூட) சடையில் இருக்கும் (தடினீ) கங்கையாகிறது. (யயோஃ) அவற்றிற்கு (லாக்ஷா லக்ஷ்மீஃ) பூசப்

---

மன்மத பாணங்களின் அம்பறாத்தூணிகளோ எனத் தோன்றுபவையுமான முன்னங்கால்களை உடையவள்.
—ல. ஸ.

மன்மதனுடைய பஞ்ச பாணங்களால் ஜயிக்கப் படாத சிவன், 'தேவியின் காலழகினுல் ஜயிக்கப்படுகிருர்' என்பது கருத்து.

ஒ. (ச்ருதி-ஸீமந்த-ஸிந்தூரீ-க்ருத-பாதாப்ஜ-தூலிகா) எவளுடைய பாதகமலத்தின் தூளியே வேதமாதாவின் வகுட்டில் விளங்கும் ஸிந்தூரமோ (அதாவது உபநிஷதமோ) அவள். —ல. ஸ. 289.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பட்ட லாக்ஷா ரஸத்தின் பொலிவு (அருண-ஹரி-சூடா மணி-ருசிஃ) சிவப்பான காந்தியுடன் கூடினதும் விஷ்ணு வின் சிரசை அலங்கரிப்பதுமான மாணிக்கமோ என்று எண்ணும்படி இருக்கிறது.

---

வேதத்திற்குத் தலையாக உள்ளது உபநிஷதம். தேவி யின் பாததூளி மகிமையே உபநிஷதம் ஆகிறது. அங்ங னம் சிந்திப்பவருக்கே உபநிஷத அர்த்தம் விளங்கும்.

மமாபி— இங்கே ஆசார்யாள் கேனோபநிஷத்தை மனத்தில் வைத்துக்கொண்டு சொல்வதாகத் தெரிகிறது. தேவர்களுடைய அகம்பாவத்தைப் போக்கி அனுக்கிரகம் செய்தது போல, என்னிடம் உள்ள சகல துரிதங்களையும் நிவிருத்தி செய்வாயாக என்கிறார்

—காமகோடி சங்கராசாரியார்.

பாத்யம் பாதஃ— பாத-நிர்ணேஜன-ஜலம்; யத்யபி பாத்ய- மித்யுக்தே பாதஸம்பந்தஃ ப்ரதீயதே, ததாபி பாத்யமித்யுக்தே பாதப்ரக்ஷாலனார்ஹம் பாத்யமித்- யர்ஹதா- மாத்ர ப்ரதீதௌ விசேஷாகாரேண யயோ- ரித்யஸ்யான்வய இதி ந பௌநருக்த்யம்।

அயமர்த்தஃ। ப்ரணயகாலே ப்ரணதஸ்ய பசுபதேஃ ஜடா ஜூட வர்த்தினீ கங்கா பாதாக்ரவர்த்தினீ ஆஸீ திதி கங்காயாஃ பாத்ய-ஜலத்வம் கதிதம்॥ —லக்ஷ்மீதரர்.

அம்பாளுடைய ஊடலைத் தணிக்கப் பரமசிவன் அம்பாளுடைய பாதத்தில் வணங்கும்போது அவருடைய சடையில் இருக்கும் கங்கை கீழே பெருகி அம்பாளுக்குப் பாத்யம் மாதிரி ஆகிறது.

ஹரிசூடாமணி ருசிஃ— தேவியை விஷ்ணு வணங்கும் போது மருதாணியால் சிவந்த தேவியின் கால்நகங்கள் அவர் தலையில் அணிந்த சூடாமணிகளைப்போல் தோற் றம் அளிக்கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



नमो वाकं ब्रूमो नयन-रमणीयाय पदयोः
तवास्मै द्वन्द्वाय स्फुट-रुचि-रसालक्तकवते ।
असूयत्यत्यन्तं यदभिहननाय स्पृहयते
पशूना-मीशानः प्रमदवन-कङ्केलितरवे ॥ ८५ ॥

நமோ-வாகம் ப்ரூமோ நயன-ரமணீயாய பதயோ:
தவாஸ்மை த்வந்த்வாய ஸ்புட-ருசி ரஸாலக்தகவதே
அஸூயத்யத்யந்தம் யதபிஹனனாய ஸ்ப்ருஹயதே
பசூனா-மீசான: ப்ரமதவன-கங்கேலி-தரவே ‖ 85 ‖

85. பரமசிவனும் தாங்க விரும்பும் பாதாரவிந்தங்கள்

(பிசாச பய நிவிருத்தி)

(நயன-ரமணீயாய) கண்களுக்கு மகிழ்ச்சி அளிப்ப தாகவும் (ஸ்புட-ருசி) பிரகாசம் மிக்கதாகவும் (ரஸாலக் தகவதே) உலராத செம்பஞ்சுக்குழம்புடன் கூடியதாகவும் உள்ள (தவ பதயோ:) உன்னுடைய பாதங்கள் (அஸ்மை த்வந்த்வாய) இவ்விரண்டிற்கும் (நமோ வாகம்) நமஸ் கார வார்த்தையை (ப்ரூம:) சொல்லுகிறோம். (யத் அபிஹனனாய) அந்தப் பாதங்களால் உதைக்கப்படுவதை (ஸ்ப்ருஹயதே) விரும்புகிற (ப்ரமதவன) நந்தவனத்தில் உள்ள (கங்கேலி தரவே) அசோக மரத்தினிடம் (பசூனாம் ஈசான:) பசுபதியானவர் (அத்யந்தம்) மிகவும் (அஸூயதி) பொறுமைப்படுகிறார்.

85. நமோ வாகம் ப்ரூம:—நமஸ்கார-ஸூக்தம் ப்ரூம: ।
—ஸௌபாக்ய வர்த்தினீ

அஸ்மை—பரித்ருச்யமானாய ।

கங்கேலி-தரவே—ஒ. 'கங்கேலி: காமகேலி: ஸ்யா-தசோகோ ரக்தபுஷ்பக: இதி விச்வ: ।

கங்கேலி, காமகேலி அல்லது அசோகம் எனப்படும் மரம் சிவப்புப்புஷ்பங்களைக் கொண்டது அது புஷ்பிக்காத

85. அஸூயத்யர்த்தம் । —பா. பே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



मृषा कृत्वा गोत्रस्खलन-मथ वैलक्ष्यनमितं
ललाटे भर्तारं चरणकमले ताडयति ते ।
चिरादन्तः शल्यं दहनकृत-मुन्मूलितवता
तुलाकोटिक्वाणैः किलिकिलित-मीशान-रिपुणा ॥ ८६ ॥

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலன-மத வைலக்ஷ்ய-நமிதம்
லலாடே பர்த்தாரம் சரணகமலே தாடயதி தே ।
சிராதந்தః சல்யம் தஹனக்ருத-முன்மூலிதவதா
துலாகோடிக்வாணைः கிலிகிலித-மீசான-ரிபுணா ॥ 86 ॥

86. ஊடலில் பரமசிவன் பார்வதியை வணங்குவது

மன்மதனுக்கு வெற்றி (பிசாச பய நிவிருத்தி, சத்ரு ஜெயம்)

(கோத்ரஸ்கலனம்) உன் பிறந்த வீட்டைப் பற்றிய ஏளனத்தை (ம்ருஷா) விளையாட்டுக்காக (க்ருத்வா) செய்துவிட்டு (அத) பிறகு உன் ப்ரணய கோபத்தைக் கண்டு (வைலக்ஷ்ய) இன்னது செய்வதென்று தெரியா

---

போது உத்தம ஸ்திரீகளின் பாதஸ்பர்சம் ஏற்பட்டால் புஷ்பிக்கும் என்பது நம்பிக்கை. 'பாதாஹதः ப்ரமதயா விகஸத்யசோக' என்பது பழமொழி.

ஓ. பாதாஹத்யாப் யசோகோ வதனமதிரயா கேஸரः பாணிமர்சாச்-சூதோ வீக்ஷாஹஸாப்யாம் திலகதரு நமேரு- ப்ரியாலுச்ச கீத்யா । ஸல்லாபாத் கர்ணிகாரः குரவகதரு-ராலிங்கனாத்ஸிந்துவாரः ச்வாஸாத் ஸ்த்ரீணாம் விகாஸம் பஜதி ச மத - ராகேண சம்பச்ச சாகீ ॥

தேவி உத்தியான வனத்தில் உலாவும்போது அவளுடைய பாதம் படுவதற்கு அசோகமரம் ஆசைகொண்டிருப்பதாகவும் அதை எண்ணிப் பரமசிவன் பொறாமைப் படுவதாகவும் இந்தச் சுலோகம் கூறுகிறது. தேவியின் பாத ஸ்பர்சத்தால் அசோகமரம் மலர்வதுபோல் தானும்

---

86. உன்மீலிதவதா —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மல் (நமிதம்) வணங்கின (பர்த்தாரம்) பர்த்தாவின் (லலாடே) நெற்றியில் (தே) உன்னுடைய (சரணகமலே) பாதகமலங்கள் (தாடயதி) தட்டுப்படும்போது, (தஹன-க்ருதம்) நெற்றிக்கண் நெருப்பால் எரிக்கப்பட்டு (சிராத் அந்தঃ சல்யம்) நெடுநாளாக நெஞ்சில் தைத்து உறுத்திக் கொண்டிருந்த பாணம் போன்ற பகையை (உன்மூலித வதா) அடியோடு தீர்த்துக் கொள்பவனும் (ஈசான-ரிபுணு) சிவனுடைய பகைவனுமாகிய மன்மதனுல் (துலா-கோடி-க்வாணைঃ) உன் பாதச்சிலம்புகளின் ஒலி களின் மூலம் (கிலி கிலீதம்) 'கிலி கிலி' என்ற ஜய கோஷம் எழுப்பப்படுவதாயிற்று,

---

மகிழ்ச்சி பொங்கப் பரமசிவன் விரும்புகிறுர். அப்பேர்ப் பட்ட பாதங்களை அணுகி வணங்குவது அரிதினும் அரிதா கையால் அவைகளுக்கு வாக்கினுல் நமஸ்காரம் கூறுவதே பெரும் பாக்கியம்.

86. கோத்ர-ஸ்கலனம்— நாயிகாயாம் அனுராகம் ப்ரகடயதஸ்-தத் ஸமீப ஏவ ப்ரமாதாத் நாயிகாந்தரா விஷ்ட-சித்தஸ்ய தந்நாமோச்சாரணம். —லக்ஷ்மீதரர்.

கிலிகிலிதம்— கிலிகிலி த்வனிஞ உபஹஸிதம் 'பூர்வ மஹம் த்வயா தக்தঃ இதானீமஹம் மாதுঃ சரணம் கதঃ, கிம் கர்த்தும் ஸமர்த்தோ஽ஸி' இதி।

—ஸௌபாக்கிய வர்த்தனீ

உன்மூலி வதா— சிரத்ருதம் சல்யம் இதானீமப நயதா। உன்மீலிதவதா இதி பாடே வைர-நிர்யா தனஸ்ய வீரதர்மத்வாத் தத் ஸமய-லாபாத் தத் ப்ர கடயதா।

ஒ. 'பரமசிவனே தன்னுடைய பத்தினியான தேவி யினுடைய பாதங்கள் தன்னுடைய நெற்றியில் பட ஸம்மதித்தாரே அதுபோல் நமக்கும் நம் ஸ்திரீயின் பாதங்கள் நம் நெற்றியில் பட்டால் என்ன?' என்று ப்ராக்ருத ஜனங்கள் விபரீதக்ரஹணம் செய்துகொள்ளக் கூடாது.

—தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



हिमानी-हन्तव्यं हिमगिरि निवासैक-चतुरौ
निशायां निद्राणं निशि-चरमभागे च विशदौ ।
वरं लक्ष्मीपात्रं श्रिय-मतिसृजन्तौ समयिनां
सरोजं त्वत्पादौ जननि जयत-श्चित्रमिह किम् ॥ ८७ ॥

ஹிமானீ ஹந்தவ்யம் ஹிமகிரி-நிவாஸைக-சதுரௌ
நிசாயாம் நித்ராணம் நிசி சரமபாகே ச விசதௌ ।
வரம்லக்ஷ்மீபாத்ரம் ச்ரிய-மதிஸ்ருஜந்தௌ ஸமயினும்
ஸரோஜம் த்வத் பாதௌ ஜனனி ஜயதச்-சித்ரமிஹ
கிம் ॥ 87 ॥

87. இமயத்தின் பனியிலும் இரவு நேரத்திலும் கூட அழகு குன்றாத பாத கமலங்கள் (ஸர்ப்ப வச்யம்)

(ஜனனி) தாயே! (ஹிமானீ-ஹந்தவ்யம்) தாமரையோ பனியில் கருகிப்போவது (ஹிமகிரி நிவாஸைக-சதுரௌ)—உனது திருவடித் தாமரைகளோ-- பனிமலையில் இருப்பதில் தேர்ச்சி பெற்றவை; (நிசாயாம் நித்ராணம்) தாமரை இரவில் இதழ்களை மூடிக்கொண்டு உறங்குவது, (நிசி சரமபாகே ச விசதௌ) உனது திருவடிகளோ இரவிலும் இரவு முடிந்தபோதும் எப்போதும் பிரசன்னமாய் இருப்பவை; (வரம் லக்ஷ்மீ-பாத்ரம்) தாமரை தன்னிடம் லக்ஷ்மி வசிக்கும்படி இருப்பது, (ச்ரியம் அதிஸ்ருஜந்தௌ ஸமயினும்) உன் திருவடித்தாமரைகளோ வழிபடுபவர்களுக்கு லக்ஷ்மியை அளிப்பவை;—ஆகையால்—(ஸரோஜம்) தாமரையை (த்வத்பாதௌ) உனது பாத கமலங்கள் (ஜயதஃ) ஜயிக்கின்றன. (இஹ) இதில் (சித்ரம்) அதிசயம் (கிம்) என்ன இருக்கிறது?

87. ஸமயினும்—பவச்சரண-பக்தி-பாவ ப்ரதிபாதக சாஸ்த்ர-நிஷ்டானும். —ஸௌபாக்யவர்த்தனீ

ஸ்வபக்தானும் ஸமயஸ்வரூபம் 'தவாதாரே மூலே' இதி ச்லோகே நிரூபிதம் —லக்ஷ்மீதரர்.

87. பரம் லக்ஷ்மீபாத்ரம் । ச்ரியமபி ஸ்ருஜந்தௌ ॥
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



पदं ते कीर्तीनां प्रपदमपदं देवि विपदां
कथं नीतं सद्भिः कठिन-कमठी-कर्पर-तुलाम् ।
कथं वा बाहुभ्या-मुपयमनकाले पुरभिदा
यदादाय न्यस्तं दृषदि दयमानेन मनसा ॥ ८८ ॥

பதம் தே கீர்த்தீனும் ப்ரபத-மபதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பி: கடின-கமட-கர்ப்பர-துலாம்।
கதம் வா பாஹுப்யா-முபயமனகாலே புரபிதா
யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமானேன மனஸா॥88॥

---

88. மென்மையான பாதத்தைப் பரமசிவன் அம்மியில் ஏற்றியதால் அவர் கல்நெஞ்சர் போலும் (துஷ்ட மிருகங்களின் வச்யம்)

(தேவி) தேவியே! (தே) உன்னுடைய (ப்ரபதம்) பாதங்களின் முன்பாகம் (கீர்த்தீனும்) நீ அடியார்களைக் காக்கின்ருய் என்ற கீர்த்திக்கு (பதம்) உறைவிடம். (விபதாம்) அடியார்களுக்கு ஏற்படும் விபத்துக்களுக்கு (அபதம்) இடம் அளிக்காமல் இருப்பது— கருணையால் அங்ஙனம் மிகவும் மென்மையானதாக இருக்கையில் அதற்கு—(ஸத்பி:) ஸாதுக்களாகிய கவிகளால் (கடின-கமட-கர்ப்பர-துலாம்) கடினமான ஆமையோட்டின் உவமை (கதம்) எப்படி (நீதம்) கற்பிக்கப்பட்டதோ? (தயமானேன மனஸா) தயை நிறைந்த மனமுடைய (புரபிதா) பரம சிவனுல் (உபயமான காலே) விவாக காலத்தில் (யத் பாஹுப்யாம் ஆதாய) அப்பாதங்கள் கைகளால் எடுத்து (த்ருஷதி) அம்மிக்கல்லின்மேல் (கதம் வா) எப்படித்தான் (ந்யஸ்தம்) வைக்கப் பட்டனவோ.

---

ஸமய:—தேவீ - சரண - பக்தி-பாவ ப்ரதிபாதகம் சாஸ்த்ரம் ஆந்தர - பூஜாப்ரதான - மேஷா - மஸ்தீதி ஸமயின:। தேஷாம் ஸமயாசார-தத்பராணும்.

(அருணு மோதினீ)

---

88 பதம் தே காந்தீனும்। கதஞ்சித்-பாஹுப்யாம்।

பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



नखै-र्नाकस्त्रीणां करकमल-संकोच-शशिभिः
तरूणां दिव्यानां हसत इव ते चण्डि चरणौ ।
फलानि स्वःस्थेभ्यः किसलय-कराग्रेण ददतां
दरिद्रेभ्यो भद्रां श्रियमनिश-मह्नाय ददतौ ॥ ८९ ॥

நகைர்-நாகஸ்த்ரீணும் கரகமல-ஸங்கோச-சசிபிঃ
தருணும் திவ்யாணும் ஹஸத இவ தே சண்டி
சரணௌ
பலானி ஸ்வঃஸ்த்தேப்யঃ கிஸலய கராக்ரேண தததாம்
தரித்ரேப்யோ பத்ராம் ச்ரியமனிச மஹ்னுய ததெளை ॥

---

89. சந்திரகிரணம் போன்ற கால்நகங்களின் ஒளி

(ஸகலரோக நிவ்ருத்தி)

(சண்டி) சும்ப நிசும்பர்களை ஸம்ஹாரம் செய்த பரதேவதையாகிய சண்டிகையே! (கிஸலய) துளிர்கள் ஆகிற (கராக்ரேண) கை நுனிகளால் (ஸ்வঃஸ்த்தேப்யঃ) ஸ்வர்க்க வாசிகளுக்கு (பலானி) விரும்பிய பலன்களை (தததாம்) அளிக்கின்ற (திவ்யாணும்) தேவ லோகத்தில் உள்ள (தருணும்) கல்பகம் முதலிய விருக்ஷங்களை (தரித்ரேப்யச்ச) ஏழை எளியவர்களுக்கும் (பத்ராம்)

---

ஓ. யாவத்பரம் பதஸரோஜயுகம் த்வதீயம்
நாங்கீகரோதி ஹ்ருதயேஷு ஜகச்சரண்யே ।
தாவத்விகல்ப-ஜடிலாঃ குடிலப்ரகாராஸ்
தர்க்கக்ரஹா ஸமயினும் பரலயம் ந யாந்தி ॥
—அம்பாஸ்தவம்.

88. இந்தச் சுலோகம் சில பழையகாலப் புஸ்தகங்களில் காணப்படவில்லை என்று கைவல்யாசிரமர் கூறுகிறுர்.

ப்ரபதம்— 'பாதாக்ரம் ப்ரபதம்' இத்யமரঃ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பரம மங்களமான (ச்ரியம்) செல்வத்தை (அனிசம்) எந்தச் சமயத்திலும் (அஹ்னுய) விரைவில் (தநதௌ) அளிக்கின்ற (தே) உனது (சரணௌ) பாதங்கள் (நகைঃ) நகங்களால் (ஹஸதঃ இவ) பரிகசிப்பவைபோல் இருக்கின்றன. எப்படிப்பட்ட நகங்களால் என்ருல்- (நாக-ஸ்த்ரீணும்) தேவஸ்திரீகளின் (கர-கமல) கைகளாகிற தாமரைகளை (ஸங்கோச) மூடிக்கொள்ளச் செய்யும் (சசிபிঃ) சந்திரர்களைப் போன்ற (நகைঃ) நகங்களால்.

---

ஒ. (கூர்ம - ப்ருஷ்ட - ஜயிஷ்ணு - ப்ரபதான்விதா) ஆமையின் முதுகுபோல் வளைந்த புறங்காலைக் கொண்டவள். —ல. ஸ. 43.

89. சண்டி—பக்தஜன-விபத்விபஞ்ஜன-ப்ரசண்டே! தேவீ மாஹாத்மியப் பிரசித்தம்.

ஸ்வঃ—ஸ்த்தேப்யঃ—ஸ்வர்க்க ஸ்தேப்யঃ ஏவ ந து தரித்ரேப்யঃ இதி விசேஷணவசாத் ப்ரதீயதே ।

அஹ்னுய— சீக்ரமேவ; 'த்ராக் - ஜடித் - யஞ்ஜு ஸா ஹ்னுய' இத்யமரঃ ।

ஹஸதঃ இவ—தேவதானுமேவ இஷ்டார்த்த - தான ப்ரவண ச்ரவணபதமாத்ர-கதான் தீனஜனுவன-விமுகான் கல்பதரூன் ஹஸத இவேத்யர்த்தঃ ।

நகங்களின் காந்தி பரிகாசச்சிரிப்புப்போல் இருக்கிறது.

கரகமல-ஸங்கோச-சசிபிঃ— தேவஸ்திரீகள் தாமரை போன்ற கைகளைக் கூப்பிக்கொள்வது சந்திரனைக் கண்டு தாமரை இதழ்கள் கூம்புவதுபோல் இருக்கிறது. தேவியின் கால்நகங்களின் ஒளி சந்திரனுடைய பிரகாசம்போல் உள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ददाने दीनेभ्यः श्रियमनिश-माशानुसदृशीं
अमन्दं सौन्दर्य-प्रकर-मकरन्दं विकिरति।
तवास्मिन् मन्दार-स्तबक-सुभगे यातु चरणे
निमज्जन् मज्जीवः करणचरणः षट्चरणताम् ॥ ९० ॥

ததானே தீனேப்ய: ச்ரியமனிச-மாசானுஸத்ருசீம்
அமந்தம் ஸௌந்தர்ய-ப்ரகர-மகரந்தம் விகிரதி ।
தவாஸ்மின் மந்தார-ஸ்தபக-ஸுபகே யாது சரணே
நிமஜ்ஜன்-மஜ்ஜீவ: கரணசரண: ஷட்சரணதாம் ॥90॥

---

90. இந்திரியங்களையும் மனத்தையும் கால்களாகக் கொண்ட வண்டு போன்ற ஜீவன் நாடும் கற்பகப் பூங்கொத்தாகிய பாதம் (துர்மந்திரச் சேதனம்)

(தீனேப்ய:) ஏழை எளியவர்களுக்கு (ஆசானு-ஸத்ருசீம்) அவரவர்கள் விருப்பத்திற்கு இணங்க (ச்ரியம்) செல்வத்தை (அனிசம்) எப்போதும் (ததானே) அளிப்பதும் (அமந்தம்) குறைவின்றி (ஸௌந்தர்ய-ப்ரகர-மகரந்தம்) அளவு கடந்த அழகாகிய மகரந்தத்தை (விகிரதி) இறைப்பதும (மந்தார:) கற்பகத்தின் (ஸ்தபக) பூங்கொத்தைப் போல் (ஸுபகே) மங்கள வடிவாகியதும் ஆன (அஸ்மின் தவ சரணே) உன்னுடைய இப்பாத கமலங்களில் (நிமஜ்ஜன்) புகுந்து உறைவதும் (கரண-சரண:) மனத்துடன் கூட இந்திரியங்கள் ஆகிற கால்களைக் கொண்டதுமான (ஷட்சரணதாம்) ஆறுகால் வண்டாக இருக்கும் தன்மையை (மஜ்ஜீவ:) என்னுடைய ஜீவன் (யாது) அடையட்டும்.

---

90. சில பாடங்களில் இந்தச் சுலோகம் 92 ஆவதாகவும், இந்த இடத்தில் 'கதாகாலே' என்னும் 98 வது சுலோகமும் காணப்படுகிறது. கைவால்யாசிரமர் பாடத்தில் இந்தச் சுலோகம் இல்லை.

---

ச்ரியமநிச-மாத்மானு-ஸத்ருசீ । ஸ்தபக-மகரந்தம் । கரண-சரணை: ।
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



पदन्यास-क्रीडा परिचय-मिवारब्धु-मनसः
स्खलन्तस्ते खेलं भवनकलहंसा न जहति ।
अतस्तेषां शिक्षां सुभगमणि-मञ्जीर-रणित-
च्छलादाचक्षाणं चरणकमलं चारुचरिते ॥ ९१ ॥

பதந்யாஸ-க்ரீடாபரிசய-மிவாரப்து-மனஸஃ
ஸ்கலந்தஸ்-தே கேலம் பவனகலஹம்ஸா ந ஜஹதி।
அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி-மஞ்ஜீர ரணித-
ச்சலாதாசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே ‖ 91 ‖

---

91. தேவியின் நடையழகு (பூமி லாபம், தன லாபம்)

(சாருசரிதே) புண்ணிய சரித்திரம் உடையவளே!(தே) உன்னுடைய (பவன-கலஹம்ஸாஃ) வீட்டில் உள்ள அன்னப் பறவைகள் (பதந்யாஸ-க்ரீடா) உனது நடை அழகை (பரிசயம்) கற்றுக்கொள்ள (ஆரப்து மனஸஃ இவ) ஆரம்பிக்க எண்ணம் கொண்டவைபோல் (ஸ்கலந்தஃ) துள்ளித் துள்ளிக் குதித்துக்கொண்டு (தே) உன்னுடைய (கேலம்) அழகிய நடையை(ந ஜஹதி) தொடர்வதை விடுவதில்லை.

---

கரணசரணஃ—கரணானி பஞ்சேந்த்ரியாணி மனஃஷஷ்டானி தான்யேவ சரணா யஸ்ய ஸஃ। தஸ்ய பாவஃ ஷட்சரணதாம் ப்ரமரத்வம்। ததானே தததி।

மந்தாரஸ்தபக ஸுபகே—கல்பவ்ருக்ஷகுச்ச-ஸௌபாக்யவதி

சரணே—பாதபங்கஜே। பவததிஷ்டான-பூத-ஸம்விச்சரண-ஸம்விச்சக்ரே இதி த்வனிஃ।

---

91. ஸ்வவிக்ஷேபே சிக்ஷாம்। ஆலப்துமனஸச் சரண யுகளம்.
—பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(அதஃ) ஆகையினுல் (சரணகமலம்) உன்னுடைய திருவடி (ஸுபக) மங்களகமான (மணி மஞ்ஜீர) ரத்தினம் இழைத்த சிலம்புகளில் (ரணித) ஒலியின் மூலம்(ச்சலாத்) மறைமுகமாக (தேஷாம்) அப்பறவைகளுக்கு (சிக்ஷாம்) நடைப்பழக்கத்தை (ஆசக்ஷாணம் இவ) கற்றுக்கொடுப்பதுபோல் (பவதி) இருக்கிறது.

---

கண்ணுல் தேவியின் பாதங்களைக் கண்டும், காதால் அவள் பெருமைகளைக் கேட்டும் மூக்கால் அவளுக்கு அர்ச்சித்த பூக்களின் வாசனையை மோந்தும் வாக்கால் அவளைத் துதித்தும் மெய்யால் பாததூளியை ஸ்பர்சித்தும் மனத்தால் தியானித்தும் வழிபடுதலே பிறவிப்பயன்.

91. தேவியின் பாதங்களின் வர்ணனைக்குப் பின் நடையழகு வர்ணிக்கப்படுகிறது.

சாருசரிதே —சாரு ஸுந்தரம் சரிதம் ஸஞ்சாரோ கமனம் சரித்ரம் வா யஸ்யாஃ ஸா சாருசரிதா ஸம்புத்தி: "சரிதம் து பவித்ரே ஸ்யாத் ஸஞ்சாரே வ்ரதகர்மணி" இதி விச்வஃ ||

கலஹம்ஸாஃ—ராஜஹம்ஸாஃ। 'ராஜஹம்ஸாஸ்து தே சஞ்சு சரணைர் லோஹிதைஃ ஸிதாஃ' இத்யமரஃ ।

ஸ்வவிக்ஷேபே சிக்ஷாம் என்ற பாடத்தில் 'ஸ்வவிக்ரமே' தங்கள் நடையில் சிக்ஷையை விரும்பி என்று அர்த்தம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அருணு மோதினி கூறும் ஆகமார்த்தம்— 'ஆகமார்த்தஸ்து பவனே ஸ்ரீ சக்ராக்யே க்ருஹே வர்த்தமாணுஃ கலஹம்ஸாஃ, கலோऽவ்யக்தமதுரஃ கண்டே வர்த்த-மானே ஹம்ஸேதி மந்த்ரோ யேஷாம் தே, கலஹம்ஸாஃ பஞ்சாசத் பேதபின்னுஃ கணப்ரவராஃ சக்ரேச்வர-கணபதி கமலநாத-த்வீபநாத - வஸந்தாதயஃ ஸ்ரீசக்ராதிஷ்டான தேவதா உச்யந்தே தாச்ச ராமகவி-வ்யாக்யானே விஸ்தரேணேக்தா த்ரஷ்டவ்யாஃ। பதந்யாஸ-க்ரீடா பரிசயம், பதானி சதுர்த்தச புவனுனி ஸ்தானுனி தேஷாம் ந்யாஸஃ ஸ்ருஷ்டி; க்ரீடா ரக்ஷணம், பரிசயஃ ஸம்ஹாரஃ। 'சிஞ் சயனே இதி தாதோஃ ஸம்ஹாரஸ்யாப்யர்த்தத்வாத் ஸர்வேஷாம் த்வந்த்வே ஸத்யேகவத்பாவஃ। 'ஸர்வோ த்வந்த்வோ விபாஷயைகவத் பவதி' இதி சாஸ்த்ராத்। ஆலப்து மனஸஃ ப்ராப்து - மிச்சந்தஃ தேஷாம் புவனஸ்ருஷ்ட்யாதி - காரண-ஸாமர்த்ய - மாசாஸானு இதி பாவஃ। கே சிதாகாசே அலமத்யந்தம் ஸ்கலந்தஃ சரந்தஃ ஸந்தஃ தே த்வதீயம் சரண-கமலம் ந ஜஹதி। அதோ ஹேதோஃ தேஷாம் ஹம்ஸானும் ஸுபகஃ சோபனு கீர்த்திஃ அவித்யா-முக்தத்வாதிதி காமேச்வரஃ। மணிஃ ஸுபகமணிஃ நிஷ்கலோ ப்ரஹ்மா, மஞ்ஜு ம்ருதுல; ஈரஃ ஸமீரண-ஹம்ஸஃ ஸோऽஹமிதி நிரந்தர ஜபோ யஸ்ய ஸஃ மஞ்ஜீர; அவித்யா ஸம்வலிதோ ஜீவஃ தத் விஷயம் யத்ரணிதம் வ்யாக்யாதம்.।'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



गतास्ते मञ्चत्वं द्रुहिण हरि रुद्रेश्वर भृतः
शिवः स्वच्छ-च्छाया-घटित-कपट-प्रच्छदपटः।
त्वदीयानां भासां प्रतिफलन-रागारुणतया
शरीरी शृङ्गारो रस इव दृशां दोग्धि कुतुकम् ॥ ९२ ॥

கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண-ஹரி-ருத்ரேச்வர-ப்ருதஃ
சிவஃ ஸ்வச்ச-ச்சாயா-கடித-கபட-ப்ரச்சதபடஃ।
த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலன-ராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம்॥

---

### 92. தேவியின் இருக்கை (ஆளுந்திறமை)

(த்ருஹிண) ப்ரம்மா, (ஹரி) விஷ்ணு (ருத்ர) ருத்திரன் (ஈச்வரஃ) ஈசுவரன் ஆகிய (ப்ருதஃ) அதிகார புருஷர்கள் (தே) உன்னுடைய (மஞ்சத்வம்) வேத ஸ்வரூபமாகிய கட்டிலின் நான்கு கால்களாக இருக்கும் தன்மையை (கதாஃ) அடைந்திருக்கிறார்கள். (சிவஃ) ஸதாசிவன் (ஸ்வச்சச்சாயா-கடித) வெண்மையான காந்தியோடு கூடிய (கபட ப்ரச்சத-படஃ) மேல்விரிப்பு என்ற வேஷத்துடன் இருக்கிறார். (த்வதீயானும்) உன்னுடைய (பாஸாம்) காந்தியின் (ப்ரதிபலன-ராகாருணதயா) பிரதிபலனத்தால் அவர் சிவப்பாகத் தோன்றுவதால் (ச்ருங்கார ரஸஃ) சிருங்கார ரஸமே (சரீரீ இவ) சரீரம் படைத்து வந்ததுபோல் (த்ருசாம்) உன்னுடைய கண்களுக்கு (குதுகம்) ஆனந்தத்தை (தோக்தி) அளிப்பவர் ஆகிறார்.

---

92. சில பாடங்களில் இது 94 வது சுலோகமாவும், அடுத்து வரும் 'அராலா கேசேஷு' என்பது 92 வது சுலோகமாகவும் காணப்படுகின்றன.

த்ருஹிண-ஹரி-ருத்ர ஈச்வர-ப்ருதஃ—ஏதே அதிகார புருஷாஃ மஹேச்வர - தத்வாந்தர் - கதாஃ தே ச தே ப்ருதச்ச க்லீபந்தோऽயம் சப்தஃ பஹுவசனாந்தஃ। ப்ருதகாஃ விசேஷண-ஸமாஸஃ। தேஷாம் காமருபாணும் அத்யந்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸந்நிக்ருஷ்டே ஸேவார்த்தம் மஞ்சஸ்ய பாதசதுஷ்டய ருபதா யுஜ்யத ஏவ ॥

ப்ரஹ்மா முதலிய நால்வரும் லோகத்தின் அதிகார புருஷர்களாக இருந்தும் அம்பாளுடைய ஸமீபத்தில் இருந்து சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையால் கட்டில்கால்களாகவாவது இருப்போம் என்று அப்படி இருக்கிறார்கள். இக்கருத்து எட்டாவது ச்லோகத்திலும் 'சிவாகாரே மஞ்சே' என்று குறிப்பிடப்பட்டது.

ஒ. பஞ்ச ப்ரேதாஸனாஸீனா பஞ்சப்ரஹ்ம-ஸ்வரூபிணீ ।
பஞ்சப்ரேத-மஞ்சாதிசாயினீ —ல. ஸ.

ஒ. ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஈச்வரச்ச ஸதாசிவ: ।
ஏதே பஞ்ச மஹா ப்ரேதா பூதாதிபதயோ மதா: ॥
சத்வாரோ மஞ்ச சரணா: பஞ்சம: ப்ரச்சத: பட: ।
ஸாக்ஷீ ப்ரகாசரூபேண சிவேனாபின்ன-விக்ரஹா ॥
தத்ராஸனே ஸமாஸீனா நிர்ப்பரானந்த-ரூபிணீ ॥
—ருத்ரயாமளம்.

சிவ:— ஸதாசிவ: । சக்தி தத்துவமானது இருபத்தைந்தாவது தத்துவமான ஸதாசிவதத்துவத்துடன் இரண்டறக் கலந்து இருபத்தாறுவது தத்துவமான சிவ சக்தி ஸாமரஸ்ய 'ஸாதாக்ய' தத்துவமாக இருப்பது (ச்ருங்காரோ ரஸ இவ) சிருங்கார ரஸம் உருவெடுத்தாற் போல் வெண்மையான ஸதாசிவனும் தேவியின் சாயையால் சிவப்பாகத் தோன்றுபவராய் தேவிக்கு மகிழ்ச்சியை அளிக்கிறார் என்று இங்கே கூறப்படுகிறது.

இதற்கு முன்சுலோகங்களில் தேவியின் கேசம் முதல், பாதம் வரை வர்ணிக்கப்பட்டது. இங்கே 'சிவ சக்தி ஐக்ய ரூபம்' கூறப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



अराला केशेषु प्रकृतिसरला मन्दहसिते
शिरीषाभा चित्ते दृषदुपलशोभा कुचतटे ।
भृशं तन्वी मध्ये पृथु-रुरसिजारोह-विषये
जगत्त्रातुं शंभो-र्जयति करुणा काचिदरुणा ॥ ९३ ॥

அராலா கேசேஷு ப்ரக்ருதிஸரலா மந்தஹஸிதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபலசோபா குசதடே ।
ப்ருசம் தந்வீ மத்யே ப்ருது ரூரஸிஜாரோஹ-விஷயே
ஜகத் த்ராதும் சம்போர்-ஜயதி கருணா காசிதருணா ।

93. சிவனுடைய கருணையின் உருவே தேவி

(மனோரத ஸித்தி)

(சம்போ:) பரமசிவனுடைய (காசித்) மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத ஏதோ ஒரு (கருணா) கருணையானது (ஜகத்) உலகை (த்ராதும்) ரக்ஷிப்பதற்காக (அருணா) அருணா என்ற பராசக்தி வடிவில் (விஜயதே) வெற்றியுடன் விளங்குகிறது அந்தக் கருணாசக்தி – (கேசேஷு) தேவியின் கூந்தலில் (அராலா) சுருளும் குடிலத் தன்மையாகவும் (மந்தஹஸிதே) புன்சிரிப்பில் (ப்ரக்ருதிஸரலா) இயற்கையான இனிமையாகவும் (சித்தே) மனத்தில் (சிரீஷாபா) வாகைப் பூவினதுபோன்ற மிருதுத்தன்மையாகவும் (குசதடே) நகில்களில் (த்ருஷதுபல-சோபா) கல்லினுள் இருக்கும் ரத்தினத்தினது போன்ற கடினமாகவும் (மத்யே) இடையில் (ப்ருசம் தன்வீ) மிகுந்த மெலிவாகவும் (உரஸிஜ:) மார்பிலும் (ஆரோஹ-விஷயே) நிதம்பத்திலும் (ப்ருது:) பருமனாகவும் (ஜயதி) விளங்குகிறது.

93. கருணா காசிதருணா— ஓ. காருண்ய-விக்ரஹா.
—லலிதா த்ரிசதீ.

தவ க்ருதே—த்வ-தர்த்தம்.

93. சிரீஷாபா காத்ரே த்ருஷதில கடோரா குசதடே। ப்ருதுரபிவராரோஹ । —பா. பே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कलङ्कः कस्तूरी रजनिकर-बिम्बं जलमयं
कलाभिः कर्पूरै-र्मरकतकरण्डं निबिडितम् ।
अतस्त्वद्भोगेन प्रतिदिनमिदं रिक्तकुहरं
विधि-र्भूयो भूयो निबिडयति नूनं तव कृते ॥ ९४ ॥

கலங்கஃ கஸ்தூரீ ரஜநிகர-பிம்பம் ஜலமயம்
கலாபிஃ கர்ப்பூரைர்-மரகதகரண்டம் நிபிடிதம் ।
அதஸ்-த்வத்போகேன ப்ரதிதின-மிதம் ரிக்தகுஹரம்
விதிர்-பூயோ பூயோ நிபிடயதி நூநம் தவ க்ருதே ॥94॥

**94. தேவியின் உபயோகத்திற்காக நிரப்பப்பெற்ற ஜலபாண்டம் போன்றது சந்திர பிம்பம் (இஷ்டப் பிராப்தி)**

(இதம்) இந்த (ரஜனிகர-பிம்பம்) வானில் சந்திர மண்டலமாகத் தோன்றுவது (ஜலமயம்) பிரதிபலிக்கும் ஜலம் நிறைந்த (மரகதகரண்டம்) மரகதப்பாண்டம்; (கலாபிஃ) கிரணங்களாகிய(கர்ப்பூரைஃ) பச்சைக் கர்ப்பூரத்தால் (நிபிடிதம்) நிறைவு செய்யப்பட்டது; (களங்கஃ) களங்கமாகத் தோன்றுவது (கஸ்தூரீ) கஸ்தூரீ (அதஃ)

94. ஓ. (பகவத்யாஃ ஸர்வஜகத்-காரணத்வம் ப்ருவதாமாசார்யாணும் ஸமஸ்த - போகானுபவ - ஸமவஹிதயா தேவ்யாஃ ப்ரஹ்மாண்டஸ்ய க்ருஹ ரூபத்வேன, ஊர்த்வாங்கஸ்ய விதான ரூபத்வேன, மேர்வாதீனும் விஹாரஸ்தான ரூபத்வேன. நக்ஷத்ராணும் ஹாராவலித்வேன, கோத்ரபிதாதீனும் பௌத்ரத்வேன, ப்ரஹ்மாதீனும் புத்ரத்வேன, மார்த்தண்டஸ்ய க்ருஹதீபத்வேன ச தாத்பர்யாத் ஸகல-ஜகத்-ப்ரகாசக-சந்த்ரோऽபி ஸம்போகாங்க-ஸுகந்தி - வஸ்து-ஸ்தாபன-கரண்டஃ தத்ர கலங்க ஏவ ம்ருக-நாபிஃ, ஜலமேவ பன்னீரம்; கலா கர்ப்பூர கண்டா இத்யர்த்தஃ ।)



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஆகையால் (ப்ரதிதினம்) தினந்தோறும் (த்வத் போகேன) உனது உபயோகத்தால் (ரிக்த-குஹரம்) காலியாகும் அப் பாண்டத்தை (விதிঃ) பிரம்மா (பூயঃ பூயঃ) மீண்டும் மீண்டும் (தவ க்ருதே) உனக்காக (நூனம்) நிச்சயம் (நிபிடயதி) நிரப்பி வைக்கிறார்— என்றுதான் நான் கருதுகிறேன்.

---

தேவியை உலகுக்கெல்லாம் காரணமாக வர்ணிக்கும் ஆசாரியர் 'பிரம்மாண்டத்தைத் தேவியின் கிருகமாகவும் ஆகாயத்தை விதானமாகவும் மேரு முதலிய ஸ்தானங்களை விளையாட்டு இடங்களாகவும் நக்ஷத்திரங்களை ஹாரமாகவும் கோத்திரப் பிரவர்த்தகர்களைப் பேரன்மார்களாகவும், பிரும்மா முதலியவர்களைப் புத்திரர்களாகவும் சூரியனை வீட்டு விளக்காகவும் வர்ணிக்கையில் குளிர்ந்த ஒளி தரும் சந்திரன், தேவிக்கு வாசனைத்திரவியங்கள் வைக்கும் சிமிழாகிறான்' என்கிறார். —அருண மோதினீ.

ஆகமார்த்தஸ்து— காமேச்வரீ, பகமாலினீ, நித்யக்லின்னா இத்யாதி பஞ்சதச நித்யாபிঃ அனுலோம-ப்ரதிலோமவதாபிঃ கலாபிரேவ கர்ப்பூரைঃ ரஜனிகரபிம்பம் பூர்ணம் ரிக்தம் குஹரம் பிந்து ஷோடச- ஸ்வர-ஸம்வித்கலாமாத்ர-விசேஷிதம் பூயோ பூயঃ பௌநঃ புன்யேன ஸிதபக்ஷ கலாஸு த்வயா புக்தாஸ்விதி பாவঃ ||

—அருண மோதினீ.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



पुराराते-रन्तः पुरमसि तत-स्त्वच्चरणयोः
सपर्या-मर्यादा तरलकरणाना-मसुलभा ।
तथा ह्येते नीताः शतमखमुखाः सिद्धिमतुलां
तव द्वारोपान्त-स्थितिभि-रणिमाद्याभि-रमराः ॥ ९५ ॥

புராராதே-ரந்தঃ புரமஸி ததஸ்-த்வச்சரணயோঃ
ஸபர்யா-மர்யாதா தரலகரணா-மஸுலபா ।
ததா ஹ்யேதே நீதாঃ சதமகமுகாঃ ஸித்திமதுலாம்
தவ த்வாரோபாந்த-ஸ்திதிபி ரணிமாத்யாபி-ரமராঃ ।

---

**95. இந்திரிய அடக்கம் இல்லாதவர்கள் தேவியை அணுகி வழிபட இயலாது (இஷ்டப்ராப்தி)**

(த்வம்) நீ (புராராதேঃ) முப்புரம் எரித்த பரமசிவனுடைய (அந்தঃ புரம் அஸி) அந்தப்புரத்தில் உள்ள பட்டமகிஷியாக விளங்குகிறாய். (ததঃ) அதனால் (த்வத் சரணயோঃ) உன்னுடைய பாதங்களில் (ஸபர்யா-மர்யாதா) நெருங்கிப் பூஜை செய்யும் முறை (தரல-கரணானாம்) அடங்காத சித்தம் உடையவர்களால் (அஸுலபா) அடையக் கூடியது அன்று. (ததா ஹி) அதனால்தான் (ஏதே) இந்த (சதமக-முகாঃ) இந்திரன் முதலான (அமராঃ) தேவர்கள் (தவ) உன்னுடைய (த்வாரோபாந்த-ஸ்திதிபிঃ) வாயிற் புரத்தில் இருக்கும் (அணிமாத்யாபிঃ) அணிமா முதலிய தேவதைகளால்—தடை செய்யப்பட்டவர்கள் ஆயினும் பூஜை செய்ய விரும்பி வந்ததால் (அதுலாம் ஸித்திம்) அணிமா முதலிய நிகரற்ற சித்திகளை (நீதாঃ) அடையும்படி செய்விக்கப்பட்டார்கள்.

---

95. இந்திரிய நிக்கிரகம் செய்து காமத்தை வென்றவர்களுக்குத்தான் தேவியை நெருங்கிப் பூஜை செய்ய அதிகாரம் உண்டு. இந்திரன் முதலான தேவர்களும் தேவியின் சமீபம் சென்று பாதாரவிந்தங்களில் பூஜை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்ட போதிலும் அவ்வாசை பூர்த்தியடைவதில்லை. வெளிவாயிலில் நின்று சேவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कलत्रं वैधात्रं कतिकति भजन्ते न कवयः
श्रियो देव्याः को वा न भवति पतिः कैरपि धनैः ।
महादेवं हित्वा तव सति सतीना-मचरमे
कुचाभ्या-मासङ्गः कुरवक-तरो-रप्यसुलभः ॥ ९६ ॥

கலத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே ந கவயః
ச்ரியோ தேவ்யாः கோ வா ந பவதி பதிः கைரபி தநைः
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீனு-மசரமே
குசாப்யா-மாஸங்கः குரவக-தரோ-ரப்யஸுலபः |96|

---

96. தேவியினுடைய பாதிவ்ரத்ய மகிமை

(ஸரஸ்வதீ கடாக்ஷம், லக்ஷ்மீ கடாக்ஷம்)

(ஸதி) பதிவிரதைகளின் தெய்வமே! (வைதாத்ரம்) பிரம்மாவினுடைய (கலத்ரம்) மனைவியை (கதி கதி) எத்தனையோ (கவயः) கவிகள் (ந பஜந்தே) நாடி அடையவில்லையா? (கைः அபி தனைः) ஏதோ ஒரு வகையான செல்வத்தால் (கோ வா) எவனோ ஒருவன் (ச்ரியः தேவ்யாः பதிः) லக்ஷ்மீபதி என்ற பெயருக்கு உரியவனாக (ந பவதி) ஆகி விடவில்லையா? (ஸதீனும்) பதிவிரதைகளுக்குள் (அசரமே) முதன்மையானவளே! (மஹாதேவம்) மகாதேவனை (ஹித்வா) விட்டு (தவ) உனது

---

புரியும் அணிமாதி சித்திகளால் இந்திராதி தேவர்கள் அங்கேயே நிறுத்தப்படுகிறார்கள். சித்திகளை அடைந்து அதற்கு மேல் அவர்கள் செல்லத் தகுதியற்றவர்கள் ஆகின்றனர்.

96. (யே மந்த்ர-ஜபாத்-யாஸாதித-ஸாரஸ்வதாः தே-ஸரஸ்வதீ-வல்லபா இதி கீயந்தே। யே தன-தான்யாச்வ-கஜாதி-ஸம்ருத்திமந்தः தே லக்ஷ்மீபதயः இதி கீயந்தே। பார்வதீ-பதிஸ்து மஹாதேவ ஏவேதி பாதிவ்ரத்யமஹிமா அவாங்மனஸ-கோசர இதி ॥)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(குசாப்யாம் ஆஸங்கஃ) நகில்களுடைய ஸம்பந்தமோ (குரவகதரோஃ அபி) மருதோன்றி மரத்திற்குக்கூட (அஸுலபஃ) கிடைத்தற்கு அரிது.

---

எவர்கள் மந்த்ரம், ஜபம் முதலியவைகளால் ஸரஸ்வதியை வசமாக்கிக் கொள்ளுகிறார்களோ அவர்கள் ஸரஸ்வதீ வல்லபர்கள் எனக்கூறப்படுகின்றனர். எவர்கள் தனம், தானியம், குதிரை, யானை முதலிய செல்வத்தை வசமாக்கிக் கொண்டவர்களோ அவர்கள் லக்ஷ்மீபதிகள் எனக் கூறப்படுகின்றனர். ஆனால் எவரையும் பார்வதீபதி எனக் கூறுவதில்லை கல்வியையும் செல்வத்தையும் மனிதர் வசப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத பரதேவதையை எவரும் வசப்படுத்திக்கொள்ள இயலாது. அவள் பரமசிவன் ஒருவருக்கே வசப்பட்டவள். —லக்ஷ்மீதரர்.

அசரமா—ஆத்யா ।

ஸதீ—ஒ. 'ஸதீ ஸதீ- யோக - விஸ்ருஷ்ட - தேஹா தாம் ஜன்மனே சைலவதூம் ப்ரபேதே' —காளிதாஸன்.

குரவகதரோஃ—(குரவகாக்யஸ்ய தரோஃ புஷ்போத்பத்யர்த்தம் ஸ்த்ரீ-ஸ்தனாலிங்கன - ரூப - தோஹத-குதூஹலஸ்யாசேதனஸ்ய வ்ருக்ஷ - விசேஷஸ்யாபி அஸுலபா) கர்ப்பிணீ ஸதிரீகளுக்கு மசக்கை ஏற்படுவது போல் பூத்துக் காய்க்கும் முன் சில மரங்கள் அசேதன மாயினும் ஸ்திரீகளின் தழுவுதலுக்கு ஏங்குவதாகவும் அங்ஙனம் அவர்கள் தழுவுதலால் மகிழ்ந்து புஷ்பிப்பதாயும் கூறுவர். குரவகம் அப்படிப்பட்ட மரம். அதற்குக்கூடத் தேவியின் ஆலிங்கனம் கிட்டாது.

ஒ அம்பிகைக்கும் லக்ஷ்மிக்கும் ஸரஸ்வதிக்கும் ஏற்றத் தாழ்வு கூறுவதுபோல் இங்கே கூறினாலும் உண்மையில் ஏற்றத் தாழ்வு இல்லை 'ஸ்ரீராமனும் பரசுராமனும் சண்டை போட்டுக்கொண்டால் வேறாகப் போய்விடுவார்களா? இரண்டு பேரும் மகாவிஷ்ணுவின் அவதாரம் தானே?' என்கிறார் காமகோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



गिरामाहु- र्देवीं द्रुहिणगृहिणी-मागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरी-मद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगम-निस्सीम-महिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥ ९७ ॥

கிராமாஹு‍ர்-தேவீம் த்ருஹிணக்ருஹிணீ-
மாகமவிதோ
ஹரேః பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீ-மத்ரிதநயாம் ।
துரீயா காபி த்வம் துரதிகம-நிஸ்ஸீம மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்ம-மஹிஷி ।

---

97. பரப்ரம்ம மஹிஷியாகிய நீயே ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் பார்வதியும் (ஜீவன்முக்தி)

(பரப்ரஹ்ம மஹிஷி!) பரப்பிரம்மத்துடன் இணைந்த பராசக்தியே! (ஆகம-விதஃ) வேதத்தை அறிந்தவர்கள்—(த்வாம் ஏவ) உன்னையே—(த்ருஹிண க்ருஹிணீம்) பிரம்மாவின் பத்தினியான (கிராம் தேவீம்) வாக் தேவதையாக (ஆஹுஃ) கூறுகிறார்கள்.— (த்வாம் ஏவ) உன்னையே —(ஹரேஃ) ஹரியினுடைய (பத்னீம்) பத்தினியான

---

97. நிஃஸீம-மஹிமா — தேசதஃ காலதோ வஸ்துதச்ச அபரிச்சேத்யா இத்யர்த்தஃ ।

மஹாமாயா—சுத்த-வித்யாந்தர்க்கதம் மாயாதத்வம் ।

ப்ரமயஸி—விவர்த்தயஸி; விவர்த்தம் ப்ரஹ்மதர்மம் மாயா-யா-மதிதிசதி ॥

ஓ. ஜ்ஞானினுமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலா-தாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥
—தேவீ மாஹாத்மியம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



(பத்மாம்) லக்ஷ்மியாகவும், (ஹர-ஸஹசரீம்) சிவனுடைய பத்தினியான (அத்ரி-தனயாம்) பார்வதியாகவும்—(ஆஹுஃ) கூறுகிருர்கள். (த்வம்) நீயே (துரீயா) இம் மூவருக்கும் அப்பாற்பட்டவளாக (துரதிகம-நிஸ்ஸீம-மஹிமா) அடைதற்கு அரியதும் எல்லை இல்லாததுமான மகிமை உடையவளாக—(மஹா மாயா) மகா மாயை எனப்பட்டவளாக (விச்வம்) உலகு அனைத்தையும் (ப்ரமயஸி) ஆட்டி வைக்கிருய்.

---

பரப்ரஹ்ம-மஹிஷி— ஒ. 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ன்யௌ। ஹ்ரீஃ புவனேச்வரீ; லக்ஷ்மீஃ ஸ்ரீவித்யா; உபே ப்ரஹ்மணஸ் தே பத்ன்யௌ। அத்ர தயோர் - மத்யே ஸ்ரீவித்யாயாஃ ப்ராதான்யம், ஸ்ரீவித்யாயாம் புவனேச்வர்யா அந்தர்ப்பாவாத்॥ ஏகாமேவ பகவதீம் நாஞ நாமபிஃ க்ருணந்த்யாகமவிதஃ। —லக்ஷ்மீதரர்.

ஒ. மஹாலக்ஷ்மீர்-மஹாராஜ ஸர்வ-ஸத்வ-மஹேச்வரீ।
நிராகாரா ச ஸாகாரா ஸைவ நாஞபிதான-ப்ருத்।
நாமாந்தரைர்-நிரூப்யைஷா நாம்ஞ நான்யேன
கேனசித்॥ ப்ராதானிக ரஹஸ்யம்-30
—தேவீ மாஹாத்மியம்.

துரீயா காபி த்வம்—உன்னுடைய மகிமையை மனத்திஞல் யோசனை பண்ணுவதற்குக்கூட முடியாது ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கிருத்தியத்திற்காக மும்மூர்த்திகளை உண்டு பண்ணி விட்டு இந்தக் காரியத்திற்கும் மேலாக அதிதேவதையாக இருப்பது உன்னுடைய ஸ்வரூபம். மூன்றுக்கும் மேலாக நான்காவ்தாக இருக்கிறவள் நீதான்—கிட்டத்தட்ட நாமம் ரூபம் எல்லாம் மூன்ருவதற்கும் நான்காவதற்கும் ஒன்ருகவே சொல்லுகிருேம்—காமேசுவரனுடைய சக்தியாகிய காமேசுவரிக்கும் தூக்கத்திற்கு அதிஷ்டானமான பார்வதிக்கும் பொருத்தம் அதிகம். —காமகோடி சங்கராசாரியார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



कदा काले मातः कथय कलितालक्तकरसं
पिबेयं विद्यार्थी तव चरण-निर्णेजन-जलम् ।
प्रकृत्या मूकानामपि च कविता-कारणतया
कदा धत्ते वाणीमुखकमल-ताम्बूल-रसताम् ॥ ९८ ॥

கதா காலே மாதஃ கதய கலிதாலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரண நிர்ணேஜன-ஜலம்
ப்ரக்ருத்யா மூகாஞமபி ச கவிதா-காரணதயா
கதா தத்தே வாணீ-முககமல-தாம்பூல ரஸதாம் | 98 ||

---

98. பாததீர்த்தம் ஊமையையும் பேச வைக்கும்

(வாக்ஸித்தி)

(மாதஃ) தாயே! (கலித-அலக்தக-ரஸம்) லாக்ஷா-ரஸப் பூச்சுடன் கலந்து வரும் (தவ) உன்னுடைய (சரண-நிர்ணேஜன-ஜலம்) பாதப்பிரக்ஷாளன தீர்த்தத்தை (விதயார்த்தீ) பிரம்மவித்தையை நாடும் நான் (கதா காலே) எந்தக் காலத்தில் (பிபேயம்) பருகப்போகிறேன்? (கதய) கூறி அருளுங்கள். (ப்ரக்ருத்யா) இயற்கையாகவே (மூகாஞம் அபி) ஊமைகளுக்கும்கூட (கவிதா-காரண தயா) கவி பாடும் சக்தியை அளிக்குங் காரணத்தால் (வாணீ - முக - கமல - தாம்பூல ரஸதாம்) ஸரஸ்வதியின் வாயில் உள்ள தாம்பூல ரஸத்திற்கு ஒப்பான நிலையை (கதா) எப்போது (தத்தே)—என் வாயில் சேர்ந்த அந்தப் பாத தீர்த்தம்—அடையப் போகிறது?

---

98. அலக்தகரஸம் — (லாக்ஷாரஸம் யாவகம் வா ஸ்த்ரீணும் பாதாதர-ஓஷ்ட ரஞ்ஜனர்த்தம் அலக்தக த்ரவ-முபலிஹந்தி ஸைரந்த்ர்யாஃ) லாக்ஷாரஸம் உயர் குலஸ்திரீகளின் உள்ளங்காலிலும் உதடுகளிலும் அழகுக்காகத் தாதிகளால் பூசப்படுவது.

(பகவதீ - பாதாரவிந்த- நிர்ணேஜன - ஜலம்- ஸாலக்தகம் கவிதா ஹேதுஃ। கவீச்வரஸ்ய வதனே ஸ்திதம் ஸரஸ்வதி-தாம்பூலரஸ இவ ப்ரத்யக்ஷம் பாதி। ஸ து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



सरस्वत्या लक्ष्म्या विधि-हरि सपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा ।
चिरं जीवन्नेव क्षपित-पशुपाश व्यतिकरः
परानन्दाभिख्यं रसयति रसं त्वद्भजनवान् ॥ ९९ ॥

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி-ஹரி ஸபத்நோ விஹரதே
ரதேঃ பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா ।
சிரம் ஜீவந்நேவ க்ஷபித பசுபாச-வ்யதிகரঃ
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்-பஜநவான் |99|

---

**99. தேவியை வழிபடுபவன் கல்வி செல்வம், அழகு, ஆயுள் இவையனைத்தும் நிரம்பியவன் ஆவான் (பேரின்பம்)**

(த்வத் பஜனவான்) உன்னைப் பூஜிப்பவன் (விதி-ஹரி-ஸபத்ன:) பிரம்மாவும் விஷ்ணுவும் கூடப் பொறாமைப் படக் கூடியவனாக (ஸரஸ்வத்யா) கல்வியுடனும் (லக்ஷ்ம்யா) செல்வத்துடனும் (விஹரதே) இன்பத்தை

---

கவிச்வரঃ பும்பாவமாபன்னঃஸரஸ்வதீவாபாதி ।) தேவியின் பாததீர்த்தம் லாக்ஷா ரஸத்துடன் கலந்து வருவது, கவி பாடும் திறமையை அளிப்பது. அது வரப்ரசாதியான கவி சிரேஷ்டனுடைய முகத்தில் ஸரஸ்வதி தேவியின் தாம்பூல ரஸத்தைப்போல் எல்லோரும் காணப் பிரகாசிக்கிறது. அவனும் புருஷ வேஷத்தில் வந்த ஸரஸ்வதியே போல் விளங்குகிறான்.

சரண-நிர்ணேஜன ஜலம்—ஸஹஸ்ராரத்தில் விளங்கும் தேவியின் சரண கமலங்களிலிருந்து பெருகும் அமிருத தாரை.

ஒ ஸுதாதாரா-ஸாரைச்-சரணயுகலாந்தர்-விகலிதைঃ
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புனரபி ரஸாம்னாய மஹஸঃ ॥
—ஸௌ. ல. 10.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



எய்துகிறுன். (ரம்யேண வபுஷா)—மன்மதன் போன்ற—உடல் அழகால் (ரதேঃ) ரதி தேவியின் (பாதிவ்ரத்யம்) கற்பையும் (சிதிலயதி) கலங்கச் செய்கிறுன். (க்ஷபித-பசு-பாச-வ்யதிகரঃ) பசுத்தன்மையும் வினைக்கயிற்றின் கட்டுகளும் நீங்கியவனுக—(பரானந்த-அபிக்யம்) பேரானந்தம் எனப் பிரசித்தி பெற்ற (ரஸம்) இன்பரஸத்தை (சிரம் ஜீவன்னேவ) சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டு (ரஸயதி) அநுபவிக்கிறுன்

---

மூகானுமபி— கோகர்ண க்ஷேத்திரத்திற்கு அருகில் உள்ள மூகாம்பிகா க்ஷேத்திரத்தில் தனது பாததீர்த்தத்தால் ஊமையைத் தேவி, மகாவித்வானுகச் செய்த வரலாறு ஒன்று உண்டு.

99. அம்பாளுடைய பரிபூர்ண கடாக்ஷத்தால் ஒப்புயர்வற்ற கல்வி, செல்வம், அழகு ஆகிய மூன்றும் பக்தனுக்கு ஏற்படுவது இங்கு வர்ணிக்கப்படுவது.

சிரஞ்ஜீவன்னேவ— (ஸாவயவாঃ கபிலாதயঃ। மார்க்கண்டாதயோ நித்யஸித்தாঃ। ஏவம் நித்யஜீவனঃ ஸன்) கபிலர், மார்க்கண்டேயர் ஆகியோரைப்போல் நித்யஸித்தனுகப் பிரம்மானந்த சுகத்தை இங்கேயே அனுபவித்துக் கொண்டு.

க்ஷபித-பசு-பாச-வ்யதிகரঃ—பசுঃ அவித்யாபத்தோ ஜீவঃ பாசঃ அவித்யா ; க்ஷபித-விநஷ்ட ; வ்யதிகரঃ—ஸம்பந்தঃ।

ஒ. 'திஷ்டதி ஸம்ஸ்காரவசாத் சக்ரப்ரமவத் த்ருத-சரீரঃ।' அவித்தையிலிருந்து விடுபட்ட பின்னும் குயவன் சக்கரம் சுழல்வதுபோல் தேகஸம்பந்தம் இருந்து கொண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



டிருக்கும்; அப்படிப்பட்ட ஜீவன்முக்தனுடைய செயல்களெல்லாம் 'ஜபோ ஜல்ப:' என்ற பிரகாரம் அம்பாளுடைய ஆராதனையாகவே அமையும்.

பாச:— ஒ. க்ருணு சங்கா பயம் லஜ்ஜா ஜுகுப்ஸா
ஸைவ பஞ்சமீ ।
குலம் ஜாதிச்ச சீலஞ்ச அஷ்டௌ பாசா: ப்ரகீர்த்திதா: ॥
ஏதை: பாசைர்-விரஹிதோ நிர்விகாரோ ஜிதேந்த்ரிய: ॥
விச்வ-வ்யாப்திம் மஹாஜ்ஞானம் க்ரமேண புருஷோ
஽ச்னுதே ॥

—அருணு மோதினீ மேற்கோள்.

முதலில் ஸரஸ்வதி என்று இந்த சுலோகம் ஆரம்பித்திருக்கிறது. அப்புறம் லக்ஷ்மியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எதைக் கொடுத்துப் பின் பணத்தைக் கொடுத்தால் பணம் வீண் போகாதோ அதை முன்று தேவி கொடுப்பாள். ஏகாந்த பக்தி அம்பிகை இடத்தில் யாருக்கு உண்டோ அவர்களுக்கு ஸரஸ்வதியின் அருள் நிறைய உண்டாகும். நல்ல புத்தி ஏற்படும். அதற்கு எல்லை எவ்வளவு? பிரம்மா வீட்டில் அது ஸம்பூரணமாக இருக்கிறது. அம்பிகையின் உபாஸகனுக்கு அதைவிட அதிகமாக உண்டாகும். அதனுல் பிரம்மாவுக்குக் கோபம் வரும். இப்படி ஹரியும் பிரம்மாவும் கோபித்துக் கொள்ளும் வரைக்கும் ஸரஸ்வதீ, லக்ஷ்மீ கடாக்ஷம் அம்பிகையின் பக்தனுக்கு உண்டாகும்.

—காமகோடி சங்கராசாரியார்.

வேறு பாடங்களில் அதிகப்படியாகக் காணப்படும் - சுலோகங்கள்— (அஸ்மின் ஸௌந்தர்யலஹரீ ச்லோக — சதகே 'ஸமானீத: பத்ப்யாம்' இதி ச்லோகத்ரயம் வர்த்ததே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தத்து பகவத்பாத-ரசிதம் ந பவதி, கேனசித் ப்ரக்ஷிப்த-மிதி ந வ்யாக்யாதம் ।) ஸௌந்தர்யலஹரீ நூறு சுலோகங்களுடன் இன்னும் மூன்று சுலோகங்கள் சேர்ந்து காணப்படுகின்றன. அவை பகவத் பாதருடையவையன்று, பிறரால் சேர்க்கப்பட்டவை யெனக் கருதி அவற்றிற்கு உரையெழுதவில்லை. —லக்ஷ்மீதரர்.

மேலே குறிப்பிட்ட மூன்று சுலோகங்களும் கைவல்யாசிரமர் எழுதிய 'ஸௌபாக்யவர்த்தினீ' என்ற உரையில் காணப்படுகின்றன. இவைகள் பிரயோக நூல்களில் காணப்படவில்லை.

அங்கு 94ஆவது சுலோகமாக வருவது—

ஸமானீதః பத்ப்யாம் மணி-முகுரதா-மம்பரமணிர்-
பயா-தாஸ்யா-தந்தః ஸ்திமித-கிரண-ச்ரேணி-மஸ்ருணః
ததாதி த்வத்வக்த்ர-ப்ரதிபலன-மச்ராந்த-விகசம்
நிராதங்கம் சந்த்ராந் நிஜ-ஹ்ருதய-பங்கேருஹமிவ ||

சூரியன் தேவியின் பாதாரவிந்தங்களின் முன் ரத்னக் கண்ணுடிபோல் வைக்கப்படுகிறுன். அப்போது தன் கிரணங்களால் தேவியின் முகத்திற்குத் துன்பம் ஏற்படாத வண்ணம் அவன் தன் ஒளியைச் சுருக்கிக் கொள்ளுகிறுன். அந்த நிலையில் தேவியின் திருமுகத்தாமரை சூரியபிம்பத்தில் பிரதிபலிக்கிறது. சாதாரணத் தாமரை சந்திரனைக் கண்டு வாட்டம் அடையும். இந்தத் தாமரையோ அங்ஙனம் வாடாமல் என்றும் மலர்ச்சியுடன் இருக்கிறது அது சூரியன் இடையே காணப்படுகையில் சூரியனுடைய இருதயத் தாமரைபோல் விளங்குகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



99 ஆவது சுலோகமாக வருவது—

ஸமுத்பூத-ஸ்த்தூல-ஸ்தனபர-முரச்-சாருஹஸிதம்
கடாக்ஷே கந்தர்ப்பா: கதிசன கதம்பத்யுதி - வபு: ।
ஹரஸ்ய த்வத்ப்ராந்திம் மனஸி ஜனயந்திஸ்ம விமலா
பவத்யா யே பக்தா: பரிணதி-ரமீஷா-மிய-முமே ॥

உமாதேவியே! அழுக்கற்ற உனது பக்தர்கள் பரந்து கனத்த மார்பைக் கொண்டவர்களாகவும், அழகிய புன் சிரிப்பை உடையவர்களாகவும், கடைக்கண் பார்வையில் மன்மதர்களாகவும், கடம்பமரம் போன்ற உடல் படைத் தவர்களாகவும் மாறிவிடுகிருர்கள். அவர்களைப் பார்க்கும் போது சிவனுடைய மனத்தில் ‘இவர்களும் தேவியே தானே?’ என்ற மயக்கம் ஏற்படுகிறது. (பக்தர்கள் அங்ஙனம் ஸாரூப்ய முக்தியை எய்தி விடுகிருர்கள் )

102 ஆவது சுலோகமாக வருவது —

நிதே நித்யஸ்மேரே நிரவதிகுணே நீதிநிபுணே
நிராகாடஜ்ஞானே நியம பரசித்தைக-நிலயே ॥
நியத்யா நிர்முக்தே நிகிலநிகமாந்த-ஸ்துதபதே
நிராதங்கே நித்யே நிகமய மமாபி ஸ்துதிமிமாம் ॥

செல்வமே! என்றும் மகிழ்ச்சி பொங்கும் முகமுடையவளே! எல்லையற்ற குணநிதியே! நீதியில் வல்லவளே! குறைவில்லாத ஞானம் உடையவளே! சித்தத்தை அடக்கியவர்களிடம் உறைபவளே! கட்டுப்பாடு அற்றவளே! உபநிஷதங்கள் எல்லாம் போற்றும் உயர்நிலையே! பயம் அற்றவளே! நித்தியம் ஆனவளே! என்னுடைய இந்த ஸ்துதியையும் ஏற்றருள்வாய்!

ஸ்ரீ காமேசுவர ஸூரியும் ‘அருணா மோதினீ’ என்ற தமது உரையில் இந்தச் சுலோகத்தைச் சேர்த்திருக்கிருர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



प्रदीप ज्वालाभि-र्दिवसकर-नीराजनविधिः
सुधासूते-श्चन्द्रोपल-जललवै-रर्घ्यरचना ।
स्वकीयैरम्भोभिः सलिल-निधि-सौहित्यकरणं
त्वदीयाभि-र्वाग्भि-स्तव जननि वाचां स्तुतिरियम् ॥

ப்ரதீப-ஜ்வாலாபிர்-திவஸகர-நீராஜனவிதிঃ
ஸுதாஸூதேச் சந்த்ரோபல-ஜலலவை-ரர்க்யரசனா ।
ஸ்வகீயை-ரம்போபிঃ ஸலிலநிதி-ஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்-வாக்பிஸ் தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம் ॥

॥ इति श्रीशंकराचार्य विरचिता सौन्दर्यलहरी समाप्ता ॥

॥ இதி ஸ்ரீ சங்கராசார்ய-விரசிதா ஸௌந்தர்யலஹரீ ஸமாப்தா ॥

---

**100.** தேவியளித்த சக்தியால் தேவியைப் பாடியது சூரியனுக்கு அவன் கிரணத்து அக்கினியால் தீபாராதனை செய்தது போலாம்.

(ஸகல ஸித்தி)

(வாசாம்) வாக்கிற்கு (ஜனனி) பிறப்பிடமாகிய தாயே! (ப்ரதீப-ஜ்வாலாபிঃ) கர்ப்பூரதீப ஜ்வாலையால் (திவஸகர-நீராஜன-விதிঃ) சூரியனுக்கு நீராஜனம் செய்தாற் போலும், (ஸுதா ஸூதேঃ) அமிருத கிரணங்களைப் பொழியும் சந்திரனுக்கு (சந்த்ரோபல - ஜல - லவைঃ) சந்திரகாந்தக் கல்லில் கசியும் நீர்த்துளிகளால் (அர்க்ய-ரசனா) அர்க்கியம் அளித்தாற்போலும், (ஸ்வகீயைঃ

---

*100.* ஸௌஹித்யம் — 'ஸௌஹித்யம்' தர்ப்பணம் த்ருப்திঃ இத்யமரঃ ।

த்வதீயாபிர்-வாக்பிঃ— (மாத்ருகாஸ்வரூபா த்வமேவ, தவைவ மாத்ருகாக்ஷரைঃ தவைவ ஸ்துதிঃ, பரா-பச்யந்தீ மத்யமா ரூபயா த்வயை வோல்லஸிதா வைகரீ-ஸமுஜ்ஜ்ரும்பித - த்வன்மய - மாத்ருகாக்ஷரைঃ தவைவ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அம்போபி:)—சமுத்திரத்திற்கு—சொந்தமான ஜலத்தாலேயே (ஸலில - நிதி-ஸௌஹித்யகரணம்) சமுத்திரத்திற்குத் தர்ப்பணம் செய்தாற் போலும் இருக்கிறது (த்வதியாபி:) உன்னுடையதேயான (வாக்பி:) வாக்குகளால்-அமைந்த (இயம்) இந்த (தவ) உனது (ஸ்துதி:) ஸ்தோத்திரம்.

---

ஸ்துரிதி மம ஸ்துதிர்-வஸ்துதைவ நாஸ்தி। த்வமேவ ஸர்வத்ரானுஸ்யூதா சேதனு ரூபா ப்ரதிபாஸத இதி பாவ:) மாத்ருகைகளின் ஸ்வரூபம் நீ; உன்னுடைய மாத்ருகா அக்ஷரங்களால் உன்னுடைய ஸதுதி பரா, பச்யந்தீ, மத்யமா வடிவான உன்னுல் உற்பத்தி செய்யப் பட்டு வைகரீவடிவாக மலர்ந்த உன் வடிவான மாத்ருகா அக்ஷரங்களாலாகிய இது உன்னுடையதே; உண்மையில் இதில் என்னுல் ஆனது எதுவும் இல்லை நீயே அங்கு இங்கு எனுதபடி எங்கும் சைதன்ய வடிவில் விளங்குகிருய் என்றவாறு. —ஸௌபாக்யவர்த்தனீ.

ஸ்ரீ ஆசார்யர் எதற்குமேலே நினைக்க முடியாதோ அந்தத் தத்துவத்தைச் சொன்னவர். அவரே இப்படித் தாழ்மையோடு சொல்லியிருக்கிருர். இந்த ஒரு சுலோகத்தைப் பாராயணம் பண்ணினுல் ஸௌந்தர்யலஹரீ முழுவதையும் பாராயணம் பண்ணின பலன் உண்டாகும் எப்படி? எல்லா வித்தைகளுக்கும் பிரயோஜனம் விநய ஸம்பத்து ஸகல விநயமும் இந்தச் சுலோகத்தில் இருக்கிறது. பூஜை செய்யும்போது ஈசுவரனுக்கு எல்லா உபசாரங்களையும் பண்ணிவிட்டுக் கடைசியில் நீராஜனம் பண்ண வேண்டும் இதில் நீராஜனம் இருக்கிறது எல்லாவற்றிற்கும் முடிவான தத்துவத்தை இந்தச் சுலோகம் சொல்லுவதற்கு இதுவும் ஓர் அடையாளம் போல் இருக்கிறது.

—காமகோடி சங்கராசார்யார்.

ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம் முற்றிற்று.

---

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸ்ரீசக்கரம்

( ஸம்ஹாரக்கிரமம்: கைவல்யாச்ரமர் கூறுகிறபடி )

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

## அனுபந்தம் 1

# ஸ்ரீசக்கரம் வரையும் முறை

ஸௌபாக்யவர்த்தனீ என்ற வியாக்கியானத்தில் ஸ்ரீகைவல்யாச்ரிரமர் ஸ்ரீசக்கரம் வரைவதற்குப் பின்வரும் முறையைக் குறிப்பிடுகிறார்—

वृत्तं कृत्वेष्टमानेन सूत्रं पूर्वापरायतम् । विन्यस्य विभजेदष्टचत्वारिंश द्विभागतः ॥ षष्ठे षष्ठे पंचमे च तृतीयेऽथ तृतीयके । चतुर्थेऽथ तृतीये च षष्ठे षष्ठांशके पुनः ॥ विधाय नव चिह्नानि तेषु सूत्राणि तापयेत् । नव याम्योत्तराग्राणि तेषामुभय-पार्श्वतः ॥ आद्य-द्वितीय-तुर्याणां तथा पंचम-षष्ठयोः । अष्टमान्तिमयो- र्द्विद्वानग्निबाणे कलांशकान् ॥ पुराणद्व्यष्ट-वेदाग्नि-संख्यांशान् मार्जयेत् क्रमात् । शुक्र- मध्ये रवेरन्तौ चन्द्रान्तौ केतुमध्यतः ॥ मंगलान्तौ वृत्तमध्ये बुधान्तौ राहु-मध्यतः । गुरारन्तौ भौममध्ये शुक्रान्तौ सोममध्यतः ॥ शन्यन्तौ वृत्तमध्ये तु राह्वन्तौ रविमध्यतः । केत्वन्तौ भौममध्ये तु योजयेत् क्रमतो बुधः ॥ मध्यत्र्यह्निस्फुरद्रूप-मष्टद्विदशत्र्यह्निकम् । चतुर्दशानल-द्योतं श्रीचक्रं जायते परम् ॥ तद्बहिर्वसु - पत्राब्जं तद्बहिः षोडशच्छदम् । वृत्तत्रितय-संशोभं त्रिरेखांचित-भूगृहम् ॥ त्रिधामनिलयं द्वारचतुष्टय - सुशोभितम् । सर्वतेजो-मयं दिव्यं सोम-सूर्यानलात्मकम् ॥



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



